REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 16+24 விலை - 40 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 321 ஐப்பசி 1 ஆம் நாள் சனிக்கிழமை 17 ஒக்ரோபர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## மகனுக்கு பதவி வழங்கினார் மஹிந்த

சீனா வாழ்த்து

கொழும்பு, ஒக். 17

பிரதமர் செயலக அதிகாரிகளின் பிரதானியாக, பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் மகன் யோசித ராஜபக்ச நியமிக்கப்பட்டுள்ளார். 14 >

## காங்கேசன்துறையில் பெண் சிப்பாய்க்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஒக். 17

காங்கேசன்துறை கடற்படை முகாமில் பணியாற்றும் கடற் 14 >

## இலங்கை முழுவதும் கொரோனா தொற்று வலயமாக அறிவிப்பு

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஒக். 17

"இலங்கையின் தற்போதைய நிலைமையில் முழு நாட்டையும் கொரோனா தொற்றும் வலயமாக அறிவிக்க நேரிட்டுள்ளது" என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார். 14 >

## '20' இன் பின்னணியில் அமெரிக்காவின் சூழ்ச்சி!

ஆளுங்கட்சி எம்.பியான விஜயதாச விளாசல்

கொழும்பு, ஒக். 17

"ரிஷாத் பதியுதீனையும், அவரின் சகோதரரையும் அரசே பாதுகாத்து வருகிறது" என ஆளுங் கட்சியின் நாடாளுமன்ற 14 >




## மருத்துவமனை முன்பாக கைக்குண்டுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணத்தில் கைக்குண்டு வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். யாழ்ப்பா 14 >

## அரியாலையில் சுவர் இடிந்து வீழ்ந்து ஒருவர் சாவு!

கள்ள மணல் ஏற்றியபோது நடந்தது என்கின்றது பொலிஸ்


யாழ்ப்பாணம், ஒக். 17

அரியாலையில் கள்ள மணல் அள்ளும்போது, சுவர் இடிந்து விழுந்து நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ள 14 >

# வடக்கின் 5 மாவட்டங்களிலும் கொரோனா மருத்துவமனை

பணிகள் நேற்று ஆரம்பம்

- யாழ்ப்பாணம் - மருதங்கேணி
- கிளிநொச்சி - கிருஷ்ணபுரம்
- முல்லைத்தீவு - மாங்குளம்
- மன்னார் - விடத்தல்தீவு
- வவுனியா - மாமடு



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 17

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாடு முழுவதும் அதிகரித்துச் செல்லும் நிலையில் சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான மருத்துவமனைகள் அமைக்கும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 14 >

## மணிவண்ணனுக்கு முன்னணி 'ஆப்பு'

யாழ்ப்பாணம், ஒக். 17

"யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து வி.மணிவண்ணன் உள்ளிட்ட இரண்டு பேர் நீக்கப்பட்டுள்ளனர்" என அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி, யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு நேற்றுமுன்தினம் கடிதம் மூலம் அறிவித்துள்ளது. இந்தத் தகவலை யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கி.அமல்ராஜ் உறுதிப்படுத்தினார். 14 >

## '20' தொடர்பில் 2 நாள்கள் விவாதம்

எதிரணிகளின் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, ஒக். 17

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பில் நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் விவாதம் நடைபெறவுள்ளது. 22 ஆம் திகதி இரவு வாக்கெடுப்பும் 14 >

உதயன் (ஒன்லைன்)

## மக்கள்தான் தங்களை பாதுகாக்க வேண்டும்

இராணுவத் தளபதி அறிவிப்பு



கொழும்பு, ஒக். 17

"இலங்கையில் கொரோனாவின் மூன்றாவது அலையில் எதிர்வரும் நாள்கள் மிகவும் தீர்மானமிக்கவை. 16 >

## 110 பேருக்கு நேற்று தொற்று

கொழும்பு, ஒக். 17

கம்பஹா மாவட்டம், மினுவாங்கொட ஆடைத் தொழிற் 14 >



## வெளிநாட்டிலுள்ள இலங்கையருக்கு வாக்குரிமையைப் பெற்று கொடுக்க முயற்சி

தேர்தல் சட்ட திருத்தத்துக்கு தெரிவுக்குழு

கொழும்பு, ஒக். 17

வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு வாக்குரிமையைப் பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட தேர்தல் சட்ட திருத்தத்தை 14 >

# எந்தச் சந்தர்ப்பத்திலும் விலை போக வேண்டாம்

## கட்டாய இடமாற்றம் வழங்கப்பட்ட மாவட்டச் செயலர் கலாமதி வலியுறுத்து

**கொழும்பு, ஒக்.17**

**எந்தச் சந்தர்ப்பத்திலும் சோர்ந்துபோகவோ விலைபோகவோ கூடாது என்று ஆழ்ந்த கருத்தை வெளியிட்டிருக்கின்றார், மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்திலிருந்து அரசால் இடமாற்றம் வழங்கப்பட்ட மாவட்டச் செயலர் கலாமதி பத்மராஜா.**



மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதியான மயிலத்தமடு மற்றும் மாதவனை மேய்ச்சல் தரைகளை அம்பாறை மற்றும் பொலநறுவை மாவட்டங்களிலுள்ள சிலர், கிழக்கு மாகாண ஆளுநரின் உதவியுடன் அபகரித்திருந்தனர். அது தொடர்பில் மாவட்டச் செயலர் நடவடிக்கை எடுத்ததன் பின்னணியில் அவருக்கு அரசு கட்டாய இடமாற்றம் வழங்கியுள்ளது.

அதன்படி அவர், பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலராக உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் அவருக்கு மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் நேற்று பிரியாவிடை நிகழ்வு நடத்தினர். இந்த நிகழ்வில், மாவட்டச் செயலக உயர் அதிகாரிகள் உட்பட சகல அலுவலர்களும் பங்கேற்றிருந்தனர். அதன் போதே கலாமதி பத்மராஜா.மேற்கண்ட கருத்தை முன்வைத்தார்.

அது மட்டுமன்றி பொதுமக்களுக்கான சேவைகளை உடனுக்குடன் வழங்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கலாமதி பத்மராஜா மாவட்டச் செயலராக கடமையேற்ற ஒன்பது மாதங்களில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இந்தக்காலப் பகுதியில் வாழ்வாதாரத்தை இழந்த சகல மக்களினதும் நலன்களில் அக்கறையோடு செயற்பட்டவர். மட்டக்களப்பு மாவட்டத்தில் உணவுப் பஞ்சம் ஏற்படாமலும் தற்காப்பு உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலும் துரிதமாக செயற்பட்டு வெற்றிகண்டவர். விவசாய உற்பத்திகள், கால்நடைகள், சிறு கைத்தொழில் அபிவிருத்தி, கடல் மற்றும் நன்னீர் மீன்பிடி, நீர்ப்பாசனம் போன்ற துறைகளை மேம்படுத்துவதிலும் கல்வி, சுகாதார வசதிகள் போன்றவற்றில் காணப்படும் இடைவெளிகளை நிவர்த்தி செய்வதிலும் அதிக அக்கறை செலுத்தியிருந்தார் என்றும் அவர் பாராட்டப்பட்டார். (த-இ)

# வேலணை மாணவருக்கு வீட்டுத்தோட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 17

வேலணை பொது நூலகத்தினர் பாடசாலை மாணவர்களுக்கு வீட்டுத்தோட்டப் போட்டி நடத்தவுள்ளனர். வாசிப்பு மாதத்தையொட்டி வேலணை பிரதேசத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இந்தப் போட்டி நடைபெறவுள்ளது.

இதில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் வேலணை பொது நூலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம். மேலும் மாணவர்களுக்கும் வாசகர்களுக்கும் இலவசமாக மரக்கன்றுகள் மற்றும் மரக்கறி விதைகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன என்றும் வேலணை பிரதேச சபைச் செயலாளர் ப.சிவஞானவேல் செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். (த)

# ஊடகவியலாளர்களை தாக்கியோருக்கு மறியல்

முல்லைத்தீவு, ஒக். 17

முல்லைத்தீவில் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்களை பிணையில் விடுவிக்க மறுத்த முல்லைத்தீவு நீதிமன்று, அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சண்முகம் தவசீலன், கணபதிப்பிள்ளை குமணன் ஆகிய இரண்டு ஊடகவியலாளர்களும் சட்ட விரோத மரக்கடத்தல் தொடர்பில் செய்தி அறிக்கையிடுவதற்காக செய்தி சேகரிப்புக்குச் சென்றிருந்தவேளை மரக்கடத்தலில் ஈடுபட்டுவரும் கும்பல் ஒன்றால் கடந்த 12 ஆம் திகதி தாக்கப்பட்டிருந்தனர்.

தாக்கினர் என்ற குற்றச்சாட்டில் இருவரைக் கைது செய்த முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின் குமாரிடம் நேற்று முற்படுத்தினர்.

நீண்ட நேர விசாரணையின் பின்னர் அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

சந்தேக நபர்கள் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணிகள் சிலர் முன்னிலையாகி வாதங்களை முன்வைத்தனர்.

பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் சார்பாகவும் சட்டத்தரணிகள் முற்பட்டு வாதங்களை முன்வைத்திருந்தனர். சந்தேகநபர்களை பிணையில் விடுவிக்க பொலிஸாரும் ஆட்சேபம் தெரிவித்தனர்.

சகலவற்றையும் பரிசீலித்த நீதிமன்று சந்தேக நபர்களை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைத்தது.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலுக்கு பல ஊடகவியலாளர் அமைப்புகள் கண்டன அறிக்கைகளை வெளியிட்டிருந்தன. ஊடகத்தினர் மீதான தாக்குதலைக் கண்டித்து வடக்கிலுள்ள ஊடகவியலாளர்கள் முல்லைத்தீவில் நேற்று முன்தினம் கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-246)

# சஜித் வீட்டில் ரிஷாத்தை தேடிய சி.ஐ.டியினர்



கொழும்பு, ஒக். 17

தேடப்பட்டுவரும் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் வீட்டில் மறைந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சஜித் பிரேமதாசவின் வீட்டுக்குச் நேற்றுச்சென்று விசாரித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அவரைக் கைதுசெய்யுமாறு சட்டமா அதிபர் உத்தரவிட்டதும் ரிஷாத் தலைமறைவாகிவிட்டார். அவரைக் கைதுசெய்ய 7 பொலிஸ் குழுக்கள் களமிறங்கியுள்ளன. எனினும், பொலிஸாரால் ரிஷாத்தைக் கைதுசெய்ய முடியவில்லை.

இந்த நிலையிலேயே, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவுடன் ரிஷாத் பதியுதீன் அலைபேசியில் பேசினார் என்று கூறப்படுகிறது.

அதனால் ராஜகிரியவில் உள்ள சஜித் பிரேமதாசவின் வீட்டுக்கு நேற்றுக் காலை சென்ற குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தினர், அங்கு ரிஷாத் பதியுதீனைத் தேடினர் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும், அங்கும் ரிஷாத் இல்லை.

அவரைக் கைதுசெய்யக்கூடாது என்று முன்னர் கருத்துத்தெரிவித்திருந்த சஜித் பிரேமதாச, அரசு ரிஷாத்தை பழிவாங்கத் துடிக்கின்றது என்றும் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-இ)

# வடக்கில் நால்வருக்கு நேற்று தொற்று உறுதி

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பகுதிகளில் தனிமைப்படுத்தலில் இருக்கின்ற தென்பகுதி மாவட்டங்களைச்சேர்ந்த 4 பேருக்கு கொவிட்-19 தொற்று உள்ளமை நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தின் பல இடங்களிலும் உள்ள 208 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் நேற்று மேற்கொள்ளப்பட்டன.

அதன்போதே 4 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

ஏனைய 204 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். (த-இ)

## தேவிபுரத்தில் நகை திருட்டு; சந்தேகத்தில் மூவர் கைது

முல்லைத்தீவு, ஒக். 17

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தேவிபுரம் பகுதியில் வீடு ஒன்றில் நகை திருட்டப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் மூன்று பேரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் மற்றும் தடயவியல் நிபுணர்கள் தடயங்களை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டனர். விசாரணை மூலமாக அதே பகுதியைச் சேர்ந்த மூவரை சந்தேகத்தின்பேரில் கைதுசெய்தனர். (த-19)

# "நான் கூறியிருந்த கருத்து திரிபடைந்தமையால் எதிர்ப்பு"

## கிரிக்கெட் வீரர் முரளிதரன் அறிக்கை

கொழும்பு, ஒக். 17

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான முத்தையா முரளிதரனின் வாழ்க்கையை மையப்படுத்தி உருவாகவுள்ள '800' என்ற படத்தில், விஜய் சேதுபதி நடிக்கவுள்ள நிலையில், எதிர்ப்பு வலுத்துவருகின்றது. இந்நிலையில், முரளிதரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், படம் தயாரிப்பை பல்வேறு காரணங்களுக்குக்காக அரசியலாக்கி எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகிறது. அதற்கு காரணம் நான் பேசிய சில கருத்துகள் தவறாக திரித்து சொல்லப்பட்டதால் வந்த விளைவு தான். உதாரணமாக நான் 2009 ஆம் ஆண்டுதான் என் வாழ்க்கையில் மிக மகிழ்ச்சியான ஆண்டு என்று 2019ல் கூறியதை, தமிழர்களை கொன்று குவித்த நாள்தான் முத்தையா முரளிதரன் வாழ்க்கையில் மகிழ்ச்சியான ஆண்டு என திரித்து எழுதுகிறார்கள்.

போர் முடிவுற்று சராசரி மனிதனாக பாதுகாப்பை உணர்வது மட்டுமல்லாமல் போர் நிறைவடைந்ததால் கடந்த பத்து வருடங்களாக இரண்டு பக்கமும் உயிரிழப்புகள் ஏதும் இல்லாமல் இருப்பதை மனதில் வைத்தே 2009 ஆம் ஆண்டு எனது வாழ்க்கையில் மகிழ்ச்சியான ஆண்டு என்கிற கருத்தை தெரிவித்தேன்.

எவ்வளவு விளக்கமளித்தாலும் எதிர்ப்பாளர்கள் யாரையும் சமாதானப்படுத்த முடியாது. என்றுள்ளது. (த-இ)

# ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை குற்றவாளிகள் ஆக்குவதை நிறுத்துக!

### மனித உரிமை அமைப்புகள் வேண்டுகோள்

**கொழும்பு, ஒக். 17**
**மினுவாங்கொட ஆடைத் தொழிற் சாலை ஊழியர்களை குற்றவாளிகளைப் போல் நடத்துவதை நிறுத்துமாறு சுதந்திர வர்த்தக வலயத்தின் தொழிலாளர்களுக்காகக் குரல் கொடுக்கும் மனித உரிமை அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.**

ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் தனிமைப்படுத்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்ட விதம் குறித்து பல மனித உரிமை அமைப்புகள் கரிசனை வெளியிட்டுள்ளன. 'ஊடகங்கள் அவர்களைக் குற்றவாளிகளாகச் சித்திரித்துள்ளன. அவர்கள் குற்றவாளிகள் போல் நடத்தப்படுகின்றனர்' என்று டபிந்து கலக்டிவ் என்ற அமைப்பின் திட்ட ஒருங்கிணைப்பாளர் சமிலா துசாரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இராணுவத்தினர் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் தங்கியிருக்கும் விடுதிகளுக்குச் சென்று சோதனையிடுவதுடன் தனிமைப்படுத்தல் நிலையத்துக்குச் செல்வதற்கு ஐந்து பத்து நிமிடங்களில் தயாராக வேண்டும் என உத்தரவிடுகின்றனர்.

அந்த இடத்தில் சுகாதாரப் பரிசோதகர்கள் எவர்களையும் காண முடிவதில்லை. தாம் எங்கு கொண்டு செல்லப்படுகின்றோம் என்பது தெரியாத நிலையில் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் கொண்டு செல்லப்படுகின்றனர். முகக்கவசம் இல்லாத நிலையில் அவர்களை அவர்களது குழந்தைகளுடன் அழைத்துச் செல்கின்றனர். அவர்களை ஒரு பஸ்ஸிலிருந்து இன்னொரு பஸ்ஸுக்கு மாற்றுகின்றனர். இதன் காரணமாக அவர்கள் தொற்றுக்குள்ளாகும் ஆபத்து மிக அதிகம்.

ஏன் அவர்களை இரண்டாம்தரப் பிரஜைகள் போல் நடத்துகின்றனர்? சிறிய அறைகளில் இரண்டு அல்லது மூன்று பேர் வாழ்கின்றனர். சுமார் 100 முதல் 150 பேர் ஒரே கழிவறைகளையே பயன்படுத்துகின்றனர்.

சமூகத்தின் உயர்மட்டத்தினர் விசேட சிறந்த ஹோட்டல்களில் தனிமைப்படுத்தப்படும் அதேவேளை, இவர்கள் மிக மோசமான நிலைமைகளில் தனிமைப்படுத்தப்படுகின்றனர். நிறுவனங்கள் செப்ரெம்பர் முதல் அவர்களிடமிருந்து வேலைகளைப் பெற்ற போதிலும் அவர்களுக்கு விடுமுறை வழங்கவில்லை. நோய் பரவுவதற்கான காரணம், இந்தியாவில் காணப்படும் நிலைமை, இந்த விவகாரம் குறித்த அரசின் நிலைப்பாடு என்னவென்பது போன்ற முக்கியமான விடயங்கள் குறித்து நாங்கள் ஆராயவுள்ளோம்.

இலங்கைக்கு வெளிநாட்டு வருமானத்தைக் கொண்டுவரும் மிகப்பெரிய தொழில்துறையின் உயிர்நாடிகள் இந்தத் தொழிலாளர்கள் என்பதால் அவர்களைப் புறக்கணிக்கக் கூடாது. இதன் காரணமாக ஊடகங்களும் அரசும் அவர்களைக் குற்றவாளிகளாக சித்திரிப்பதை நிறுத்த வேண்டும்" என்றார்.

இதேவேளை, "இந்த நிலைமைக்கு இலங்கை முதலீட்டுச் சபை, ஆடை உற்பத்தி நிறுவனங்கள், தொழில் திணைக்களம் ஆகியவற்றையே குற்றஞ்சாட்ட வேண்டும்" என்று மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன. (ஓ,22)

## ஸஹ்ரான் குழு பயன்படுத்திய கார் மட்டக்களப்பில் மீட்பு

கொழும்பு, ஒக். 17
பயங்கரவாதி ஸஹ்ரான் குழு பயன்படுத்திய கார் மட்டக்களப்பு, காத்தான்குடி றிஸ்வி நகரில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் உள்ள முகமது கனிபா முகமது அக்கிரம் என்பவர் பயன்படுத்திய காரே மீட்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு குற்றவியல் பிரிவு பொலிஸார் அதை மீட்டு காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட குற்றவியல் பிரிவுக்குக் கிடைத்த தகவலையடுத்து உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் அவர் கடந்த வருடம் ஏப்ரல் 25ஆம் திகதி காத்தான்குடியில் கைதுசெய்யப்பட்டு மொனராகலை சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த காரில் காத்தான்குடியிலிருந்து நுவரெலியா பயிற்சி முகாமுக்கு பயிற்சிக்காக பயிற்சியாளர்களை கொண்டுசெல்ல பயன்படுத்தப்பட்டதா என்ற அடிப்படையில் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகிறது என பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

## பெண் சாவு

யாழ்ப்பாணம், ஒக். 17
கெற்பேலிப் பகுதியில் வசிக்கும் குடும்பப்பெண் ஒருவர் தவறான முடிவெடுத்து நேற்று உயிரிழந்தார். கெற்பேலி மேற்கு மிருசுவிலைச் சேர்ந்த தியாகராசா புவனேஸ்வரி (வயது- 56) என்பவரே உயிரிழந்தவராவார். இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ.ம.159)

## மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் மீண்டும் திறப்பு

கொழும்பு, ஒக். 17
கொரோனாத் தொற்று காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டிருந்த மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் மீண்டும் மக்கள் பயன்பாட்டுக்காக திறக்கப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள கொரோனாத் தொற்று தடுப்பு விதிமுறைக்கு அமைய திணைக்களம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் திறக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். தொலைபேசி வாயிலாக முன்கூட்டியே பதிவு செய்யும் முறைக்கமைய இத் திணைக்களம் ஒரு நாள் சேவையை ஆரம்பிக்கவுள்ளது என தெரிவித்த இராஜாங்க அமைச்சர் இது தொடர்பில் மேலதிக தகவல்களை கீழே தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு பெற்றுகொள்ளுமாறு பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

வாகனப்பதிவுகளுக்கு 0706354116, 0706354117, 0706354118

வாகன உரிமங்களுக்காக 0706354115, 0706354137, 0706354138, 0706354139, 0706354140, 070635414103.

வாகன இலக்கத் தகடு தொடர்பில் 0706354119, 0706354120

ஏனைய விடயங்களுக்கு 0706354145, 0706354146, 0706354147, 0706354148, 0706354149 (ஓ.இ)



## கோண்டாவிலில் நேற்று வீடு புகுந்து தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக். 17
யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கு பகுதியில் இனந்தெரியாதோர் நேற்று இரவு வீடு புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். அரசடி பிள்ளையார் ஆலயத்துக்கு அண்மையிலுள்ள வீடொன்றின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 2 மோட்டார் சைக்கிள்களில் வந்த 4பேர் வீடு புகுந்து யன்னல் கண்ணாடிகளை அடித்து உடைத்ததுடன், வீட்டில் நின்ற வாகன கண்ணாடிகளையும் அடித்து உடைத்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர். (ஓ.26)

# தான்தோன்றித்தனமான அதிகாரங்களை ஜனாதிபதிக்கு வழங்கவே முடியாது!!!

### 20ஐ கைவிடுமாறு தேரர்கள் கோத்தாபயவுக்கு கடிதம்

கொழும்பு, ஒக். 17
20ஆவது திருத்தம் தான்தோன்றித்தனமான நிறைவேற்றதிகாரத்தை வழங்கும் என்பதுடன், அரசமைப்பு பேரவை மற்றும் நீதித்துறையை அது கட்டுப்படுத்தும் நிலையை உருவாக்கும்.

எனவே அதனைக் கைவிடுமாறு வலியுறுத்தி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு தேரர்கள் சிலர் இணைந்து கடிதம் அனுப்பியுள்ளனர்.

முருத்தெட்டுவே ஆனந்த தேரர், பெங்கமுவே நாலக்க தேரர் மற்றும் எல்லே குணவங்ச தேரர் ஆகியோர் இணைந்து இந்த கடிதத்தை எழுதியுள்ளனர்.


20 ஆவது திருத்தம் தான்தோன்றித்தனமான நிறைவேற்றதிகாரத்தை வழங்கும் என்பதுடன், அரசமைப்பு பேரவை மற்றும் நீதித்துறையை அது கட்டுப்படுத்தும் நிலையை உருவாக்கும். இதன் காரணமாக பலவீனமான அமைச்சரவை உருவாக்கப்படும்.

30 ஆகவுள்ள அமைச்சரவையின் வரையறை நீக்கப்படுவதில் உள்நோக்கம் காணப்படுகின்றது.

அரசமைப்புக்கு முரணாக ஜனாதிபதி செயற்படும்போது, அது குறித்து நீதிமன்றத்தை நாடுவதற்கு பொதுமக்களுக்குள்ள உரிமையும் 20 ஆவது திருத்தத்தினூடாக நீக்கப்படுகின்றது. ஒட்டுமொத்தத்தில் சட்டவாட்சிக்கு எதிராக உறுதிப்பாடற்ற அரச பொறிமுறையை உருவாக்கும் வகையில், 20 ஆவது அரசமைப்பு திருத்தம் காணப்படுகின்றது.

நாட்டில் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள 20 ஆவது அரசமைப்பு திருத்தத்தை அவ்வாறே நிறைவேற்றுவது தொடர்பில் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

குறைந்தபட்சம் தங்களால் பரிந்துரைக்கப்படும் திருத்தங்களையாவது உள்வாங்குமாறு அந்தக் கடிதத்தில் தேரர்கள் கோரியுள்ளனர். (ஓ.இ)




## ஆபத்தான பகுதிகள்: வரைபடம் வெளியீடு

இலங்கையில் கொரோனா வைரஸால், அதிக ஆபத்துள்ளபகுதிகள், சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவால் வரைபடமாக வெளியிட்டுள்ளது.

சுகாதாரப் பகுதிகளின் மருத்துவ அதிகாரிகளின் வகைப்படுத்தல், பதிவான வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட மையங்க ளின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் வரைபடம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தத் தரவுகள் கடந்த 14 நாள்களில் எடுக்கப்பட்ட எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## தனிமைப்படுத்தப்பட்ட 53,011 பேர் விடுவிப்பு

கொழும்பு,ஒக்.17

தனிமைப்படுத்தலை முழுமையாக நிறைவு செய்த 397 பேர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர். அதற்கமைவாக 53 ஆயிரத்து 11 பேர் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை முப்படையினரால் பராமரிக்கப்பட்டு வரும், 84 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 9 ஆயிரத்து 556 பேர் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் ஆஸ்திரேலியாவின் சிட்னியில் இருந்து நேற்று நாடு திரும்பிய 12 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## கடல் ஆமை மீட்பு; ஒருவர் கைது




யாழ்ப்பாணம், ஒக். 17

கடல் ஆமையை வைத்திருந்த குற்றச்சாட்டில் மாதகல் பகுதியில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இளவாலை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 35 கிலோகிராம் நிறையுடைய கடல் ஆமை மீட்கப்பட்டுள்ளது. குறித்த கடல் ஆமையை இறைச்சியாக்குவதற்கு முற்பட்ட வேளையிலேயே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம25)

# முகக்கவசம் 70 சதவீதமான தொற்றைக் கட்டுப்படுத்தும்

### சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.17

**முகக்கவசத்தை அணிவதன் மூலம் சுமார் 70 சதவீதமான கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும் என்று சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார தெரிவித்தார். இந்தத் தொற்று சமூகத்தின் மத்தியில் பரவவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.**

கொரோனாச் சிகிச்சை மத்திய நிலையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர் பரிசோதனையின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் இறக்குமதி செய்யப்பட்ட தானியங்கி பி.சி.ஆர் பரிசோதனை இயந்திரங்களில் ஒன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் பொருத்தப்படவுள்ளது.

இந்தமுறை கொரோனா வைரஸ் பரவல் முன்னரிலும் பார்க்க அதிகமாகக் காணப்படுகின்றது என்றும் சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ற-இ)

### தமிழர்களுக்கு இழைத்த அநீதிக்காக

# நாட்டின் இறைமையையே அடைவு வைக்கும் நிலை!

### அரசை கடுமையாகச் சாடுகிறார் சுரேஸ்



யாழ்ப்பாணம், ஒக்.17

இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளிலிருந்து பெற்றுக்கொண்ட கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் நாட்டின் இறைமையையே அடைவு வைக்கும் நிலைக்குச் சென்றுள்ளது. இலங்கைத் தீவிலும் இந்துமகா சமுத்திரப் பிராந்தியத்திலும் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையை நியாயமாகவும் தர்மத்தின் அடிப்படையிலும் கையாண்டிருந்தால் நாடு இன்று இந்த நிலைமைக்குச் சென்றிருக்காது என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப்பேச்சாளருமான சுரேஸ் க.பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் முழு விவரம் வருமாறு:

**வெளிவிவகாரக் கொள்கை**

இலங்கையின் வெளிவிவகார கொள்கை இப்பொழுது விவாதத்திற்கும் விமர்சனத்திற்கும் உள்ளாக்கப்பட்டுள்ளது. கொரோனாவால் நாடு அல்லோலகல்லோலப் பட்டிருக்கின்ற சூழ்நிலையில், 26பேர் கொண்ட சீன உயர்மட்டக் குழுவினரின் வருகையும், இதனைத் தொடர்ந்து அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் மைக்பொம்பியோ வரவிருப்பதும், இதற்கு முன்னர் இந்திய இலங்கை பிரதமர்களுக்கிடையிலான காணொலித் தொடர்பாடல் மூலமான பேச்சுக்களும், ஊடகங்களில் பலத்த சர்ச்சைகளையும் கேள்விகளையும் எழுப்பியிருக்கின்றன.

மாறிமாறி வந்த இலங்கை அரசுகளின் தமிழர் விரோத உள்நாட்டுக் கொள்கைகளும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான வெளிநாட்டு உதவிகளும் இலங்கையை ஏற்கனவே பொருளாதார ரீதியாக படுபாதாளத்தில் தள்ளியிருக்கின்றன.

**இந்தியாவுக்கு அச்சுறுத்தல்**

இதன் காரணமாக, அம்பாந்தோட்டை துறைமுகமும் அதனைச் சுற்றியுள்ள நிலங்களும், துறைமுக நகரத்தின் ஒருபகுதியும் சீன அரசுக்கு தொண்ணூற்றொன்பது ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலைமையானது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருப்பதுடன், இந்து சமுத்திர பிராந்தியத்தின் அமைதியின்மைக்கும் நிரந்தரமாகவே வழிகோலியிருக்கின்றது.

இலங்கை அரசு இந்தியா தனது சகோதரநாடு என்று கூறிக்கொண்டாலும்கூட, சீனா அண்மைக்காலமாக இலங்கைக்குள் செலுத்தும் செல்வாக்கானது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துவிடுமோ என்ற ஐயவுணர்வு இந்திய - பசுபிக் பிராந்தியத்தில் அமைதியை விரும்பும் அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது. இதனை இலங்கை வெளிவிவகாரக் கொள்கை வகுப்பாளர்கள் உணர்ந்து செயற்படவேண்டும்.

**கடன்பொறி**

இலங்கை என்பது இந்து சமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீவாகும். அந்தத் தீவின் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களை சீன அரசுக்கு தொண்ணூற்றொன்பது ஆண்டுகள் குத்தகைக்குக் கொடுப்பதென்பதும் இதனால் அண்டை நாடுகளுக்கு ஆபத்தில்லை எனக் குறிப்பிடுவதும், இலங்கை அணிசேராக் கொள்கையைக் கொண்டிருப்பதாகவும் தாங்கள் சகல நாடுகளுடனும் சம உறவுகளைப் பேணுவதாகவும், சொல்லிக்கொண்டாலும் கூட, அவர்களது அனைத்து நடவடிக்கைகளும் சீனா சார்பாகவே அமைந்திருக்கின்றன என்பது உலக நாடுகளுக்கு வெளிப்படையாகவே தெரிகின்றது. இந்தச் சூழலானது இலங்கையை வல்லாதிக்க சக்திகளின் கால்பந்து மைதானமாக மாற்றியுள்ளது.

**தமிழர் விரோதபோக்கு**

தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையை ஒன்றுபட்ட இலங்கைத் தீவுக்குள் தீர்ப்பதற்கு ஒரு சமஷ்டி அமைப்பினூடாக அதனைச் சாத்தியமாக்கலாம் என்று தமிழ்ப் பிரதிநிதிகள் கூறும்போது அது இலங்கையின் இறையாண்மைக்கு பேராபத்தாக அமைந்துவிடும் என்று குரல் கொடுக்கும் சிங்கள தரப்புக்கள் இலங்கையின் முக்கியத்துவம் வாய்ந்த பல பகுதிகளை தொண்ணூற்றொன்பது வருட குத்தகைக்கு விடுவதும், விலை பேசி விற்பதும் இலங்கையின் இறையாண்மைக்கு ஆபத்தானதா என்பதை சிங்கள பெரும்பான்மை மக்கள் உள்ளிட்ட இந்நாட்டு மக்கள் அனைவரும் உணர வேண்டும் - என்றுள்ளது. (ஒ-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## படமும் பாடமும்

தமிழின வரலாற்றில் இரண்டு முரளிதரன்கள் முக்கிய மானவர்கள். ஒருவர் கருணா அம்மான் என்ற பெயரோடு புலிகளின் முக்கிய தளபதியாக விளங்கிய விநாயகமூர்த்தி முரளிதரன். மற்றையவர் தன்னுடைய சுழல் பந்துவீச்சால் கிரிக்கெட்டில் உலக சாதனை படைத்த முத்தையா முரளிதரன். இவர்கள் இருவரும் ஒரு காலத்தில் தமிழர்களைத் தலைநிமிர வைத்தவர்கள். பின்னர் அவர்களே சொந்த இனத்தையே அழிக்கும் கோடரிக்காம்பாக மாறியவர்கள்.

கருணா புலிகளை விட்டுப் பிரிந்ததும், அவர் புலிகளின் இரகசியங்கள் பலவற்றை அரசுக்கு வெளிப்படுத்தியதும் போரில் பெரும் பின்னடைவைப் புலிகளுக்கு ஏற்படுத்தி, இன்று தமிழினம் இப்படி தோற்றுப்போன இனமாக மாறுவதற்கு காரணமானவர். சுழல் பந்துவீச்சாளர் முரளியோ முள்ளிவாய்க்காலில் தமிழினப்படுகொலை நிகழ்ந்த 2009 ஆம் ஆண்டு தான் தனக்கு மிகவும் மகிழ்வானது என வெளிப்படையாகச் சொன்னவர். அதுமட்டுமல்லாமல் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்தைக்கூட "பத்துப்பதினைந்து பேர் வந்து கண்ணீர் விட்டு அழுதால் மட்டும் அது உண்மையாகிவிடுமா?" எனக் கேட்டு , அந்தப் போராட்டத்தை எந்தளவுக்கு முடியுமோ அந்தளவுக்கு கொச்சைப்படுத்தியவர். இதனால் ஒருகாலத்தில் முத்தையா முரளிதரனை தலைமேல் வைத்துக் கொண்டாடிய தமிழர்கள் அவரை ஒரு இனத் துரோகியாகவே நோக்கினர்.

இந்த நிலையில் தான் முத்தையா முரளிதரனின் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லும் '800' என்ற திரைப் படத்தில் நடிகர் விஜய் சேதுபதி நடிக்க இருப்பதாக வெளியான போஸ்டரால் , பெரும் சர்ச்சை வெடித்துள்ளது. சொந்த இனத்தின் துயரத்தையும், கண்ணீரையும் பகிரங்கமாகக் கேவலப்படுத்திய ஒருவரின் பாத்திரத்தில் 'ஈழத்தில் உள்ள தமிழ் மக்களின் ஈழ விடுதலைப் போராட்டம் பற்றி ஆதரவாகக் கருத்து வெளியிடும் விஜய் சேதுபதி நடிக்கக்கூடாது என்று சாதாரண ரசிகர்களில் இருந்து பிரபலங்கள், அரசியல் கட்சிகள் என அறிக்கை விட்டபடி இருக்கின்றன. இறுதியாகக் கிடைத்த தகவல்களின் படி இந்தளவு தூரம் பலமுனைகளில் எழுந்த எதிர்ப்பையடுத்து , அந்தப் படத்தில் நடிப்பதில் இருந்து விஜய் சேதுபதி விலகவுள்ளாராம்.

இது முத்தையா முரளிதரனுக்குப் பெரும் கௌரவப் பிரச்சினையாக உருவெடுத்துவிட்டது. என்னதான் உலகளவில் சாதனை புரிந்தாலும் சொந்த இனத்தையே பொதுவெளியில் அவமானப்படுத்தினால் என்ன நிகழும் என்பது இப்போது உலகின் பல திசைகளில் இருந்தும் எழுந்த எதிர்ப்புகள் முரளிதரனுக்கு நன்கு புலப்படுத்தியிருக்க வேண்டும். அதனால்தான் இப்போது "இலங்கைத் தமிழனாகப் பிறந்தது என் தவறா?" என்று உருக்கமாக அறிக்கை விடுமளவுக்கு எதிர்ப்புகளின் வீரியம் இருந்திருக்கிறது. இத்தனை நாளும் தன்னைத் தமிழன் என்று பிரகடனப்படுத்தவே தயங்கிய முரளிதரனுக்கு, தன்னுடைய படத்துக்கு எழுந்த எதிர்ப்புகள் மிக நல்லதொரு பாடத்தையே கொடுத்திருக்கின்றன. முரளிதரனுக்கு மட்டுமல்லாமல் சொந்த இனத்தின் துயரை விடவும், ஆள்வோரின் நலனுக்காக ஊளையிடும் அனைவருக்கும் இதுவொரு படிப்பினைதான்.

# பொருள்கள் இன்னும் அதிக விலைகளிலேயே!

## இதுவரை 76 முறைப்பாடுகள்

**யாழ்ப்பாணம்,ஒக்.17**

**அதிக விலைக்கு பொருள்கள் விற்பனை செய்தமை தொடர்பாக இதுவரை 76 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் வடக்கு மாகாண பதில் உதவி பணிப்பாளர் ஏ.எல். யவ்பர் சாதிக் தெரிவித்துள்ளார்.**

பருப்பு, சீனி, ரின்மீன் உள்ளிட்ட பொருள்களின் இறக்குமதி வரி விலக்கப்பட்டு, கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இந்தப் பொருள்கள் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யப்படவில்லை. அதிக விலைக்கே விற்பனை செய்யப்படுகின்றன என்று யாழ். மாவட்டச் செயலகத்தில் இயங்கும் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினருக்கு முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளை அடுத்து. வர்த்தக நிலையங்களுக்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்கள் சோதனையில் ஈடுபட்டனர்.

வர்த்தகர்கள் தாம் பழைய விலைக்குக் கொள்வனவு செய்து, இருப்பில் உள்ள பொருள்களை பழைய விலைக்கும், புதிய விலைக்கு கொள்வனவு செய்யும் பொருள்களை அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கும் விற்பனை செய்கின்றோம் எனத் தெரிவித்துள்ளனர்.

நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் தலைமைக் காரியாலத்தினருடன் கலந்தாலோசித்து இது தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-111)

## நெல் விதைப்பு ஆரம்பம்: கால்நடைகளைக் கட்டவும்

காரைநகர்,ஒக்.17

காரைநகர் பிரதேச வயல்களில் நெல் விதைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதனால் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு, காரைநகர் கமநல சேவைகள் நிலையமும், கமக்காரர் அமைப்புக்களும் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.

விவசாயிகள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நெல் விதைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதனால் கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளை ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியில் இருந்து, 2021 ஜுன் 30 ஆம் திகதி வரை கட்டி வளர்க்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கு இதுவரை காதடையாளம் இடாதவர்கள் உடனடியாக இட வேண்டும் என்றும் கமக்காரர் அமைப்புக்களின் காலபோகக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வயல்களில் கால்நடைகள் பிடிக்கப்பட்டால், அவற்றின் உரிமையாளர்களுக்கு கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

காதடையாளம் இடப்படாத கால்நடைகள் பிடிக்கப்பட்டால் அரசுடைமையாக்கப்படும். விதைக்கப்பட்ட வயலில் இருந்து 100 மீற்றர் தூரத்துக்குள் கட்டப்படும் கால்நடைகள் விவசாயிகளால் பிடிக்கப்பட்டால், சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## திருநெல்வேலி சந்தையில் குற்றச்செயல்கள் குறைவு

யாழ்ப்பாணம்,ஒக்.17

திருநெல்வேலிச் சந்தையில் தற்போது குற்றச் செயல்கள் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

சந்தை வளாகத்தில், நல்லூர் பிரதேச சபையால் 113 கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

அதனால் அங்கு திருட்டு உட்பட சகல குற்றச்செயல்களும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

குற்றச்செயல்களுக்கான முறைப்பாடுகள் இதுவரைக்கும் கிடைக்கவில்லை என்று நல்லூர் பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர். (க-17)

# கழிவகற்றல் நடவடிக்கைக்கு மக்கள் ஒத்துழைப்பு போதாது

## நல்லூர் பிரதேச சபை அதிருப்தி

நல்லூர்,ஒக்.17

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் திண்மக்கழிவுகள் அகற்றும் நடவடிக்கைகள் பின்னடைவைச் சந்தித்துள்ளன.

சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பொதுமக்களின் ஒத்துழைப்பு குறைந்து காணப்படுவதே இதற்குக் காரணம் என்று சபைத் தவிசாளர் த.தியாகமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

திண்மக் கழிவுகளைத் தரம்பிரித்து கழிவகற்றும் பிரிவினரிடம் ஒப்படைக்குமாறு அறிவித்தும், குடியிருப்பாளர்கள் அதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதில்லை. இதனால் கழிவகற்றுவதில் பெரும் சவால்களை சபை எதிர்நோக்கி வருகின்றது.

பொது இடங்களிலும், கண்ட கண்ட இடங்களிலும் கழிவுகளைக் கொட்ட வேண்டாம் என்று அறிவித்தும், கழிவுகளைப் பொதியாக்கி பொது இடங்களில் வீசுகின்றனர்.

இதனால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன. தொற்று நோய்களும், நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துச் செல்கின்றன.

குடியிருப்பாளர்கள் தமது சுற்றாடல் கழிவுகளைத் தரம்பிரித்து, பொதியாக்கி வைத்தால், அவற்றை கழிவகற்றும் பிரிவினரின் வாகனம் மூலம் அகற்ற முடியும்.

இந்தச் செயற்பாட்டுக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அதேவேளை திண்மக் கழிவகற்றும் நடைமுறைக்கு பொலிஸாரின் ஒத்துழைப்பையும் சபை நாடவுள்ளது - என்றார். (க-17)

# கொரோனா கட்டுக்குள் வரும்வரை திருத்தம் '20' இனை கைவிடுங்கள்!

கொழும்பு, ஒக். 17
அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்ட வரைவை தற்காலிகமாக கைவிடுமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.
கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தி நாட்டினதும், மக்களினதும் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கே தற்போதைய சூழ்நிலையில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும். எனவே, 20ஆவது திருத்தத்தை தற்காலிகமாகவேனும் கைவிட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு வலியுறுத்தியுள்ளது.
கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் '20'ஐ விவாதத்துக்குட்படுத்தினால் அச்சட்டவரைவைச் சார்ந்த விடயங்கள் தொடர்பில் உரிய வகையில் கருத்துகளை வெளியிடமுடியாது. 20 தொடர்பில் பரந்து பட்ட கலந்துரையாடலொன்று அவசியம். இதன் காரணமாகவே நாடு வழமைக்குத் திரும்பிய பின்னர் அது தொடர்பில் பரிசீலிக்குமாறு கோருகின்றோம் எனவும் எம்.பிக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதேவேளை, 20ஐ முன்நோக்கிக் கொண்டுசெல்லாமல் புதிய அரசமைப்பை இயற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என மதத்தலைவர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அரசாங்கம் சாதகமான முறையில் பரிசீலிக்க வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் கோரிக்க விடுத்துள்ளனர். (ம-44)



## காலமானார் பிரபல நடிகை

கொழும்பு, ஒக்.17
தொலைக்காட்சியின் பிரபல நாடக நடிகை அனுலா புலத்சிங்கள உடல்நலக் குறைவு காரணமாக நேற்று உயிரிழந்துள்ளார்.
73 வயதுடைய அவர் ஸ்ரீ ஜெயவர்தனபுர மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.
இவர் ரத்து ஹெட்டகாரி, தாராவோ இகிலெட்டி, மதுர ஜவனிகா, குவேனி, மகாசார, லெடைக் நெத்தி லெடக், சரித்த தெக்கக் போன்ற மேடை நாடகங்களிலும், நில் தியா யஹான மற்றும் கோல் போன்ற திரைப்படங்களிலும் நடித்துள்ளார். (ந-இ)

# 3ஆவது அலையின் ஆரம்பப்புள்ளி வெளிநாட்டில் இருந்து வந்தவரா?

கொழும்பு, ஒக். 17



**'வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவரே கொரோனா மூன்றாவது அலையின் ஆரம்பப்புள்ளியாக இருந்திருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதுதான் இறுதி முடிவு எனக் கூறமுடியாது. எனவே, ஆரம்பப் புள்ளியை கண்டறி வதற்கான விசாரணை தொடர்கின்றது' என்று கொரோனா ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று தெரிவித்தார்.**

கொரோனா 3ஆவது அலையின் ஆரம்பப்புள்ளியைக் கண்டறிவதற்கான விசேட ஆய்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. தற்போது பல நாள்கள் ஆகின்றன. எனவே, எவ்வாறு வைரஸ் தொற்று ஆரம்பமாகியது என்பது கண்டறியப்பட்டதா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:
'ஆரம்பப்புள்ளி தொடர்பில் பல்வேறு விதமான தகவல்கள் கிடைத்துள்ளன. ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர்கள் சிற்சில இடங்களில் தங்கியுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.
அதேபோல வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவரால் வைரஸ் பரவியிருக்கக்கூடும் என்ற தகவலும் கிடைத்துள்ளது. இது தொடர்பிலும் ஆராய்ந்து பார்ப்போம். எனினும், இதுதான் ஆரம்பப்புள்ளி என்பதை இன்னும் உறுதியாக கூறமுடியாதுள்ளது. எதிர்காலத்தில் நிச்சயம் உரிய தகவல் அறிவிக்கப்படும். அதேவேளை, வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலேயே புலனாய்வுப் பிரிவினர் தற்போது கூடுதல் கவனம் செலுத்தியுள்ளனர்' - என்றார். (ம-44)

## மீன் வியாபாரிக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஒக்.17
கிரிந்திவெல - குட்டிகலப் பகுதியில் மீன் வியாபாரி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
மீன் வியாபாரியுடன் நெருங்கிப் பழகிய சுமார் 80 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று தொம்பே பொது சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.
மீன் வியாபாரி குட்டிகல, ரந்தாவான, மெத்தேகம, போகஹகும்புர, கிரிந்திவெல மற்றும் பெல்லவெல ஆகிய பிரதேசங்களில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-இ)

## தொழில் ஆணைக்குழு பணிப்பாளராக பிரபாத்!

கொழும்பு, ஒக. 17
தொழில் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகமாக பிரபாத் சந்ரகீர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.
இவர் முன்னதாகக் கரையோர பாதுகாப்பு திணைக்களப் பணிப்பாளராகக் கடமையாற்றியிருந்தார். இவர் தொழில் ஆணைக்குழுவின் ஆணையாளராக இந்த மாதம் 19ஆம் திகதி தனது கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## ஊரடங்கை மீறிய 167 பேர் கைது

கொழும்பு,ஒக்.17
கம்பஹாவில் பொலிஸ் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறிய 167 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் 25 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.
ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட கடந்த நான்காம் திகதி முதல் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஆறு மணி வரையான காலப்பகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (க-இ)

# இராஜதந்திர நெருக்கடிக்குள் மீண்டும் சிக்கிவிட்டது நாடு!!

*ஐக்கிய மக்கள் சக்தி விளாசல்*

கொழும்பு, ஒக். 17
இலங்கைக்கு எதிராக இராஜதந்திர நெருக்கடிகள் ஏற்படுவதற்கும், சர்வதேச அழுத்தங்கள் குவிவதற்கும் ராஜபக்ஷ அரசாங்கம், மீண்டும் வழிசமைத்துக்கொடுத்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
'2010 2015 காலப்பகுதியில் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின்போது நாட்டுக்கு கடும் இராஜதந்திர நெருக்கடிகள் ஏற்பட்டன. அமெரிக்காவால் எமது நாட்டுக்கு எதிராக பிரேரணை கூட கொண்டுவரப்பட்டது. அந்தப் பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தது. ஜீ.எஸ்.பி வரிச்சலுகை இல்லாமல் போனது. இப்படி பல நெருக்கடிகள் ஏற்பட்டன. தற்போது மீண்டும் அதேபோன்றதொரு நிலைமை உருவாக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.
சில நாள்களுக்கு முன்னர் சீனத் தூதுக்குழுவினர் இங்கு வந்தனர். அவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவில்லை. இந்த நிலையில் அமெரிக்க இராஜாங்க செயலாளரும் மாத இறுதியில் நாட்டுக்கு வரவுள்ளார்.
எம்.சி.சி உடன்படிக்கையில் கைச்சாத்திடுமாறு அழுத்தம் கொடுக்கவா அமெரிக்க இராஜாங்க செயலாளர் இங்கு வருகிறார் என்ற வினாவும் எழுகின்றது. இந்த அரசாங்கத்தின் ஆட்சிமுறைமையாலேயே நாட்டுக்கு சர்வதேச நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன' - என்றார். (ம-44)

# 'புலிஅம்மா'வின் இறுதி வணக்க நிகழ்வு



கிளிநொச்சி, ஒக்.17
'புலி அம்மா' அல்லது சரசம்மா என்று அழைக்கப்படும் நாட்டுப்பற்றாளர் யோகராசா சரஸ்வதி அன்னையின் இறுதிவணக்க நிகழ்வு நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் இடம்பெற்றது.
இவர் திருமலையில் பிறந்து முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மண்ணில் வாழ்ந்து வந்தவராவர். எம்தேச வீரர்களுக்கு உணவூட்டி, அடைக்கலம் கொடுத்து பாதுகாத்த வீரத்தாய் கடந்த காலங்களில் பெண்களுக்காக உரக்கக் குரல் கொடுத்தவர்.
இந்த நினைவு வணக்கத்தில், வணக்க உரையை திருகோணமலை மாவட்டம் சார்பாக முன்னாள் போராளி குட்டியும், கவிஞர் யோ.புரட்சியின் கவி கலந்த வணக்க உரையும், புதுக்குடியிருப்பு வணிகர் சங்கத்தின் தலைவர் த.நவநீதன், மற்றும் புதுக்குடியிருப்பு மக்கள் சார்பாக த.தனமும் உரை நிகழ்த்தினர். (ந-222)



# இன்றைய நாள்

**மேடம்:** நிதானத்துடன் செயல்படுவீர்கள். பணியில் இருந்த தடைகள் அகலும். சிறு மனக்குழப்பம் ஏற்படும். பணவரவு மகிழ்ச்சி தரும். புதிய முயற்சிகள் வெற்றி தரும்.

**இடபம்:** பணம் செலவாகும் முயற்சிகளை தள்ளி வைப்பது நல்லது. நிம்மதி மீளும். முயற்சி செய்த விடயங்கள் வெற்றி பெறும். ஊடகத் துறையில் உள்ளவர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும்.

**மிதுனம்:** பெரிய அளவில் பண முதலீடு எதுவும் செய்ய வேண்டாம். குடும்ப ஒற்றுமை நன்றாக இருக்கும். பண வரவு அதிகரிக்கும். சுப நிகழ்ச்சிக்கான பேச்சுக்கள் சுமுகமாக முடியும்.

**கடகம்:** வேலைவாய்ப்பு பற்றிய நல்ல செய்திகள் சற்று தாமதம் ஆகும். தடைகள் அகலும் நாள். பணவரவு உண்டு. சாதனை படைப்பீர்கள். நண்பர்கள் தக்க சமயத்தில் உதவுவர்.

**சிம்மம்:** அதிகார பதவியில் உள்ளவர்களின் கருணையால் நன்மை நிகழும். அரச் சலுகை எதிர்பார்த்தபடி கிடைப்பதால் கவலை தீரும். பல காலம் விரும்பிய பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**கன்னி:** நிம்மதி நிறையும். நினைத்ததைச் செய்து முடிப்பீர்கள். வீட்டுக்கான பணத் தேவைகள் கடைசி நேரத்தில் தீரும். வியாபாரப்போட்டிகள் அதிகரிக்கும். சுபச் செலவு ஏற்படும்.

**துலாம்:** உங்களின் திறமையை வியந்து மேலதிகாரிகள் பாராட்டுவர். யோகமான நாள். தன்னம்பிக்கையோடு செயல்பட்டு மகிழ்வீர்கள். நேற்று எடுத்த முயற்சியில் வெற்றி உண்டு.

**விருச்சிகம்:** எடுத்த விடயங்கள் பற்றிய நம்பிக்கை துளிர் விடும் நாள். வேலை ஒன்றை முடிப்பதற்காக முக்கியப் புள்ளியைச் சந்திப்பீர்கள். பணியில் வெற்றி உண்டு.

**தனுசு:** பிரபலமானவர்களின் நட்பால் பிரச்சினை தீரும் நாள். தொழில் வளர்ச்சிக்கு தன்னம்பிக்கையோடு செயல்படுவீர்கள். வருமானம் வரும் புதிய வழியைக் கண்டறிவீர்கள்.

**மகரம்:** நிம்மதியான நாள். தடைப்பட்ட வாய்ப்புகள் தானாக வரும். நினைத்தது நிறைவேறும் நாள். உயர் பதவிகள் கிடைக்கலாம். பணியாளர்களுக்கு நன்மை உண்டு.

**கும்பம்:** நல்ல முயற்சிகளில் ஏற்பட்ட குறுக்கீடுகள் விலகும். எதிர்பார்த்ததை விடக் கூடுதல் வருமானம் கிடைக்கும். மனக்குழப்பம் அகலும்.

**மீனம்:** உடல்நலத்தில் பிரச்சினை வரலாம் கவனமாக இருக்கவும். பிள்ளைகளால் செலவு வரும். உதவிகள் தாமதமாகும். சொந்தங்கள் விரும்பிவந்துசேரும். பொழுதுபோக்குகள் அதிகரிக்கும்.

# காணி அபகரிப்புகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை

## கமால் குணரத்ன கூறுகிறார்



**கொழும்பு, ஒக்.17**

**“காணி அபகரிப்பு நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்” இவ்வாறு பாதுகாப்புச் செயலர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.**

உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட மாவட்டச் செயலர்களுடனான சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொல்பொருள் முக்கியத்துவம் மிக்க இடங்கள் தொடர்பில் மாவட்டச்செயலர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். நில விவகாரத்தில் தங்கள் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் அரச அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை, பாதுகாப்புப் படைகள், சுகாதாரத் திணைக்களம் மற்றும் அரச நிர்வாக சேவை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் கொரோனா மூன்று அலைகளையும் எம்மால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிந்துள்ளது - என்றார்.

(எ-இ)



## வெண்பிரம்பு தினம் கிளிநொச்சியில்!

கிளிநொச்சியில் சர்வதேச வெண் பிரம்பு தினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த நிகழ்வு கிளிநொச்சி லயன்ஸ் கழகத்தின் தலைவர் சு.யதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில், வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்துடன் இணைந்து சர்வதேச வெண்பிரம்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. நிகழ்வில் விழிப்புலனற்றோர்கள் அழைத்துக் கௌரவிக்கப்பட்டனர், அவர்களுக்கு விருந்து பசாரங்களும் வழங்கப்பட்டன. (ற-ரி2)

## இலங்கை சிற்றுண்டிச்சாலைகள் சங்கத்தின் தலைவர் கைது!

கொழும்பு, ஒக்.17

அகில இலங்கை சிற்றுண்டிச்சாலைகள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத், பிலியந்தலை பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரால் வழங்கப்பட்ட முறைப்பாடு குறித்து, விசாரணை செய்ய வந்த பொலிஸாரைக் கட்டாயப்படுத்திய குற்றச்சாட்டிலேயே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ற-இ)

## தென் மாகாணத்தில் 922 பேர் தனிமைக்கு

கொழும்பு,ஒக்.17

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாமென்ற சந்தேகத்தின் பேரில், 922 பேர் தென் மாகாணத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று மாகாண சுகாதார சேவைகள் இயக்குநர் மருத்துவர் சந்திமா சிறிதுங்க தெரிவித்துள்ளார்.

காலி மாவட்டத்தில் 348 பேரும், மாத்தறை மாவட்டத்தில் 328 பேரும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 246 பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் சுகாதார சேவைகள் இயக்குநரின் மாவட்ட அலுவலகங்கள் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. அந்தவகையில் காலி மாவட்டத்தில் இதுவரையான காலப்பகுதியில் 3 ஆயிரத்து 382 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாத்தறை மாவட்டத்தில் 2 ஆயிரத்து 78 பேருக்கும் ஹம்பாந்தோட்டையில் ஆயிரத்து 71 பேருக்கும் இதுவரை பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும்

# செய்தியாளர் மாநாட்டில் பங்கேற்றோருக்குச் சிக்கல்

கொழும்பு,ஒக்.17

அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்கான வாராந்தர செய்தியாளர் மாநாட்டில், செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட ஊடகவியலாளர்கள் அனைவரையும் சுயதனிமைப்படுத்தலை முன்னெடுக்குமாறு அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட, அரச தொலைக்காட்சியைச் சேர்ந்த ஒருவர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளமையை அடுத்து, செய்தியாளர் மாநாட்டுக்கு சமுகமளித்திருந்த அனைவரையும் சுயதனிமைப்படுத்தலை முன்னெடுக்குமாறு அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார் எனச் சந்தேகிக்கப்படும் ஊடகவியலாளரின் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளியாகும் வரை, அன்றைய செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரையும் தனிமைப்படுத்தலை முன்னெடுக்கு மாறு சுகாதார அதிகாரிகள் கேட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

சுகாதார அதிகாரிகள் மேலதிக உத்தரவை வழங்குவார்கள் என்று அரச தகவல் திணைக்களத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

(க-இ)

# “20” இற்கு ஆதரவு திரட்டுவதற்கா ரிஷாத்தை குறிவைக்கிறது அரசு?

## இராதாகிருஷ்ணன் எம்.பி.சந்தேகம்

கொழும்பு,ஒக்.17

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காகவா ரிஷாத் பதியுதீனை அரசாங்கம் குறிவைத்துள்ளது என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.



நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; புத்தளத்திலிருந்து மன்னாருக்கு வாக்காளர்களை ரிஷாத் பதியுதீன் சட்ட பூர்வமாகவே அழைத்துச்சென்றுள்ளார்.

அப்படியிருந்தும் அவரைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இது முற்றிலும் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாகும். இதனை அனுமதிக்கமுடியாது.

20 இற்கு எதிர்ப்பு வலுத்துவரும் நிலையில் ரிஷாத் தரப்பின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காகவா ரிஷாத்தைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்ற சந்தேகம் எழுகின்றது என்றார். அதேவேளை, முல்லைத்தீவில் ஊடகவியலாளர்கள் இருவர் தாக்கப்பட்ட சம்பவத்தையும் அவர் வன்மையாகக் கண்டித்தார். (ஐ-44)

# மன்னார் விவசாய பணிப்பாளராக சகிலாபானு



வவுனியா,ஒக்.17

வவுனியா மாவட்ட மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளராக முன்னர் கடமையாற்றிய அ. சகிலாபானு, மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மத்திய விவசாய அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் குமுது பெரேராவால் இந் நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் பணியாற்றிய இவர், வவுனியா விவசாயக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-110)

# வவுனியாவில் தோன்றியது பண்டாரவன்னியன் சதுக்கம்

வவுனியா,ஒக்.17

வவுனியா மாவட்டச் செயலகத்தின் முன்பாக உள்ள பண்டாரவன்னியனின் சிலை அமைந்துள்ள சந்திப் பகுதி பண்டாரவன்னியன் சதுக்கமாகப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

வவுனியா பண்டாரவன்னியன் மறுமலர்ச்சி மன்றத்தின் கோரிக்கையை ஏற்று நகரசபை உறுப்பினர் ரி. கே. இராசலிங்கம் நகரசபை அமர்வில் முன்வைத்த கோரிக்கைக்கு அமையவே நகர சபை குறித்த பெயரைச் சூட்டியுள்ளது.

பண்டாரவன்னியன் சிலை அமைந்துள்ள பகுதி இதுவரை காலமும் பெற்றோல் செட் சந்தி என அழைக்கப்பட்டு வந்த நிலையில் இனிவரும் காலங்களில் பண்டாரவன்னியன் சதுக்கம் என அழைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-110)



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து பொலிஸ் பிரிவுகளிலும் சுகாதார நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் முகக்கவசம் அணிவது தொடர்பாக பொலிஸார் அறிவுறுத்துவதுடன் மீறுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளனர். (ஐ-113)

# கஞ்சா வைத்திருந்த இருவருக்கு தண்டம்

சாவகச்சேரி,ஒக்.17

கஞ்சா உடைமையில் வைத்திருந்த இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று தலா 20 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினருக்கு கிடைத்த தகவலையடுத்து நேற்றுமுன்தினம் நாவற்குழி பகுதியில் 40 கிராம் கஞ்சாவை வைத்திருந்த ஒருவரையும், கைதடி கோப்பாய் வீதியில் 25 கிராம் கஞ்சா வைத்திருந்த ஒருவரையும் கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்திய போது இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

# செவ்வண்டுகளின் தாக்கம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.17

வடக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் காலநிலை மாற்றத்தால், தென்னைகள் மீதான செவ்வண்டுகளின் தாக்கம் அதிகரித்துள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்மராட்சி பிரதேசத்திலும், கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளைப் பிரதேசத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைபற்றுப் பிரதேசங்களிலும், வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி பிரதேசத்திலும் உள்ள தென்னைகளில் இந்த செவ்வண்டுத்தாக்கம் அதிகரித்துள்ளது.

எனினும் இதைக் கட்டுப்படுத்தும் விசேட வேலைத்திட்டமொன்றை தென்னைப் பயிர்ச்செய்கை சபை ஆரம்பித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது (ஐ-ரி)

# அடிக்கல் நடும் விழா

உடுப்பிட்டி,ஒக்.17

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியில் விளையாட்டு மாணவர்கள் உடைமாற்றும் அறை மற்றும் மலசலகூட தொகுதிக்கான அடிக்கல் நடும் விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி பழைய மாணவர்கள் சங்கத்தினரால், 4.5 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன. (க-422)



# வவுனியாவில் விசேட ரோந்து நடவடிக்கை

வவுனியா,ஒக்.17

வவுனியாவில் நேற்றுக் காலை முதல் நகர்ப் பகுதி மற்றும் சுற்று வீதிகளில் திடீர் ரோந்து நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர்.

முற்பகல் 10 மணியிலிருந்து விசேட அதிரடி படையினர் வவுனியா நகர் பகுதிகள் மற்றும் பூந்தோட்டம் பகுதிகளிலும் ரோந்தை மேற்கொண்டிருந்தமையுடன், பிரதான வீதி வழியாக ஏ9 வீதி, தாண்டிக்குளம் பகுதிக்குச் சென்றிருந்தனர்.

அத்துடன் சந்தேகத்துக்கு இடமான வாகனங்கள் மீது சோதனையும் மேற்கொண்டனர். (ஐ-110)

# மருத்துவ உபகரணங்களை வழங்கியது அமெரிக்கா

கொழும்பு, ஒக்.17

கொரோனாப் பாதுகாப்பு அங்கிகள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள் அடங்கிய ஒரு தொகுதி பொதிகளை இலங்கைக்கு அமெரிக்கா வழங்கியுள்ளது. சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியிடம், அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் பொதிகளைக் கையளித்தார்.

1,91000 அமெரிக்க டொலர் பெறுமதியான பொதிகளே இவ்வாறு சுகாதார அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (க-இ)



## அத்தியாவசிய பொருள்களுக்கு மட்டுப்பாடு

சுன்னாகம், ஒக்,17
அரசாங்கத்தால் விலை குறைக்கப்பட்ட அத்தியாவசியப் பொருள்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சில இடங்களில் மட்டுப்பாட்டுடன் விற்பனை செய்யப்படுகிறன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுன்னாகம் பிரதேசத்தில் உள்ள பிரபல தனியார் விற்பனை நிலையம் ஒன்றில் குறித்த பொருள்களான சீனி, பெரிய வெங்காயம், பருப்பு என்பன 2 கிலோவுக்கு மேலதிகமாகக் கொள்வனவு செய்ய மறுக்கப்படுகிறது என்று நுகர்வோர்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த குறித்த தனியார் விற்பனை நிலையத்தின் முகாமையாளர் தமது தலைமையகத்தில் இருந்து மேற்படி பொருள்களை 2 கிலோவுக்கு அதிகமாக விற்பனை செய்ய வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது என்றார். (ப)

*20ஆவது திருத்தச்சட்டம்*

# ஜனநாயகத்தை சவப்பெட்டியில் வைத்து அடிக்கும் கடைசி ஆணி

### களத்தில் குதிக்கிறது ஜனநாயகத்துக்காக ஒன்றிணைந்த இளைஞர் அணி

யாழ்ப்பாணம், ஒக்.17

**20ஆவது திருத்தச்சட்டம் நாட்டின் ஜனநாயகத்தை கடுமையாகப் பாதிப்பதால், அந்தச் சட்டத்தை எதிர்த்து, அது தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கு இளைஞர்கள் அனைவரும் முன்வரவேண்டும் என்று ஜனநாயகத்துக்காக ஒன்றிணைந்த இளைஞர் அமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.**

யாழ்ப்பாணம் நல்லூரில் நேற்று நடந்த ஊடக சந்திப்பின்போதே அவர்கள் இவ்வாறு வலியுறுத்தினர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

சிறுபான்மை மக்களை மட்டுமல்லாது, நாட்டில் அனைவரையும் பாதிக்கக்கூடியவாறும், நாட்டின் ஜனநாயகத்தைப் பாதிக்கக்கூடியவாறும் 20 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

எனினும் இது தொடர்பில், எமது தலைவர்கள் பெரியளவில் கருத்துக்களை முன்வைப்பதையோ, எதிர்ப்பதையோ, அல்லது மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதையோ காணமுடியவில்லை. எமது தலைவர்கள் நிசப்தமாக இருந்தாலும், இளைஞர்களாகிய நாங்கள் இது குறித்து அமைதி காக்கக் கூடாது என்ற சிந்தனையுடன் ஜனநாயகத்துக்கான ஒன்றிணைந்த இளைஞர் அணியாக நாங்கள் ஒன்றிணைந்துள்ளோம்.

இந்த அரசமைப்புச் சீர்திருத்தம் என்பது அரசாங்கங்கள் மாறும்போது, மாறுகின்ற ஒரு விடயமாக உள்ளது.

ஆகவே நாங்கள் இளைஞர்களாக, எந்தவித அரசியல் சாயமும் அற்றவர்களாக, 21 ஆவது திருத்தம் தொடர்பில் விழிப்பூட்டுவதற்கு நாங்கள் பொதுமக்கள் முன் வருகிறோம். இது பற்றிய விழிப்புணர்வு என்பது தனியே அரசியல் தலைவர்கள் மட்டும் கதைத்தால் போதாது, அல்லது மதத்தலைவர்கள், புத்திஜீவிகள் மட்டும் கதைத்தால் போதாது, மாறாக சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் உள்ள மக்களுக்கு இது போய்ச்சேர வேண்டும். 20ஆவது திருத்தத்துக்கு பிறகு எங்களுடைய வாழ்க்கை எப்படி இருக்கும் என்று கேள்வி இருந்தால், அதனுடைய ரீசர் 2010 தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரையான காலத்திலே நாங்கள் பார்த்திருக்கிறோம். 20 ஆவது திருத்தம் முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தப்படுமாக இருந்தால், 2010-2015 ஆண்டுகளின் ரீசரின் முழுப் படமாக நாங்கள் இதைப் பார்ப்போம்.

எனவே இது சார்ந்த விழிப்புணர்வைக்கொண்டு சென்று சேர்க்கும் முக்கியமான கடமை இளைஞர்களுக்கு உண்டு. ஒரு நபர் சார்ந்து அவ்வளவு அதிகாரங்களும் கொண்டு சென்று குவிக்கப்படும் போது, அது ஒவ்வொருவருடைய இறையாண்மையையும் பாதிப்பதாகவே அமையும்.

எனவே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த சந்தர்ப்பத்தில் எங்களது தலைவர்கள் அமைதி காக்கிறார்களோ இல்லையோ இளைஞர்களாகிய நாங்கள் அமைதி காத்து விடக்கூடாது - என்றனர். (ப)

## துப்பாக்கி அனுமதிகள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஒக்.17
2021ஆம் ஆண்டுக்கான துப்பாக்கி அனுமதிப்பத்திரம் மற்றும் தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனங்களுக்காக பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரங்களை புதுப்பித்தல் நடவடிக்கைகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்பொழுது காணப்படும் கொரோனா வைரஸ் நிலைமையைக் கருத்திற்கொண்டே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளது. துப்பாக்கி அனுமதி பத்திரம் மற்றும் தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனங்களுக்கான அனுமதிப் பத்திரம் வழங்கல் மற்றும் புதுப்பித்தல்களுக்கான அனுமதி என்பன பாதுகாப்பு அமைச்சினால் மாத்திரம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப-இ)

## 5 ஆண்டுகள் கடந்தும் இடமாற்றம் இல்லை

### கிளி. உத்தியோகத்தர்கள் விசனம்

வெளிமாவட்டத்திலிருந்து வந்து கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்குட்பட்ட பிரதேச செயலங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு இதுவரை பணி இடமாற்றம் வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வெளிமாவட்டங்களில் இருந்து வரும் 60க்கு மேற்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகங்களில் கடமையாற்றுகின்றனர். தூரப் பிரதேசத்தில் கடமையாற்றும் கால எல்லையாகிய 5 வருடங்களை அவர்கள் நிறைவு செய்தபோதும், இன்னமும் இடமாற்றம் வழங்கப்படவில்லை இதனால், பெண் உத்தியோகத்தர்கள் அதிகம் பணிச்சுமையை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-ரி1)

## வவுனியா குளத்தில் பண முதலைகள்

### லெனினிசக் கட்சி கண்டனம்

வவுனியா,ஒக்.17
வவுனியாவில் பண முதலைகளின் குள ஆக்கிரமிப்பால் பல ஏக்கர் குள நிலம் அபகரிக்கப்பட்டுள்ளது என்று வவுனியாக் குளத்தின் ஒரு பகுதி மூடப்பட்டது தொடர்பில், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வன்னி மாவட்டச் செயலாளர் பிரதீபன் கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

பாலை விடவும் குடிதண்ணீர் விலையேறியிருக்கக்கூடிய இச் சூழலில் எதிர்காலச் சந்ததி பற்றி எதுவித அக்கறையும் இன்றி செய்யப்பட்ட விடயமாகவே இதைப் பார்க்க வேண்டியுள்ளது. இதனை எமது கட்சி மிக வன்மையாக எதிர்ப்பதுடன், கண்டனத்தையும் வெளியிடுகிறது- என்றார். (ப-110)



காங்கேசன்துறை கோல்டன் லயன்ஸ் கழகமும், நல்லூர் லயன்ஸ் கழகமும் இணைந்து கடந்த புதன்கிழமை கொக்குவில் பிடாரி அம்மன் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த மக்களுக்கு பயன்தரு மரக்கன்றுகளை வழங்கி இருந்தன. (ப-9)

## வணிகர் ஒன்றியத்தின் கருத்தை ஏற்கமுடியாது

### மக்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஒக்.17
கூடிய விலைகளுக்கு பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளதால், அரசின் அறிவிப்புக்கு அமைய வர்த்தகர்கள் அத்தியாவசியப் பொருள்களுக்கான விலையைக் குறைக்க முடியாத நிலையில் உள்ளனர் என்று வணிகர் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளமையை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று மக்கள் தெரிவித்தனர்.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டதால் மக்கள் சதோச போன்ற கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களில் நீண்ட வரிசையில் நின்று பொருள்களைக் கொள்வனவு செய்கின்றனர். அது குறித்து அவர்களிடம் வினவியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அரசால் விலைக்குறைப்புச்செய்யப்பட்ட பொருள்களுக்கு தனியார் விற்பனை நிலையங்களில் இன்னமும் விலைகள் குறைக்கப்படவில்லை. வர்த்தகர்களைக் கேட்டால் அவர்கள் ஒன்றியத்தினர் விடுத்த அறிக்கையைச் சுட்டிக்காட்டி விலையைக் குறைக்க மறுக்கின்றனர். மக்கள் நலன்கருதி அத்தியாவசியப் பொருள்களின் விலையை அரசு குறைக்கும்போது வர்த்தகர்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது என அறிக்கை விடும் ஒன்றியத்தினர், கொரோனா ஆரம்ப காலத்தில் விலை அதிகரிப்பு செய்யும் வேளைகளில் முன்னைய விலைக்கு விற்பனை செய்யுமாறு அறிக்கை விடாமலிருந்தது கவலை தருகிறது என்று மக்கள் சுட்டிக்காட்டினர். (ப

*ரிஷாத்தின் கைதுக்கு கண்டனம்:*

## மன்னார் பிரதேச சபையில் நிறைவேறாமல்போன தீர்மானம்



மன்னார், ஒக்.17

புதிய அரசால் நாடாமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் பழிவாங்கப்படுகிறார் என்று தெரிவித்து மன்னார் பிரதேச சபையில் கொண்டுவரப்பட்ட கண்டனத் தீர்மானம், அந்தச் சபையில் ஏற்றுக்கொள்ளப்படாது விடுபட்டது.

மன்னார் பிரதேச சபையின் 31 ஆவது அமர்வு, தவிசாளர் எஸ்.எச்.எம். முஜ்ஹீர் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பிரதேச சபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் ஜெ. இன்சாப் தனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில், உரையாற்றும்போது; சிறுபான்மை மக்களின் பிரதிநிதியை நசுக்கும் நோக்குடன் நாடாளுமன்ற உறுப்பினரான ரிஷாத் பதியுதீனைக் கைதுசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த கைதைக் கண்டித்து இச் சபை தீர்மானம் எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

அந்த வேண்டுகோளை சபை ஏகமனதாகத் தீர்மானிக்கலாமா என தவிசாளரால் முன்வைக்கப்பட்டபோது, சபையில் பலதரப்பட்ட கருத்துக்களும் முன்வைக்கப்பட்டு, கண்டனத் தீர்மானம் நிறைவேறாது போனது. (ப-60)

# அரியாலை கிழக்கு பிரதேசம் கடல் நீர் புகுந்து அழியும் அபாயம்

## செய்வதறியாது திணறும் கிராம மக்கள்

**யாழ்ப்பாணம், ஒக். 17**

**நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அரியாலை கிழக்கு பிரதேசத்தில் சட்டத்திற்கு உட்பட்டும், சட்டவிரோதமாகவும் மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இதனால், அந்தப் பிரதேசம் கடல் நீர் உட்புகுந்து அழியும் நிலையில் உள்ளது என்று பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர்.**




இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் இந்த மணல் அகழ்வு இடம்பெறுகின்றது. இரவு வேளைகளில் களவாக தனியார் காணிகளில் இவ்வாறு மணல் அகழ்வு இடம்பெறுவதோடு, பொய்யான காணி உறுதிகளையும், முறையற்ற காணிமாற்று முறைகளையும் பயன்படுத்தி கனியவளத் திணைக்களத்தில் அனுமதிபெற்று பெறப்பட்ட அனுமதிக்கு மேலாகவும் மணல் அகழப்படுகின்றது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரால் முடியாதுள்ளது. மணல் அகழ்வைத் தடுக்க வந்த பொலிஸார்மீது தாக்குதல் நடைபெற்ற சம்பவங்களும், மணல் கொள்ளையர்மீது துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. என்றாலும் கூட மணல் அகழ்வைக் கட்டுப்படுத்தமுடியவில்லை. இந்த மணல் அகழ்வு தொடருமானால், பிரதேசத்துக்குள் கடல் நீர் உட்புகுந்து பிரதேசத்தையே அழிக்கும் நிலை ஏற்படும். எனவே இதற்கு நீதிமன்றம், ஆளுநர் அலுவலகம், மாவட்டச் செயலகம், கனியவளத் திணைக்களம், கடற்றொழில் அமைச்சு என்பன விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றனர். (ப-20)

# ரிஷாத்தை அடக்க நினைப்பதை ஏற்கோம்

## *மக்கள் காங்கிரஸ் கண்டனம்*

வவுனியா, ஒக்.17

சிறுபான்மைச் சமூகங்களின் விடிவுக்காகப் பாடுபடுகின்ற தலைவனை அடக்கி ஒடுக்க நினைப்பதை வன்மையாகக் கண்டிப்பதாக முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியூதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

ரிஷாத் பதியூதீனைக் கைது செய்யவேண்டும் என்பதற்காகப் பல விடயங்கள் இடம்பெற்றுவருகின்றன. அந்தவகையில் அரசு உட்பட பாதுகாப்புத் தரப்புகளுக்கு நாம் ஒரு விடயத்தைச் சொல்லிக்கொள்கின்றோம். அவர் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு பிரதிநிதி. அவர் ஏதேனும் பிழைகள் அல்லது சட்டவிரோதமான செயற்பாடுகளைச் செய்திருந்தால், அது தொடர்பாக அவரை விசாரிப்பதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் அவரது பக்கத்தில் நியாயம் இருக்கின்ற போது, அவர் உரிய விடயங்களுக்குப் பதில் அளித்துக்கொண்டிருக்கின்றபோது அவரைச் சிறையில் அடைத்துத்தான் அடுத்த விடயத்தைப் பார்ப்போம் என்ற நிலைப்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன். அவரைச் சிறையில் தள்ளிவிட்டு குற்றமற்றவர் என்று விடுவிக்கும் இந்தக் கலாசாரத்தையும் நிறுத்துங்கள் என்றும் கோருகின்றோம். அத்தோடு சிறுபான்மைச் சமூகங்களின் விடிவுக்காகப் பாடுபடுகின்ற தலைவனை அடக்கி ஒடுக்க நினைப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.- என்றனர் (ப-110)

உ
சிவமயம்

**உபநயன பிரம்மோபதேச அழைப்பு**

நிகழும் மங்களகரமான சார்வரி வருஷம் ஐப்பசி மாதம்
**2 ஆம் நாள் (18.10.2020) ஞாயிற்றுக்கிழமை சுவாதி நட்சத்திரமும்,**
**சித்த யோகமும் கூடிய காலை 6.20 மணி முதல் 8.05 மணிவரை**
உள்ள **துலா லக்ன** சுபமுகூர்த்த வேளையில்

| மாதகல் | பருத்தித்துறை |
|---|---|
| **சிவஸ்ரீ.கதிர் செல்லப்பா குருக்கள்** | **பிரம்மஸ்ரீ.க.சண்முகரத்தின சர்மா** |
| **ஸ்ரீமதி தவமணிஅம்மா** | **ஸ்ரீமதி கணேஸ்வரி அம்மா** |
| தம்பதிகளின் பௌத்திரனும் | தம்பதிகளின் தௌகித்திரனும் |

**எமது கனிஷ்ட புத்திரனுமாகிய**

**திவ்ய ரமானுஜ சர்மாவுக்கு**

யக்ஞோபவிததாரண பிரம்மோபதேசஞ் செய்ய
அரசடி சித்தி விநாயகரின் திருவருளும், குருவருளும்,
பெரியோர்களின் ஆசியும் கூடியிருப்பதால் மேற்படி வைபவம்
**"அரசடி சித்தி விநாயகர் ஆலய மண்டபத்தில்"**
நிகழவிருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம்
வருகைதந்து குமாரனை ஆசீர்வதிக்குமாறு
அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**பிரம்மோபதேச குரு**
"வேத சிவாகம ஞான பானு"
**பிரம்மஸ்ரீ.க.சோமசுந்தரகுருக்கள்**
(உரும்பிராய்)

தங்கள் நல்வரவை நாடும்
சிவஸ்ரீ.கதிர் செ.மங்களேஸ்வர குருக்கள்
ஸ்ரீமதி ரஜிதா அம்மா தம்பதிகள்.
பிரம்மஸ்ரீ.தரணிதர சர்மா திவ்யா தம்பதிகள்
பிரம்மஸ்ரீ.ம.திவ்வியன்

**அரசடி பிள்ளையார் கோவில்,**
**மாதகல்.**

# *மீனவக் குடும்பங்களுக்கு சுத்திகரித்த குடிதண்ணீர்*

## வவுனியாவில் நேற்று கையளிப்பு



வவுனியா, ஒக்.17

வவுனியாவில் உள்ள 68 மீனவக்குடும்பங்களுக்கு சுத்தமான குடிதண்ணீர்த் தேவை பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

கடற்றொழில் நீரியல் வளங்கள், அபிவிருத்தி அமைச்சின் வாவியூடானான கிராமம் எனும் அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் இந்த சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு பொதுமக்களிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

கடற்றொழில் அமைச்சினுடைய, 36 இலட்சத்து 84 ஆயிரம் ரூபா நிதியில் வவுனியா மாமடுவ மீனவக்கிராமத்திலேயே இரண்டு குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இவ்வாறு அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டன.

இதன்மூலம் 68 மீனவக் குடும்பத்தவர்கள் சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. வவுனியா மாவட்ட நீர் உயிரினச் செய்கை விரிவாக்கல் நிலையத்தின் அதிகாரி யோ. நிசாந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தவமலர் மனோகராயா மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ப-110)

மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

## ஒன்பது தினங்களும் மகா சக்தியை பூசித்து வழிபடும்

# நவராத்திரி விரதம்



நவராத்திரி வழிபாடு கன்னி மாதம் எனும் புரட்டாதி மாதத்துப் பூர்வபட்ச பிரதமைத் திதி முதலாக வரும் ஒன்பது இரவுகளிலும் அமாவாசைக்கு முதல்நாள் நோன்புடன் தொடங்கி உலக மாதாவாகிய உமையம்மையாரின் இன்னருள் பெற்று வாழ விரும்பும் ஒவ்வொருவரும் 'நவராத்திரி என்னும் அதி சிறந்த விரதத்தைப் பக்தி சிரத்தையுடன் அனுஷ்டித்து வருகின்றனர்.

**'விஜயதசமி'**

இவ்வாறாக அனுஷ்டித்த ஒன்பதாம் நாளிரவு கழிந்த பத்தாம் நாள் 'விஜயதசமி' எனப்படும். இதனை இந்தியாவிலே 'தசரா" என அழைப்பர். நவராத்திரி என்றால் தொடர்ந்து ஒன்பது இரவுகளிலும் நோற்கும் விரதத் திருநாள் என்பது பொருள்.

சிவராத்திரி விரதமோ-ஓர் இரவில் மாத்திரம் விழித்திருந்து அனுஷ்டிக்கத்தக்கது. நவராத்திரி விரதமோ ஒன்பது நாளிரவும் தொடர்ந்து அனுஷ்டித்து தேவியின் திருவருளைப் பெற்று பத்தாம் நாள் விஜயதசமியன்று சரஸ்வதி பூசை முடிந்த பின் விரதத்தை நிறைவு செய்வர்.

நவராத்திரி தினங்களில் முதல் மூன்று நாளிரவிலும் உமாதேவி அல்லது துர்க்கை இருவரையும் ஒரு கும்பத்திலும், அடுத்த மூன்று நாளிரவிலும் திருமகளாகிய இலக்குமியை வேறோர் குடும்பத்திலும், மற்ற மூன்று நாளிரவிலும் கலை மகளாகிய சரஸ்வதிவதியை மற்றொரு கும்பத்திலுமாக ஆவாகித்துப் பூசை நடைபெறுவது வழக்கம்.



தெய்வ உபாசனைகளாலும், ஆண்மை, செல்வம், அறிவு என்னும் வீரம், தியாகம், ஞானம் என்பவைகளைத் துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி முதலிய மூன்று தெய்வங்களாக் கொண்டு வழிபடப்படுகின்றது.

**துர்க்கை**

எருமை முகத்தையுடைய மகிடாசூரன் என்பவன் மிடு பலசாலியாயிருந்து தேவேந்திரன் முதலிய தேவர்களுக்கு இடுக்கண் விளைவித்து அடக்கியாண்டான். ஒருமுறை அவனது ஏவலாளர் உணவுக்காக மிருகங்களை வேட்டையாடி வரக் காட்டுக்குச் சென்றனர். அக்காட்டிலே தவஞ் செய்து கொண்டிருந்த தேவர்கள் அவர்களைக் கொன்று விட்டனர். இதையறிந்த மகிடன், தேவர்களுடன் போர் தொடுத்தான். இதனை உமாதேவியார் அறிந்து துர்க்காதேவியை அனுப்பி அவனைக் கொல்லும்படி ஏவினார். துர்க்காதேவியும் கோபாவேசம் மிக்க கோர வடிவுடன் சென்று தனது சக்கரப்படையினால் அவனது தலையை அறுக்க, உடனே அவன் யானையானான். யானையை அழித்ததும் குதிரையானான். குதிரையையும் அழிக்க நெருப்பானான். இப்படியே மாறி மாறி பலவித உருவங்களைக் கொண்டான். இறுதியாக களைப்பெய்தியவனாய் பழையபடி எருமைத் தலையுடன் தோன்றினான். அதைக் கண்ட துர்க்கா தேவி மேலும் சினங்கொண்டு அவனைக் கொன்று அவனது தலையைத் தமது திருவடியால் மிதித்தார். அப்பால் வேறு வடிவங் கொள்ள இயலாது அடங்கி பின்னர் நற்கதி அடைந்தார். இன்னல்களைக் களைந்து, எம்மை வாழ்வாங்கு வாழ வலிமையைத் தருகின்றவள் துர்க்கை அவளை முதல் மூன்று நாள்களிலும் வழிபாடு செய்கிறோம்.

**'இலக்குமி'**

கிரியா சக்தியாகிய இலக்குமியைச் சிவப்பு அல்லது பச்சை நிறமுடையவளாகவும் செந்தாமரை மலரில் வீற்றிருந்து கஜேந்திரன் என்னும் யானையினால் அபிஷேகம் செய்யப் பெறுபவளாகவும் பாவித்து வணங்குகின்றனர். இவளே மக்கள் விரும்புவதாகிய இவ்வுலக யோகங்களுக்குள் சிறந்த தானம் எனக் கூறும் எண் வகைப் பொருட் செல்வங்களுக்கு உரியவளாகக் கொள்கிறோம்.

மேலும் அவள் பதுமம் ஆகிய செந்தாமரை மலரில் சதா வீற்றிருப்பதால் அவள் அருளுகின்ற செல்வத்தை 'பதுமநிதி'என அழைத்தனர் ஆன்றோர். அத்துடன் திருமகள் செய்யவள், செங்கமலை, கீதேவி, தனலக்குமி, தான்யலக்குமி, வீரலக்குமி, விஜயலக்குமி, வரலக்குமி, முதலிய நாமங்களோடு வணங்கப்படுகின்றாள். செல்வம் மட்டும் எய்தி வாழ இலக்குமியை அடுத்துவரும் மூன்று தினங்களிலும் வழிபடுகிறோம்.

**'சரஸ்வதி'**

ஞானாசக்தியாக விளங்குகின்ற கலைமகள் என்றும் அறிவுமயமாக இருக்கிறாள். அறிவுக்கு உறைவிடமாகிய சரஸ்வதியானவள் என்றும் வெள்ளைக் கமலத்தில் வீற்றிருந்து வெண்ணிற வீணை, வெண்மணி மாலை முதலியவற்றைக் கையினிற்கொண்டு மற்றும் வெண்ணிறமான ஆபரணங்களையும் அணிந்தும் அறிவு மயமாய் விளங்குகின்றாள். கல்வியிற் சிறந்த காளமேகப்புலவர் கலை மகளின் வடிவினை "வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்துள் வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசன் வைத்தாய்"
எனப் போற்றுகின்றார். கல்விக்கும் கலைக்கும் அதிபதியாக விளங்குபவள் கலைமகள்.

இவ்வாறாக மும்முறை ஒன்பது இரவுகளிலும் சக்தியின் முக குணங்களாகிய தாமசம், இராசதம, சாத்வீகம் துலங்கும் வகையிலும் முதல் மூன்று நாளிரவும் வீரச் செயலுக்கேற்ற இச்சா சக்தியாகிய சிவப்பு நிறங் கொண்ட உமைதுர்க்கை வடிவிலும், கிரியா சக்தியாக பச்சை நிறங்கொண்ட இலக்குமி வடிவிலும், ஞானசக்தி என்னும் வெண்ணிறங்கொண்ட கலைமகள் சரஸ்வதி வடிவிலும் பாவனை செய்து வழிபாடு செய்கிறோம்.

# மேய்ச்சல் தரைக்கு எல்லையிட்டது முல்லை. வனவளத் திணைக்களம்

## கால போகத்தில் கால்நடை வளர்ப்போர் பெரும் சிரமம்

கால்நடைகளின் மேய்ச்சல் தரவைகளை வனவளத் திணைக்களத்தினர் தமது கட்டுப்பாட்டுக்குள் எல்லைப்படுத்தி வைத்திருப்பதால் கால்நடை வளர்ப்போர் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு உட்பட்ட இந்த வருடம் கால போகப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

மாவட்ட மேலதிக செயலர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவின் பிர காரம் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதிவரை விவசாயிகள் விதைப்பை மேற்கொள்வதற்கான கால எல்லை வழங்கப்பட்டுள்ளது. முத்தையன் கட்டு நீர்ப்பாசன விவசாயக் கொள்கையின் பிரகாரம் வேலியுடன் பயிரும், ஆளுடன் மாடும் என்பதற்கிணங்க வயல் நிலங்களைச் சுற்றி விவசாயிகள் வேலி அமைத்து நெற்செய்கையில் ஈடுபடுவதை அறிவுறுத்தவும். கால்நடை வளர்ப்பாளர்கள் கால்நடைகளைக் கொண்டுசென்று மேய்ப்பதற்கு அறிவுறுத்தவும் முடிவெடுக்கப்பட்டது. இதன்போது கமக்கார அமைப்புக்களால் வனப்பாதுகாப்புத் திணைக்களத்தினர் கால்நடைகளின் மேய்ச்சல் தரவைகளைத் தமது கட்டுப்பாட்டிற்குள் எல்லைப்படுத்தி வைத்திருப்பதால் கால்நடை வளர்ப்பாளர்கள் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த மேலதிக மாவட்டச் செயலர், மேய்ச்சல்தரவை தொடர்பில் முடிவெடுப்ப தற்கு வன பாதுகாப்புத் திணைக்களத்தின் சார்பாக அதிகாரிகள் வருகை தரவில்லை. எனவே மேய்ச்சல் தரவை தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் முடிவெடுக்க முடியாத நிலை உள்ளது எனக் கூறினார்.

ஆயினும் குறித்த கலந்துரையாடலுக்கு வனப்பாதுகாப்புத் திணைக்களத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதும் அவர்கள் கலந்து கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரி1)

# தொலைபேசி உரையாடலுக்கு சிறைக்கைதிகளுக்கு அனுமதி

சிறை கைதிகள் நேற்று முதல் தங்கள் குடும்பத்தினருடன் தொலைபேசி ஊடாக உரையாட முடியும் என்று சிறைச்சாலைத்துறை தெரிவித்துள்ளது. கைதிகளுக்கு உளவியல் ரீதியான தாக்கத்தைக் குறைப்பதற்காக இத்தகைய நடவடிக்கை முன்னெடுக்க ப்பட்டுள்ளது.

3 நிமிடங்கள் வரையில் அவர்கள் தத்தம் குடும்பத்தினருடன் உரையாட முடியும். நாட்டில்தற்போதுஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் கட்டுப்பாட்டுக்குள் வரும் வரையும் இவ்வாறு சிறை கைதிகளுக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்று மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-இ)

# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned posts.

## FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE

Senior Professor/ Professor of **Commerce / Financial Management / Human Resource Management / Marketing**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary) in **Accounting / Financial Management / Marketing**

### SALARY AND OTHER BENEFITS

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.139,175 - 11x2925 - 171,350 p.m |
| Professor | Rs.117,350 - 13x2700 - 152,450 p.m |
| Senior Lecturer Grade I | Rs.91,310 - 7 x 2,170 - 106,500/-p.m |
| Senior Lecturer Grade II | Rs.79,360 - 11 x 1,630 - 97,290/-p.m |
| Lecturer (Unconfirmed) | Rs.69,580 - 5 x 1,630 - 77,730 / -p.m |
| Lecturer (Probationary) | Rs.54,600 - 10 x 1,335 - 67,950/-p.m |

In addition to the above salary,

1. The following allowances will be paid as the percentage of the basic salary to the academic staff:

   i) Academic allowance

   | | |
   |---|---|
   | Senior Professor | - 167% |
   | Professor | - 162% |
   | Senior Lecturer Gr.I/Gr.II | - 151% |
   | Lecturer (Unconfirmed) | - 131% |
   | Lecturer (Probationary) | - 115% |

   ii) Research allowance - 35% (based on the research activity)

   iii) Additional monthly allowance – 20%

2. Cost of living allowance of Rs.7,800/-p.m.

**Statutory benefits:**

I. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
III. Gratuity payments
IV. Employees' Trust Fund benefits
V. Free Medical Services

**Closing date:**

Applications should reach us on or before the date given below:

**Post of Senior Professor/Professor** - 31.12.2020
**Other posts** - 18.11.2020

Applications and other documents for the Post of **Senior Professor/Professor** shall be sent to the Vice-Chancellor with a covering letter. Applications for the **other posts** shall be sent to the **Deputy Registrar / Academic Establishments,** University of Jaffna, Sri Lanka with the photocopies of the educational & professional qualifications (with statement of the Degrees and service certificates.)

* Applicants for the Post of Professor are requested to submit the following in addition to the prescribed Application Form:

a) 18 copies of his/her Curriculum Vitae
b) 18 copies of self-assessment of his/her whole career that lists and specifies the contribution to:
   * Teaching, Scholarship and Academic Development
   * Research, Scholarship and Creative Work
   * Dissemination of Knowledge
   * Awards, University, National and International Development Activities

The Self Assessment should be prepared in accordance with the marking scheme, giving details under each heading/sub heading.

c) Three copies each of the documents to support self assessment in :
   * Teaching, Scholarship and Academic Development (Section 1.0)
   * Research, Scholarship and Creative Work (Section 2.0)
   * Dissemination of Knowledge (Section 3.1)
   * Awards, University, National and International Development Activities and other relevant documents listed in the self assessment. (Section 3.2 & 3.3)

   (Section 2.0 & 3.1 could be prepared as a separate document)
   (The three copies of the publication, research papers and other relevant documents should be submitted in a form of that can be evaluated)

d) Titles of five (05) outstanding research publications/research papers by the candidate.

Application forms and other details will be available in the University website www.jfn.ac.lk. Downloaded application forms should accompany the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank Account No: 162-1-001-6-0000880 of Bursar, University of Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar, Academic Establishments, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a self– addressed stamped envelope 23x10 c.m. in size along with the paid Bank Slip to the above address.

The candidates who apply for more than one position should submit separate application along with separate Bank slip. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**16.10.2020**

# ஓய்வு பெறும் வயதெல்லையை உயர்த்துவதற்கு அரசு கரிசனை

கொழும்பு -ஒக்.17

தனியார் துறையில் ஓய்வுபெறும் வயதெல்லையை 60ஆக உயர்த்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்படும் என தொழில் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார். தொழில் அமைச்சில் நேற்று முன்தினம் இடம் பெற்ற தொழில் ஆலோசனைச்சபைக் கூட்டத்தின்போது முன்வைக்கப் பட்ட இந்த பிரேரணை தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் வயது முதிர்ந்த வர்களின் சனத்தொகை வெகுவாக அதிகரித்து, இளம் வயதினரின் வீதம் குறைந்து செல்வதன் மூலம் எதிர்கால தொழில் ஆளணியில் பெரும் வெற்றிடம் ஏற்படலாம். இதனால், உலகில் ஏனைய நாடுகளைப்போன்று ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பதைக் கருத்திற்கொண்டு, தகைமையுள்ள ஊழியர்களின் சேவையைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ளும் நோக்கில், தனியார் துறை ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 60வரை அதிகரிக்க கவனம் செலுத்துவோம் என அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

# பூசைக்குரிய பொருள்களின் விலை அதிகம்

யாழ்ப்பாணம்,ஒக்.17

நவராத்திரி பூசைக்குத் தேவையான பொருள்களின் விலை அதிகரித்துள்ளன என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

வர்த்தக நிலையங்களில் ஒரு கிலோ அவல் 160 ரூபா, சக்கரை ஒரு கிலோ 180 ரூபா, கடலை ஒரு கிலோ 240 ரூபா, பயறு ஒரு கிலோ 340 ரூபா, கௌப்பி ஒரு கிலோ 320 ரூபா, தேங்காய் ஒன்று 90 ரூபா என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படுகின்றன.

அதேவேளை கொரோ னாத் தொற்றுக்கு மத்தியிலும் ஆலயங்களில் சுகாதார முறைப்படி நவராத்திரி பூசை வழிபாடுகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-17)

**மருந்தாளர் (Pharmacist) தேவை**

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள மருந்தகம் ஒன்றிற்கு பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் தேவை.
உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.
**070 185 6968**


**தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் கம்பனிக்கு மின் ஒட்டு வேலை செய்பவர் (Welder) நாள் கூலிக்கு தேவை.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்
**தொடர்பு:075 996 9173**

**வாகனம் விற்பனைக்கு**

டிப்பர் வாகனம் (TATA,LH, TEN WHEEL) ஒன்று விற்பனைக்கு உண்டு.
**077 053 3216**

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 . 03 . 1939 | 16 . 10 . 2020 |

### பிரகாசம் அகுஸ்தீன் (துரைசிங்கம்)

மெலிஞ்சி முனையை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பிரகாசம் அகுஸ்தீன் நேற்று (16.10.2020) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியோகு பிரகாசம் - கிந்தோரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான வைத்தியான் - எவிசம் தம்பதியரின் அன்பு மருமகனும் உத்தரியம் (நேசமலர்) அவர் களின் அன்புக் கணவரும், கஜோலின் (கயல்-சுவிஸ்), அதிசயநாதன் (நீதி - சுவிஸ்), சூசைநாதன் (நித்தி - பிரான்ஸ்), காமலிற்றா (கவிதா - பிரான்ஸ்), விமலநாதன் (ஜோதி - பிரான்ஸ்), நீகன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜோகராஜ் (சுவிஸ்), பிரியா (சுவிஸ்), குணம் (பிரான்ஸ்), ரமா (பிரான்ஸ்), செறி (பிரான்ஸ்), நிலா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ் செ ன்ற லில்லி, யுஸ்தீணம்மா, யோன்பிள்ளை(சின்னராசா),லூர்துமேரி(ராணி), லூக்காஸ் (சகாயன்), யசிந்தா ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்றவர்களான சூசைப் பிள்ளை(கிறிஸ்தோப்பர்), யேசுதாசன் (மகராசம்பிள்ளை), திருச்செல்வம் (சின்னக்கிளி), மற்றும் டெஸ்சிராணி (ஜெயா), யேசுதாசன், அற்புதராணி ஆகியோரின் மைத்துனரும் லிடியா, ஜோயல், சிந்தி, செலின், சரிசா, மலியா, நோயல், நிஜோல், கற்றலின், கஜோலின், சிறியோன், ஆரோன், அயோன், யேசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (18.10.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00மணியளவில் நடைபெற்று மெலிஞ்சி முனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நித்தி - 069 522 1859
நீகன் - 094 778 308 436
ஜோதி - 033 669 171 984
நீதி - 004 178 708 5035
கயல் - 041 7935 78438
கவிதா - 076 648 2722

தகவல்:
குடும்பத்தினர்
207,பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


# கைது முயற்சியை அறிந்ததும் தப்பிச் சென்றாராம் ரிஷாத்

கொழும்பு, ஒக். 17

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தான் விரைவில் கைதுசெய்யப்படுவேன் என தனது வாகனத்திலுள்ள வானொலிச் செய்திமூலம் அறிந்து புத்தளம் - சிலாபம் வீதியில் வாகனத்தைக் கைவிட்டு விட்டு தப்பித்தார் என குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் விசாரணையின்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ரிஷாத் கடந்த 13ஆம் திகதி புத்தளத்திலிருந்து கொழும்புக்கு வந்திருந்தார். பயணத்தின்போது தனது வாகனத்திலுள்ள வானொலியில் ஒலிபரப்பான தனியார் வானொலி அலைவரிசை ஒன்றின் செய்தியை செவிமடுத்துக் கொண்டிருந்தார் என குற்றப்புலனாய்வு திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சட்டமா அதிபர் பொலிஸாருக்கு உடனடியாக ரிஷாத்திதைக் கைதுசெய்து காவலில் வைக்குமாறு அறிவித்தார் என அந்தச் செய்தி அமைந்திருந்தது. உடனே சாரதியிடம் புத்தளம் - சிலாபம் வீதியில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாகனத்தை நிறுத்துமாறு கூறியதுடன் உடன் அதிலிருந்து வெளியேறி பிறிதொரு வாகனத்தில் புத்தளத்துக்குத் தப்பினார். இது குற்றப்புலனாய்வு திணைக்கள விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தநேரத்தில் ரிஷாத்தின் பாதுகாப்புக்கு வாகனத்தில் இருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் சந்தேகநபரான ரிஷாத் பதியுதீன் தப்பிச்செல்ல உதவிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார். பின்பு, முன்னாள் அமைச்சரின் அதிசொகுசு ஜீப்பைகுற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் பறிமுதல் செய்ததுடன் அதிலிருந்த இரு சாரதிகளையும் கைதுசெய்துள்ளனர். வாகனத்தில் உள்ளே கண்டெடுக்கப்பட்ட இரு துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் குறித்து விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

(ம-22)


## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை


பிரதேச வைத்தியசாலை மருதங்கேணியில் பாதுகாப்பு உத்தியோகத்தராக அங்கர் பாதுகாப்பு சேவையூடாக பணிபுரிய விரும்புவோர் 144, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேர்முகத் தேர்வில் பங்கு பற்றி வேலையினைப் பெற முடியும்.

தொடர்புகளுக்கு:
**0775396350, 0769194423**
நேர்முகத் தேர்வு திகதி
**17, 18, 19** இம் மாதம் **காலை 8 மணி - 4 மணி**

**அங்கர் பாதுகாப்பு சேவை**
யாழ்ப்பாணம்



## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 . 02 . 1939 | 16 . 10 . 2020 |

### சின்னத்தம்பி - சர்வானந்தம்

(ஓய்வுபெற்ற ஒருவல இரும்பு உருக்குக் கூட்டுத்தாபன யந்திர இயக்குனர் மற்றும் முன்னாள் பெட்டா எசன்ஸ் சப்ளையேஸ் யாழ்ப்பாண ஊழியர்)

அச்செழுவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி-சர்வானந்தம் நேற்று (16.10.2020) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நவமணியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான சிவகுருநாதர்-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், கிருஷ்ணமதி (சுவிஸ்), வளர்மதி (கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர்-கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), ஜெயநந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கோபிநிஷா, அபிஷா, கோகுலன் தரணிஜா, அஷ்வினன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் நேற்று (16.10.2020) வெள்ளிக் கிழமை நடைபெற்று, அச்செழு இந்து மயானத்தில் தகனகம் செய்யப்பட்டது.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அச்செழு, நீர்வேலி.
077 6111 210

தகவல்:
அன்னாரின் குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 . 12 . 1950 | 15 . 10 . 2020 |

### முத்துக்குமாரு ஜெகநாதன்

(ஓய்வுபெற்ற அம்புலன்ஸ் சாரதி )

யாழ்ப்பாணம் வடலியடைப்பை பிறப்பிடமாகவும், முல்லைதீவில் வசித்து வந்தவரும், தற்போது விநாயகர் வீதி, உக்குளான் குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு ஜெகநாதன் கடந்த (15.10.2020) வியாழக்கிழமை அமரத்துவ மெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு மகேஸ்வரி (ஓய்வுபெற்ற தாதி-முல்லைதீவு) தம்பதியரின் மகனும், கணபதிப்பிள்ளை சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், பராசக்தியின் (ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியை-விபுலானந்தாக் கல்லூரி) பாசமிகு கணவரும், ஆதவன் (பொறியியலாளர்-UNHABIT), ஆர்த்தி (இயன் மருத்துவர், திருகோணமலை) ஆகியோரின் தந்தையும், மனோஜ்குமார் (இயன் மருத்துவர்), சத்தியாயினி (ஆசிரியை- புதுக்குடியிருப்பு மத்திய ம.வி) ஆகியோரின் மாமனாரும், பிரணதியின் அம்மப்பாவும், காலஞ்சென்றவர்களான நாகராசா, மனோன்மணி மற்றும் சிவயோகம், காலஞ்சென்ற பாக்கியநாதன் மற்றும் ஞானரஞ்சிதம், மனோரஞ்சிதம், காலஞ்சென்றவர்களான ராசரஞ்சிதன், சத்தியரஞ்சிதம் மற்றும் சூரியகுமாரன், ஜெயசூரியன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.10.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சனாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விநாயகர் வீதி,
உக்குளான்குளம்.
வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.
077 029 4577

### வடக்கின்...

யாழ்ப்பாண மாவட்டத்தில் மருதங்கேணி
பிரதேச மருத்துவமனையில் சுமார் 50
நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கக் கூடி
யவாறும், கிளிநொச்சி மாவட்டத்தில்
கிருஷ்ணபுரத்தில் சுமார் 200 நோயாளர்
களுக்கு சிகிச்சையளிக்கக் கூடியவாறும்,
முல்லைத்தீவு மாங்குளம் மருத்துவமனை
யில் 40 நோயாளர்களுக்கு சிகிச்சை
யளிக்கக் கூடியவாறும், மன்னார் விடத்தல்
தீவு மருத்துவமனை மற்றும் வவுனியா
மாமடு மருத்துவமனையில் சுமார் 40
பேருக்கும் சிகிச்சையளிக் கக் கூடியவாறும்
இவை அமைக்கப்படவுள்ளன.

வடக்கில் அடையாளம் காணப்படும்
கொரோனாத் தொற்றாளர்களே இங்கு
தங்க வைக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்
தப்படவுள்ளனர். இவற்றுக்கான நிதி ஒதுக்
கீடுகள் விரைவில் வழங்கப்படும் என்று
சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கிளிநொச்சி கிருஷ்ணபுரத்தில் புதிதாக
அமைக்கப்படும் கொரோனா மருத்துவ
மனை கொரோனா சிகிச்சைகள் முடிவ
டைந்த பின்னர் போதைப்பொருளுக்கு
அடிமையானவர்களுக்கு மறுவாழ்வு
வழங்கும் மருத்துவமனையாகச் செயற்ப
டவுள்ளது.

வடக்கில் ஏனைய 4 இடங்களிலும் உள்ள
பிரதேச மருத்துவமனைகளிலுள்ள சில
விடுதிகளே கொரோனா நோயாளர்க
ளுக்கு சிகிச்சையளிக்கும் விடுதிகளாக
மாற்றப்படவுள்ளன. அந்த விடுதிகளிலி
ருந்து நோயாளர்கள் வெளியேறாதவா
றான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட
வுள்ளன. அத்துடன் நோயாளர்களைக்
கண்காணிப்பதற்காக சிசிரிவி கமராக்கள்
அங்கு பூட்டப்படவுள்ளன. மேலும் நோயா
ளர்களுக்கான அறிவுறுத்தல்களை மருத்
துவர்கள் வழங்குவதற்குரிய உபகரணங்
கள் பொருத்தப்படவுள்ளன. இங்கு சிகிச்
சைக்காக சேர்க்கப்படுபவர்களுக்கு நோய்
அறிகுறிகள் தென்பட்டால் அவர்கள்
மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய
தொற்றுநோய் மருத்துவமனைக்கு மாற்றப்
படுவார்கள்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் ஏற்க
னவே கொரோனாவுக்கு சிகிச்சைய ளிக்
கும் 4 மருத்துவமனைகள் அமைக்கப்பட்
டுள்ள நிலையில் அங்கு மேலும் 4 மருத்
துவமனைகள் அமைக்கப்பட்டு வருகின்
றன.

இவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் கொழும்பு
சுகாதார அமைச்சால் வழங்கப்படாத
போதும், கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும்
பிரதம செயலர் ஆகியோர் மாகாண நிதி
ஒதுக்கீட்டிலிருந்து மருத்துவமனைகளை
அமைத்துள்ளனர். (ஒ,5)

### காங்கேசன்துறையில்...

படைப் பெண் சிப்பாய்க்கு கொரோனாத்
தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என
கடற்படை வட்டாரங்களிலிருந்து அறியமு
டிகின்றது. சில தினங்களுக்கு முன்னர்
கற்கை நெறி ஒன்றுக்காக தென்னிலங்
கைக்குச் சென்று வந்த சிப்பாய்க்கே
தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
அவருடன் கற்கை நெறிக்குச் சென்று
வந்த சிப்பாயும் தனிமைப்படுத்தப்பட்டுள்
ளார். (ஒ,26)

### இலங்கை முழுவதும்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:
“முழு நாடும் கொரோனாத் தொற்று வலய
மாக அறிவிக்கப்பட்டாலும் இயல்பு வாழ்க்
கைக்கு ஏதுவான வகையில் நடவடிக்கை
கள் முன்னெடுக்கப்படும். அரச மற்றும்
தனியார் நிறுவனங்களை வழமைபோல்
இயக்க முடியும். சுகாதார அதிகாரிகளின்
ஆலோசனைகளுக்கு அமைய நடவடிக்
கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்
டியது நிறுவனங்க ளின் பிரதானிகள்
கடமை. அதிகளவான ஊழியர்கள் பணி
யாற்றும் நிறுவனங்களில் தினமும்
சேவைக்கு வரக் கூடிய ஊழியர்களின்
எண்ணிக்கையை பிரதேச சுகாதார அதி
காரிகள் தீர்மா னிப்பார்கள்.

இவ்வாறு வரும் ஊழியர்கள் முகக்கவசம்
அணிவது, சமூக இடைவெளியைப் பேணு
வது கட்டாயம் என்பதுடன் அடிக்கடி உடல்
வெப்பத்தைக் கண்காணிக்கவும் வேண்
டும், என்றார். (ஒ,22)

### ‘20’ இன் பின்னணியில்...

உறுப்பினர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்
தார். அத்துடன், அரசமைப்பின் 20ஆவது
திருத்தச்சட்ட வரைவையும் அவர் கடுமை
யாக விமர்சித்தார்.

சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுக
ளின் இராஜதந்திரிகளின் இலங்கைப்
பயணம், ரிஷாத் பதியுதீன் விவகாரம்,
20ஆவது திருத்தச்சட்டவரைவு ஆகியன
தொடர்பில் கருத்து வெளியிட்டவிஜயதாச
ராஜபக்ச மேலும் கூறியவை வருமாறு,

“இதே பாதையில் பயணித்தால் இன்னும்
சில வருடங்களில் சீனாவின் காலணித்
துவ பகுதியாக இலங்கை மாறிவிடும்.
இலங்கை இவ்வாறு சீனாவின் காலணித்
துவ பகுதியாக மாறுவதை தடுத்து அதனை
தமது நாட்டுக்குரிய பகுதியாக மாற்றுவ
தற்கு அமெரிக்கா முயற்சிக்கின்றது.
20ஆவது திருத்தச்சட்டவரைவின் பின்
னணியிலும் அமெரிக்காவின் சூழ்ச்சியே
இருக்கின் றது.

அதாவது இலங்கையை தமது காலணித்
துவ பகுதியாக மாற்றிக்கொள்வதற்கான
நோக்கத்தை அடைவதற்கான சூழ்ச்சியே
அது. 20 ஆவது திருத்தச் சட்ட வரைவா
னது எமது நாட்டுக்கு பொருத்தமான ஒன்
றல்ல.

ரிஷாத் பதியுதீனுக்கும், அவரின் சகோதர
ருக்கும் அரசின் பூரண பாதுகாப்பு இருக்
கின்றது. நான் எந்தவொரு விடயத்தையும்
பொறுப்புடனேயே குறிப்பிடு வேன்,
அவரை அரசு மறைத்துவைத்துள்ளதா
என்பதை அரச உயர்பீடத்திடம்தான் கேட்க
வேண்டும். அது பற்றி என்னிடம் கேட்டுப
யனில்லை. வாக்களித்த மக்களும், வாக்
குகேட்டு வெற்றிபெற்றவர்களும் அதிருப்
தியுடனேயே இருக்கின்றனர்.

நான் ஒருபோதும் வைரம், குரோதத்தை
அடிப்படையாகக்கொண்டு அரசியல் நடத்
தியதில்லை, அவ்வாறு அரசியல் நடத்துப
வராக இருந்திருந்தால் கோத்தாபய ராஜ
பக்ச இந்நேரம் வெலிக்கடையில்தான்
இருந்திருக்கவேண்டும், நீதி, நியாயத்தின்
அடிப்படையில் செயற்படுபவனே நான்”
என்றார். (ஒ,44)

### மகனுக்கு...

அவருக்குக் கொழும்பில் உள்ள சீனத்
தூதரகம் வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

பிரதமர் செயலக அதிகாரிகளின் பிரதானி
யாக நியமிக்கப்பட்டுள்ள யோசித ராஜபக்
சவை கடந்த 13 ஆம் திகதி சீனத் தூதரக
இராஜதந்திர விவகாரங்க ளுக்கான அதி
காரி ஹு வெய், சந்தித்து வாழ்த்துக்களை
தெரிவித்துள்ளார் என்று, கொழும்பில்
உள்ள சீனத் தூதரகம் தனது ருவிட்டர் பக்
கத்தில் நேற்றுப் பதிவிட்டுள்ளது. (ஒ,இ)

### கைக்குண்டுகளுடன்...

ணம் போதனா மருத்துவமனைக்கு முன்
பாக மோட்டார் சைக்கிளில் சந்தேகத்திற்கி
டமாக நின்ற இளைஞரிடம் இருந்தே மேற்
படி கைக்குண்டு மீட்கப்பட்டது. கைது
செய்யப்பட்டவர் கிளிநொச்சி பரந்தன் பகு
தியைச் சேர்ந்தவர். அவரிடம் மேலதிக
விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வரு
கின்றன.

முதல்கட்ட விசாரணையில் மோட்டார் சைக்
கிள்களை திருடுவதற்காகவே யாழ்ப்பா
ணத்துக்கு அவர் வருகை தருவதாகவும்,
கைக்குண்டைக் காட்டி மிரட்டி கொள்ளை
யில் ஈடுபடுவதாகவும், ஏற்கனவே இரண்டு
மோட்டார் சைக்கிள்களை இவ்வாறு திருடி
யுள்ளதாகவும் சந்தேக நபர் தனது முதல்
கட்ட விசாரணையில் தெரிவித்துள்ளார்
என்று பொலிஸார் தகவல் வெளியிட்டுள்
ளனர். (ஒ,ம,106)

### சுவர்..

னர். யாழ்ப்பாணம் அரியாலை நாவலடி
பகுதியில் நேற்று அதிகாலை 4 மணியள
வில் மணல் அள்ளும்போது வீட்டின் சுவர்
இடிந்து வீழ்ந்ததில் இந்த உயிரிழப்பு ஏற்
பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
சின்னராசா நந்தீஸ்வரன் (வயது 45)
என்பவரே உயிரிழந்தவராவார்.

இவருடன் இணைந்து கள்ள மணல் அகழ்
வில் ஈடுபட்டனர் என்று சந்தேகிக்கும் இரு
வரைத் தேடி வருவதாகப் பொலிஸார்
தெரிவித்தனர். (ஒ,ம,106)

### மணிவண்ணனுக்கு...

தமிழ்த் தேசிய முன்னணி யாக அறியப்பட்
டாலும் தேர்தல் காலத்தில் அந்தக் கட்சி
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியி
லேயே போட்டியிடுகின்றது.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்
தலின் பின்னர் தமிழ்த் தேசிய மக்கள்
முன்னணியின் தேசிய அமைப்பாளர்
மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவியிலி
ருந்து வி.மணிவண்ணனை நீக்குவ தாக
அந்தக் கட்சி அறிவித்தது.

இந்த நிலையில் வி.மணிவண்ணன் ஏற்
கனவே யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில்
நியமன உறுப்பினராகத் தெரிவாகியி
ருந்தார்.

இருப்பினும் மாநகர எல்லைக்குள் வதி
யாத அவர் உறுப்பினராகச் செயற்பட
முடியாது என்று மாநகர எல்லைக்குள்
வதியும் வாக்காளர் ஒருவர் தாக்கல் செய்த
வழக்குக் காரணமாக மணிவண்ணன்
மாநகரசபை உறுப்பினராகச் செயற்படுவ
தற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டி
ருந்தது. கடந்த வாரம் மணிவண்ணனுக்கு
எதிரான வழக்கு மீளப் பெறப்பட்டிருந்தது.
இந்த நிலையில் மாநகர சபையின் அடுத்த
கூட்டத் தொடரில் மணிவண்ணன் பங்கேற்
கும் வாய்ப்பு ஏற்பட்டிருந்தது.

இதற்கிடையில், அகில இலங்கை தமிழ்
காங்கிரஸ் தமது கட்சியிலிருந்து யாழ்ப்பா
ணம் மாநகர சபை உறுப்பினர்களான
வி.மணிவண்ணன் மற்றும் ம.மயூரன்
இருவரையும் நீக்கியுள்ளது எனவும், அவர்
களை சபை உறுப்புரிமையிலிருந்து நீக்கு
மாறு கோரி யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்
தாட்சி அலுவலருக்கு கடிதம் அனுப்பியுள்
ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ,5)

### ‘20’ தொடர்பில்...

நடத்தப்படவுள்ளது. சபாநாயகர் மஹிந்த
யாப்பா அபேவர்தன தலைமையில்
நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அலு
வல்கள் தொடர்பான கூட்டத்திலேயே இந்த
முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அரசியல் கட்சி
களின் தலைவர்களும் இக் கூட்டத்தில்
பங்கேற்றிருந்தனர்.

20 தொடர்பில் 5 நாள்களாவது விவாதம்
அவசியம் என ஆரம்பத்தில் கோரியிருந்த
எதிரணித் தலைவர்கள் இறுதியில் மூன்று
நாள்களாவது நடத்தப்படவேண்டும் என
வலியுறுத்தினர். எனினும், இரண்டு நாள்
களை மாத்திரமே விவாதத்துக்கு வழங்கு
வதற்கு அரசு இணக்கம் வெளியிட்
டுள்ளது.

21, 22ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணி
முதல் இரவு 7.30 வரை விவாதம் நடை
பெறவுள்ளது. 22 ஆம் திகதி மாலை
முதல் வாக்கெடுப்பு நடத்தப்படும். குழு
நிலை விவாதத்தின்போது திருத்தங்களை
அரசு மேற்கொள்ளவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி, இலங்கை தமிழ் அர
சுக் கட்சி, தேசிய மக்கள் சக்தி, தமிழ்த்
தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள்
தேசியக் கூட்டணி ஆகியன எதிராக வாக்க
ளிக்கவுள்ளன. ஐக்கிய தேசியக்கட்சி, எமது
மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் இன்னும்
உறுப்பினர்களை நாடாளுமன்றத்
துக்கு நியமிக்கவில்லை என்பது குறிப்
பிடத்தக்கது. (ஒ,44)

### வாக்குரிமையைப்...

மேற்கொள்வதற்கான தெரிவுக் குழு
வொன்றை நியமிப்பதற்கு எதிர்காலத்தில்
முன்மொழிவதாக பிரதமர் மஹிந்த ராஜ
பக்ச தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற
தேர்தல் ஆணைக்குழுவின் மூலோபாய
திட்டமிடல் தொடர்பிலான கலந்துரையாட
லின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்
டார்.

சந்திப்பின்போது விடயங்களை தெளிவுப
டுத்திய தேர்தல் ஆணைக்குழுவின் தலை
வர் மஹிந்த தேசப்பிரிய, 2020-2024
இற்கான தேர்தல் ஆணைக்குழுவின்
மூலோபாய திட்டமிடலுக்கு அமைய தேர்
தல் சட்டத் திருத்தத்தை மேற்கொள்வது
அத்தியாவசியமாகும் என சுட்டிக்காட்டி
னார்.

தேர்தலுக்கான வைப்புத் தொகையில்
திருத்தங்களை மேற்கொள்ளல், தேர்தல்
இடம்பெறும் தினத்தில் வாக்களிப்பதற்கு
முடியாத நபர்களுக்கு அதற்கு முன்னதாக
ஒரு தினத்தில் வாக்களிக்க வாய்ப்பளித்
தல், 18 வயது பூரணமானவர்களுக்கு
வாக்குரிமையை பெற்றுக் கொடுக்கும்
வகையில் வாக்காளர் பட்டியலை மூன்று
மாதங்களுக்கு ஒரு முறை புதுப்பித்தல்,
தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்தல்,
வாக்களிப்பு நிலையங்களில் விசேட தேவை
யுடையோருக்கான வசதிகளை ஏற்படுத்து
தல் மற்றும் விசேட திட்டத்தின் கீழ் இணைய
வாக்களிப்பு முறை உள்ளிட்ட பல்வேறு
விடயங்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்
குழுவின் அதிகாரிகள் பிரதமருக்கு விளக்
க மளித்தனர். (ஒ,இ)

### 110 பேருக்கு...

சாலை கொரோனா கொத்தணிப் பரவல்
மூலம் இலங்கையில் நேற்றும் 110
தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்
டுள்ளனர் என்று கொரோனாத் தடுப்புக்
கான தேசிய செயற்பாட்டு மையத்தின்
தலைவரும் இராணுவத் தளபதியுமான
லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா
தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் நிலையங்களில்
இருந்து 38 பேரும், மினுவாங்கொட
ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுடன்
நெருங்கிய தொடர்பைப் பேணிய
வர்களில் 72 பேருமே கொரோனாத்
தொற்றுடன் நேற்று அடையாளம்
காணப்பட் டுள்ளனர்.

இதன்படி மினுவாங்கொட கொரோனா
கொத்தணிப் பரவலின் எண்ணிக்கை
1,907ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் கொரோனா
வைரஸின் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட
வர்களின் மொத்த எண்ணிக்கை 5
ஆயிரத்து 354 ஆக அதிகரித்துள்ளது.
அதில் 3 ஆயிரத்து 385 பேர் குணம
டைந்துள்ளனர். 1,956 பேர் மருத்துவ
மனைகளில் சிகிச்சை பெற்று வருகின்ற
னர். (ஒ,22)

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை – காங்கேசன்துறை
## பகிரங்க ஏல விற்பனை

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பழைய பொருட்கள், வாகன பழைய ரயர்கள், வாகன பற்றறிகள். பழைய இரும்பு பொருட்கள், பழைய பத்திரிகைகள், காய்ந்த மரங்கள், ஏனைய பொருட்கள் என்பன ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. இப்பொருட்களை அலுவலக நேரங்களில் மட்டும் பார்வையிட முடியும்.

**இடம் :- தலைமை அலுவலகம், வலி. வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.**

**காலம் :- 06.11.2020 (வெள்ளிக்கிழமை)**

**நேரம் :- காலை 10.30**

**தவிசாளர்.**
**வலி.வடக்கு பிரதேச சபை,**
**காங்சேன்துறை** **17.10.2020**



# 24ஆம் ஆண்டு நினைவு



மலர்வு 21 . 04 . 1937

உதிர்வு 13 . 10 . 1996

## அமரர் அப்பாத்துரை இராஜேஸ்வரி

*திதி:- பிரதமை*

தனக்காக வாழாமல் பிறக்காக தொண்டு செய்து தனது சேவையை மழலைகளுக்காக அர்ப்பணித்து கடைசி நேரத்திலும் ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை ஆசிரியர் தின வைபவத்தில் குழந்தை தாலாட்டுவதில் பெருமை கொண்டு தனது வாழ்க்கையை நிறைவுசெய்தார்.

**93, கலைமகள் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.** **குடும்பத்தினர்.**



# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned post up-to **29.10.2020**

## Faculty of Medicine

Temporary Scientific Assistant in **Parasitology**

| **Post** | **Salary scale** |
|---|---|
| Temporary Scientific Assistant | Rs.48,385 / - (fixed) pm |

**Qualifications:-**

1) A First or Second class (Upper Division) in a special Degree Examination in the relevant subject.
   **OR**
2) A Second class ( Lower Division) in a Special Degree Examination in the relevant subject.
   **OR**
3) An ordinary pass in the B.Sc Special Degree Examination in the relevant subject.
   **OR**
4) An ordinary pass in the B.Sc General Degree Examination with a recognized postgraduate qualification in the relevant subject

**Note :-** Preference will be given to those who had the hands on experience in laboratory experiments during their undergraduate period in any of the fields: Medical Laboratory Sciences, Molecular Biology ,Biotechnology, Agriculture & Human Biology.

Perfected application shall be sent to the Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil, Jaffna.

Application forms will be available in the University website **www.jfn.ac.lk** . Those who wish to send the application forms downloaded from the University website should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs. 100/- credited to the Peoples Bank Account No: **162-1-001-6-0000880** of Bursar, University of Jaffna.

Application forms may be obtained from the office of the Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs. 100 / - per application form. Those who wish to obtain application forms by post are requested to send a self - addressed stamped envelope 23x10 cm in size along with the paid Bank Slip to the above address.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**
**16.10.2020**



# UNIVERSITY OF JAFFNA
# INVITATION FOR BIDS
## Provision of a Private Security Service for the University of Jaffna -2021

1. The Chairman, Department Procurement Committee, University of Jaffna invites sealed Bids from eligible and qualified bidders for Provision of a Private Security Service for the University of Jaffna.
2. Period of contract shall be on a calendar year days subject to a performance evaluation period of 90 days from the start date.
3. Companies/ Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.
   3.1 To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall possess the valid registration in the Ministry of Defence, Public Security, Law and Order, Business registration and a copy of the valid registration certificate in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance should be attached with the Bid.
   3.2 Average of annual volume of security service contracts performed in the last 3 years should be at least **Rs. 75 Million**
   3.3 Must have satisfactorily carried out at least one Security service contract to a Government Department/ Corporation/University during the last 3 years for not less than **Rs. 25.0 Million.**
4. The Company/ Firm must have satisfactorily carried out at least two security service contracts which included a minimum work force of **300 security staff** in each contract for any Government Department/ Corporation/ University or Institution over the last three years. Certified copies of letters issued by such clients should be attached with the Bid.
5. Interested Bidders may inspect the Bidding documents and obtain further information from the Deputy Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day.
6. A complete set of Bidding Documents in English Language could be purchased by interested Bidders on submission of a written application to the Deputy Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day up to **05th November, 2020** upon the submission of receipt for the payment of non-refundable Tender Fee of Rs. **2500.00.** The payment should be made by cash at the Shroff, University of Jaffna or the payment shall be deposited in favour of Bursar, University of Jaffna at the **University of Jaffna Branch People's Bank Account Number 162-1-001-6-0000880** at any Branch of People's Bank.
7. Duly completed sealed Bids shall be sent either by registered post to Chairman, Department Procurement Committee, University of Jaffna or deposited in the Tender Box maintained at Registrar's office on or before 2.00 p.m. **on 09th November, 2020.** Late Bids or incomplete Bids will be rejected.
8. Bids will be opened soon after closing in the presence of the Bidders or their representatives who choose to attend.
9. All Bids shall be accompanied by a Bid Security (Unconditional Guarantee) of Rupees Two hundred and fifty thousand only **(Rs. 250,000.00).**
10. Pre-bid meeting will be held at **10.00 am on 02nd November 2020** in the board room of the University of Jaffna, Thirunelvely.

The Chairman/ Department Procurement Committee
University of Jaffna,
Thirunelveli,
Jaffna
17.10.2020

# அணித்தலைமை மாறியும் கவிழ்ந்தது கொல்கத்தா



மும்பை இந்தியன்ஸ் அணிக்கும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கும் இடையிலான நேற்றைய ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி 8 இலக்குகள் வித்தியாசத்தில் கொல்கத்தாவை வீழ்த்தி புள்ளிப் பட்டியலில் முதலிடத்தைப் பெற்றது.

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் 32ஆவது லீக் ஆட்டம் நேற்று அபுதாபியில் நடைபெற்றது. இப்போட்டியில் மும்பை இந்தியன்ஸ் -கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் பலப்பரீட்சை மேற்கொண்டன.

கொல்கத்தா அணியின் தலைவராக இதுவரை காலமும் செயற்பட்ட டினேஸ் கார்த்திக் அதிலிருந்து ஒதுங்கி, இயன் மோர்கனை நியமித்திருந்தார். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

ராகுல் திரிபதி, சுப்மன் கில் ஜோடி களம் புகுந்தது. ஆரம்பம் முதலே கொல்கத்தாவின் துடுப்பாட்ட வரிசை ஆட்டம் காண ஆரம்பித்தது. ராகுல் திரிபதி (7), நிதிஸ் ராணா (5), கில் (21), டினேஷ; கார்த்திக் (4), ரசல் (12) என்று வெளியேற 61 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து தடுமாறியது.

அதன்பின் ஜோடி சேர்ந்த அணித் தலைவர் மோர்கன் கும்மின்ஸ் இணை அணியை சரிவிலிருந்து மீட்க ஆரம்பித்தது. மேலதிக இலக்கு இழப்பின்றி கொல்கத்தா அணி 148 ஓட்டங்களைப் பெற்றது. கும்மின்ஸ் 36 பந்துகளில் 53 ஓட்டங்களையும், மோர்கன் 39 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் சாகர் 2 இலக்குகளையும் பும்ரா, போல்ட், கோல்டர் நைல் தலா ஒரு இலக்கையும் சாய்த்தனர்.

149 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணிக்கு ரோகித் சர்மா குயின்டன் டி கொக் ஜோடி ஆரம்பம் வழங்கியது. ஒரு முனையில் ரோகித் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்த மறுமுனையில் குயின்டன் டி கொக் அதிரடி காட்டினார். அணியின் ஓட்ட எண்ணிக்கை 94 ஆக இருக்க ரோகித் சர்மா 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய சூர்யகுமார் யாதவ் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க களம் புகுந்த ஹார்திக் பாண்டியா இறுதிக்கட்ட அதிரடி காட்ட மும்பை அணி 2 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் குயின்டன் டி கொக் 78 ஓட்டங்களையும்; ஹார்திக் பாண்டியா 21ஓட்டங்களையும் பெற்றனர். அதிரடி காட்டிய குயின்டன் டி கொக் ஆட்டநாயகனாக தெரிவானார். (ஒ,5)



**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் ஊரெழு பொக்கன் வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
**தரகர் தேவையில்லை**
**தொடர்பு : 077 623 4204**

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் வசாவிளான் குட்டியபுரம் அம்மன் கோயில் முன்வீதி மெயின் றோட்டுடன் 21 பரப்பு காணி உள்ளது. பிரித்து கொடுக்கப்படும் 2 பரப்பாக. விலை 1 பரப்பு 350,000/- (மூன்று லச்சத்தி ஐம்பதாயிரம்)
**தரகர் தேவையில்லை**
**076 640 0974**
**0768884625, 0779986806**

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் தெற்கு மில் றோட்டில் நாகதம்பிரான் கோயிலுக்கு அண்மையில் 28 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்பட்டும் (2 பரப்பாக). 1 பரப்பின் விலை 5 லட்சம். தரகர் தேவையில்லை.
தொடர்பு: **077 190 4814**

**Easy Life**
எமது நிறுவனத்திற்கான விற்பனையாளர் (Salesman) தேவை. அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்
**தொடர்பு: 077 155 2308**
No-32, வைரவர் கோவில் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**டிப்பர் விற்பனைக்கு**
LN No கார் கோ டிப்பர் விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு - 077 367 8019**
**இடம் - இளவாலை**

**காணி /வீட்டுடன் காணி தேவை**
யாழ் நகரிற்கு அண்மையாக / அத்தியடி (ஸ்ரான்லி வீதி), இராசாவின் தோட்டம் போன்ற பகுதியில் காணி / வீட்டுடன் காணி விற்பனைக்கு இருந்தால் தொடர்புகொள்ளவும்.
**077 024 1609**

**Thenu Super Mart**
திருநெல்வேலியில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு வேலைக்கு ஆள் தேவை.
**காசாளர் (Chasier)**
**பொருள் காட்சிப்படுத்துனர் (Display)**
ஆண் , பெண் இருபாலாரும்
முன் அனுபவம் வாய்ந்தவர் விரும்பத்தக்கது.
**077 711 0075**

## மக்கள்தான்....

மக்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகாமல் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். இவ்வாறு கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் தொடர்பிலும் நோய் அறிகுறிகள் இருப்பினும் உடனடியாக சுகாதாரப் பிரிவிடம் மக்கள் அறிவித்து ஆலோசனை பெற வேண்டும். கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் நெருங்கிச் செயற்பட்டவர்களுக்குத் தேவையான மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்கள் அவசியமான அளவு விரிவுபடுத்தப்பட்டுள்ளன. எதிர்வரும் நாள்களில் அதன் அவசியம் அதிகரித்தால் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ள்ளது. கொழும்பு தேசிய தொற்று நோயியல் மருத்துவமனையில் நோயாளிகளின் ண்ணிக்கை வரம்பை எட்டியுள்ளமையால் பல மருத்துவமனைகளில் சிகிச்சை ழங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன,- என்றார்.

ாட்டின் தற்போதைய நிலைமை எதிர்வரும் வாரங்களுக்குள் சீராகுமா என்று இரா ுவத் தளபதியிடம் வினவியபோது, 'இது தொடர்பில் ஒன்றும் கூற முடியாது. ந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டு மக்களிடம் நாம் கேட்டுக்கொள்வது என்னவெனில், ாரோனாத் தொற்றுக்குள்ளாகாமல் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள வண்டும் என்பதே முக்கியமாகும்,' என்று பதிலளித்தார். (ஒ,ம,22)

**SHREE** INFRASTRUCTURES **Shree Infrastructures (pvt) ltd**

**Vacancies**

Shree Infrastructure (pvt) ltd is a leading construction and infrastructure development company operating globally. Our new venture in srilanka looking for suitable candidates for the following vacancies.

- **Civil Engineer**
- **Office Manager**
- **Accountant**
- **Technical Officer**

We are expecting energetic individual with more than three years of experience in the same industry to join our team. Attractive remuneration package Wait for the suitable candidate.

**Email your CV to: slshree7@gmail.com within 3 days**

Human Resource Department
Shree Infrastructure (pvt) ltd
A/1/2, Elvitigala MW, Narahenpitia.
T.P: 021 4300 505




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper
பக்கங்கள்: 24

# சஞ்சீவி

முரளியென்றிட சாதனை வீரன் பின்னாளில்
குறளி வித்தை காட்டி குல நாசம் புரிந்திட்டான் – அவன் பேரில்
சுழல் வீசி பேரினக் கால் நக்காமல் விரைந்து நீ
விழல் செய்யாது விலகிடுவாய் விஜய்சேதுபதியே!

மலை | வள்ளுவர் ஆண்டு : 2051 | ஐப்பசி 01 | சனிக்கிழமை (17.10.2020) | சிகரம் : 18



ஒற்றுமையை எதிர்ப்போர் குப்பைக் கூடைக்குள்! 12

R2F: உசாரைய்யா... 02



# தமிழர்களுக்குத் தேவை: ஒரு வெளிவிவகார கட்டமைப்பு



நிலாந்தன்

கஜேந்திரகுமார் அண்மையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் பொழுது " இந்திய -இலங்கை உடன்படிக்கையை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் 13ஆவது திருத்தத்தை ஒரு தொடக்கமாகக் கருதவில்லை" என்று கூறியிருக்கிறார். இந்தியா தொடர்பான அந் தக்கட்சியின் வெளியுறவுக் கொள்கையாக இதை எடுத்துக் கொள்ளலாமா ? அதாவது இந்திய-இலங்கை உடன்படிக்கை எனப்படுவது இந்தியா அதன் பிராந்திய நலன் நோக்கு நிலையிலிருந்து இலங்கையோடு செய்துகொண்ட ஓர் உடன்படிக்கை. எனவே இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவின் பாதுகாப்புக்கு எதிராக தாங்கள் இயங்கப் போவதில்லை என்பதனை கஜேந்திரகுமார் நாடாளுமன்றத்தில் வைத்து தெளிவாகக் கூறியிருக்கிறார்.

விக்னேஸ்வரனின் நிலைப்பாடும் அப்படித்தான் என்று தெரிகிறது. ஆனால் அவர் பதின்மூன்றாவது திருத்தத்தை ஒரு தொடக்கமாக ஏற்றுக் கொள்வார் போலத் தெரிகிறது. அண்மையில் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ் நாட்டுக் கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஒரு மெய்நிகர் கருத்தரங்கில் விக்னேஸ்வரன் அதைக் குறிப்பிட்டிருக்கிறார். இந்தியா வின் பிராந்திய நலன்களுக்கு விரோதமாக ஈழத்தமிழர்கள் சிந்திக்க மாட்டார்கள் என்ற தொனிப்பட அவர் உரையாடி இருக்கிறார்.

இது விடயத்தில் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன ? கூட்டமைப்பும் ஏறக்குறைய இந்தியாவின் பாது காப்பு நலன்களை மீறிச் சிந்திப்பதாக தெரியவில்லை. "இந்தியா எம் பின்னால் நிற்கிறது" என்று சம்பந்தர் கூறுவதன் அர்த்தம் அதுதான். இனப்பிரச்சினைக்கான தீர்வில் இந்தியா ஈழத்தமிழர்களுக்கு உதவ வேண்டும் என்று அவர் கூறுகிறார்.

மேற்கண்ட மூன்று நிலைப்பாடுகளை யும் தொகுத்துப் பார்த்தால், ஒன்று தெரிகிறது. இந்தியாவின் பிராந்திய நலன்களை மீறி ஈழத்தமிழர்கள் செயற்பட மாட்டார்கள் என்பதனை மேற்கண்ட மூன்று தரப்புக்களும் உறுதிப்படுத்துகின்றன. ஆனால், ஒரு உச்சபட்ச தன்னாட்சியை ஈழத் தமிழர்கள் பெற்றுக்கொள்வதற்கு இந்தியா, இலங்கை அரசாங்கத்தின் மீது நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்று மேற்கண்ட மூன்று கட்சிகளும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கூறி வருகின்றன. இது விடயத்தில் கஜேந்திரகுமாருக்கும் விக்னேஸ்வரனுக்கும் இடையில் ஒப்பீட்டளவில் ஒற்றுமைகள் அதிகம். கூட்டமைப்பு தமிழ் மக்களை ஒரு தேசமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை அதிகம் அழுத்தி கூறுவதில்லை. அதோடு கடந்த ஐந்து ஆண்டுகளில் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து அவர்கள் உருவாக்க முற்பட்ட இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒரு முழுமையான சமஷ்டியை நோக்கியது அல்ல என்ற விமர்சனம் உண்டு. அவர்கள் சிங்கள மக்களுக்கு ஒன்றையும் தமிழ் மக்களுக்கு வேறு ஒன்றையும் கூறினார்கள் என்ற குற்றச்சாட்டு உண்டு.

எனினும் இனப்பிரச்சினைக்கான தீர்வில் இந்தியாவின் வகிபாகம் தொடர்பில் மேற்கண்ட மூன்று தரப்புகளுக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி என்றால் மேற்கண்ட மூன்று தரப்புக்களும் தமிழ் மக்களுக்கான ஒரு பொதுவான வெளியுறவுக் கொள்கை தொடர்பில் ஒன்றுபட்டு வேலை செய்தால் என்ன?

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற பின் விக்னேஸ்வரனை சந்தித்த சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் அவர் ஒரு விடயத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார். விவகாரங்களை அடிப்படையாக கொண்டு நாங்கள் ஒன்றாக செயற்படலாம் என்பதே அது. திலீபனை நினைவு கூரும் விடயத்தில் அவ்வாறு ஒரு விவகார மையக் கூட்டு உருவாக்கப்பட்டது.

இந்தக்கட்டுரை எழுதப்படும் இந் நாள் வரையிலும் அந்தக்கூட்டு உடையவில்லை. வெளி விவகாரம் போன்ற விடயங்களிலும் கட்சிகள் அது போன்ற ஆனால் உறுதியாக வடிவமைக்கப்பட்ட நிறுவனமயப்பட்ட ஒரு செயற்பாட்டுக்குப் போனால் என்ன?



கடந்தமாதம் ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் இது தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்."தமிழ்த் தரப்பு ஒரே குரலில் வெளித் தரப்புகளோடு பேச வேண்டும். அதற்கு வெளிவிவகாரக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்" என்று.

ஆம், அவ்வாறு சிந்தித்துச் செயற்பட வேண்டிய வேளை வந்துவிட்டது என்பதை அண்மைக்காலமாக இலங்கையில் நடைபெற்று வரும் சம்பவங்கள் நிரூபித்தி ருக்கின்றன. கடந்த சில மாதங்களாக குறிப்பாக ராஜபக்சக்கள் நாடாளுமன்றத்தைக் கைப்பற்றிய பின் இந்தியாவும் சீனாவும் அவர்களைத் தமது செல்வாக்கு வளையத்துக்குள் கொண்டு வருவதற்காக அதிக பிரயத்தனம் எடுத்து வருகின்றன. ராஜபக்சக்கள் சீனாவின் நண்பர்கள் என்பது வெளிப்படையான உண்மை. எனினும் அவர்கள் இந்தியாவை செங்குத்தாகப் பகைக்க மாட்டார்கள் என்று நம்பலாம்.

ஏனெனில் கடந்த 2015ஆம் ஆண்டு மஹிந்தவின் ஆட்சியைக் கவிழ்த்தது இந்தியாவும் தான் என்று ராஜபக்சக்கள் வெளிப்படையாக குற்றஞ் சாட்டி இருக்கிறார்கள். எனவே அப்படி ஒரு நிலைமை இந்த முறையும் வரக்கூடாது என்ற முன்னெச்சரிக்கை அவர்களுடைய அணுகுமுறைகளில் இருக்கிறது. தவிர அதில் முன்னெச்சரிக்கை என்பதோடு வேறு ஒரு தந்திரமும் இருக்கிறது. என்னவெனில் இந்தியாவை நோக்கிச் சென்றால் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழ் மக்களுக்கு அதிகம் விட்டுக் கொடுக்க தேவையில்லை என்றும் அவர்கள் நம்புகிறார்கள். ஏனெனில் இந்தியா இன்று வரையிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வாக பதின்மூன்றாவது திருத்தத்தை தான் முன்வைத்து வருகிறது.

04

# R2F:

## - பறிபோகும் பணம்; பரிதவிக்கும் சனம்

## உசாரய்யா...



## உசாரு!

### - சத்தமில்லாமல் நடக்கும் பகல் கொள்ளை

### - கண்ணைத் திறந்து கொண்டு ஏமாறும் வடக்கு மக்கள்!!

○ உளவாளி

ஒருத்தனை ஏமாத்த வேணும் எண்டால் முதலிலை அவனுக்கு ஆசையைத் தூண்டணும்" சதுரங்க வேட்டை என்ற படத்தில் வரும் மிகப்பிரபலமான வசனம் இது. ஒவ்வொருவருக்கும் அடிமனதில் ஒளிந்திருக்கும் ஆசைகளைத் தூண்டுவதன் மூலம் அவர்களைச் சிந்திக்கவிடாமல், நிர்ணயிக்கப்பட்ட பொறிகளில் வீழ்த்த முடியும்.இப்படிக் கண்ணைத் திறந்து கொண்டே படுகுழியில் வீழச் செய்யும் தந்திரங்களில் ஒன்றுதான் பிரமிட் வியாபாரக் கொள்ளை.

**முன்னைய கொள்ளை பிரமிட்**

பிரமிட் பற்றி உங்களுக்கு நன்கு தெரிந்திருக்கும். எகிப்தில் இறந்த மன்னர்களின் உடல்களை அடக்கம் செய்யப் பயன்படும் கூம்பக வடிவக் கட்டமைப்பே பிரமிட். உச்சியில் இருந்து கீழ் நோக்கி விரிவடையும் இந்தக் கட்டமைப்பை ஒத்ததே பிரமிட் வியாபாரக் கொள்ளையும். சில காலங்களுக்கு முன்னர் ' லங்கா குளோபல் லைப் ஸ்ரைல்' என்ற நிறுவனம் இந்த சட்டவிரோத வியாபாரக் கொள்ளையில் ஈடுபட்டிருந்தது.

**மூளைச்சலவையும் ஆள்பிடிப்பும்**

யாரேனும் ஒருவர், இந்த வியாபாரத்தில் முன்னரே இணைந்திருக்கும் ஒருவரால் மூளைச்சலவை செய்யப்பட்டு, இந்தத் திட்டத்துக்குள் உள்வாங்கப்படுவார். ஸ்படிகக் கல், எல்.ஈ.டி பல்ப் போன்ற சந்தையில் விற்க முடியாமல் தேங்கிக் கிடக்கும் வீட்டுப்பாவனைக்கு எள்ளளவும் பயனற்ற பொருள்கள் 75000 ரூபாவில் இருந்து ஒன்றரை லட்சம் ரூபா வரையில் அவர் தலையில் கட்டப்படும். அவர் அந்தப் பொருள்களை வாங்கிவிட்டு, தன் சார்பில் இருவரை இந்தத் திட்டத்தில் இணைய ' ஆள் பிடிக்க' வேண்டும். அப்படி இணையும் புதிய வர்கள், வாங்கும் பொருள்களின் பெறுமதியில் குறித்த சதவீதம் , அவர்களை இணைத்தவரின் கணக்கில் வந்து சேரும். பின்னர் அந்த இருவரும் தங்கள் சார்பில் இருவரையும், அவர்கள் மேலும் இருவரையும் என இந்தத் திட்டம் ஒரு பிரமிட் வடிவில் கிளை பரப்பும். ' நெட் வேர்க் மார்க்கெட்டிங்', ' ஒன்லைன் பிஸ்னஸ்' என்ற அலங்காரப் பெயர்கள் சூட்டப்பட்டு, ,நுனிநாக்கு ஆங்கிலத்தில் பரப்புரை செய்யப்பட்டு, ( இங்கிலிஷ் கதைக்கிறவன் பொய் சொல்ல மாட்டானாம்) வெற்றிகரமாக பலர் இந்த வலையில் வீழ்த்தப்பட்டனர்.

**R2F :பழைய கள் புதிய மொந்தை**

இந்தத் திட்டத்தில் பிரமிட்டின் உச்சியில் இருக்கும் ஒரு சிலர் கொள்ளை லாபமீட்ட, அதன் கீழ் விரிந்து செல்லும் கிளை நிலைகளில் இருக்கும் ஏராளமானோர் போட்ட காசைப் பெற முடியாமல், ஒன்றுக்கும் உதவாத ஸ்படிகக் கல்லோடும், எல்.ஈ.டி பல்போடும் திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான். இந்தக் கொள்ளை வடக்கில் கொடிகட்டிப் பறந்து, பின்னர் மத்திய வங்கியின் நடவடிக்கைகளால் மெல்ல மெல்ல காணாமல் போயிருந்தது. இப்போது அதே மாதிரியானதொரு திட்டம் தான் , R2F என்ற பெயரில் இன்னொரு வேடத்தோடு களமிறக்கப்பட்டுள்ளது. ஆனால் திட்டத்தின் பெயரும், ஆசையைத் தூண்டும் வழிமுறைகளும் தான் வித்தியாசம். இன்னொரு வகையில் சொன்னால் புதிய மொந்தையில் பழைய கள் தான் இந்த R2F.

"முதலீடு செய்யும் தொகையைப் போல ஐந்து மடங்காகத் தருவோம்" இதுதான் R2F திட்டத்தின் முதல் தூண்டில். அந்தத் தூண்டிலில் சிக்கி, முதலீடு செய்த பலர் இப்போது ஏமாறத் தொடங்கியுள்ளனர்.

**அது என்ன R 2 F ?**

" R 2 F என அழைக்கப்படுவது வெளிநாட்டு நிதி நிறுவனம். அமெரிக்காவின் பனாமா எனும் பகுதியை தலைமையகமாகக் தொண்டியங்குகின்றது" என இந்தத் திட்டத்துக்கு ஆள்பிடிப்பவர்களால் சொல்லப்படுகின்றது. "எதிர்காலத்திற்கு சவாரி செய்யுங்கள்" (R2F = ride to future) என்பதே இதன் அர்த்தமாம். இந்த நிறுவனத்துக்கு இலங்கையில் பதிவுகளோ அலுவலகமோ இல்லை. இலங்கையைச் சேர்ந்த 5000 பேரளவில் இந்நிறுவனத்தின் நிதிச் செயற்பாடுகளில் இணைந்து செயற்படுகின்றனர்.
இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்படாமல் மேற்கொள்ளப்படும் இந்த நிதிச் செயற்பாடுகள் இலங்கை சட்ட முறைகளை மீறும் செயற்பாடாகும் என மத்திய வங்கி எச்சரிக்கை விடுத்தும், இந்தத் திட்டம் தொடரவே செய்கின்றது.

**ஆரம்பத்தொகை 30 ஆயிரம்**

ஒருவர் இந்நிறுவனத்தில் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது 30 ஆயிரம் ரூபாவைச் செலுத்த வேண்டும்.
ஒரு கணக்குக்கான குறைந்த தொகை 99 அமெரிக்க டொலர். இதனோடு இச் சேவைக்கான பணமாக 8 வீதமும் சேவையை செயற்படுத்திக்கொள்ளும் பணமாக 49 அமெரிக்க டொலருமாக சேர்த்து இந்த 156 டொலர் அறவிடப்படும் . இணைந்து கொள்ளும் நபரின் கணக்கில் 99 அமெரிக்க டொலர் பெறுமதியான பிட்கொயின் முதலீடு செய்யப்படும் . இங்கு முதலீடு செய்யப்படும் பணத்தின் ஐந்து மடங்கு பணத்தில் முதலீட்டுக்குரிய பணம் போக நான்கு மடங்கு பணம் இலாபமாகக் கிடைக்கும் என்றே இந் நிறுவனச் செயற்பாட்டாளர்களால் நம்பவைக்கப்படுகின்றது.
இந் நிறுவனம் பிட்கொயின்களை வாங்கி பிட்கொயினின் விலை உயரும் சந்தர்ப்பத்தில் அதனை விற்பனை செய்யும். முதலீடு செய்த நாளில் இருந்து ஒரு கிழமையின் பின்னர் திங்கள் தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை நாள் ஒன்றுக்கு ஒரு விகித இலாபத் தொகை இணைந்து கொள்பவர்களது கணக்கில் வைப்பிலிடப்படும்.

**பிள்ளையார் சுழி போட்ட புலம்பெயரிகள்**

இந்நிறுவனம் இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் தனது செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு காரணமானவர்கள் புலம்பெயர் தமிழர்களே. அங்கிருந்தே உறவினர்கள் , பல்கலைக்கழக மாணவர்கள், உயர் பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களை இணைத்து இந்த R2F கொள்ளைக்கு பிள்ளையார் சுழி போடப்பட்டது. இப்போது பேஸ்புக் பிரபலங்கள், அதிக லைக்ஸ் வாங்கும் பெண்கள் என்போரைக் குறிவைத்து, அவர்களை இணைக்கிறார்கள். அப்படிச் செய்து அவர்கள் மூலம் இன்னும் பலரை இந்தப் படுகுழிக்குள் இழுக்கும் வேலைகள் கனகச்சிதமாக நடந்து வருகின்றன.

**தரகுப்பணமே இலாபம்**

இந்தத் திட்டத்தில் ஒருவர் இணைக்கப்படுகின்றார் என வைத்துக்கொள்வோம். அப்படி இணைந்தவர் கட்டும் பணத்தின் 10வீதம், அவரை இந்தத் திட்டத்துக்குள் "மண்டையைக் கழுவி ' இணைத்த நபருக்கு தரகுப் பணமாகக் கிடைக்கும். வழக்கமான பிரமிட் கொள்ளைக் கொள்கையைப் போலவே இதிலும் இணைந்து கொள்ளும் ஒவ்வொருவரும் தங்கள் சார்பில் மேலும் இரண்டு பேரை இணைத்தாலே அதிக பலன் கிட்டும்.

**இரை தேடும் கூட்டம்**

அப்படி இணைக்கப்படுபவர்களின் எண்ணிக்கை விரிவடைந்து செல்லச் செல்ல, அவர்களூடாகவும் சிறிய தொகை தரகுப் பணம் கிடைக்கும். தரகுப் பணத்தின் மூலம் அதிகமாக இலாபமீட்டுவதற்காகவே இன்னும் பலரை இந்தத் திட்டத்துக்குள் உள்ளீர்க்க வலை வீசுகிறார்கள்.
இந்தக் குழுக்களை ஊக்குவித்து அதிகளவில் ஆட்களை சேர்த்துக்கொள்வதற்காக ஒவ்வொருவருக்கும் , அவரவர் சேர்க்கும் ஆட்களின் முதலீட்டு பணத்தின் அளவைப் பொறுத்து 'தர நிலைகளையும்' வழங்கி அவர்களது இணையப் பக்கங்களில் புகைப்படத்துடன் வெளியிடுகின்றனர். இது அவர்களை மேலும் ஆள்பிடிப்புச் செய்யத் தூண்டுவதுடன் மற்றையவர்களை இந்தத் திட்டத்தை நோக்கி இழுத்துவரும் இரையாகவும் பயன்படுகின்றது.

**மோசடிக்கே வழிகோலும்**

பிட் கொயின் வாங்கி விற்பது வெளிநாடுகளில் செயற்பாட்டில் இருந்தாலும், இலங்கையில் இந்தச் செயற்பாடு தொடர்பாக பூரண அறிவின்மை, செயற்பாடின்மை, அரச அனுமதியில்லாமை போன்ற காரணிகளால் மோசடிக்கே வழிவகுக்கிறது என்கிறார்கள்

03

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய வங்கி அதிகாரிகள். ஒருவர் தனக்குக் கீழ் ஆட்களை சேர்க்கும் செயற்பாட்டால் இதுவும் ஒரு "பிரமிட் திட்டம்" என்றும் பிரமிட் திட்டங்கள் இலங்கையில் தடைசெய்யப்பட்டவை என்றும் அதே அதிகாரிகள் சொல்கிறார்கள்.

**பிட்கொயின் பற்றி தெரியுமா?**

பிட்கொயின் (Bitcoin) எண்ணிம நாணயக் குறியீடு அல்லது நுண்காசு எனப்படும். 'சத்தோசி நகமோட்டோ' எனும் ஜப்பானியரால் உருவாக்கப்பட்ட ஒரு எண்ணிம நாணயமே இது. இது கணினி முறையால் வலைத்தளங்களில் செயலாக்கப்பட்டு, பரிமாற்றம் செய்யப்படுகின்றது.

பிட்கொயினை (பொது வழக்கில் உள்ள டொலர், ரூபா போல) வலைத்தளங்களில் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளலாம்; பொருள்கள் வாங்கலாம்; சேமித்தும் வைக்கலாம். பொது வழக்கில் உள்ள பணம் மத்திய வங்கியால் கட்டுப்படுத்தப்பட்டு மேலாண்மை செய்யப்படுகின்றது. ஆனால், பிட்கொயின் என்ற இந்த கணினிக் காசு எந்த வங்கியாலும் மேற்பார்வை இடப் படுவது இல்லை; கட்டுப்படுத்தப்படுவதும் இல்லை. முதலீடு செய்ய வருபர்களிடம் பணத்தை வாங்கி, அதில் ஒரு பகுதியை இதற்கு முன்னால் முதலீடு செய்தவர்களுக்குக் கொடுக்கும் ஒரு "ஏமாற்று"த் திட்டமே இது. பிரமிட் திட்டம் (Pyramid scheme) என்பது ஒருவரைத் திட்டத்தில் சேர்த்து, பின் அவரை மற்றவர்களைச் சேர்க்கச் சொல்வது . சேர்ந்த ஒவ்வொருவரும் மற்றவர்களைச் சேர்க்க சொல்ல வேண்டும். இதுவும் ஒரு "ஏமாற்று" திட்டமாகும்.

**சவர்க்காரக் குமிழியும் பிட்கொயினும்**

சிறுவர்கள் சவர்க்காரக் குமிழ்களை ஊதி விளையாடுவதைப் பார்த்திருப்பீர்கள். மிகப்பெரிதாக, அழகாக, பார்ப்போரைச் சுண்டியிழுக்கும் கவர்ச்சியோடு உருவாகும் அந்தக் குமிழிகள் ஒரு சில செக்கன்களில் உடைந்து, இல்லாமலே போய்விடும். அப்படியான குமிழிகளே இந்த பிட்கொயின்கள். "பிட்கொயின் என்பது பணப் பரிமாற்றத்தில் ஒரு வெறும் குமிழி மட்டுமே" என்று நோபல் பரிசு பெற்ற பொருளியல் அறிஞர்களான றொபேர்ட் சில்லர் , ஜோசப் ஸ்டிக்லிட்ஸ் , ரிச்சர்ட் தேலர் ஆகியோர் கூறி உள்ளனர். பொருளாதாரப் பேரறிஞரான போல் கிரக்மன் " பிட்கொயின் என்பது ஒரு குமிழ் மட்டுமல்ல, இது ஒரு ஏமாற்று வேலை" என்றும் கூறியுள்ளார்.

**பிரமிட் திட்டம்: தடையும் தண்டனையும்**

" இலங்கையில் பிரமிட் திட்டமானது 1988 ம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழிற் சட்டத்தினூடாக தடை செய்யப்பட்ட திட்டமாகும். எந்தவொரு நபரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஊக்குவிக்கவோ, ,வழங்கவோ,விளம்பரப்படுத்தவோ,நிதியிடவோ, முகாமைப்படுத்தவோ கூடாது. மேற்படி செயற்பாடுகள் ஏதாவது ஒன்றில் ஈடுபட்டாலும் குற்றம் இழைத்தவராகவும் 1,000,000 ரூபாவுக்கு குறையாத தண்டமொன்றுக்கும் அத்துடன் அல்லது மூன்று ஆண்டுகள் குறையாத சிறைத்தண்டனையும் கிடைக்கும். இந்த நடவடிக்கையானது தீங்கு விளைவிக்கும் எனத் தெரிந்துகொண்டே புரியப்பட்டிருப்பின் மூன்று ஆண்டுகளுக்கு குறையாததும் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாமலும் கடூழியச் சிறைத்தண்டனைக்கும் 2,000,000 ரூபா தண்டப்பணமும் செலுத்தப்பட வேண்டும்" என்று எச்சரிக்கின்றது இலங்கை மத்திய வங்கி.

**சொல்வது அவர்கள், தீர்மானிப்பது நீங்களே!**

2011 ஆம் ஆண்டு வடபகுதியில் தாண்டவமாடிய பிரமிட் ஏமாற்று திட்டங்களை முறியடித்து மக்களைக் காப்பாற்றியது இலங்கை மத்திய வங்கியே. இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முன்னாள் முகாமையாளர் யாழ். நூலகத்தில் பிரமிட் வியாபாரம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கில் உரையாற்றிய போது "நீங்கள் ஏன் இந்தத் திட்டத்தை தடைசெய்யவில்லை?" என பொதுமகன் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்கு " இந்த வீட்டில் விபசாரம் நடப்பதாக நான் சொல்லலாம்... ஆனால் அது நல்லதா, கெட்டதா என முடிவெடுத்து அங்கு போவதும் போகாமல் விடுவதும் உங்கள் விருப்பம்" எனப் பதிலளித்திருந்தார். இந்தப் பதிலை நாமும் மீள வாசகர்களுக்கு ஞாபகப்படுத்துகின்றோம்.

**இதுவும் பிரமிட்டே!**

R 2 F எனும் இந்தத்திட்டத்திலும் ஆட்களைச் சேர்த்து வருவதும் இதுவும் ஒரு பிரமிட் திட்டமே என்பதை உறுதிப்படுத்துகின்றது.

ஒரு திட்டத்தைத் தடை செய்தால் வேறு ஒரு பெயரில் நிதிச் சட்டத்தில் இருக்கும் சில ஓட்டைகளைக் கண்டுபிடித்து அதனூடாக மீண்டும்.இன்னொரு பெயரில் காலூன்றி மக்களின் பணத்தை உறிஞ்சுவது இந்த ஏமாற்றுப்பேர்வழிகளுக்குக் கைவந்த கலை.

**பாதிப்பு அப்பாவிகளுக்கே!**

ஆனால் அப்படி எவரேனும் பிரமிட் வியாபாரச் செயற்பாட்டில் ஈடுபடுவது ஆதாரத்தோடு கண்டுபிடிக்கப்பட்டால், அவர்கள் தண்டனைக்குரிய குற்றம் ஒன்றைப் புரிந்தவர்களாவே கருதப்படுவர். பரிதாபம் என்னவெனில், இந்தத் திட்டத்தின் ஆரம்பப்புள்ளிகளான புலம்பெயர் வாழ் வழிகாட்டிகள் கொள்ளை இலாபத்துடன் தப்பிவிட, பாதிக்கப்படப் போவது இங்கே செயற்படும் அப்பாவிகள் தான்.

**சமூக வலைத்தளங்களில் தூண்டில்**

இன்று சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தாதவர்களே இல்லை எனும் அளவுக்கு பெரும்பாலானோர் பேஸ்புக், ருவிட்டர், இன்ஸ்டாராம் என்று அல்லும் பகலும் அனைவரும் அங்கேயே பாய் போட்டுப் படுத்திருக்கிறோம்.

இதனைப் பயன்படுத்தி , R2F என்ற இந்தப் பிரமிட் திட்டத்துக்கான பலியாடுகளை சமூகவலைத்தளங்களில் தேடத்தொடங்கியுள்ளார்கள். பொருளாதார நெருக்கடியில் வாழ்பவர்களையும், பேராசை கொண்டவர்களையும் முதலில் கண்டுபிடிப்பார்கள். அதன் பின்னர் அவர்களது ஆசையைத் தூண்டி "குறைந்த செலவில் நிறைய வருமானம்"

" நீங்கள் முதலிடும் பணத்துக்கு ஐந்து மடங்கு பணம்"

" சிறு முதலீட்டுடன் எந்த உழைப்பும் இல்லாமல் அதிக வருமானத்தை அடையலாம் "என்ற ஆசை வார்த்தைகளை சமூக வலைத்தளங்களில் விதைத்து, ஆள்களைப் பிடித்து நல்ல அறுவடை செய்யத் தொடங்கியுள்ளார்கள்.

**' சூம்' பரப்புரைகள்**

கொரோனாவுக்கு பின்னர் உலகமே வீட்டுக்குள் முடங்கியபோது ' சூம்' என்ற செயலி பிரபலமடைந்தது. வீட்டில் இருந்தபடியே அலுவலக வேலை, கூட்டங்கள்,கல்வியூட்டல்கள் என ' சூம்' செயலி பல்வகைப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்தது.

' சூம்' செயலின் பலத்தை இனம்கண்டுகொண்ட R2F காரர்களும், தங்களுடைய ஆள்பிடிப்புக்கும், மூளைச்சலவைக்கும் ' சூம்' செயலியை துணையாக வைத்திருக்கிறார்கள்.

R2F நபர்களின் சூம்' கூட்டங்கள் அடிக்கடி நடக்கும். R2F திட்டத்தில் ஏற்கனவே இணைந்த ஒருவர், இன்னும் சிலரை புதுமுகங்கள் போல( அவர்களும் முன்னரே இணைந்து ஏமாற்றுபவர்களே) வேலிக்குச் சாட்சி சொல்வதற்காக இந்த ஓணான்களை செட்' பண்ணிவிட்டே கூட்டங்கள் தொடங்கும். அதன் போது புதிதாக இணைய வருவோருக்கு ஆசை ஊட்டப்படும். அதற்கு ஏற்கனவே ' செட்' பண்ணப்பட்ட நபர்கள் பக்கப்பாட்டு பாட,புதிய நபரும் கனவில் மிதக்கத் தொடங்கிவிடுவார். அடுத்த சில நாள்களிலேயே பணத்தைக் கட்டிவிட்டு,அது 5 மடங்காகத் திரும்பி வரும் என்று காத்திருப்பார். ஆனால் போட்ட முதல் கூட திரும்பாது என்ற உண்மை காலங்கடந்த பின்னரே அவருக்கு உறைக்கும்.

"எப்பிடி இருந்த நான் இப்பிடி ஆகிட்டேன்"

"உங்களால் கட்டக் கூடியதும் ,இழக்கக் கூடியதும், இழந்தால் உங்களை பாதிக்காத பணத்தை இதில் முதலீடு செய்யுங்கள் " என்ற நவீன கீதா உபதேசத்தோடு தான் இந்த 'சூம்' மூளைச்சலவைக் கூட்டங்கள் ஆரம்பிக்கும்.அதன் பின்னர் ஏற்கனவே ' செட்' பண்ணப்பட்ட வேலிக்கு சாட்சி சொல்லும் ஓணான் நபர்கள் ' நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்றரீதியில் தங்கள் அனுபவம் என்ற போர்வையில் ஆசையைத் தூண்டும் கதைகளைச் சொல்லத் தொடங்குவார்கள்.பொதுவாக ' எப்பிடி இருந்த நான் இப்பிடி உயர்ந்திட்டேன்' என்ற தொனிப்பொருளே அந்த ஆசையூட்டல்களின் அடிநாதமாக இருக்கும்.


உதாரணத்துக்கு சில ஆசைக்கதைகள்.

**ஆசைக்கதை - 1**

நான் இந்தியா தமிழ் நாட்டில் இருந்து 15 வருடங்களுக்கு முன் பிரான்ஸ் வந்தேன்.என்னிடம் நல்ல போன் இல்லை . இந்தத் திட்டத்தில் இணைந்த பின்னர் நல்ல போன் கிடைத்தது.ஆண்டவருடைய கிருபையால் தான் இந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆண்டவருக்கு நன்றி.

**ஆசைக்கதை- 2**

" நான் பொருளாதார நிலையில் மிகவும் கஷ்டப்பட்டேன். நண்பர்களூடாக இந்த திட்டம் பற்றி கேள்விப்பட்டு இந்தச் செயலமர்வில் கலந்துகொண்டேன். முதலில் நானும் நம்பவில்லை.நீண்ட நாள்கள் அவதானித்து இலாபம் கிடைப்பதை உறுதிப்படுத்திய பின்னரே இதில் இணைந்தேன்.இப்போது என்னுடைய வாழ்க்கையே மாறியிருக்கிறது. இப்போது நான் ஒரு BMW கார் வாங்கி விட்டேன்



# அதோகதிதான்

இப்படித்தான் முன்னரும் ' குளோபல் லங்கா லைப் ஸ்ரைல் ' என்ற பேரில் பிரமிட் திட்டத்தோடு , கோட் சூட்டுடன் வந்தவர்கள் நகரங்களில் உள்ள பிரபல மண்டபங்களில் கூட்டங்களை நடத்தி "வீதியில் என்னுடைய கார் நிற்கிறது பார்த்தீர்களா... நான் ஒரு மாடி வீடு கட்டியிருக்கிறேன் "என்று கதையளந்தார்கள்.அந்தக் கதையை நம்பி சேமிப்பில் இருந்த பணத்தை எடுத்தும், நகைகளை விற்றும் பணம் பலரும் கட்டினார்கள். ஆனால் கடைசியில் என்ன நடந்தது? அந்தத் திட்டத்துக்கு என்ன நடந்தது என்று எவருக்குமே தெரியாமல் காணாமலே போயிற்று. ஆசைக் கதைகளை நம்பி கையில் இருந்ததையெல்லாம் விற்று, சுட்டு பணம் போட்டவர்களின் நிலை அதோகதிதான்!

**பட்டாலும் திருந்தாதோர்**

"அந்தத் திட்டத்தால் ஏமார்ந்து, பணத்தை இழந்த சிலர் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு கொடுத்தபோதும், உரிய ஆதாரங்கள் இல்லாமையால் ஏமாற்றியவர்கள் தப்பித்துவிட்டார்கள். இன்னும் பலர் தாம் ஏமாந்ததை வெட்கத்துக்கு அஞ்சி வெளியே சொல்லவேயில்லை.அப்படி ஏமாந்த பலரும் இப்போது இந்த R2F திட்டத்திலும் காசைப் போடுகிறார்கள். எத்தனைதரம் பட்டாலும் இவர்கள் திருந்தப்போவதில்லை" என்று ஆதங்கப்படுகின்றார் சமூகசேவைச் செயற்பாட்டாளர் ஒருவர்.

**ஒரேயொரு முறைப்பாடு**

" R2F சட்டவிரோத வர்த்தக நடவடிக்கை தொடர்பில் இதுவரை ஏராளமானோர் பாதிக்கப்பட்டபோதிலும், ஒரேயொருவர் மட்டுமே இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்தியக் கிளையில் இது குறித்து தனது முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார். இந்த முறைப்பாடு தலைமையகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. இலங்கையில் மத்திய வங்கியின் அனுமதியில்லாமல் மேற்கொள்ளப்படும் நிதிச் செயற்பாடுகள் எல்லாமே சட்ட மீறல்கள் தான் . உதாரணமாக கிராமங்களில் நடக்கும் "சீட்டு" எனும் திட்டம் கூட சட்ட மீறலே. மத்திய வங்கியின் சட்டங்களை மீறி திட்டங்களில் இணையும் நபரும், இணைக்கும் நபரும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தக் கூடியவர்கள்" என்று தெரிவிக்கின்றனர் மத்திய வங்கி அதிகாரிகள். எனினும் வடக்கில் உள்ள பொலிஸ் நிலையங்களில் R2F தொடர்பான முறைப்பாடுகள் எதுவும் இதுவரை பதிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்னுமா நம்புகிறார்கள்?

R2F திட்டத்தில் இணைந்தவர்களோ இதனை நம்பிக்கையான ஒன்றாகவே கருதுகின்றனர். அதனை அவர்களோடு உரையாடியதன் மூலம் உணரமுடிந்தது.இந்தத் திட்டத்தில் இணைந்து குறுகிய காலத்தில் இரண்டு லட்சம் ரூபா பெற்றதாகச் சொல்லப்படும் , வன்னியைச் சேர்ந்த யுவதி ஒருவர் சொல்வதைக் கேட்கும் போது, அவர் இந்தத் திட்டத்தை எவ்வளவு தூரம் கண்மூடித்தனமாக நம்புகிறார் என்பதை உணர முடிகிறது.

17



சஞ்சீவி
17 ஒக்ரோபர் 2020



# 'இருபதுக்கு' எத்தனை இழுபறிகள்?

○ ராஜ்குமார்

அங்கே இங்கே என்று சுத்திவிட்டு மீண்டும் ஆரம்பித்த இடத்திலேயே வந்து 'பிறேக் டவுன்' ஆகி நிற்கிறது அரசமைப்புக்கான 20ஆவது திருத்தவரைவு. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி, அதற்குப் பின்னர் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நாடாளுமன்ற தேர்தலிலும் வெற்றி என்ற கெத்தில் அவசர அவசரமாக '2 மினிட்ஸ் நூடில்ஸ்' போன்று 20ஆவது திருத்தச் சட்ட வரைவொன்று உருவாக்கப்பட்டது. அதனை வெளியே விட்டால் ஏகப்பட்ட விமர்சனங்கள், ஆலோசனைகள் வரும் என்பதால், தயாரித்த வேகத்திலேயே வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டது. இந்த 20 ஆவது திருத்தசட்ட வரைவை ஆளும் கட்சியினர் மட்டுமல்ல, பிரதமர் கூட வர்த்தமானியில் பார்த்தே அறிந்துகொள்ள வேண்டிய பரிதாபகரமான நிலை. இந்தச் சட்டவரைவை அடுத்த கட்டமாக நாடாளுமன்றில் கொண்டு வந்து தமக்கிருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி, நிறைவேற்றியே தீருவோமெனக் காரியங்கள் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் நினைத்தது நினைத்தபடி நிறைவேற வில்லை. எதிர்க்கட்சிகளால் உயர்நீதிமன்றில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அது விசாரிக்கப்பட்டு, நான்கு விடயங்களுக்கு தடுப்பு போட்டது நீதிமன்றம். அந்த சர்ச்சைக்குரிய விடயங்களை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் தீர்த்துக் கொள்ளும்படி பஞ்சாயத்தும் பண்ணி விட்டது. சரி எமது மக்கள் எமது ஆதரவாளர்கள் தானே? அதையும் ஒரு கை பார்த்து விடலாம் என்ற நிலையிலேயே இருந்தது அரச தலைமை.

ஆனால் 20ஆவது சட்டத் திருத்தம் 'கோர்ட், கேஸ்' என்று ஏறி இறங்கிக் கொண்டிருந்த நேரத்தில் முற்றிலும் எதிர்பாராத விதமாக ஆளும் கட்சிக்கு உள்ளிருந்தே எதிர்ப்புகள் கிளம்பின. அதிலும் ராஜபக்சக்கள் என்ன சொன்னாலும் கண்ணை மூடிக்கொண்டு "ஆமாம்சாமி" போடும் தரப்புக்களிடமிருந்தே எதிர்ப்புக்கள் கிளம்ப, ஆடிப் போய்விட்டது அரசு. சரி அவர்களைக் கூட அடக்கி ஒடுக்கி மிரட்டி பணிய வைக்கலாம் என்று பார்த்தால் வேறொரு பக்கத்திலிருந்தும் எதிர்ப்புக் கிளம்பியது. இதுவரை அரசுக்கு ஒத்து ஊதிக்கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த 20 ஆவது திருத்தத்துக்கு வாக்களிக்காமல் நடுநிலை வகிக்க போவதான செய்தி அரசை மேலும் ஆட்டம் காண வைத்திருக்கிறது. அரசின் மீது பல்வேறு காரணங்களால் வெறுத்துப் போயிருக்கும் மைத்திரி இந்த முடிவை எடுத்திருப்பதாக செய்திகள் கசிந்திருக்கின்றன. எனவே சுதந்திர கட்சியின் தலைவரான அவர் இந்த முடிவை எடுத்தால், அவரின் கீழ் உள்ள 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன முடிவை எடுப்பார்களோ என்ற அச்ச நிலையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பது நாடாளுமன்றில் சந்தேகமான நிலையே காணப்படுகிறது.

இவ்வாறான நிலையில் கொஞ்சம் எதிர்க் கட்சிகளை தாஜா பண்ணி அங்கிருந்து சில்லரை உருவி எடுக்கலாம் என்று சில பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. அதற்கு முஸ்லிம், தமிழ்க் கட்சிகள் சிலவற்றிலிருந்து கொஞ்சப்பேர் பச்சைகொடியும் காட்டி, பாய்வதற்கு தயாராகவும் இருந்தனர். இந்த நிலையில் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் தம்பியை விடு விக்கப்போக அதனால் எழுந்த சர்ச்சை, ரிஷாத்தின் கைது உத்தரவு என்பனவற்றால் இந்த முயற்சியும் முட்டுப்பட்டு நிற்கிறது. இவைகளெல்லாம் நெருக்கிக் கொண்டிருந்த நிலையில் இந்த அரசை ஆட்சிக்கும் கொண்டுவர ஆணிவேராகச் செயற்பட்ட பௌத்த மகா சங்கங்களும் இப்போ 20க்கு எதிராக போர்க்கொடி தூக்கியிருப்பது அரச உயர் மட்டத்தை கலங்கச் செய்திருக்கிறது.

ஏற்கனவே பௌத்த சிங்கள பற்றுக்கொண்ட ஆட்சியாளர்களை ஆட்சிக் கட்டிலில் ஏற்றவேண்டுமென மும்முரமாக செயற்பட்ட பல தேரர்கள், இந்த 20ஆவது திருத்தம் தொடர்பில் தமது ஆட்சேபனையை வெளியிட்டு வந்தனர். இந்த நிலையில் தற்போது இலங்கையின் முக்கியமான அதுவும் பௌத்த மதத்தை இலங்கையில் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்




நான்கு மகாசங்கங்களான அஸ்கிரிய பீடம். மல்வத்த பீடம், அமரபுரபீடம், ராமான்ய பீடம் ஆகிய மகா சங்கங்களில் அமரபுர பீடமும் மற்றும் ராமான்ய பீடமும் தமது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றன. இவர்களை தொடர்ந்து ஏனைய அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களும் விரைவில் தமது ஆட்சேபனையை வெளியிடலாம் என்று சொல்லப்படுகிறது.

அடுத்தபடியாக கத்தோலிக்க மதத்தின் ஆயர்கள் பேரவையும் 20 வேண்டாம் என்று தமது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ள நிலையில் இவ்வாறான மதத் தலைவர்களின் எதிர்ப்பானது பொதுமக்கள் மத்தியிலும் பலத்த செல்வாக்கை செலுத்து மென்றும், இனி பல்வேறு பகுதிகளில் இருந்தும் எதிர்ப்புகள் கிளம்பும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனாலும் சில திருத்தங்களை செய்துவிட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இந்தச் சட்டத்தை நிறை வேற்றியே தீருவோம் என்று. அண்மையில் ஆளும் கட்சி முக்கியஸ்தர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் ராஜபக்ச சகோதரர்கள் தெரிவித்துள்ளனர். எதிர்ப்பாளர்களை சமாளித்துவிட்டு நீதிமன்றத்தின் பரிந்துரைப்படி சில திருத்தங்களை மேற்கொண்டு நாடாளுமன்றில் சமர்ப்பித்து குழுநிலை விவாதங்களின் போது மேலும் சிறு திருத்தங்களை மேற்கொண்டு தனித்தனியான வாக்கெடுப்புக்கள் மூலம் இந்த திருத்த வரைவை நிறைவேற்றிக் கொள் வதே அவர்களின் திட்டம் போல் தெரிகிறது. இது எந்த அளவுக்குச் சாத்தியம் என்பது தெரியவில்லை.

கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல் புதிது புதிதாக எதிர்ப்புப் பூதங்கள் கிளம்பிக்கொண்டிருக்கும் நிலையில், அடுத்து என்ன செய்யப்போகிறது அரசு?

## தமிழர்களுக்குத் தேவை:

ஆனால் கஜேந்திரகுமாரும் விக்னேஸ்வரனும் அதை ஏற்றுக்கொள்ள வில்லை. கூட்ட மைப்பும் இது விடயத்தில் 13ஐக் கடந்து போக வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறது. எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வை இந்தியாவின் ஒத்துழைப்போடு 13ஆவது திருத்தத்துக்குள் பெட்டி கட்ட வேண்டும் என்று ராஜபக்சக்கள் சிந்திக்க முடியும்.

இதனால் ஈழத்தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவைத் தொடர்ந்தும் முரண் நிலையிலேயே வைத்திருக்க அவர்களால் முடியும். இப்படிப் பார்த்தால் இந்தியாவை பகைக்காத ஒரு வெளியுறவுக்கொள்கையை கடைப்பிடிப்பதன் மூலம் ராஜபக்சக்கள் ஒரு கல்லில் மூன்று மாங்காய்களை விழுத்தலாம். முதலாவது மாங்காய் தமது வம்ச ஆட்சியை பாதுகாத்துக் கொள்ளலாம். இரண்டாவது மாங்காய் தமிழ் மக்களை ஒப்பீட்டளவில் குறைந்தளவு தீர்வுக்குள் பெட்டி கட்டி விடலாம். மூன்றாவது மாங்காய் தமிழ் மக்களையும் இந்தியாவையும் தொடர்ந்தும் பகை நிலையில் வைத்திருக்கலாம். எனவே ராஜபக்சக்கள் இந்தியாவைப் பகைக்காத ஒரு வெளியுறவுக் கொள்கையைத்தான் பெரும்பாலும் கடைப்பிடிக்க பார்ப்பார்கள்.

எனினும் கடந்த சில தினங்களாக நடப்பவற்றைத் தொகுத்துப் பார்த்தால் அவர்களால் இந்தியாவை முழுமையாகத் திருப்திப்படுத்த முடியுமா என்ற கேள்வி எழுகிறது. ஏனெனில் மே18 ஐ உடனடுத்து மே 23 ஆம் திகதி கோத்தாபய ராஜபக்சவும் பிரதமர் மோடியும் தொலைபேசி மூலம் நடத்திய உரையாடலில் இலங்கைத் தீவின் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை நிர்மாணிக்கும் வேலையை இந்தியாவிடம் தரப்போவதாக இலங்கை கோடி காட்டியது. ஆனால் பின்னர் அதற்கு சீனா எதிர்ப்புத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. கோத்தாபய ராஜபக்சவின் இந்திய விஜயத்தின் போதும் அண்மையில் மகிந்த ராஜபக்சவும் மோடியும் கலந்து கொண்ட மெய்நிகர் உச்சி மகாநாட்டின் போதும் இந்தியா, இலங்கைத் தீவுக்கு நிதி உதவிகளை வழங்கப் போவதாக அறிவித்திருக்கிறது. அதாவது சீனாவைப் போலவே இந்தியாவும் இலங்கைத் தீவை நிதி உதவிகளின் மூலம் தனது செல்வாக்கு வளையத்துக்குள் கொண்டு வர முயற்சிக்கிறதா?
ஆனால் அந்த மெய்நிகர் உச்சி மாநாடு முடிந்து சில கிழமைகளுக்குள்ளேயே சீனாவின் உயர்மட்டத் தூதுக்குழு ஒன்று இலங்கைக்கு வந்தது. அவர்களும் புதிய நிதி உதவித் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள் அதன்படி இலங்கைதீவை சர்வதேசக் கடன் பொறுப்புகளில் இருந்து விடுவிப்பதற்கான நீண்ட காலத் தவணை அடிப்படையிலான கடனுதவிகளை வழங்கப் போவதாக சீனா அறிவித்துள்ளது. அது மட்டுமல்ல ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைத் தீவைப் பாதுகாக்கப் போவதாகவும் சீனா அறிவித்திருக்கிறது.
இவ்வாறான ஒரு பின்னணியில் சீனத் தூதுக்குழுவின் விஜயம் நிகழ்ந்த அதே காலப்பகுதியில் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்பு துறை அதிகாரிகள் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு விஜயம் செய்திருக்கிறார்கள். அத்தோடு அமெரிக்க வெளியுறவுச் செயலர் விரைவில் இலங்கைக்கு வர இருக்கிறார். இங்கே அவர் அமெரிக்க மிலேனியம் சவால் நிதி உதவி திட்டம் குறித்து உரையாடுவார் என்று கூறப்படுகிறது.
மேற்கண்ட அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் ஒன்று தெளிவாகத் தெரியவரும். உலகின் மூன்று பேரரசுகளும் இலங்கைத்தீவை ஏதோ ஒரு விதத்தில் தமது வியூகங்களுக்குள் கொண்டுவர முயற்சிக்கின்றன. இந்தப் வியூகங்களின் ஒரு பகுதியாகவே அண்மையில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரும் சீனத் தூதுவரும் ஒருவர் மற்றவருக்கு எதிராக அறிக்கை விடும் நிலைமை தோன்றியது. இவ்வாறானதொரு பின்னணியில்தான் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைத் தீவை தாங்கள் பாதுகாப்போம் என்று சீனா கூறியிருக்கிறது. அதாவது நீதிக்கான தமிழ் மக்களின் போராட்ட அரங்கொன்றில் சீனா நேரடியாகத் தலையிடப் போகிறது.

எனவே சிறிய இலங்கைத் தீவு எதிர்காலத்தில் பேரரசுகளின் குத்துச்சண்டைக் களமாக மாறக்கூடிய ஏது நிலைகள் அதிகரித்து வருகின்றன. இது ஒருவிதத்தில் தமிழ்மக்களுக்குச் சாதகமானது. அப்படி என்றால் கொழும்பைக் கையாள்வது தான் பேரரசுகளின் முதலாவது தெரிவாக இருக்கும். ஆனால் ஒரு கட்டத்துக்கு மேல் கையாள முடியாத போது அவர்கள் தமிழ் மக்களை நோக்கித் திரும்புவார்கள். அது ஏற்கனவே நடக்கத் தொடங்கிவிட்டது. இவ்வாறு பேரரசுகள் தமிழ் மக்களை நோக்கி அதிகரித்த அளவில் திரும்பக் கூடிய ஒரு சூழலில் பேரரசுகளை வெற்றிகரமாகக் கையாள்வதற்கு ஒரு தீர்க்கதரிசனம் மிக்க வெளியுறவுக் கொள்கை அவசியம். ஒரு வெளியுறவுக் கட்டமைப்பும் அவசியம். அந்த வெளியுறவுக் கட்டமைப்பே வல்லரசுகளை அணுக வேண்டும். கையாள வேண்டும்.
மாறாக தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக வெளியரசுகளை அணுகக்கூடாது. கடந்த 11 ஆண்டுகளாக ஜெனிவாவைக் கையாளும் விடயத்தில் தமிழ்த் தரப்புக்கள் எப்படி ஒற்றுமையின்றி தனி ஓட்டம் ஓடி நிலைமைகளை வெற்றி கொள்ள முடியவில்லையோ, அதுபோல இனிமேலும் சொதப்பலான சிதம்பலான ஒரு வெளியுறவுப் பொறிமுறை இருக்கக் கூடாது. எனவே இது விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் பின்வரும் நடைமுறைகளை குறித்து சிந்திக்க வேண்டும். முதலாவது ,வெளியுறவுக் கொள்கை, மைய கூட்டு ஒன்றுக்குப் போக வேண்டும்.
இரண்டாவது ,பொருத்தமான வெளியுறவுக் கொள்கை ஒன்றை வகுப்பதற்கு ஒரு சிந்தனைக் குழாமை உருவாக்கி அந்த வெளியுறவுக் கொள்கையை வடிவமைக்க வேண்டும்.
மூன்றாவது , ஒரு வெளியுறவுக் குழுவை உருவாக்க வேண்டும் .அந்தக்குழுவில் மக்கள் பிரதிநிதிகளும் தாயகத்திலும் தமிழகத்திலும் புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்திலும் இருக்கக்கூடிய சிவில் சமூகப் பிரதிநிதிகளும் புத்திஜீவிகளும் இணைக்கப்பட வேண்டும்
இவ்வாறு ஒரு பொருத்தமான வெளியுறவுத் தரிசனத்தோடு உரிய பொறிமுறையும் இருந்தால்தான் இப்பொழுது பேரரசுகளின் விளையாட்டு மைதானமாக மாறியிருக்கும் இலங்கைத்தீவில் தமிழ் மக்களும் புகுந்து விளையாடலாம். தங்களுக்குரிய பொருத்தமான கௌரவமான நீதியான ஒரு தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம்.

# சொற்சிலம்பம் போட்டி 17

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | |
| 6 | | | | ■ | 7 | | ■ |
| 8 | | | | 9 | | | 10 |
| | ■ | | ■ | | ■ | 11 | |
| ■ | 12 | | 13 | ■ | 14 | | |
| 15 | | | | 16 | | | ■ |
| | ■ | 17 | | | | ■ | 18 |
| 19 | | ■ | 20 | | ■ | 21 | |

அனுப்புபவர் பெயர்:.............................................

முழுமையான தபால் விலாசம்: .............................

..............................................................

கையொப்பம்:.....................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. திங்கள்தோறும் 5. திறப்பு 6.மனம் 7. தாண்ட 8. கதையை பிரசங்கம் செய்பவர். 11. பார் 12. முற்றும் துறந்தவர். 14.பிள்ளைப் பேறின்மை 15. பிறப்புக்கு முந்திய காலம் 17. இவர் ஒரு துறவி 19. செல்வம் 20. சேலை 21. தனாடாவிட்டாலும் இது ஆடுமாம்.

## மேலிருந்து கீழ்

1. இறந்தோருக்கு மாதம் தோறும் செய்யும் பிதிர்க்கடன் 2. பாட்டனார். 3. ஒவ்வொரு திங்களிலும் வரும் முதல் நாள். 4. இளைய சகோதரன் 5. அந்தி சாயும் பொழுது 7. உறவைப் பலப்படுத்துவது இந்த வலைதான். 9. மன்மதன் மனங் கவர்ந்தவள். 10. தோண்டு என்ற ஏவல் சொல். 12. கெட்ட. 13. எதிர்பாராமல் நடப்பது. 14. பூ. 15. வெட்ட உதவும் கருவி. 16. தோடும் இந்த வகைளில் ஒன்றே. 18. ஒட்ட உதவுவது.

### சொற்சிலம்பம் போட்டி 15 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.நன்கொடை, 3.வைகறை, 5.அத்தி, 6.சந்ததி, 8.திரை, 9.ணிரஆய (ஆரணிய), 11.வம்சாவளி, 13.புனிதம், 15.லைலா 17.குகை, 19.கடம்பமாலை

**மேலிருந்து கீழ்**

1.நச்சரிப்பு, 2.கொத்தணி, 3.வைத்தியசாலை, 4.கதிரை, 7.திரவம், 10.ஆம் 12.வலாகு, 14.தடம், 16.மாமா, 18.கைதி

**சொற்சிலம்பம் போட்டி இல.17**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
23.10.2020 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### போட்டி இலக்கம் 15 இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**நா.சதீஸ்வரன்**
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம், கிளிநொச்சி

**2 ஆம் பரிசு**
**பி.நிதுஜா,**
கனகராயன்குளம் வடக்கு, வவுனியா.

**3 ஆம் பரிசு**
**சி.நிரஞ்ஜன்**
இல.39, முருனங்கன் வீதி, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி,

**4 ஆம் பரிசு**
**பூபாலசிங்கம் திலக்சன்**
இல.21,பொன்னாலை வீதி, கட்டுடை, மானிப்பாய்.

**5 ஆம் பரிசு**
**நா.பாலசுப்பிரமணியம்,**
இல.7/2, அம்மன் நகர், தோணிக்கல், வவுனியா.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

சஞ்சீவி

# மாணவர் கழகம்



பெயர்: சுதாகரன் கவிஷ்ணா
முகவரி: முதலியார், கனகசபை வீதி மானிப்பாய்.
பி. திகதி: 2010.01.30
பாடசாலை: வேம்படி மகளிர் கல்லூரி.
அங்கத்துவ இல. 84



பெயர்: சி.சிவநயனி,
முகவரி: 5/4 பெரியபுலம் ஒழுங்கை கோண்டாவில், கோப்பாய் தெற்கு.
பி. திகதி: 2003.09.20
பாடசாலை: யா/ வேம்படி மகளிர் கல்லூரி
அங்கத்துவ இல. 85



பெயர்: கி. அபிசோத்மன்
முகவரி: சூழாவடி மேற்கு, ஆனைக்கோட்டை.
பி. திகதி: 2006.07.05
பாடசாலை: யா/ சென்.மேரிஸ் வித்தியாலயம்.
அங்கத்துவ இல. 86



பெயர்: ஜே.ஜோயல்சன்
முகவரி: மேதர்ஸ் லேன், மானிப்பாய். ஆனைக்கோட்டை.
பி. திகதி: 23.10.2009
பாடசாலை: யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
அங்கத்துவ இல. 87



பெயர்: முத்துக்குமாரன் பிரியங்கா
முகவரி: நீர்வேலி மத்தி, நீர்வேலி.
பி. திகதி: 2006.03.16
பாடசாலை: யா/ இந்து மகளிர் கல்லூரி.
அங்கத்துவ இல. 88



பெயர்: த.ஜினுஷா
முகவரி: 46, மவுன் கார்மேல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
பி. திகதி: 2005.04.30
பாடசாலை: யா/ ஸ்ரான்லிக் கல்லூரி.
அங்கத்துவ இல. 89



பெயர்: நிருபன் கர்சன்,
முகவரி: 41, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
பி. திகதி: 2013.10.23
பாடசாலை: உடுவில் மகளிர் கல்லூரி.
அங்கத்துவ இல. 90

சஞ்சீவி மாணவர் கழக அங்கத்தவர்களாக இணைய உங்கள் புகைப்படத்துடன் கீழ்காணும் முகவரிக்கோ அல்லது வட்ஸ்அப், வைபர் எண்ணுக்கோ அனுப்பி அங்கத்தவர்களாக இணையுங்கள்.

**சஞ்சீவி**

**மாணவர் கழகம்**

1. முழுப்பெயர்: ..........................................................
2. முகவரி: ..........................................................
..........................................................
3. பிறந்த திகதி: ..........................................................
4. கல்வி கற்கும் பாடசாலை: ..........................................................
5. கற்கும் தரம்: ..........................................................
6. தொலைபேசி இலக்கம்: ..........................................................


மாணவர் ஒப்பம் ............ பெற்றோர் ஒப்பம் ............

0773165555

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
sanjeevi@uthayan.com







# பழைய முறிகண்டி:

## காட்டுக்குள் ஒரு தொன்மைக் கிராமம்

○ ஊர்க்குருவி

யாழ்.-கண்டி நெடுஞ்சாலையில் கொக்காவில் சந்தியிலிருந்து மேற்கே சுமார் பதினைந்து கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது பழைய முறிகண்டி கிராமம். அறுபதுக்கும் மேற்பட்ட குடும்பங்களைக் கொண்ட இந்தக் கிராமத்தில் வாழும் அனைவரும் ஒருவழி வந்த மரபினரே. இங்கே பல நூறு ஆண்டுகள் தொன்மையான வரலாற்றை கொண்ட விநாயகர் ஆலயமொன்று உள்ளது. இது பழைய முறிகண்டிப் பிள்ளையார் என அழைக்கப்படுகிறது. கோயிலின் பெயரே ஊருக்கும் வந்துவிட்டது போலும். இந்தப் பிள்ளையாரே முதலில் முறிகண்டிப் பிள்ளையாராக இருந்ததாகவும், பின்னரே இப்போது ஏ9 வீதியில் உள்ள முறிகண்டிப்பிள்ளையார் கோயில் உருவானது என்றும் சொல்லப்படுகின்றது. இதன் பின்னரே இது பழைய முறிகண்டிப் பிள்ளையார் என அழைக்கப்படுகின்றது என ஊர்மக்கள் சொல்கின்றனர்.

பழைய முறிகண்டியில் வசிக்கும் அனைவரும் விவசாயத்தையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். பழைய முறிகண்டிக்குள நீரை நம்பியே விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. சிறுபோகம்,காலபோகம் என வருடத்தில் இரண்டுமுறை நெல் பயிரிடப்படுகிறது. ஆடு, மாடு,போன்ற கால் நடைவளர்ப்பிலும் சிலர் ஈடுபட்டுள்ளனர். யுத்தம் முடிவுக்கு வரமுன்னர் இறைச்சிக்காக காட்டு மிருகங்களை வேட்டையாடுதல், காட்டில் தேன் எடுத்தல் போன்ற செயற்பாடுகளில் இந்த ஊர்மக்கள் ஈடுபட்டு வந்துள்ளனர். ஆயினும் மீளக்குடியேறிய பின்னர் காட்டு மிருகங்களை வேட்டையாடுவதற்கு தடை வந்துவிட, இப்போது அதனைக் கைவிட்டுள்ளனர்.

### பூசாரி சொன்ன கதைகள்

தலைமுறை தலைமுறையாக பிள்ளையார் கோவிலுக்கு பூசகர்களாக இருந்துவரும் பரம்பரையில் வந்தவரும், இப்போதைய பூசாரியுமான குணபாலசிங்கம் ( வயது 65) ஆலயத்தைப் பற்றியும், அதன் தொன்மை பற்றியும் எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

### ஆறு தலைமுறைகள்

"எனக்கு முந்தைய நான்கு தலைமுறையினர் இந்தக் கோவிலின் பூசாரிகளாக இருந்தார்கள். அவர்கள் முறையே கோணார்,கோணாரது மகன் வாரித்தம்பி,வாரித்தம்பியின் மகன் சின்னையா, சின்னையாவின் மகன் முருகேசு, அவரின் மகனான நான் என்று எங்கள் பூசகர் பரம்பரை ஆறு தலைமுறைகளையும் தாண்டி தொடர்கிறது.ஆனால் ஆலய வரலாறு இதனையும் விடப் பலநூறு வருடங்கள் தொன்மையானது.

**கதை-1**

### லிங்கத்தோடு வந்த சந்நியாசி

பிள்ளையார் கோயில் உருவானமை பற்றி ஒரு கதை உண்டு.

பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு தேசாந்திரம் செய்யும் சந்நியாசி ஒருவர்,வேட்டியால் சுற்றியபடி சிவலிங்கமொன்றைச் சுமந்தவாறு கிரா

லிங்கத்தோடு வந்த சந்நியாசி
பிள்ளையார் கோயில் உருவானமை பற்றி ஒரு கதை உண்டு.
பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு தேசாந்திரம் செய்யும் சந்நியாசி ஒருவர்,வேட்டியால் சுற்றியபடி சிவலிங்கமொன்றைச் சுமந்தவாறு கிரா
லிங்கத்தோடு வந்த சந்நியாசி
பிள்ளையார் கோயில் உருவானமை பற்றி ஒரு

யம் என்னவென்றால், அந்த இடத்தை விட்டு லிங்கம் நகரமறுத்தது. அதனால் அங்கேயே நிரந்தமாகத் தங்கிவிட்டார் சந்நியாசி. சிறிதுகாலத்தில் அவர் சமாதியெய்தினார். அதன் போது லிங்கத்தின் பார்வையில் இருக்கும்படி கிராமமக்கள் அவருக்குச் சமாதி வைத்தனர். அதுவே பின்னர் பிள்ளையார் கோயிலானது.

(இப்பொழுது அங்கு ஆறு இல்லை .அந்த இடத்தில் பெரிய குளம் ஒன்றுதான் உள்ளது)

**கதை-2**

### தேங்காய்க்கு பதில் நெல்

பல ஆண்டுகளுக்கு முன்னர் பரந்தன் வீதியூடாக பழையமுறிகண்டி கிராமத்திற்கு கடா(எருமை) மாட்டில் தேங்காய் ஏற்றிக்கொண்டு வியாபாரி ஒருவன் வந்துள்ளான். ஆற்றங்கரையில் இருந்த பிள்ளையாருக்கு தேங்காய் ஒன்றைக் காணிக்கையாக செலுத்த எண்ணினான் அவன். தனது கடா மாட்டிலிருந்த தேங்காய் பொட்டணியை கீழே இறக்கி வைத்தான். அதிலிருந்து ஒரு தேங்காயை வெளியே எடுத்தான். அப்படி எடுத்த தேங்காய் அளவில் மிகப்பெரியதாக இருந்தது. அதனைப் பார்த்த வியாபாரி " ஏன் இந்தப் பெரிய தேங்காயை பிள்ளையாருக்கு அடிக்க வேண்டும், பேசாமல் சின்னத் தேங்காய் அடித்தால் போதும்; என எண்ணினான். அதன் படி சிறிய தேங்காய் ஒன்றை பொட்டளியில் இருந்து வெளியே எடுத்தான்.

அப்போது திடீரென அவனது கடா மாட்டைக் காணோம்.

எங்கெல்லாமோ தேடியும் அது அகப்படவில்லை. கடைசியில் மனம்நொந்தவனாக தான் கொண்டுவந்த அத்தனை தேங்காய்களையும் பிள்ளையாருக்கே அடித்துவிட்டு, பசிக்களைப்போடு ஆலய முன்றலில் உறங்கிப் போனான். அந்த வேளையில் கோயில் பூசாரியின் கனவில் தோன்றிய பிள்ளையார் "எனது சந்நிதானத்தில் துக்கத்துடன் இருக்கும் வியாபாரிக்கு நெல் கொடுத்து அனுப்பு என வாய்மொழி அருளினார். உடனே விழித்துக்கொண்ட பூசாரி ஆலயத்துக்குச் சென்று பார்த்தார். அங்கே வியாபாரி தூக்கத்திலிருப்பதைக் கண்டார்.

உடனே அவனை எழுப்பி உண்ண உணவு கொடுத்து, ஆற்றங்கரையில் நின்ற கடா மாட்டைப் பிடித்துக் கொடுத்ததோடு, அதில் நெல் மூடைகளைச் சுமைகட்டி வழியனுப்பி வைத்தார்.

**கதை-3**

### யானையில் போன பூசாரி

பழைய முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தில் யானை ஏற்றம் என்னும் நிகழ்வு நடைபெறுவதுண்டு. வேட்டைத் திருவிழா முடிவின்போது அடியவர் ஒருவரின் தோள் மீது பூசாரி ஏறி ஆலயத்துக்குள் செல்லும் நிகழ்வே யானை ஏற்றம் எனப்படும்.

பலஆண்டுகளுக்கு முன்பு இப்படியான ஒரு யானை ஏறும் நிகழ்வு ஆலயத்தில் நடைபெற்றுக்கொண்டு இருந்தது. அவ்வேளை ஆலயத்துக்கு வந்த ஒருவர் "யானை ஏற்றம் எனச் சொல்லி ஆளில் ஏறிச் செல்கிறாரே என்று பூசாரியைப் பார்த்து கேலி செய்துள்ளார்.

பலஆண்டுகளுக்கு முன்பு இப்படியான ஒரு யானை ஏறும் நிகழ்வு ஆலயத்தில் நடைபெற்றுக்கொண்டு இருந்தது. அவ்வேளை ஆலயத்துக்கு வந்த ஒருவர் "யானை ஏற்றம் எனச் சொல்லி ஆளில் ஏறிச் செல்கிறாரே என்று பூசாரியைப் பார்த்து கேலி செய்துள்ளார்.
பலஆண்டுகளுக்கு முன்பு இப்படியான ஒரு யானை ஏறும் நிகழ்வு ஆலயத்தில் நடைபெற்றுக்கொண்டு இருந்தது. அவ்வேளை

**கதை-4**

### வெள்ளத்தில் தப்பிய லிங்கம்

வருடந்தோறும் சித்திரைப் பௌர்ணமி அன்று பகல் பொழுதில் பிள்ளையாருக்கு பொங்கல் நடைபெறும். அன்றைய தினம் இரவு கிராமத்தை சுற்றியுள்ள காவல் தெய்வங்களான நாகதம்பிரான், நரசிங்கர், ஐயனார், காளி என்போருக்கும் மடை வைக்கப்படும். பறைச்சத்தம் ஒலிக்க அன்று கிராம மக்கள் அனைவரும் கோலாகலமாக திரண்டு திருவிழாவில் ஈடுபடுவர். 1978 ஆம் ஆண்டு பழைய முறிகண்டிக்குளம் உடைப்பெடுத்தது. அப்போது கோவிலின் கட்டடம் நீரில் அடித்துச் செல்லப்பட்டது. ஆனால் கோயில் லிங்கம் மட்டுமே நீரால் அடித்துச் செல்லப்படாமல் தப்பியது. அதன் பின்னர் கடந்த நாற்பது ஆண்டுகளாக ஓலைக்குடிலில் இருந்து வந்த கோவில் இப்பொழுது கிராம மக்களின் பங்களிப்பில் மெல்ல மெல்ல புத்துயிர் பெறத் தொடங்கியுள்ளது.

ஊர் மக்கள் அனைவருமே பிள்ளையாரே தங்களின் குலதெய்வம், அவர் எல்லா ஆபத்துகளில் இருந்தும் தம்மைக் காப்பார் என உறுதியாக நம்புகின்றனர். அந்த நம்பிக்கையின் உச்சக்கட்டமாக அமைந்தது, பழைய முறிகண்டியில் பெயர்பெற்ற வேட்டைக்காரர் சொன்ன உண்மைச் சம்பவம்.

### வேட்டைக்காரர் சொன்ன கரடிக்கதை

"நானும் எனது உறவினர் ஒருவரும் வேட்டைக்காக இரட்டைக் குழல் வேட்டைத் துப் பாக்கியோடு காட்டுக்குப் போனோம். எங்களுடன் ஆறு வேட்டை நாய்களும் வந்தன. எங்கள் கிராமத்திலிருந்து கிழக்குப் பக்கமாக மூன்று கட்டை தூரம் சென்று, பிராமணன் சோலை என்றழைக்கப்படும் அடர்ந்த காட்டை அடைந்தோம்,

காட்டில் எங்களது வேட்டை நாய்கள் பன்றியொன்றை வழிமறித்தன. அந்தப் பன்றியை இலக்கு வைத்து நான் துப்பாக்கியால் சுட்டேன். ஆயினும் குறி தவறியது. பன்றி தப்பியோடிவிட்டது. தொடர்ந்து இருவரும் காட்டுக்குள் சென்ற போது எதிர்ப்பட்டது இன்னொரு பன்றி. அதையும் நான் சுட்டேன் . இம்முறை குறி பிசகவில்லை.

குண்டு அதனுடைய வயிற்றுப் பகுதியைத் தாக்கியது. ஆனால் வெடிபட்ட நிலையில் பன்றி இரத்தம் சொட்டச் சொட்ட ஓடியது. வேட்டைநாய்கள் அதைத் துரத்திச் சென்றன. நாங்கள் வேட்டைக்காக இரண்டு

முறை குறி பிசகவில்லை.
குண்டு அதனுடைய வயிற்றுப் பகுதியைத் தாக்கியது. ஆனால் வெடிபட்ட நிலையில் பன்றி இரத்தம் சொட்டச் சொட்ட ஓடியது. வேட்டைநாய்கள் அதைத் துரத்திச் சென்றன. நாங்கள் வேட்டைக்காக இரண்டு
முறை குறி பிசகவில்லை.

# தாமரைப்பூவில் குஷ்பு!

○ மயூ

தமிழக அரசியலில் இந்த வாரம் பரபரப்பாகப் பேசப்பட்ட விடயம் நடிகை குஷ்புவின் கட்சித் தாவல். சமூக வலைத்தளங்களில் அதிகம் கழுவி ஊற்றப்பட்ட விடயமும் அதுதான். காங்கிரஸ் கட்சியில் மாநில செய்தித் தொடர்பாளர் பதவியில் இருந்த இவர், இப்போது பாரதிய ஜனதாக் கட்சிக்குத் தாவியுள்ளார். இந்தக் கட்சித் தாவல் என்பது குஷ்புவுக்குப் புதிதல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்து, அதன்பின்னர் காங்கிரஸ் கட்சிக்கு மாறியவர்தான் குஷ்பு. 10 ஆண்டுகளில் அவர் தாவும் மூன்றாவது கட்சித்தாவல் இது.



"ஆளில்லா டீக் கடையில் டீ ஆற்றுபவர் மோடி. தைரியம் இருந்தால் ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி போல மக்களை தெருவில் இறங்கி காப்பாற்றச் சொல்லுங்கள். மயிலுக்கு உணவளிக்கும் பிரதமரை நாட்டு மக்களுக்கு உணவளிக்கச் சொல்லுங்கள்" என்று சகட்டுமேனிக்கு பிரதமர் மோடியைத் தாக்கிவிட்டு, சில தினங்களிலேயே அதே மோடி தலைமையிலான கட்சியில் சேரும் தைரியம் குஷ்புவுக்கு மட்டும்தான் இருக்க முடியும். அதைப் பற்றிச் செய்தியாளர்கள் கேட்டபோது, "கட்சிக்கு (காங்கிரஸுக்கு) விசுவாசமாக இருந்ததால் கட்சி சொன்னதைச் சொன்னேன்" என்று மழுப்பினார் குஷ்பு. பாரதிய ஜனதாக் கட்சிக்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்பு இருக்கின்றது. நீட் தேர்வு, இந்தித் திணிப்பு என்று மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு மீது கடும் கோபத்தில் இருக்கின்றது தமிழகம். அதிலும் மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தித் திணிப்பு நடக்கின்றது என்று கொதித்துக் கொண்டிருக்கின்றது தமிழ்ச் சமூகம். "தமிழகத்தில் தாமரை (பா.ஜ.க. சின்னம்) மலர்வதற்கு வாய்ப்பில்லை ராஜா" என்பதுதான் இப்போதைய நிலைமை. இந்த நேரத்தில் குஷ்பு ,பா.ஜ.க. பக்கம் தாவியுள்ளமை சமூக வலைத்தளங்களில் பேசுபொருளாகியுள்ளது.

"கொண்டையிலே தாழம் பூ, நெஞ்சினிலே வாழைப் பூ, சேற்றில் விழுந்ததே குஷ்பு" என்றெல்லாம் சமூக வலைத் தளங்களில் கழுவி ஊற்றப்படுகிறார் குஷ்பு. இப்படியெல்லாம் எதிர்ப்பு இருக்கும் என்று தெரிந்தும் ஏன் இந்த ஆளில்லாக் கடையில் டீ ஆற்றும் வேலையில் இறங்கினார் குஷ்பு?



குஷ்புவின் கணவர் சுந்தர் .சியின் நிலைமைதான் இதற்குக் காரணம் என்று பேசப்படுகின்றது. சினிமா நடிகரும், திரைப்படத் தயாரிப்பாளருமான சுந்தர். சி இப்போது பெரும் கடன் சுமையில் இருக்கின்றார், அதைச் சமாளிப்பதற்காகவே சுந்தர் .சியின் வழிகாட்டலில் குஷ்பு பா.ஜ.க. பக்கம் பாய்ந்துள்ளார் என்று பேசப்படுகின்றது. அது உண்மையாக இருக்கலாம் என்று நினைக்கும்படி, குஷ்புவின் கட்சித் தாவலின்போது பா.ஜ.கவில் இணையும் நிகழ்வில் சுந்தர்.சியும் அவர் கூடவே ஒட்டிக் கொண்டிருந்தார். காங்கிரஸ் கட்சியில் இருக்கும்போதும் சரி, தி.மு.கவில் இருக்கும் போதும் சரி குஷ்பு அரசியலில் பெரிதாக எதையும் சாதிக்கவில்லை. மக்கள் சம்பந்தப்பட்ட போராட்டங்களிலும் பெரிதாக முன்னிற்பதில்லை. (காங்கிரஸ் கட்சியின் குற்றச்சாட்டும் இதுதான். ஆனால் காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள் தன்னை மதிப்பதில்லை என்பது குஷ்புவின் குறை) ஆகையால் அவரது கட்சித் தாவல் எந்த அரசியல் மாற்றம் எதையும் கொண்டுவரப்போவதில்லை. ஊடகக் கவனக் குவிப்பைத் தவிர பெரிதாக எந்தப் பலத்தையும் பா.ஜ.கவுக்கு இந்தக் கட்சிதாவல் அளிக்காது என்கின்றனர் அரசியல் அவதானிகள். ஆனால் அடுத்தாண்டு நடக்கவுள்ள சட்ட மன்றத் தேர்தலில் திரைப்படப் பிரபலங்களின் வருகையால் தங்களுடைய வாக்கு வங்கியை அதிகரிக்க முடியும் என்று பா.ஜ.க. நம்புகின்றது. அது உண்மையா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். மறுபுறத்தில் இந்தக் கட்சித் தாவல்கள் அரசியல்வாதிகளின் மேடைப் பேச்சுக்கள் எல்லாம் அவர்கள் மேடையில் இருந்து இறங்கும் வரையில்தான் என்பதைத்தான் கடந்த கால சம்பவங்கள் உணர்த்துகின்றன. கொள்கை மக்கள் நலன் என்பவற்றைத் தாண்டி சுயலாப அரசியலே நடக்கின்றது என்பதைப் புரியவைக்கின்றன. "கட்சிக்கு (காங்கிரஸ்) விசுவாசமாக அவர்கள் சொன்னதைச் சொன்னதாகக் கூறினீர்கள், அப்படியானால் மக்களுக்கு விசுவாசமாக இருக்கவில்லையா? "என்று குஷ்புவிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, பதில் சொல்லாது சிரித்தார் குஷ்பு. அந்த சிரிப்பின் அர்த்தத்தை மக்கள் புரிந்து கொள்ளும் வரையில் மேடைக்கு மேடை தாவியேறி அரசியல்வாதிகள் பேசிக் கொண்டேதான் இருப்பார்கள். கவுண்டமணியின் பாணியில் சொல்வதானால் "அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா".

---

# பழைய முறிகண்டி:

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்பொழுது எனக்கருகில் யாரோ நடமாடுவது போன்ற உணர்வு. திரும்பிப் பார்த்தேன். கரடியொன்று எனது முகத்துக்கு நேரே தனது முகத்தை காட்டியபடி மிகவும் அருகில் நின்றது. நான் சுதாகரித்துக்கொண்டு அருகில் இருந்த மரத்தில் ஏறமுற்பட்டேன். ஆனால்கரடி விடவில்லை. தனது கூரிய நகங்களால் எனது இடது பக்க முழங்கால் சிரட்டையைப் பற்றிப் பிடித்தது .

வலிதாங்க முடியாமல் நான் துப்பாக்கியின் பின்பகுதியால் கரடியைத் தாக்கினேன். அந்த அடி தாங்காமல் கரடி தனது பிடியை விட்டது . எனது முழங்கால் தசைப்பகுதியின் இரத்தநாளம் கிழிந்து தொங்கியது. இரத்தம் பெருக்கெடுத்தோட எனது உடம்பெல்லாம் வெடவெடுத்தது. எதுவும் செய்யமுடியாத நிலையில் எங்களது குலதெய்வமான பழையமுறிகண்டிப் பிள்ளையாரை மனதுக்குள் வேண்டினேன்.

"ஐயோ முறிகண்டியானே எனதுயிர் போகிறதே" எனக் கத்தினேன். நான் கத்தியதுதான் தாமதம். என்னுடைய வேட்டை நாய்கள் ஓடிவந்து கரடியைத் தாக்கின. வேட்டைநாயொன்று கரடியின் வாய்ப் பகுதியைக் கடித்து காயப்படுத்தியது. இதை எதிர்பாராத கரடி பின்வாங்கத் தொடங்கியது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உயிர் தப்புவதற்காக நான் வீரை மரமொன்றில் ஏறிக்கொண்டேன். சிறிது நேரத்தில தோட்டா எடுப்பதற்காக கிரா மத்துக்குச் சென்றவர் திரும்பி வந்துவிட்டார். அவர் என்னைத் தனது தோளில் சுமந்தபடி கிராமத்துக்கு அழைத்து வந்தார். அதன் பின்னரே மாட்டுவண்டிலில் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குச் சென்றோம்.

### பாதையுமில்லை, தண்ணீருமில்லை

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட எல்லைக்குள் அடங்கும் இந்தக் கிராமம் காட்டின் நடுவே இருக்கின்றது . போக்குவரத்துக்கான பாதை, புனரமைப்பு எதுவுமின்றி யுத்தகாலத்துக்கு முன் எப்படி இருந்ததோ அதேபோன்றுதான் இன்றளவும் குன்றும்குழியுமாக இருக்கின்றது. இந்தப்பகுதியில் வாழ்வோர், தமது அத்தியாவசியத் தேவைகளுக்காக மல்லாவிக்குத்தான் செல்லவேண்டும். அதற்கு பதினைந்துகிலோ மீற்றர் தூரம் பிரயாணம் செய்யவேண்டியுள்ளது. இங்கிருந்து பஸ் சேவைகள் எதுவும் இல்லாத காரணத்தால் போக்குவரத்துக்காக பெரும்பாலும் மோட்டார் சைக்கிளையே பயன்படுத்துகின்றனர்.

தரம் 5 வரையான பாடசாலை ஒன்று இங்குள்ளது. எனவே அதற்கு மேல் கல்வியைப் பெற வேண்டுமாயின் அயற்கிராமமான ஐயன்குளம் மற்றும் மல்லாவிப் பகுதிக்கே மாணவர்கள் செல்லவேண்டும்.

இங்குள்ள கிணறுகளில் ஓரிரண்டே குடிதண்ணீருக்கு உகந்தவை. அவற்றில் மாரிகாலத்தில் மட்டுமே நீர் இருக்கும் . கோடையில் நீர்வற்றிவிடுதால் பெரும் குடிதண்ணீர்ப் பிரச்சினை ஏற்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்ய துணுக்காய் பிரதேச சபை பவுசர் மூலம் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்கின்றது.

### யானைகளின் கட்டுப்பாட்டிலேயே ஊர்

"மாலை ஆறுமணிக்குப் பின் யானைகளின் கட்டுப்பாட்டில்தான் எங்கள் ஊர் இருக்கும். கண்ணில் எதிர்ப்படுகின்றவர்களை யானைகள் துரத்தித் தாக்கமுற்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதனால் மின்சாரவேலி அமைத்துத் தருமாறு உரிய அதிகாரிகளிடம் பலமுறை கேட்டுவிட்டோம். ஆனால் அவர்கள் அது குறித்து அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. நானூறு ஏக்கருக்கு மேல் உள்ள மேட்டு நிலப் பயிர்செய்கைக்கு உகந்த காணிகளுக்கு குளத்திலிருந்து ஏற்றுநீர்ப்பாசனம் செய்து தரப்படுமானால் எங்கள் பொருளாதார நிலை இன்னும் மேம்படும்" என்கிறார்கள் இந்தப் பகுதி மக்கள்.

### சட்டவிரோதிகளால் அழியும் காடு

"வேறு இடங்களில் இருந்து வருபவர்கள் இங்கு சட்டவிரோதமாக ஆற்று மணல் அகழ்விலும், காடழிப்பிலும் ஈடுபடுகின்றனர். இதனால் முதிரை, பாலை போன்ற மரங்களால் சூழ்ந்திருந்த எமது காடு இன்னும் கொஞ்ச நாளில் முற்றாக அழிவடைந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது .

இது தொடர்பில் பொறுப்புடையோர் பாராமுகமாக இருக்கின்றனர்.

விடுதலைப்புலிகளது காலத்தில் , காட்டில் தடி வெட்டுவதற்குக் கூடத் தடை விதிக்கப்பட்டிருந்தது. கிராம மக்களுக்கு வீடமைக்கும் தேவை ஏற்படின் புலிகளின் வனப்பாதுகாப்பு பிரிவினர் அந்த வீட்டுக்கு வந்து உறுதிப்படுத்திய பின்னரே தேவையான மரங்களை வெட்ட அனுமதித்தனர். அப்போது வேட்டையாடுவதற்கு தடை விதித்ததில்லை . ஆயினும் அந்தக்காலத்தில் மான்,மரை,பன்றி,உடும்பு, அழுங்கு,பரட்டைமான்,காட்டெருமை, கரடி,சிறுத்தைப்புலி போன்ற விலங்குகள் கிராமத்தைச் சுற்றியுள்ள காட்டில் இருந்தன. ஆனால் இப்போது காடழிப்புக் காரணமாக அவை அருகிவிட்டன" இதுவும் அந்தப் பகுதி மக்களின் ஆதங்கமாக நீள்கின்றது.




### கற்றூண்கள் சொல்லும் தொன்மை

பழையமுறிகண்டிக் கிராமமும் அங்கு அமைந்துள்ள பிள்ளையார் கோவிலும் தொன்மையான வரலாற்றைக் கொண்டவை. ஆனாலும் அவை முறைப்படி ஆவணப்படுத்தப்படவில்லை. உரிய வகையில் வரலாற்றாய்வுக்கு உட்படுத்தினால் பழைய முறிகண்டி கிராமத்தின் தொன்மையையும், அதன் பெருமைகளையும் அறியமுடியும். கிராமத்தின் தென்பகுதியில் கற்றூண்களாலான மண்டபமொன்று முற்றாக அழிவடைந்த நிலையில் காணப்படுகிறது. அதன் கற்றூண்கள் எச்சங்களாகச் சிதறியுள்ளன. அதேயிடத்தில் பற்றைகளால் மூடப்பட்ட நிலையில் கிடங்கு ஒன்றும் உண்டு. அது முன்னர் கேணியாக இருந்ததாக கிராமத்தவர்கள் கூறுகின்றனர்.

### பண்டாரவன்னியனோடு தொடர்பு

பரந்தன் பாதை என இவர்களால் அழைக்கப்படும் பாதை காட்டுக்குள் அழிவடைந்த நிலையில் இன்றும் உள்ளபோதும், அது சிதைவடைந்து பயன்பாட்டுக்கு உகந்தநிலையில் காணப்படவில்லை. பண்டாரவன்னியனின் தங்கையான உமைச்சிநாச்சியார் ஆட்சி செய்ததாகக் கூறப்படும் பனங்காமம்பற்று வரை இந்தப் பரந்தன் பாதை செல்வது பண்டாரவன்னியனுக்கும் பழைய முறிகண்டிக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருப்பதைச் சொல்லாமல் சொல்கின்றது.


சஞ்சீவி போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு...

# பரிசில்கள்! விரைவில்

உங்கள் பரிசில்களை உறுதிப்படுத்திக் கொள்ள அழையுங்கள்
0773165555

சஞ்சீவி வாரமலரில் இடம்பெற்ற
சொற்சிலம்பம் போட்டி (1-16)
மௌனமொழி (1-15) வெற்றியாளர்களுக்கு

## மௌன மொழி 17



ஏர் எடுத்து எருது பூட்டி
உழவு செய்யும் எம் விவசாயி
ஒரு நாள் சேற்றில்
கால் வைக்காவிட்டால்
ஒரு வேளை சோறின்றி தவிக்க வேண்டும்
என்பதை மானிடனே மறவாதே...

**க.மலர்**
சிறுவர் இல்லம், திருநெல்வேலி.

சேற்றிலே கால் வைத்து – நாம்
சோற்றிலே கை வைக்க
வயது போன பொழுதிலும்
வருத்தம் தனிலும்
தேகமிளைக்க உழுது
தேசத்தைக் காத்து
உலகம் போற்றும் உன்னத தொழிலை
ஆற்றுகிறான் விவசாயி

**த.துளசிகா**
யாழ்.இந்து மகளிர் கல்லூரி

வயல்காடு பசுமை தர
நெல்மணி உணவு தர
சகதியில் குதூகலமாய்
வியர்வை சிந்தச் சிந்த
மனித உழைப்பும்
எருதுகளின் ஒத்துழைப்பும்
வயிற்றுப் பசியைப் போக்கும்
வீரத் தமிழனின் திறமைக்கு முத்தமிடுங்கள்

**அ.சிறீஸ்கந்தராசா**

வெயிலோ மழையோ
எதுவானாலும்
சுகம் ஒன்று தான்...
உதித்த சூரியன்
மறையும் வரை,
வெயிலில் உடல்வாடி !
வேர்வையில் நீராடி !
மண்ணோடு உறவாடி !
மழை நீரில் உடல் மரத்து
போராடும் வீரனே !
உழவா...

**விதுர்சா சிறீதரன்**

### பரிசு பெறும் கவிதை

மூப்பு வந்ததென்று
மூலையில் முடங்காமல்
வீறு கொண்டு எழுந்து- நீ
ஏர் கொண்டு உழுது - உன்
முத்தான சிரிப்பைப் போல்
முத்து முத்தாய் நெல்
விளைய பார் எல்லாம்
பசி ஆறட்டும்...

**துரைசீலன் நிவேதா**
யாழ்.போதனா
வைத்தியசாலை.

ஏரிலே காளைகளைப் பூட்டி
சாட்டையைக் கையில் தூக்கி
மீசையை முறுக்கி விட்டு
பெருமையுடன் விவசாயம் பார்த்த
உன் முதாதையன் நான்

**ச.நந்தனா**
159, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

கலப்பை பிடித்த கைகளும்
உரமேறிய உடலும்
உணர்த்திச் செல்லும்
விவசாயம் எனும் விந்தையை
முதுமை கண்டாலும்
முதுகெலும்பாய் நிமிர்ந்து நின்று
தமிழ் மண்ணின் பெருமை பாடும்
உழவே நம் வாழ்வு

**இராசரத்தினம் சிவகுமார்,**
திருநெல்வேலி.

முரட்டுக் காளைகளைக் கட்டி
தன் கட்டுக்குள் வைத்திருக்கும்
கட்டுக்கடங்காத காளை இவன்...
வயது போனது என்று – நரைத்த மயிர்
நலினமாய் சொல்ல – என்றும்
பதினாறே என்று உழைப்பில்
மெருகேறிய உடல் சொல்கிறது!
கரை சேர்ந்து விடத் தொடர்கிறது பயணம்!

**பா.கனகேஸ்வரி**, யாழ். பல்கலைக்கழகம்
ஊடக கற்கைகள் துறை

உலகோர் பசிதீர
வெயில் மழைபாராது
முதுமையிலும் மிடுக்குடன்
ஏர்பூட்டி எருதுடன்
பட்டினிக்கெதிராகப் போர்புரியும்
மாண்புமிகு உழவரே
உணவுத் திட்டத்துக்கான நோபல்பரி
உமக்கல்லவோ உரித்தானது

**ந.தனுபதன்**
வணிகர்கழகம், யாழ்ப்பாணம்.

சேற்றிலே கால்கள் நுழையா நொடிகள்
சோற்றிலே கைகள் புகுத்தலாமா
வறுமை என்ற போர்வை உன்னை தொட
பொறுமை காத்து நீயும் உன் வழி நடக்க
மாடு என்ற ஏளன நோக்கம் ஒருபுறம்
நாடு என்ற பற்றல் மறுபுறம்
மானத்தோடு மாட்டுடன் உழைக்கும்
மாசற்றவனே நீ தான் பசி தீர்க்கும் தெய்வம்

**நி.கஜேந்தினி,**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

வீறுகொண்ட நெஞ்சோடு
விரட்டுகிறீர் காளை தன்னை
முகப்பொலிவும் முறுக்கு
மீசையும் வீண்போகா
வானத்து நீர் வழங்கி
மண்மாதா கைகொடுப்பாள்
நெல் பொலியோ பொலி
என்று பொலியும்
மண்வளமும்
மனவளமும் உண்டு
கையேந்த
போவதில்லை நாம்

**ஆர்.ஹரிலக்‌ஷன்,**
இந்துக் கல்லூரி.

## கவிதைக்கு பரிசு 1000/=

உங்கள் கவிதைகள் எங்கள்
கதவைத் தட்ட
வேண்டிய கடைசி நாள்:
**23.10.2020**

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனை யில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப் புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதி யில் பிரசுரமாகும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: *sanjeevi@uthayan.com*

0773165555

## மௌன மொழி 18



கிராமத்து மனிதர்கள்... 18

# பொயிலை புறோக்கர் பொட்டுக்கார பொன்னையர்

இராகன்

புகையிலை ஊர் வழக்கில் "பொயிலை" என்றாகிப் போனது. புகையிலை என்பதை வெறுமனே புகைப்பதற்காக சிகரட், சுருட்டோடு மட்டுமே சம்பந்தப்படுத்திவிடக் கூடாது. ஊர்ப்பக்கங்களில் நடைபெறும் கொண்டாட்டங்களில் வெற்றிலை பாக்குத் தட்டத்தில் புகையிலையின் இடமும் தவிர்க்க முடியாததாக இருந்தது. வெற்றிலையோடு சேர்த்துப் புகையிலையை வாயில் போட்டு மெல்லுவது வழமையாக விருந்தது. வெறுவாயில் புகையிலை போட்டு மென்று துப்புவது சிலரது பழக்கம். பாணி போடப்படாத புகையிலையின் ஒறுத்தல் இலைகளை வாங்கி தங்கள் கைகளால் சுருட்டுச் சுற்றி புகை பிடிப்பார்கள் அந்தநாளின் முதியவர்கள். சில ஊர்களில், மரணவீடுகளுக்கு வந்தவர்களை உபசரிப்பதற்கு சுருட்டுத் தட்டம்" ஒன்றும் புகைந்தபடி இருக்கும் நெருப்பு மூட்டிய கயிற்றுத் துண்டும் உலாவரும். கடைகளில் காற்றுப் புகாதபடி, போத்தல்களில் அடைத்து வைக்கப்பட்டு புகையிலைத் துண்டுகள் விற்கப்படும். மலை நாட்டுத் தோட்டப்பகுதிகளில் அட்டைக்கடிக்கு புகையிலை மென்ற எச்சிலைத் துப்பி, கடித்தபடி ஒட்டிக் கொண்டிருக்கும் அட்டையை வீழ்த்துவார்களாம்! புகையிலையில் சுருட்டுச் சுற்றும் கொட்டில்கள் பலருக்கு சீவனோபாயத்தைக் கொடுத்திருந்தது. "மண்டான் சுருட்டுக்கு" ஊர்களில் நல்ல கிராக்கி. மண்டான் என்ற ஊரிலுள்ள சுருட்டுக்கொட்டிலில் சுற்றிய சுருட்டே மண்டான் சுருட்டு.



கிராமத்து மனிதர்கள் என்ற இந்தத் தொடர் தனித்துவமான கிராமத்து மனிதர்களை மீள நினைவுபடுத்துவதன் மூலமாக அருகிப்போன கிராமத்து வாழ்வின் செழுமைகளையும் சிறப்புக்களையும் வெளிக் கொண்டு வருகின்றது.

பத்துச் சுருட்டுகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டிய "ஒருகட்டு மண்டான்" பத்து ரூபாய். எங்கள் புகையிலைக்கு இந்தியாவின் கேரளாவில்கூட கிராக்கியாம்! இன்றைக்கும் புகையிலையைக் கண்டால்" பொட்டுக்காரப் பொன்னையா"வின் நினைவுகள் தான் வரும்.

"பொம்பிளை சிரிச்சாப் போச்சு, பொயிலை விரிச்சாப் போச்சு" என்ற பழமொழியின் கருத்து எல்லோருக்கும் தெரியும். அந்தப் பழமொழி பொட்டுக்காரப் பொன்னையாவுக்கென்றே சொல்லி வைத்தார்கள் போலும்! "பொயிலை"க்கும், பொம்பிளை"க்கும் நெருக்கமானவர் அவர். பொயிலையை விலைப்படுத்துவதும், பெண்பிள்ளைகளை "விலைப்படுத்துவதும்" பொன்னையரின் வேலை. அவர் ஒரு "புறோக்கர்". "பொயிலைப் புறோக்கர்" என்றும் "பொட்டுப் பொன்னையா" என்றும் அவரை அழைப்பது வழக்கமாயிற்று.

பொன்னையா ஒரு "றலி சைக்கிள்" வைத்திருந்தார். துவிச்சக்கர வண்டிக்கு அவர் செய்திருந்த அலங்காரத்தைப் பார்த்தால் "றலி" கம்பனிக்காரனே மூக்கில் விரலை வைப்பான்! பிருடம் நோகாது இருந்து உழக்கிச் செல்ல பெரிய "தெறி" சீற் சீற்றின் பின்னே லாவகமாக இருந்து பய ணிக்கக் கூடிய வகையில் அழுத்தமான பலகை பூட்டப்பட்ட, இரும்புத் தகட்டினால் ஒட்டிச் செய்யப்பட்ட, அவரது மனைவியை மட்டுமே காவிச்செல்லும் "கரியர்" அழகிய வர்ண பிளாஸ்டிக் வயர்களால் சுற்றி அலங்கரிக்கப்பட்ட சைக்கிளின் "பார்" முன்னே வர்ணத் தகட்டினால் "சண்சேட்" தொப்பி போட்டு மஞ்சள் "பொலிசிங் குளோத்" வரிந்து சுற்றிப் பாதுகாக்கப்பட்ட "ஹெட் லைற்". முன் சில்லின் அச்சுப் பகுதியிலிருந்து மேலுயர்த்தப்பட்ட வெள்ளிக் கம்பி ஒன்றின் நுனியில் பூட்டப்பட்ட, முன் கால்களை உயர்த்திப் பாய்ந்தோடும் குதிரைப் பொம்மை.

சைக்கிள் சில்லுகளின் அச்சை மூடிய குடங்களுக்கு சூட்டப்பட்ட பலவர்ண மலர் வளையங்கள், என்று சைக்கிள் ஒரு "சப்பரமாய்" உலாவரும். அந்தச் சைக்கிள் கைப்பிடியில் தொங்கும் தோற்பையினுள் பலரின் திருமணங்களுக்கான "சாதகங்கள்" பதுங்கிக் கிடக்கும்! புகையிலை ஓட்டம் குறைந்த காலங்களில் பொன்னையரின் தோற்பை எப்போதும் சைக்கிள் கைப்பிடியில் தொங்கியபடி கிடக்கும்.

பொன்னையா புறோக்கரின் சைக்கிள், புகையிலைத் தோட்டக் காணிகளில் நின்றால் "ஆயிரங் கண்டு", "இரண்டாயிரங்கண்டு" என்று புகையிலையை தோட்டத்தில் வைத்தே விலைபேசித் தீர்க்கப் போகின்றார் என்பது முடிவாகும். எங்காவது வீட்டுவாயிலில் நின்றால் யாரோடு யாரையோ "பொருத்தப் போறார்" என்பது முடிவாகும்.

புறோக்கர் பொன்னையாவின் சைக்கிள் ஓட்டத்துக்கு இந்தக்காலத்து இளவட்டங்களின் "புல்லட்" கூட ஈடுகொடுக்காது. மனைவியைப் பின்னே ஏற்றிக்கொண்டு, வாரா வாரம் வெள்ளிக் கிழமைகளில் காலையில் "சந்நிதிமுருகன்" தரிசனத்துக்குப் போய் வருவார். கோயிலிலிருந்து திரும்பும்போது நெற்றியில் தாங்கிவரும் ஒரு ரூபாய் நாணயக் குற்றியளவு சந்தனப் பொட்டு, அடுத்தவாரம் வெள்ளிக்கிழமை வரை அழியாது அப்படியே இலங்குகிறதோ என்று சந்தேகிப்பவர்களும் உண்டு! சந்நிதியானின் சந்தனத்தை அள்ளியெடுத்துக் கொண்டுவந்து வீட்டில் ஒவ்வொரு நாளும் காலையில் வஞ்சகம் வைக்காது பூசவேண்டிய இடமெல்லாம் பூசிக்கொள்வார். ஒரு நாளும் அவரது நெற்றியை விட்டகலாத் திலகம் அது. நெஞ்சின் இருமருங்கும் அடர்ந்துகிடக்கும் உரோமக் காட்டினுள் அணில் கோடுகளாய் அழுத்திப் பூசப்பட்ட சந்தனம் பொலிந்து கிடக்கும். அதனால்தான் "பொட்டுப் பொன்னையர்" என்றானார். தோளில் ஒரு துவாயத் துண்டைப் போட்டுக்கொண்டு தொழிலுக்கு வெளிக்கிட்டுவிடுவார்.

பொயிலைப் பொன்னையர் கொழும்பு, கண்டி, கம்பளை, காலி, மாத்தறை என்று சென்றுவரும் இடங்கள் பல. ஊரில் புகையிலையை தோட்டங்களில் வைத்து விலை தீர்த்து, கூலியாட்களைப் பிடித்து வெட்டி ஈர்க்கு முடிந்து ஏற்றிவந்து, தேடா வளையக் கொடிகள் கட்டி வெயிலில் உலர்த்தி, வீட்டில் அதற்கென்றே அமைக்கப்பட்ட பெரிய "மாலில்" கும்பி கும்பியாய் "பாடம் அடுக்கி" வைப்பார். பனையோலையால் கூரை வேயப்பட்ட நீண்ட மாலில், சின்னச்சின்ன மலைகள் போல ஏழெட்டுப் "பாடம் போட்ட" குவியல்கள் இருக்கும். வீட்டு வளவின் பின்புறத்தே அமைக்கப்பட்ட "தீராந்தியில்" தேங்காய் பொச்சு, ஊமல் அடுக்கி புகையுண்டாக்கி, பாடம் அடுக்கிய புகையிலையை தூக்கி, புகைப்போடும் வேலைகள் நடக்கும். புகைப்போட்ட புகையிலைக்கு "பாணி"போடும் வேலைகள் முடிந்த பின்னரும் பக்குவமாக பாடம் வைக்கப்படும். பதப்படுத்தப்பட்ட புகையிலை பொன்போலக் கையாளப்படும். இவ்வளவுக்கும் பொன்னையர் ஒருநாள்கூட மண்வெட்டி பிடித்து தோட்டத்தில் தண்ணீர் கட்டியதுகூட கிடையாது!

அந்த ஊர்களில் பொன் விளையும் பூமி இருந்தது! தோட்டத்திலிருந்து புகையிலை வெட்டப்பட்ட காலத்திலிருந்து அவை "சிப்பங்களாக" கட்டி லொறிகளில் ஏற்றும்வரை பொட்டுப் பொன்னையரின் வீட்டில் விழாக் காலமே! வெட்டுதல், ஈர்க்கு முடிச்சிடல், காயப்போடுதல், பாடம் போடுதல், புகைப்போடுதல், பாணி போடுதல், சிப்பம் கட்டுதல் எல்லாவற்றுக்கும் பல வேலையாட்கள் சூழ்ந்திருப்பர். வேலையாட்களோடு பொன்னையர் ஒரு வேலையாளாக காலில் சில்லுக்கட்டியபடி நிற்பார். அந்தக் காலங்களில் சாதகங்கள் பதுங்கிக் கிடக்கும் தோல்பையை பொன்னையர் எடுக்கவே மாட்டார்.

பொன்னையரைத் தேடி காலி, மாத்தறையிலிருந்துகூட சிங்கள வியாபாரிகள் வருவார்கள். அவர்கள் வந்து இரண்டொருநாள் தங்கியிருந்து புகையிலைச் சிப்பங்களை ஏற்றிச் செல்வார்கள். அவர்கள் தங்கி நிற்கும் நாட்களில் நட்பை வலுப்படுத்திக்கொள்வார் பொன்னையர். றலி"யை எடுத்துக்கொண்டு பனங்கூடலில் நடேசப்பாவைச் சந்திக்கச் சென்று வருவார்! கொண்டுவரும் "மாட்டுத்தாள் பையில்" சுற்றப்பட்ட போத்தல்களை தீராந்தியுள் மறைத்து வைப்பார். நண்டுக் கறி, ஒடியல் கூழ் என்று பொன்னையரின் மனைவி தயாரிக்கத் தொடங்கிவிடுவாள். வீட்டுப் பின்வளவில் பொன் னையர் பேசும் சிங்களம் தூள்பறக்கும்!

சந்தையில் புகையிலைக்கான விலையின் போக்குகளை பொன்னையர் மணந்து பிடிப்பார். சில சமயங்களில் புகையிலை தேடிவரும் வியாபாரிகளை வீட்டு வளவுக்குள்ளே எடுக்கவேமாட்டார். சாக்குப் போக்குச் சொல்லி திருப்பி அனுப்பிவிடுவார். நெருக்கமான தொடர்புள்ள வியாபாரிகளாயின் தன்னுடைய புகையிலைப் பாடங்களைக் காட்டாது ஊரெல்லாம் கூட்டிச் சென்று அலைந்து உலைந்து வாங்கித் தருவதாக பாவனை காட்டி, யாரிடமாவது தரகுபேசி புகையிலை வாங்கிக். கொடுத்து சந்தோசப்படுத்தி அனுப்பிவைப்பார். புகையிலை சூடாக விலைபோகும் அப்படியான காலங்களில், தானே லொறி பிடித்து சிப்பங்களை ஏற்றிக்கொண்டு கண்டி, காலி, மாத்தறை என்று பயணத்துக்கு வெளிக்கிட்டுவிடுவார்.

தன்னுடையதும், மற்றவர்களிடம் தரகு பேசி வாங்கியதுமான புகையிலையை சிப்பங்களாகக் கட்டி மாலைப்பொழுதில் லொறியில் ஏற்றி, வெள்ளையும் சொள்ளையுமாக வெளிக்கிட்டு, இரண்டு கூலியாட்களை யும் ஏற்றிக்கொண்டு புறப்படும்போது பொயிலைப் பொன்னையரின்" உடலினுள் ஒரு முதலாளி முழுதாக புகுந்து கொள்வார்! சந்நிதி வாயிலுக்கு கொண்டுசென்று நெற்றியில் சந்தனப் பொட்டுப் போடாது சிப்பங்கள் ஏற்றிய லொறி நகராது! ஏறிவிட்டால் இரண்டொரு வாரங்களுக்கு பொன்னையரை ஊரில் காணமுடியாது. அப்படி வெளிக்கிட்டு போய்வந்த வேளைகள் ஒவ்வொன்றிலும்தான் அவர் காணி வாங்கியதாகவும், கல்வீடு கட்டியதாகவும், அவரது இரண்டு பெண்பிள்ளைகளுக்கு சீதனம் கொடுத்துக் கலியாணம் செய்து வைத்ததாகவும் ஊரவர் பேசிக்கொள்வர்!

கிராக்கி உள்ள காலமொன்றில் புகையிலைச் சிப்பங்களோடு புறப்பட்டு பொன்னையர் போன லொறி புகையிலையோடு அனுராதபுரத்தில் எரிந்துகொண்டிருப்பதாக யாரோ சொன்னார்களாம். அன்றிலிருந்து பொன்னையரின் வீட்டுப் பின்வளவு மால் வெறுமையாகக் கிடப்பதாயும், தீராந்தி புகைப்பதில்லை என்றும் ஊரார் கவலைப் பட்டுக் கொண்டனராம்! கறள் பிடித்த "றலி" மாலுக்குள் நிற்பதாகச் சொல்கிறார்கள்.



# காட்டு ராஜாக்களின் காட்டு தர்பார்

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

காடழிப்பைப் பற்றிக் கடந்த வாரம் இங்கே குறிப்பிட்டி ருந்தோம். அந்தக் கட்டுரை வெளியாகி இரண்டு நாட்கள் கடப்பதற்கிடையில் முல்லைத்தீவில் சட்டவிரோத மரங்கடத்திலில் ஈடுபட்டோரைப் பற்றிய செய்திகளைச் சேகரிக்கச் சென்ற இரண்டு ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர். தாக்கியவர்கள் சட்டவிரோத மரங்கடத்திகள். தாக்குதலுக்குள்ளாகியோர் ஊடகவியலாளர்களான ச.தவசீலன் மற்றும் கே.குமணன் ஆகியோர். இவர்களைத் தாக்கியது மட்டுமல்ல, இவர்களுடைய கமெராக்களைப் பறித்து, அவற்றிலிருந்த மெமெரிக் கார்ட்டுகளையும் பிடுங்கிச் சென்றிருக்கிறார்கள். இவர்கள் படம் பிடித்து ஆவணமாக்கிய ஆதாரக் காட்சிகளை அழித்திருக்கிறார்கள்.இது எப்படியிருக்கு? இங்கே நாம் கவனிக்க வேண்டியது, இந்த மரங்கடத்திகளுக்கும் காடழிப்புக்காரர்களுக்கும் இருக்கும் அசாத்திய துணிச்சலையே. ஏனென்றால், காடழிப்பைச் செய்வதும் மரம் வெட்டுவதும் அவற்றைக் கடத்துவதும் தனியே ஒருவர் செய்யக் கூடிய செயல்களல்ல. இதற்குப் பலர் தேவை. பலர் சேர்ந்தால்தான் இவற்றைச் செய்ய முடியும். அப்படிப் பலர் செய்யும் செயல்கள் ஒருபோதும் இரகசியமாக இருக்க முடியாது. ஆள் நடமாட்டம், வாகனப் போக்குவரத்து போன்றவை இவர்களுடைய நடவடிக்கைகளை இலகுவில் காட்டிக் கொடுத்து விடும். முக்கியமாகக் காடுகளில் இப்போது படையினர் நிரம்பிக் கிடக்கிறார்கள். அப்படியென்றால் படையினருக்குத் தெரியாமல் காடழிப்புச் செய்வதும், சட்டவிரோதமாக மரங்களை வெட்டுவதும் சாத்தியமில்லை. அப்படித்தான் நடந்தாலும் இதைக் காண்பதற்கு சனங்கள் இருக்கிறார்கள். சனங்களின் கண்களிலிருந்து தப்பினாலும் வனப்பிரிவு இருக்கிறது. அவர்கள் அதைக் காண சந்தர்ப்பமுண்டு. அல்லது அறியக் கூடியதாக இருக்கும். அவர்களுக்குத்தான் தண்ணி காட்டினாலும் வனஜீவராசிகள் திணைக்களமிருக்கிறது. அது எப்படியோ மணந்து பிடித்து விடும். அதனுடைய காதில் பூவைச் சுற்றினாலும் காவல்துறை இருக்கிறது. அது எப்படியோ கலைத்துப் பிடித்து விடும். காவல்துறையின் கைகளில் சிக்கினால் நீதித்துறை இருக்கிறது. ஆட்களையும் வாகனங்களையும் தூக்கி உள்ளே போடுவதற்கு.

**என்ன செய்கின்றன இந்த அமைப்புகள்?**

இதற்கிடையில் பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகங்கள், கிராம சேவகர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என்றொரு நிர்வாக வரிசை உண்டு. அவர்கள் இது பற்றி அறிந்தால் பொலிஸுக்குச் சொல்லி ஆட்களைத் தூக்கி உள்ளே போடுவார்கள். சிலவேளைகளில் வாகனங்களைக் கூடச் சட்ட நடவடிக்கையின் மூலமாகப் பறிமுதல் செய்யலாம்.

இவை மட்டுமல்ல, ஊர்களில்கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாவட்ட அபிவிருத்திசார் அமைப்புகள், சமூகச் செயற்பாட்டியக்கங்கள், சூழலியலாளர்கள் என்ற பல வட்டங்களும் சதுரங்களும் உண்டு. இப்படி இருக்கிற பல அடுக்குப் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு வளையங்களைக் கடந்தே இந்தக் கடத்தல் கில்லாடிகள் காடுகளை அழிக்கிறார்கள். மரங்களை வெட்டுகிறார்கள். அந்த மரங்களை துணிசலோடு வேறு இடங்களுக்குப் பட்டப்பகலில் எடுத்துச் செல்கிறார்கள் என்றால்....!

**இந்த அமைப்புகளும் இவற்றின் அதிகாரமும் என்ன செய்கின்றன?**

இவற்றின் கண்களில் மண்ணைப் போட்டுவிட்டுக் கலாய்க்கும் இவர்கள் பெரிய கில்லாடிகள் இல்லாமல் வேறு எப்படி இருப்பார்கள்? இப்போது மெய்யாகவே ஒரு கேள்வி.

மேலே சொன்ன அமைப்புகள், அதிகார மையங்கள் எல்லாம் இந்தக் காடழிப்போர் குறித்தும் மரங்கடத்துவோர் குறித்தும் உண்மையில் என்ன சொல்லிக் கொண்டிருக்கின்றன? என்ன செய்து கொண்டிருக்கின்றன?

**மரநடுகை விழாக்களும் மார்தட்டலும்**

ஆண்டு தோறும் அங்குமிங்குமாக பல நூறு மர நடுகைகள் நடக்கின்றன. சில மரநடுகைகள் மிகப் பெரிய ஏற்பாடுகளோடு திருவிழா வைப் போல நடக்கின்றன. விக்கினேஸ்வரனின் தலைமையில் வடமாகாணசபை இயங்கிய காலத்தில் மரநடுகை விழாக்கள் அமர்க்களமாக நடந்தன என்பது பலருக்கும் நினைவிருக்கும். ஆனால், நடப்படும் மரங்களை விடவும், உருவாக்கப்படும் காடுகளை விடவும், அழிக்கப்படும் மரங்களும் காடுகளும் அதிகம். மர நடுகை விழாக்களோ அமர்க்களமாக - பகிரங்கமாக நடக்கும்போது காடழிப்போ சத்தம் சத்தடில்லாமல் ரகசியமாக நடந்து முடிகிறது.

இது எப்படியிருக்கிறது?

இப்போது மறுபடியும் ஒரு கேள்வி.

இதற்கான பதில்கள் என்ன?

நிச்சயமாக நமக்குத் தெரியும், இதற்கெல்லாம் யாருமே பதிலளிக்கப்போவதில்லை என்று. இவர்கள் மட்டுமல்ல, சூழலியல்வாதிகள், அரசியல்வாதிகள் என யாரும் இதைப்பற்றி வாயே திறக்க மாட்டார்கள்.

இவ்வளவுக்கும் இவர்கள்தான் ஆண்டுதோறும் மரநடுகையை ஆரம்பித்து வைக்கிறார்கள். மரங்களை நட்டுப் படங்காட்டுகிறார்கள். தாங்கள் நட்ட மரங்கள் தளைத்திருக்கின்றனவா? பட்டுப்போயிற்றா என்று பிறகு இவர்கள் அதைப்பற்றி அறிய அக்கறைப்படுவதுமில்லை. அப்படியிருக்கும்போது எப்படி காடழிப்பைப் பற்றி இவர்கள் கரிசனை கொள்வதற்கும் கவலைப்படுவதற்கும் இடமுண்டு?

**கண்கெட்ட நியாயம்**

இதுவரையில் எந்தவொரு கட்சியும், அரசியல் தலைவரும் காடழிப்புப் பற்றி ஒரு சிறிய வார்த்தையைக்கூடப் பொது வெளியில் பேசியதில்லை. சில அரசியல்வாதிகள் மரங்கடத்துவோரை இரகசியமாக ஊக்கப்படுத்துகிறார்கள். சிலரோ இதற்கும் மேலே சென்று, பிடிபடும் காடழிப்பாளர்களையும், மரங்கடத்துவோரையும் பொலிஸிடமிருந்தும், வனப்பிரிவிலிருந்தும் பிணையெடுத்துக் காப்பாற்றி விடுகிறார்கள். வேறு சிலரோ படையினர் காடழிக்கும்போது நம்முடைய காட்டை நாங்கள் எடுத்தால் என்ன என்று கேட்கிறார்கள். அப்படிக் கேட்டு காடழிப்போரை ஊக்கப்படுத்துகிறார்கள். தங்களின் கையறு நிலைக்குக் கூறும் கண் கெட்ட நியாயமிது.

இந்தியாவில் சில ஆண்டுகளுக்கு முன்பு சிவராம காரந் என்றொரு முதியவர் இருந்தார். அவர் ஒரு எழுத்தாளரும் கூட. தன்னுடைய 90 வயதைக் கடந்த நிலையிலும் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்காக பல விழிப்புணர்வு நடைப் பயணங்களை மேற்கொண்டார். சட்டவிரோத காடழிப்பு, சூழல் பாதிப்பேற்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பாகப் பல வழக்குகளைத் தாக்குல் செய்தார். சில இடங்களில் அரசு மீதே வழக்குகளைத் தொடுத்தார்.

சிவராமகாரந் மட்டுமல்ல, அவரைப்போல ஏராளம் பேர் பசுமை இயக்கங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பசுமை இயக்கங்களை நடத்துவது ஒன்றும் பேருக்காக அல்ல. மெய்யாகவே சூழல் பாதுகாப்புச் செயற்பாட்டுக்காக என்றவாறு அவை செயற்படுகின்றன.

ஆனால், நம்மிடமுள்ள அமைப்புகள், ஆர்வலர்களின் செயற்பாடும் கரிசனைகளும் எவ்வாறுள்ளன? குறைந்த பட்சம் இவர்களால் இதுவரையில் ஒரு வழக்கேனும் உரிய முறையில் தாக்கல் செய்யப்பட்டு சனங்களின் மத்தியில் அதுவொரு விழிப்புணர்வாக மாறியிருக்கிறதா?

**நெஞ்சில் துணிவு வேண்டும்**

இப்படி இந்த அமைப்புகளையும், ஆர்வலர்களையும், அதிகாரத் தரப்புகளையும் தடாலடியாக நாம் தாக்குவதற்குக் காரணம், தனிப்பட்ட ரீதியிலான கோபமல்ல. இதோ இரண்டு ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்களே. இவர்களுடைய நேர்மையான தொழில் உடமைகள் சேதமாக்கப்பட்டுள்ளனவே. இருந்தும் இவர்கள் இதிலிருந்து பின்வாங்கப் போவதில்லை.

(மறுபக்கம் பார்க்க)

இங்கே நாம் கவனிக்க வேண்டியது, இந்த மரங்கடத்திகளுக்கும் காடழிப்புக்காரர்களுக்கும் இருக்கும் அசாத்திய துணிச்சலையே. ஏனென்றால், காடழிப்பைச் செய்வதும் மரம் வெட்டுவதும் அவற்றைக் கடத்துவதும் தனியே செய்யக் கூடிய செயல்களல்ல. இதற்குப் பலர் வேணும். பலர் சேர்ந்தால்தான் இவற்றைச் செய்ய முடியும். அப்படிப் பலர் செய்யும் செயல்கள் ஒருபோதும் இரகசியமாக இருக்க முடியாது.



○ ம.பா.மகாலிங்கசிவம்

# மலையக தொழிலாளரின் துயரவாழ்வும் அவலச் சாவும்

இலங்கையை ஆங்கிலேயர் ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்தில் மலையகத்தில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். பெருந் தோட்டப் பயிர்களில் ஒன்றான தேயிலைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளத் தமிழகத்திலிருந்து தொழிலாளர்களை அழைத்து வந்து மலையகத்தில் குடியேற்றினர்.

தங்கள் வாழ்வு வளம் பெறப் போகின்றது என்ற அப்பாவித்தனமான கனவுகளுடன் மலையகத்தில் குடியேறிய மலையகத் தொழிலாளர்களின் வாழ்க்கையோ, கண்ணீர் நிறைந்ததாக அமைந்தது. போதிய சம்பளமோ இருப்பிட வசதிகளோ இல்லாத நிலையில் அட்டைக் கடி, குளவிக் கொட்டு, மண்சரிவு, பிரஜா உரிமையற்ற அடிமை நிலை முதலிய பல்வகை அனர்த்தங்களையும் அவர்கள் எதிர்கொள்ள வேண்டியவர்கள் ஆனார்கள்.

இத்தகைய மக்களின் துயர் கவிந்த வாழ்க்கையைப் பல்வேறு எழுத்தாளர்களும் தமது இலக்கியங்களுக்கான கருப்பொருள்கள் ஆக்கினர். இவர்களுள் காலத்தால் முற்பட்டவர் மலையகம் பூண்டுலோயாப் பகுதியைச் சேர்ந்த சி.வி.வேலுப்பிள்ளை. இவர் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் இலக்கியம் படைத்த விற்பன்னர். 'முதற்படி' என்ற கட்டுரை நூலும் 'காதல் சித்திரம்', 'வீடற்றவன்', 'இனிப்படமாட்டேன்' முதலிய நாவல்களும் இவரது தமிழ்ப் படைப்புக்கள் ஆகும். vismajini (இசை நாடகம், wayferer, In Ceylon's Tea Garden என்னும் கவிதை நூல்கள், The Boarde Land என்னும் நாவல் என்பவை ஆங்கிலத்தில் எழுதப்பட்டவை.

இவரது In Ceylon's Tea Garden என்னும் கவிதை நூல் சக்தி ஆ.பாலையாவினால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கிலக் கவிதையை தமிழ் மரபுக்கேற்ப எதுகை, மோனை சந்தம் முதலிய சிறப்புக்களுடன் சக்தி அ.பாலையா இன்னொரு கவிதையாகவே மொழிபெயர்த்துள்ளமை சிறப்பம்சமாகும். அவற்றுள் சில கவிதைகள் இங்கே தரப்படுகின்றன.

### தேயிலைத் தோட்டத்திலே..........

புழுதிப் படுக்கையில் புதைந்த எம் மக்களைப்
போற்றும் இரங்கற் புகல்மொழி இல்லை
பழுதிலா அவர்க்கோர் கல்லறை இல்லை
பரிந்தவர் நினைவுநாள் பருகுவார் இல்லை.

ஊனையும் உயிரையும் ஊட்டி இம்மண்ணை
உயிர்த்த வர்க்கிங்கே உளங்கசிந் தன்பும்
பூணுவார் இல்லை அவர் புதைமேட்டி லோர் கானகப்
பூவைப் பறித்துப் போடுவார் இல்லையே.

ஆழப் புதைந்த தேயிலைச் செடியின்
அடியிற் புதைந்த அப்பனின் சிதைமேல்
ஏழை மகனும் ஏறி மிதித்து
இங்கெவர் வாழவோ தன்னுயிர் தருவன்.

என்னே மனிதர்! இவரே இறந்தார்க்கு
இங்கோர் கல்லறை எடுதிலர் வெட்கம்!
தன்னை மறைக்கத் தானோ அவ்விறைவனும்
தளிர்பசும் புல்லால் தரை மறைத்தனனே.

வாடிய றோசா மலரிதழ் போல
வாடியே அன்னார் வாழ்க்கை கழிந்தது
கூடிய வழக்கக் கொடுமைகள் யாவும்
கூர்முள் எனவே குடிகுடி தொடர்ந்தன.

ஓர் நூற்றாண்டு உதயமும் மறைவும்
ஓங்குறு பேரிகை ஒலிக் குமுறலிலே
உருவு மழிந்து ஒன்றன்பின் ஒன்றென
உருண்டன புரண்டன ஒழிந்தன கண்டீர்.

பெருநூலின் ஒரு பகுதி ஆயினும் தனியான ஒரு கவிதை போலவே இப்பகுதி காட்சியளிப்பது மேலும் சிறப்புக்குரியதாகும். இப்பகுதியின் முதல் பாடல்

"புழுதிப் படுக்கையில் புதைந்தஎம் மக்களைப்
போற்றும் இரங்கற் புகல்மொழி இல்லை
பழுதிலா அவர்க்கோர் கல்லறை இல்லை
பரிந்தவர் நினைவுநாள் பகருவார் இல்லை

என அமைகின்றது. இப்பாடல் மலைகளை உடைத்துத் தேயிலைத் தோட்டங்களை உருவாக்கிவிட்டு அந்தத் தேயிலைத் தோட்டப் புழுதியிலேயே புதைக்கப்பட்டவர்கள் மலையக மக்கள் எனக் கூறுகிறது. ஏனெனில் அவர்களுக்கெனத் தனியாகச் சுடுகாடோ, இடுகாடோ அந்தக் காலத்தில் இருந்ததில்லை. பெருந்தொகைப் பணம் செலவழித்து வம்சா வழி, புலம்பல்கள், தேவார திருவாசகங்களுடன் நினைவு மலர்கள் அச்சடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் மலையகத் தொழிலாளர்களின் கடின உழைப்பை நன்றியுடன் நினைவுகூரும், போற்றும் வார்த்தைகளை எங்கும் காணவில்லையே எனக் கவிஞர் கவலைப்படுகிறார். அவருக்கென கல்லறைகளும் கட்டப்படுவதில்லை. கொவிட்- 19 காரணமாக இலங்கை முழுவதும் முடக்கப்பட்ட நிலையிலும் மலையகத் தலைவர்களின் இறுதி ஊர்வலங்கள் பல்லாயிரக்கணக்கானோர் பங்குபற்ற நடந்தேறுகின்றன. ஆனால் மலையகத் தொழிலாளரின் நினைவைப் பரிவோடு சொல்பவர்கள் கூட இல்லையே என்ற ஏக்கத்தை கவிஞர் வெளிப்படுத்துகின்றார்.

தம் உடலையும் உயிரையும் மலையக மண்ணுக்கே கொடுத்து அம்மண்ணை உயிர்ப்படையச் செய்தவர்கள்மேல் யாரும் அன்பு பாராட்டவில்லை. அது மட்டுமா விலையுயர்ந்த ரோஜா மலர்கள் வேண்டாம். இலவசமாகக் கிடைக்கும் காட்டுப்பூவைக் கூடப் பறித்து அவர் கல்லறை மேல் போடவில்லையே என்று கவிஞர் குற்றச்சாட்டுக்களை மனித குலத்தின்மீது அடுக்குகிறார்.

"தன்னை மறைக்கத் தானோ அவ் இறைவனும்
தளிர் பசும் புல்லால் தரை மறைத்தனனே"

என மனிதர்களிடம் மட்டுமன்றி இறைவனிடமும் வினா எழுப்பும் துணிச்சல் கவிஞரிடம் வெளிப்படு கின்றது. எந்தவித மதிப்புமற்று மண்ணுக்குள் புதைக் கப்பட்டவர்கள் பற்றி மற்றவர்கள் அறிந்து விடுவார்கள் என்பதற்காகத் தானோ இறைவன் புற்களை வளர்த்துப் பூமியை மறைத்திருக்கிறான்? எனத் தற்குறிப்பேற்ற அணியினூடாக அந்த வினா நயம் பெறுகிறது.

"வாடிய ரோசா மலரிதழ் போல
வாடியே அன்னார் வாழ்க்கை கழிந்தது" என்னும் பாடலடியில் உவமை அணியையும்
"கூடிய வழக்கக் கொடுமைகள் யாவும்
கூர்முள் எனவே குடிகுடி தொடர்ந்தன"

என்னும் அடிகளில் உருவக அணியையும் பயன்படுத்திய கவிஞனின் கவித்துவம் நயந்து இன்புறச் செய்வது. தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைதான் மகத்துவம் பெறவில்லை. சாவாவது மதிக்கப்பட்டிருக்கலாமே என்ற கவிஞனின் மனச் சாட்சியின் உறுத்தல் காரணமாக எழுந்த உணர்ச்சியோடு கூடிய உன்னதப் படைப்பாக இக்கவிதை அமைகிறது. ■

# காட்டு ராஜாக்களின்

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களைப்போல உங்களில் சிலராவது துணிச்சலோடும் அக்கறையோடும் உருப்படியாக நடவடிக்கை எடுத்திருந்தால்... இன்று இவர்கள் தாக்குதலுக்குள்ளாகியிருக்க மாட்டார்கள். சிலவேளை இவர்களுக்கு நடந்ததைப்போல சில நெருக்கடிகளை நீங்கள் சந்திக்க நேர்ந்திருக்கக்கூடும்.

உண்மையில் பல சந்தர்ப்பங்களிலும் ஊடகவியலாளர்கள் இந்த மாதிரிச் சமூக விரோத, சட்டவிரோத நடவடிக்கைகளைப் பற்றித் தேடித் தேடி அறிக்கையிடுகிறார்கள். சான்றுகளைத் தருகிறார்கள் அவற்றை வைத்துக்கொண்டாவது உரிய தரப்புகள் நடவடிக்கை எடுக்கலாம். கண்காணிப்புகளை முடுக்கலாம். கரிசனைகளைப் பெருக்கலாம். அப்படிக் கூட எதுவும் நடப்பதில்லை. அதாவது வாழைப்பழத்தை உரித்துக்கொடுத்தாலும் அதைத் தின்னத் தெரியாதவர்களைப்போலவே இருக்கிறார்கள். இதை என்னவென்று சொல்வது?


**உளரீதியாக அச்சப்படுத்தல்**

தாக்குதலுக்குள்ளாகியிருக்கும் ஊடகவியலாளர்களின் விடயம் ஒருநாள் செய்தியோடு மறந்து போய் விடும். வேண்டுமானால் ஒரு சிறிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம். அதற்கப்பால் எதையும் எதிர்பார்க்க முடியாது. ஆனால், நடந்திருப்பது பெருங்குற்றம். பலரும் கவனிக்க வேண்டிய குற்றம். ஒன்று, காடழிப்பிலும் மரம் வெட்டுவதிலும் சம்மந்தப்பட்டவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இரண்டாவது, அந்த மரங்களை அவர்கள் சட்டவிரோதமாக இன்னொரு இடத்துக்கு எடுத்துச் சென்றுள்ளனர். மூன்றாவது இதன்போது வேறு ஆட்களைத் தாக்கியுள்ளனர். அதுவும் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகத்துறையினரை.

இந்தத் தாக்குல் ஒரு கொலை முயற்சி என்றே கூறப்பட வேண்டும். ஏனெனில் இந்த மாதிரியான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் கைக்கொள்ளும் உத்தி, தம்மை எதிர்ப்போரையும் கட்டுப்படுத்துவோரையும் உளவியல் ரீதியாக அச்சமடைய வைப்பதாகும். ஏற்கனவே கூட்டமாகவும் குழுக்களாகவும் பலர் சேர்ந்து இவற்றில் ஈடுபடுவதால் இவர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளும் பலர் மூலமே பலமாக மேற்கொள்ளப்படுகின்றன.

ஆகவே இது ஒரு கொலை முயற்சியே.

அப்படியென்றால், இதற்கான நடவடிக்கை என்ன? தீர்ப்பு என்ன? தண்டனை என்ன?உரிய நடவடிக்கைகள், தண்டனைகள் இல்லையென்றால், எதிர்காலத்தில் இதைப்போல இன்னுமின்னும் பல செயற்பாடுகள் நடக்கும். நடந்து கொண்டேயிருக்கும். மறுபடியும் இங்கே விடுதலைப்புலிகளைப் பற்றித்தான் குறிப்பிட வேண்டியுள்ளது. அவர்கள் மரம் தறிப்பதற்கும் கடத்துவதற்கும் கடுமையான தண்டனையை வழங்கினார்கள். அதில் ஒன்று மரங்கடத்தும் வாகனங்களையே தீயிட்டுக் கொளுத்தினார்கள். அது இயக்க நடவடிக்கை. இது சிவில் அரசாங்கச் சட்ட நடவடிக்கைஎன்றுஎவராவது சொல்லக்கூடும். இங்கே கவனிக்க வேண்டியது, அவர்கள் அந்த அளவுக்கு காட்டை இந்த மண்ணின் - தாயகத்தின் வளமாக கருதினார்கள். இப்போது அப்படிக் கருதுவோர் யாருமிலர். அவ்வளவுதான்.



அப்படியென்றால், இது காட்டு ராஜாக்களின் காலமா? அப்படித்தான் சொல்ல வேண்டும் போலுள்ளது. அல்லது கள்வர்களுக்குத் துணையாகக் காவலிருக்கும் காலம் எனலாம். இறுதியாக ஒரு சேதி. இப்படித்தான் சீரழிந்து கொண்டிருக்கப் போகிறோம் அல்லவா? ■

சந்திப்பு: ஏ.ஏ

# “ஒற்று
# எதிர்ப்போ
# வரலாற்றின்
# குப்பைக்கூடை
# வீசப்படுவ

**கே:** **தமிழ்த் தேசியக் கட்சிகளின் பயணம் தற்போது எந்த நிலைமையில் உள்ளது?**

**ப:** நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசியக் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள ஒற்றுமை வரவேற்புக்குரியது. காலத்தின் தேவை.

இந்த ஒற்றுமை ஊடாக இரண்டு விடயங்களை நாங்கள் ஒப்பேற்றியிருக்கின்றோம். மக்கள் முன்பாக நிரூபித்திருக்கின்றோம்.

ராஜபக்ச அரசின் தடைகளை வெற்றிகரமாக சந்தித்து, தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் தொடர்பில் எங்கள் நிலைப்பாட்டை நிலைநாட்டியிருக்கின்றோம். திலீபன் மாத்திரமன்றி தமிழ் மக்களுடைய விடிவுக்காக தங்களை அர்ப்பணித்த எவரையும் நினைவுகூருவதற்கு மக்களுக்கு உரிமை உண்டு என்ற அடிப்படையில் அரசின் தடைக்கு எதிரான தமிழ் மக்களின் உணர்வலைகளை நாங்கள் நிலைநாட்டியிருக்கின்றோம். அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தியதன் மூலமும் அதனைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கு தழுவிய ஹர்த்தால் நடத்தியதன் ஊடாகவும்,-தமிழ் மக்களின் எதிர்ப்பு உலகம் அறிய பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ் மக்களிடம் ஒற்றுமை இல்லை என்றால் இதனைச் சாதித்திருக்க முடியாது. தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டு அழைத்ததாலேயே தமிழ் மக்கள் தங்கள் ஆதரவை வழங்கியிருக்கின்றார்கள். தமிழ் மக்கள் மத்தியில் புதுத் தெம்பையும், நம்பிக்கையையும் இந்த ஒற்றுமை ஏற்படுத்தியிருக்கின்றது.

## தமிழ்க் கட்சிகளின் அடுத்த கட்டம்

**கே:** **தமிழ்த் தேசியக் கட்சிகள் போராட்டத்தை நடத்தி முடித்த பின்னர் ஒரு தடவை கூடிப் பேசியிருந்தார்கள். அதன் பின்னர் இரு வாரங்களுக்கு மேலாக எந்தவொரு நகர்வுகளையும் காணமுடியவில்லையே. அடுத்த கட்டமாக என்ன செய்யப் போகின்றீர்கள்?**

**ப:** ஒற்றுமைப் பயணத்துக்கு இணங்கியுள்ள 10 தமிழ்த் தேசியக் கட்சிகளினதும் தலைவர்கள் சந்தித்துப் பேசி ,பொது நிலைப்பாட்டுக்கு திட்டவட்டமான அடிப்படையில் வரவேண்டும் என்பதை கொள்கை ரீதியாக ஏற்றுக் கொண்டுள்ளோம். ஹர்த்தாலின் பின்னர் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளின் சந்திப்புக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வரவில்லை. இனிவரும் சந்திப்புக்களில் அந்தக் கட்சியும் கலந்துகொள்ளும் என்று நம்புகின்றோம். விரைவில் அனைத்துத் தரப்புகளும் சந்தித்து பொது நிலைப்பாட்டை ஏற்படுத்துவோம். அதனைத் தள்ளிப் போட முடியாது. அதேவேளை அவசரப்படாமல் நிதானமாக ,வலுவான அடிப்படையில் நாங்கள் ஒரு பொதுக் கருத்துக்கு வந்தாகவேண்டும்.

## மக்கள் நலனுக்கும் முன்னுரிமை

**கே:** **இந்த ஓரணிப் பயணத்தை முன்கொண்டு செல்வதில் எதிர்கொள்ளும் பிரதான சவால் என்ன?**

**ப:** தமிழ் அரசியல்வாதிகள் அனைவருக்கும் -என்னையும் சேர்த்துத்தான் நான் சொல்கின்றேன் - நாங்கள் சார்ந்த கட்சிகளுடைய நலன்களை முன்னிலைப்ப டுத்தாமல், தமிழ் மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுக்க நாங்கள் அனைவரும் விசுவாசமாக முன்வர வேண்டும். இதைச்செய்தால் உடைக்கப்பட முடியாத வலுவான ஒற்றுமை தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலே உருவாகும். இந்த விடயத்தில் தனிநபர்கள் தொடர்பிலான பிரச்சினைகளை நாங்கள் பெரிதுபடுத்தவேண்டியதில்லை. சில பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றுக்கு நாங்கள் அளவுக்கு மீறிய முக்கியத்துவத்தைக் கொடுக்கக் கூடாது.

ஏனெனில் கட்சிகள் ஒரு நிலைப்பாட்டுக்கு வரத் தயார் என்றால் எந்தவொரு தனி நபரைப் பற்றியும் அதிகமாக நாங்கள் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. நதி ஓடிக்கொண்டு இருக்கின்றதென்றால் அந்த நதியிலுள்ள அனைத்துப் பொருள்களும், நதியின் ஓட்டத்துடன் சேர்ந்து பயணிக்கவேண்டியது இயற்கையின் விதி. அந்த விதிக்கு மாறாக எவரும் செயற்பட முடியாது.

## கண்கள் அகலத் திறந்தேயுள்ளன

**கே:** **தமிழ்த் தேசியப் பரப்பினுள்ளேயே இந்த ஒற்றுமை முயற்சியை யாராவது எதிர்க்கின்றார்களா?**

**ப:** இந்தச் சந்தர்ப்பத்தில் சில கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வது பொருத்தமானது அல்ல. நாங்கள் எங்களுடைய கண்களை மூடிக் கொண்டிருக்கவில்லை. அகலத் திறந்தே வைத்திருக்கின்றோம். கடந்த கால அனுபவங்கள் எங்களுக்கு இருக்கின்றன.

மனிதர்களிலே பல ரகங்கள் உண்டு. அந்த விதி தமிழ் அரசியல்வாதிகளுக்கும் பொருந்தும்.

தங்களது சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரலை ஒதுக்கி வைத்துவிட்டு பொது நன்மைக்காக தங்களை மாற்றிக் கொண்டு செயற்படவேண்டும்.

ஒவ்வொருவரும் தங்கள் பலம் என்ன பலவீனம் என்ன என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். சகலருடைய கரங்களும் இணைந்தால்தான் எதிர்காலத்தை நாங்கள் சந்திக்க முடியும். இந்தக் கூட்டு நடவடிக்கையில் சகல மட்டங்களிலும் உள்ள பொருத்தமான நபர்கள் இணைந்து அவர்களுக்குள்ள திறமைகளையும், தகுதிகளையும் பொதுநன்மைக்கு அர்ப்பணித்து செயற்படவேண்டும்.

## தலைவர்களைத் தேட வேண்டிய நிலை

இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தை எமது அரசியல்வாதிகள் உதாரணமாகக் கொள்ளவேண்டும்.

அடிமைப்பட்ட இந்தியாவில் பல்வேறுவிதமான தலைவர்கள், பல்வேறு பின்னணிகளுடன் இருந்தார்கள். ஆயினும் விடுதலை என்ற நோக்கத்துக்காகத் தங்களை அர்ப்பணித்தார்கள். அவர்களுக்குள் போட்டிகள் இருந்தன. பொறாமைகள் இருந்தன. சின்னச் சின்ன ஆசைகள் கூட இருந்தன. ஆனால் அவற்றைத் தாண்டி அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர்களாக உயர்ந்தார்கள் என்பதுதான் வரலாறு. அந்தளவுக்கு உயர்ந்த தலைவர்களை இங்கு நுணுக்குக்காட்டி ஊடாகத்தான் தேடவேண்டும்.

இங்குள்ள ஒவ்வொரு நபரும் இந்த விடயத்தில் தம்மை மாற்றிக்கொள்ளவேண்டும். இன்று அதுதான் தேவைப்படுகின்றது. அதைவிடுத்து நாங்கள் இப்படித்தான் இருப்போம், இருந்த இடத்தில்தான் இருப்போம் என்று எவராவது சிந்தித்தால் காலம் அவர்களை ஈவிரக்கம் இல்லாம் வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் தூக்கி எறியும்.

**கே:** **தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கு இடையிலான கூட்டத்தில், நீங்கள் முன்னர் அங்கம் வகித்த ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைவுக்கு எதிர்மறையான கருத்துக்களை வெளிப்படுத்தினார் என்று கூறப்படுகின்றது. ரெலோவிலிருந்து வெளியேறிய நீங்கள் மற்றும் சிவாஜிலிங்கம் ஆகியோரைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் அரவணைத்துச் செல்வதால் அவர் அவ்வாறு கூறினாரா? இது தொடர்பில் நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

**ப:** இது அபத்தமான கருத்து. தம்பி செல்வத்துடன் 85ஆம் ஆண்டிலிருந்து அரசியலில் ஒன்றாகச் செயற்பட்டு வந்திருக்கின்றேன். பல சவால்களை, சோதனைகளை நாங்கள் ஒன்றாகச் சந்தித்திருக்கின்றோம். வேதனைகளைச் சுமந்திருக்கின்றோம். அப்படியான மனிதன், இப்படியான கீழ்த்தரமான சிந்தனைக்கு கிட்டக்கூட போகமாட்டார். இதற்கு மேலதிகமாக எதையும் சொல்ல விரும்பவில்லை.

## பிரியும் நிலைப்பாட்டை எடுக்க முடியாது

**கே:** **இந்த ஒற்றுமைப் பயணம் தேர்தலின் போதும் ஒரே குடையின் கீழ் போட்டியிடுவதற்குரிய சூழலை ஏற்படுத்துமா?**

**ப:** ஏற்படுத்துமா என்பதை விட ஏற்படுத்தப்படவேண்டும். ஏற்படுத்த முடியும். மக்களின் பிரதிநிதிகளாகத் தம்மை அடையாளப்படுத்த முயற்சிக்கின்ற தமிழ் அரசியல்வாதிகள், தமிழ்த் தேசியவாதிகளாக தங்களைக் கூறிக் கொள்கின்ற அரசியல்வாதிகள் எல்லோரும் ஒன்றுபட்டு செயற்படவேண்

**ஒவ்வொருவரும் தங்கள் பலம் என்ன பலவீனம் என்ன என்பதை புரிந்து கொள்ளவேண்டும். சகலருடைய கரங்களும் இணைந்தால்தான் எதிர்காலத்தை நாங்கள் சந்திக்க முடியும். இந்தக் கூட்டு நடவடிக்கையில் சகல மட்டங்களிலும் உள்ள பொருத்தமான நபர்கள் இணைந்து அவர்களுக்குள்ள திறமைகளையும், தகுதிகளையும் பொதுநன்மைக்கு அர்ப்பணித்து செயற்படவேண்டும்.**



# ...மையை ...ார் ...ன் ...டைக்குள் ...வர்!



**ரெலோ இயக்கம் ஆரம்பித்த காலத்திலிருந்து அந்த இயக்கத்தோடு இயங்கியவரும், தமிழ் மக்கள் மத்தியில் நன்கு அறியப்பட்டவரும், தற்போது தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும், சட்டத்தரணியுமான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிறீகாந்தா 'உதயன் -சஞ்சீவி'க்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல்.**

டும். அவர்கள் ஓர் பலமான கருத்தைத் தொடர்ந்து அழுத்திச்சொல்வார்களாக இருந்தால் எந்தவொரு தேர்தலும் ஒற்றுமைக்கு குறுக்கே வரமுடியாது. இதிலே முக்கியமானவர்கள் மக்கள்.

மக்கள் மத்தியில் ஒற்றுமை தொடர்பான பலமான விழிப்புணர்வு தொடர்ந்து நீடிக்குமானால், இவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு அரசியல் அரங்கிலே செயற்படவேண்டியிருக்கும். தேர்தலை ஒன்றுபட்டு சந்திக்கவேண்டியிருக்கும்.

'ஏனைய விடயங்கள் தொடர்பில் ஒன்றாகச் செயற்படுவோம்,தேர்தல் என்று வந்தால் நாங்கள் பிரிந்து செயற்படுவோம் 'என்று எந்தவொரு அரசியல்வாதியோ, அரசியல் கட்சியோ நிலைப்பாடு எடுக்க முடியாது. அப்படி நிலைப்பாடு எடுத்தால் மக்களால் அது நிராகரிக்கப்படும்.

### ராஜபக்சக்களே இணைத்தார்கள்

**கே: இப்போது ஒன்றிணைந்துள்ள எல்லோரும் ஒரு காலத்தில் . தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஓர் கட்சியின் கீழேயே இருந்தீர்கள். பல்வேறு குற்றச்சாட்டுக்களை ஒருவர் மீது ஒருவர் சுமத்தி பிரிந்து தனித்தனி வழி சென்றீர்கள். உங்கள் எல்லோரையும் மீளவும் ஒரே குடையில் ஒன்று சேர்த்த புள்ளி எதுவென்று நீங்கள் கருதுகின்றீர்கள்?**

**ப:** ராஜபக்ச அரசு. இந்த அரசின் கடுமையான போக்குத்தான் அனைவரையும் ஒன்றுசேர்த்தது. இறந்தவர்களை நினைவுகூர்வதற்குக் கூட தமிழ் மக்களுக்கு உரிமை இல்லை என்று அரசு சொல்லத் துணிந்தபோது அந்தத் தனியாக எந்தவொரு தமிழ்த் தேசிய அரசியல் கட்சியும் எதிர்த்து நிற்கமுடியாது என்பது சம்பந்தப்பட்ட சகல கட்சிகளுக்கும் தெரியும். எதிர்த்து நிற்க முயற்சிக்கலாம். ஆனால் எதையும் சாதிக்க முடியாது. இந்த விவகாரத்தில் ஒற்றுமையான செயற்பாடு தேவைப்பட்டது. அந்த யதார்த்தத்தை உணர்ந்து கொண்ட நிலையில்தான் அனைத்துக் கட்சிகளும் ஒன்றாகக் கூடிப் பேசி ஒரு நிலைப்பாட்டுக்கு வரமுடிந்தது. இது இன்றைய நிலையில் முன்னேற்றகரமான முதல் அடி என்று நான் கூறுவேன். கடந்த காலத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்க முடியாது. அதற்காக கடந்த காலத்தை மறந்துவிடவும் முடியாது. கடந்த காலம் தொடர்பில் அனைவருக்கும் கசப்பான அனுபவங்கள் இருக்கின்றன. அந்த அனுபவங்கள் எங்களுக்குப் பாடமாக இருக்கவேண்டும். அந்த அனுபவங்களை வைத்துக் கொண்டுத்தான் எதிர்காலத்தில் பரந்துபட்ட தமிழ்த் தேசிய ஒற்றுமைக்கு எதிராக நிகழக்கூடிய எந்தவொரு சம்பவத்தையும் அல்லது எதிர்நோக்கக்கூடிய எந்தவொரு சவாலையும் நாங்கள் வெற்றிகரமாக சந்திக்க முடியும்.

### யாரும் மகாத்மாக்கள் அல்லர்

இங்கே யாரும் மகாத்மாக்கள் அல்லர், யேசுநாதர்களும் அல்லர். இதனை நான் திரும்பவும் சொல்ல விரும்புகின்றேன். அரசியலில் உள்ள பலருக்கு தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்கள் தாராளமாக உண்டு. ஆனால் அந்த நிகழ்ச்சி நிரல் என்பது ஓர் பொதுவான அரசியல் நிலைப்பாட்டுக்கு விரோதமாக இருக்க முடியாது.

பொதுவான கொள்கை என்று வருகின்றபோது இந்த நிகழ்ச்சி நிரல்கள் எல்லாம் ஒதுக்கப்பட வேண்டும். எவராவது ஒற்றுமை என்ற பரந்த வரையறைக்குள் நின்று கொண்டு தனிப்பட்ட தனது நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்க முனைந்தால் அந்த நபரை நாங்கள் கைகழுவிவிடவேண்டியிருக்கும். எந்தவொரு தனிநபருக்காகவும் எந்தவொரு கட்சிக்காகவும் கூட தமிழ் மக்களின் எதிர்காலத்தைப் பலியிடமுடியாது.

**கே: தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமைக்கான புள்ளி, ராஜபக்சக்கள்தான் என்றால், ஒரு வேளை தென்னிலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமையும் சிதைந்துவிடுமா?**

**ப:** நல்லாட்சி அரசின் காலத்தில், பலர் கனவுலகத்தில் மிதந்து கொண்டிருந்தார்கள். சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கொடூரத் தன்மை மறக்கப்பட்டது. இதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. தாலாட்டுப் பாடப்படும்போது சிறு குழந்தைகள் தூங்குவது போன்ற நிலைமை காணப்பட்டது. இப்பொழுது கனவுகள் கலைந்து விட்டன. தாலாட்டு நின்று விட்டது. வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேரினவாதம் பேசுகின்ற ஓர் அரசு முழு இலங்கைத் தீவுக்கும் கிடைத்திருக்கின்றது. இந்த அரசை எதிர்கொள்வது என்பது சுலபமானது அல்ல. ஆனால் அவ்விதம் எதிர்கொள்வது சாத்தியமானது. எங்கள் தரப்பில் சகல கரங்களும் ஒன்றுபட்டால், சகல சிந்தனைகளும் மையப்படுத்தப்பட்டால் வெற்றிகரமாக நாங்கள் சிங்களப் பேரினவாதத்தின் கொடூரச் சவாலை சந்திக்க முடியும். கடந்த காலத்திலும் கூட இலங்கைத் தீவில் இவ்வாறான நிலைமைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருக்கின்றன.

### தவறுகளும் நிகழ்ந்தன

பண்டாரநாயக்கா ஆட்சிக்காலத்திலே பின்னர் சிறிமாவோவின் காலத்திலே, ஜே.ஆரின் காலத்திலே இப்படியான நிலைமைகள் ஏற்பட்டன. அந்த நேரத்தில் தமிழர் தரப்பிலே சில சந்தர்ப்பங்களில் ஒற்றுமை இருந்தது. வேறு சில சந்தர்ப்பங்களில் பரந்த ஒற்றுமை காணப்படவில்லை. ஆனாலும் தமிழினத்தினுடைய அரசியலில் ஆதிக்கம் செலுத்திய தலைமையாக அறியப்பட்டிருந்த தலைவர்கள் துணிவோடு அந்தச் சவால்களைச் சந்தித்தார்கள். அவ்விதம் சந்திக்கும்பொழுது சில சறுக்கல்கள், தவறுகள் நிகழ்ந்தன. உதாரணமாக ஜே.ஆர். ஆட்சிக்காலத்தில் தமிழர் தரப்பினுடைய அரசியல் தலைமை பல்வேறு சந்தர்ப்பங்களில் இடறியது. சறுக்கியது. சமரசத்துக்குப் போனது. அதனுடைய விளைவுதான் இளைஞர்கள் மத்தியில் ஆயுத இயக்கங்கள், தமிழ்த் தேசிய அரசியலை முற்றுமுழுதாக தங்களுடைய கைகளிலே எடுத்துக் கொள்கின்ற நிலைமையைத் தோற்றுவித்தது. வரலாற்றிலிருந்து அரசியல்வாதிகள் அனைவரும் பாடம் படிக்கவேண்டும். எங்களில் பலருக்கு கடந்த கால அரசியல் என்பது முற்று முழுதாக தெரியாமல் இருக்கின்றது.

### சிங்களக் குடியேற்றங்கள் தீவிரம்

கடந்த காலத்தை முற்றுமுழுதாக தெரிந்து கொண்டால் நிகழ்காலத்தில் நின்றுகொண்டு எதிர்காலத்துக்கான திட்டமிடல்களை வகுப்பது கடினமானது அல்ல. வரலாறு மீண்டும் மீண்டும் நிகழ்கின்றது என்பதை மறந்து விடக் கூடாது. இப்போதுள்ள நிலைமை இதுதான். எமது வரலாற்று வாழ்விடம் பறிபோய்க் கொண்டிருக்கின்றது. கிழக்கு மாகாணத்தை கபளீகரம் செய்யும் நோக்குடன், திருகோணமலையும் முல்லைத்தீவும் சந்திக்கும் இடத்தில் சிங்களக் குடியேற்றங்களை அரசு திட்டமிட்டுத் தீவிரப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் என அனைத்துமே எங்களுடைய தாயகத்தை வடக்கும் கிழக்கும் சந்திக்கும் கேந்திர பகுதியிலும் இன்னும் சிங்கள பிரதேசத்துடனான எல்லைப் புறத்திலும் தொடர்ந்தும் ஊடுருவி உடைக்கும் முயற்சிக்குப் பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே எங்கள் தரப்பில் அரசியல் பேசுகின்றவர்கள் தூங்கிக் கொண்டிருக்க முடியாது.


இந்த முறை யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு மாவட்டங்களில் ஹர்த்தாலுக்கு கிடைத்த வெற்றியை, திருகோணமலையிலும் அம்பாறையிலும் எங்களால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அங்கும் இங்குமாக எதிர்ப்பு இருந்தது என்பது உண்மை. ஆனால் இயல்பாக எழவேண்டிய எதிர்ப்பு ஏன் அடங்கிப்போனது என்பதை நாங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

### நாதியற்ற நிலையில் கிழக்கு மக்கள்

திருகோணமலை அம்பாறை மாவட்டங்களில் தமிழ் மக்கள் நாதியற்று நிற்கின்றார்கள். இன்னும் கொஞ்சக் காலத்தில் அவர்களுடைய தனித்துவம் கூட மெல்ல மெல்ல இழக்கப்பட்டு விடும் ஆபத்து எழுந்து கொண்டிருக்கின்றது. இதையெல்லாம் எங்களுடைய அரசியல்வாதிகள் சிந்திக்க வேண்டும்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

(தொடர்ச்சி)



இங்கே எமது மக்கள் படும் துன்பங்களை இங்குள்ளவர்கள்தான் புரிந்துகொள்ளமுடியும். வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் மத்தியிலிருந்துகொண்டு ஒரு சிலர் தீவிரவாதம் பேசலாம். அது சுலபமானது. ஆனால் அந்தத் தீவிரவாதம் இங்கே எதையும் சாதிக்காது. இங்கே யதார்த்தம் வேறாக இருக்கின்றது. எமது மக்களுக்கு கஷ்டமான நேரத்தில் ஒரு சில எலும்புத் துண்டுகளை வீசி, குறிப்பாக கொரோனா முதல் அலைத் தாக்கத்தின் போது அதை நன்றாகப் பயன்படுத்தி நன்றியுள்ள எமது மக்கள் மத்தியிலிருந்து ஆயிரக் கணக்கில் வாக்குகளை பெற்றுக் கொள்கின்ற சூழ்நிலை சிங்களப் பேரினவாதத்தின் எடுபிடிகளுக்கு எப்படிச் சாத்தியமானது என்பதை நாங்கள் அனைவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நலிவடைந்த எமது மக்களில் பலருடைய நன்றி உணர்வு தமிழ்த் தேசிய வாதத்தை வீழ்த்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

## தலைகுனியவேண்டும் தமிழ்த் தேசியவாத சக்திகள்

இந்த நிலைமை ஏற்பட்டதையிட்டு தமிழ்த் தேசிய வாத சக்திகள் அனைத்தும் தலைகுனியவேண்டும். நாங்கள் ஒன்றுபட்டிருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. எமது மக்களுடைய உறுதி தளர்ந்திருக்காது. நாங்கள் ஏன் ஒன்றுபடமுடியாமல் போனது? அதற்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நான் நேர்மையாகப் பதிலைச் சொன்னால் இப்பொழுதுள்ள ஒற்றுமை கூட உடைந்து போய்விடும். ஆகவே எனது நாக்கினை கட்டுப்படுத்தவேண்டியிருக்கின்றது. சில சந்தர்ப்பங்களில் நாங்கள் உண்மையைப் பேசக்கூடாது. மௌனிக்கவேண்டும். ஆனால் அந்த உண்மை எங்கள் உள்ளங்களிலே எப்போதும் உறங்காமல் விழித்துக் கொண்டிருக்கவேண்டும். சிந்தனையிலே எங்களை குத்திக் கொண்டிருக்கின்றது. அந்த உண்மையின் அடிப்படையில் நாங்கள் செயற்படவேண்டும்.

எந்தத் தனிமனிதனின் சுயநலமோ அர்த்தமற்ற கர்வமோ அல்லது அடிப்படையற்ற திமிரோ தமிழ் மக்களுடைய நலன்களுக்கு எதிராக உள்ளது என்றால் அந்த தனிமனிதன் எங்கள் மத்தியில் உள்ள ஓர் தொற்று நோயாக மாறிவிடாமல் நாங்கள் பார்த்துக் கொள்ளவேண்டும்.

## என்றோ ஒருநாள் ஆள்வோம்

எங்கள் தாயகத்தை பாதுகாப்பதே இப்போது தேவைப்படுவது. எங்கள் மண் எங்கள் கைகளில் இருக்குமானால் இன்றில்லாவிட்டால் நாளை, நாளை இல்லா விட்டால் நாளை மறுநாள் அல்லது என்றோ ஒரு நாள் எமது மண்ணிலே எமது ஆட்சியை நாங்கள் அமைத்துக்கொள்ளமுடியும். ஆனால் அதற்கு எங்களுடைய மண் எங்கள் கைகளிலேயே இருக்கவேண்டும். ஆனால் இப்போது என்ன நடந்து கொண்டிருக்கின்றது? எங்களில் பலர் தங்களை இழப்பதற்குத் தயாராக இல்லை. நான் அதை அழுத்திக் கூறவிரும்புகின்றேன். இழப்பதற்கு என்று நான் சொல்வது துன்பப்படுவதற்கு. இருக்கின்ற வசதி வாய்ப்புக்களை இழப்பதற்கு, நாங்கள் குளிரூட்டப்பட்ட அறைகளிலிருந்து சுகமாக சோபாக்களில் அமர்ந்து அரசியல் பேசிக் கொண்டிருக்க முடியாது. இன்றைய சூழ்நிலை தமிழ்த் தேசிய அரசியல் வாதிகள் ஒவ்வொருவருக்கும் முன்னாலே அவருடைய சுயமரியாதை, அவருடைய மனஉறுதி தொடர்பிலே பாரிய சவால்களை முன்வைத்திருக்கின்றது. இதை ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். இந்தச் சவாலை தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலுள்ள ஜனநாயக சக்திகள் முறையாகவும் காத்திரமாகவும் எதிர்கொள்ளத் தவறினால் எதிர்காலம் இருண்டுவிடும். அல்லது விபரீதமான விளைவுகளைக் கொண்டுவந்துவிடும்.

> **பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள விசேட அந்தஸ்து தொடர்பில் ஓர் எழுத்தைக் கூட மாற்ற முடியாது. அந்தளவுக்கு பௌத்த – சிங்கள தீவிரவாதம் பெரும்பான்மை மக்களின் அரசியலை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே இந்த விவகாரத்தில் காய்களைப் புத்தி சாதுரியமாக நகர்த்தவேண்டும்.**

## பிரிவதும்..சேர்வதும்...!

**கே: 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் காலத்தின்போது கூட்டமைப்பிலிருந்து நீங்கள் வெளியேறியிருந்தீர்கள். அதாவது கூட்டமைப்பை முதலில் உடைத்தது நீங்கள்தான். பின்னர் மீளவும் கூட்டமைப்புடன் சேர்ந்தீர்கள். 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் காலத்திலும் கூட்டமைப்பிலிருந்து வெளியேறுவதற்கான எத்தனங்களை முன்னெடுத்திருந்தீர்கள். இறுதியாக கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் கூட்டமைப்பிலிருந்து மீண்டும் வெளியேறினீர்கள். கூட்டமைப்பிலிருந்து வெளியேறுவதும், மீண்டும் இணைவதும் என்ற உங்களின் இந்தச் செயற்பாட்டை எப்படி எடுத்துக் கொள்ளலாம்?**

ப: நீங்கள் கூறிய வெளியேறுவது , இணைவது என்ற வார்த்தைப் பிரயோகங்கள் கூட பொருத்தமற்றது.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்சவையும், சரத் பொன்சேகாவையும் தமிழ் மக்கள் ஆதரிக்க முடியாது. இவர்கள் இருவருமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்று நாங்கள் கூறியது எவ்வளவு தூரம் உண்மை என்பதை நண்பர் சரத் பொன்சேகா அண்மையில் நிரூபித்திருக்கின்றார். நாங்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் கூட்டமைப்பிலிருந்து வெளியேறவில்லை. கூட்டமைப்பு எங்களைப் புறக்கணித்தது. தேர்தலுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டபோது நாங்கள் புறக்கணிக்கப்பட்டோம். அதையிட்டு நாங்கள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் மீண்டும் ஓராண்டுக்குள்ளேயே ரெலோ இயக்கம் நாங்கள் இணைந்து கொள்ளவேண்டும் என்று நடவடிக்கை எடுத்து அதன் விளைவாக நாங்கள் இணைந்து கொண்டபோது இயல்பாகவே நாங்கள் கூட்டமைப்புக்குள் வந்தோம். பின்னர் தொடர்ந்து செயலாற்றினோம். 2012ஆம் ஆண்டு கிழக்கு மாகாணசபைத் தேர்தலிருந்து அதன் பின்னரான ஒவ்வொரு தேர்தலிலும் கூட்டமைப்பு பெற்ற வெற்றியில் எங்களின் பங்களிப்பு இருந்தது.

## எங்களின் முடிவு சரியே!

கடந்த 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் பிரச்சினை ஏற்பட்டது. அதிலும் நாங்கள் எடுத்த நிலைப்பாடு எவ்வளவு தூரம் சரியானது என்பதைக் காலம் நிரூபித்திருக்கின்றது. சஜித் பிரேமதாச தனக்கு வாக்களித்த மக்களுக்கு தன்னுடைய காலணிகளை கழற்றி முகத்தில் அடிக்காத குறையாக நடந்து கொண்டிருக்கின்றார். நாடாளுமன்றத்தில் விக்னேஸ்வரனின் கன்னியுரைக்கு எதிராக கூச்சல்போட்ட தனது கட்சியினரை ஒரு கண்பார்வையில், ஓர் விரல் அசைவிலே சஜித் பிரேமதாசாவால் அடக்கி வைத்திருக்க முடியாதா? முடியும். அவருடைய அனுமதியுடன்தான் அன்று அவரது கட்சியினர் அவ்வாறு செய்தார்கள். இதைக் கட்டுப்படுத்த முடியாத ஓர் தலைவரா சஜித்? அவர் தற்போது தன்னை தீவிர சிங்கள பௌத்தனாக காண்பிக்க முயற்சிக்கின்றார். மஹிந்த பற்றி நான் பேசவேண்டியதில்லை. தமிழ் மக்கள் அவருக்கு வாக்களித்ததில்லை. கோத்தா பற்றி நான் பேசவேண்டியதில்லை. தமிழ் மக்கள் அவரை நிராகரித்தி ருந்தார்கள். தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்து வாக்களித்த சரத் பொன்சேகாவும், சஜித் பிரேமதாசவும் தாங்கள் யார் என்பதை நிரூபித்திருக்கின்றார்கள்.

இதனால் நாங்கள் சொன்னோம், இப்போதும் சொல்கின்றோம், சிங்கள அரசியல் சக்திகளுக்கிடையிலான அதிகாரப் போட்டிக்குள்ளே நாங்கள் அநாவசியமாக நுழையக் கூடாது. நாங்கள் ஏதோ எல்லாவற்றையும் சாதிக்கக் கூடியவர்கள் என்ற தோரணையிலே அநாவசியமாக பல சந்தர்ப்பங்களில் எங்கள் மூக்குகளை நுழைத்திருக்கின்றோம். ஈற்றிலே நாங்கள்தான் அடிவாங்கியிருக்கின்றோம். அவர்கள் தாராளமாக மோதட்டும். நாங்கள் ஒதுங்கியிருக்கவேண்டிய சூழ்நிலைகள் இருக்கும்போது ஒதுங்கித்தான் ஆகவேண்டும். எந்தவொரு சிங்கள பௌத்த ஆட்சித் தலைவரும் ஒற்றை ஆட்சியிலே கைவைக்க முடியாது. பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள விசேட அந்தஸ்து தொடர்பில் ஓர் எழுத்தைக்கூட மாற்ற முடியாது. அந்தளவுக்கு பௌத்த சிங்கள தீவிரவாதம் பெரும்பான்மை மக்களின் அரசியலை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே இந்த் விவகாரத்தில் காய்களைப் புத்திசாதுரியமாக நகர்த்தவேண்டும். நாங்கள் நகர்த்தத் தவறியிருக்கின்றோம்.

ஒட்டுமொத்த இலங்கையின் தலைவிதியை தீர்மானிக்கின்ற சக்தி எங்களின் கைகளிலே இருப்பது போன்ற மனோவியாதியிலிருந்து நாங்கள் விடுபட வேண்டும். அது முக்கியமானது. ஆனால் இதைப் பலர் புரிந்துகொள்கின்றார்கள் இல்லை.

## அது 2018, இது 2020!

**கே: தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு அரசு தடையுத்தரவைப் பெற்றது. கடந்த 2018ஆம் ஆண்டு இவ்வாறானதொரு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு அது பின்னர் நீக்கப்பட்டிருந்தது. இம்முறை நீதிமன்றங்கள் ஊடாக தடை உத்தரவை ஏன் நீக்க முடியவில்லை?**

ப: இப்படியான நிகழ்வுகள் தொடர்பில் முறையான சட்டவிதியின் கீழ் தடையுத்தரவுகள் 2018 ஆம் ஆண்டோ அல்லது இப்போதே எந்தவொரு நீதிமன்றத்திலும் பொலிஸ் தரப்பால் விண்ணப்பிக் கப்பட்டிருக்கவில்லை. சில பல சமூகமட்டத்திலான அசௌகரியங்களை நீக்குவது தொடர்பான சட்டவிதியின் கீழ்த்தான் பொலிஸார் விண்ணப்பித்திருந்தனர். இது கேலிக்கூத்தான ஒன்று. நீதிமன்றத்தில் எனது சமர்ப்பணத்தில் அதை நான் விலாவாரியாகக் குறிப்பிட்டிருந்தேன்.

இந்த முறை வடக்கு,கிழக்கிலே எந்தெந்த நீதிமன்றங்களில் பொலிஸார் விண்ணப்பங்களைச் செய்தார்களோ அங்கெல்லாம் தடை வழங்கப்பட்டது. இது நீதிமன்றம் சம்பந்தப்பட்ட விவகாரம். நீதிமன்றங்கள் மீது எங்களுக்கு நம்பிக்கையுண்டு. அந்த வரையறைக்குள் நின்று பதிலளிப்பதானால் அதை நான் ஒரே வரியில் சொல்ல விரும்புகின்றேன். அது 2018ஆம் ஆண்டு. இது 2020ஆம் ஆண்டு. இதுதான் வேறுபாடு புரிந்து கொள்ளுங்கள். நான் ஒரு சட்டத்தரணி என்ற முறையில் இதனை அடித்துச் சொல்வேன்.

## மாவீரர் நாளும் தடையும்

**கே: நல்லாட்சி அரசின் காலத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகள் துயிலும் இல்லங்களில் நடைபெற்றிருந்தன. தற்போதைய சூழலில் இனி அதற்கும் அரசு தடையுத்தரவுகளைப் பெற்றுக் கொள்ளும். அதனை எவ்வாறு எதிர் கொள்ளப் போகின்றீர்கள்?**

ப: நாங்கள் எவ்வாறு கையாளப் போகின்றோம் என்பதை இப்போது நான் கூறுவது பொருத்தமானது அல்ல. அந்த நிலைமை கட்டாயம் வரும். அந்தச் சூழலில் நாங்கள் அனைவரும் கலந்துரையாடி உகந்த முடிவொன்றை எடுத்தாகவேண்டும். உரிய வழிமுறை ஒன்றை இந்தப் பிரச்சினை தொடர்பில் மேற்கொண்டாகவேண்டும். இது பெரும் பிரச்சினையாக இருக்கப் போகின்றது.

இத்தகைய ஓர் பிரச்சினை மோதலாக வெடிக்க வேண்டும் என்றும் அதன் ஊடாக தங்கள் சொந்த நிகழ்ச்சி நிரலுக்கான அடிப்படை ஒன்றை அமைத்துக் கொள்ளவேண்டும் என்று சிந்திக்கின்ற சிலர் தமிழினத்துக்குள் இருந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் போராடத் துணிந்தவர்களும் அல்லர். போராடுகின்றவர்களும் அல்லர். ஆனால் அவர்கள் ஏவிவிடுகின்றவர்கள். இங்கேயும் எங்களில் சிலர் ஏவப்படுகின்ற நிலையில் இருந்து கொண்டிருக்கின்றார்கள். 'ரிமோட் கொன்ரோலில்' செயற்படுகின்ற சில நண்பர்களை நான் நன்றாக அறிவேன். அவர்களுக்குத் துன்பம் ஏற்பட்டால் துடித்தெழுந்து செயற்படுகின்றவர்கள் இந்த 'ரிமோட் கொன்ரோலை' இயக்குகின்ற நபர்கள் அல்லர். இங்குள்ளவர்கள் தான். இது கவலைக்குரிய விடயம். முதலில் ஒவ்வொரு அரசியல்வாதியும் தனது சொந்த மூளையின் அடிப்படையிலே பேசப்பழக வேண்டும்.

(23ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணப் பதிப்புத்துறை

## 1990 - 1995

○ தில்லைநாதன் கோபிநாத்

எண்பதுகளில் தொடங்கப்பட்டு தொண்ணூறுகளில் நிறுத்தப்பட்ட இன்னொரு பத்திரிகை திசை. ஒன்றரை ஆண்டு காலத்தில் 69 இதழ்கள் மட்டுமே வெளியான வார இதழான திசை, அரசியல், கலை, இலக்கியப் பரப்பில் ஆழமான எழுத்துச் செயற்பாட்டை முன்னெடுத்த பத்திரிகை என்றால் அது மிகையல்ல.

திசை தன்னை சற்றடே றிவியூவின் (Saturday Review) சகோதரப் பத்திரிகை என்று அறிவித்தே வெளியாகத் தொடங்கியது. சற்றடே றிவியூ எண்பதுகளில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான ஆங்கில வாரப் பத்திரிகை ஆகும். 1982.01.30 ஆம் திகதி அன்று வெளியாகத் தொடங்கிய 'சற்றடே றிவியூ'வைத் தொடங்கிய பெருமை ஈழநாட்டை ஆரம்பித்த கலா நிலையத்தினையே சாரும். 'சற்றடே ரிவியூவை'னைத் தொடங்கிய இயக்குநர் சபையின் தலைவராக ஈழநாடு நிறுவுநரான கே. சி. தங்கராஜா விளங்கினார். எஸ். சிவநாயகம் அதன் முதலாவது ஆசிரியராக இருந்தார்.


பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் முதலில் தொடங்கிய பத்திரிகைகள் யாவும் தமிழையும் ஆங்கிலத்தையும் கொண்டனவாகவோ அல்லது ஆங்கிலத்தில் மட்டும் அமைந்தனவாகவோ இருந்தன. இருபதாம் நூற்றாண்டில் இத்தகைய ஆங்கிலப் பத்திரிகைகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்தது. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து தொடர்ச்சியான ஆங்கிலப் பத்திரிகை எதுவும் வெளிவரவில்லை.

அவ்வகையில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஆங்கிலப் பத்திரிகை வெளியீட்டை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த பத்திரிகையாக 'சற்றடே ரிவியூ' அமைந்தது. 1982ஆம் ஆண்டு ஒக்ரோபர் முதலாம் திகதியன்று 'சற்றடே ரிவியூ'வின் வெளியீட்டு உரிமையை நியூ ஈரா பப்ளிகேசன்ஸ் (New Era Publications Limited) பொறுப்பேற்றுக் கொண்டது. 1982ஆம் ஆண்டில் வெளியாகத் தொடங்கிய 'சற்றடே ரிவியூ' 1987ஆம் ஆண்டு ஒக்ரோபரில் இந்திய இராணுவத்துக்கும் புலிகளுக்கும் இடையிலான போர் வெடிக்கும் வரை ஏறத்தாழ ஆறு ஆண்டுகளில் 235க்கும் அதிகமான இதழ்கள் வெளியாகிய நிலையில் தனது பயணத்தை முடித்துக் கொண்டது.

'சற்றடே ரிவியூ' தடைப்பட்டு சுமார் ஒன்றே கால் ஆண்டுகளுக்குப் பிறகு யாழ்ப்பாணம் இந்திய இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த காலத்தில் 1989.01.14 சனிக்கிழமையன்று நியூ ஈரா பப்ளிக்கேசனிலிருந்து திசை வெளியாகத் தொடங்கியது. திசையின் ஆசிரியராக எழுத்தாளர் மு.பொன்னம்பலம் பொறுப்பேற்றிருந்தார். ஏ. ஜே. கனகரட்னா, அ. யேசுராசா போன்றோரும் திசைக்குப் பங்களித்தனர். பல் கலைக்கழகம் சார்ந்தோரும் பங்களித்தனர் எனக் கூறப்படுகிறது. திசை முதல் இதழில் 'சற்றடே ரிவியூ'வின் காமினி நவரத்தினா மற்றும் ஈழநாடு, உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளின் ஆசிரியர்களின் வாழ்த்துரைகள் இடம்பெற்றன.

அரசியலுடன் மட்டும் நின்றுவிடாத கலை இலக்கியச் செயற்பாட்டு இதழாகவே திசை தன்னை முன்வைத்தது. 'சற்றடே ரிவியூ' அரசியல் கருத்துக்களுக்கும் அரசியல் ஆய்வுகளுக்குமே முக்கியத்துவம் கொடுத்தபோதும், திசை சமூக, பொருளாதார, கலை, கலாசார, கல்வி, அறிவியற் பரப்புக்களில் செயற்படும் என்பதனை முதல் இதழில் நமது பணி என்ற பத்தியில் திசை அறிவித்தது. சுரணையற்றுத் தூங்கிக் கிடக்கும் ஒரு சமூகத்தை அச்சமூகத்தின் சிந்தனையாளர்களின் கலை, இலக்கிய, கலாசாரப் படைப்புக்களும் அவை பற்றிய ஆய்வுகளுமே தட்டியெழுப்ப முடியும் என திசை நம்பியது. ஒரு மணிக்கொடி காலம் போல- ஒரு ஈழ கேசரி காலம் போல ஒரு திசைக் காலத்தை உருவாக்கும் விருப்பமும் முதல் இதழிலேயே பதிவாகியுள்ளது.


திசை THISAI
ஜே.வி.பியின் இந்தியச் சாய்வு
உள்நோக்கம் என்ன?


Saturday Review SRI LANKA
Editorial
Why was President Reddy's Jaffna visit cancelled?
Library foundation laying tomorrow
The only regional Engli...


திசை THISAI
வன்செயல்களால் பாதிப்புற்ற வட கிழக்கு மக்கள்:
அவர்களின் எதிர்காலம்?

அறிவித்துக் கொண்டது போலவே ஆழமான உள்ளடக்கத்துடன் திசை வெளியானது. திசையின் முதலாவது இதழிலேயே 1988ஆம் ஆண்டில் காணாமற் போன கே. கந்தசாமி பற்றிய முழுப்பக்கக் கட்டுரை வெளியானது. அவ்வகையில் துணிச்சலாகவே திசையின் தொடக்கம் அமைந்தது எனலாம். ஏ3 அளவில் 8 முதல் 16 பக்கங்களில் வெளியான திசையில் முதல், கடைசிப் பக்கங்களில் சில செய்திகள் வெளியாகின. நிகழ்வுகள் எனும் குறுஞ்செய்திகளைக் கொண்ட பகுதியும் வெளியானது. அவ்வப்போது போர் நிலைமைகள் தொடர்பான கட்டுரைகளும் இடம்பெற்றன. இவை தவிர பெரும்பாலான பகுதிகள் கட்டுரைகளையும் இலக்கிய ஆக்கங்களையும் கொண்டிருந்தன.

இலக்கியப் பகுதியைப் பொறுத்தவரை திசையின் சிறுகதை எனும் பகுதியில் புதிய சிறுகதைகள், 9 முக்கிய பழைய சிறுகதைகளின் மறுபதிப்புக்கள், மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் வெளியாகின. ஒவ்வொரு இதழிலும் சில கவிதைகள் இடம்பெற்றன. மொழிபெயர்ப்புக் கவிதைகளும் வெளியானதோடு இளம் கவிஞர்களுக்கும் இளவட்டம் பகுதியில் இடம் வழங்கப்பட்டது. சில குறுநாவல்களும் மொழிபெயர்ப்பு நாடகங்களும் வெளியாகின.

கலைச்சாரல், தூவானம் பகுதிகளில் சினிமா, ஓவியம், சிற்பம், இசை, நாடகம் எனப் பல்வேறு கலைகள் சார்ந்த பல்வேறு கட்டுரைகள் தொடர்ந்து வெளியாகின. நூல் அறிமுகங்கள், நேர்காணல்கள், அஞ்சலிகள், கலை இலக்கியப் பத்திகளும் திசையில் இடம்பெற்றன.

இலக்கியம், கலை, பண்பாட்டுக்கு வெளியே விளையாட்டுக்கள், அறிவியல், மருத்துவம் போன்ற பகுதிகளையும் திசை கொண்டிருந்தது. ஆனால் இந்தப் பகுதிகளும்கூட, சமூகப் பொறுப்புணர்வை முன்வைக்கும் வகையிலான உள்ளடக்கத்தையே கொண்டிருந்தன. எடுத்துக்காட்டாக திசையின் முதல் இதழின் விளையாட் டுக்களம் பகுதி ஒலிம்பிக் போட்டிகளால் நகர்ப்புற ஏழைகள் எதிர்நோக்கும் சிக்கல்களை விரிவாக அலசுவதாக இருந்தது. இவை தவிர உருளும் உலகில் எனும் பகுதியில் சர்வதேச விவகாரங்கள் அலசப்பட்டன.

> “சுரணையற்றுத் தூங்கிக் கிடக்கும் ஒரு சமூகத்தை அச் சமூகத்தின் சிந்தனையாளர்களின் கலை, இலக்கிய, கலாசார படைப்புக்களும் அவை பற்றிய ஆய்வுகளுமே தட்டியெழுப்ப முடியும் என திசை நம்பியது.”

திசை சுமார் 5000 பிரதிகள் வரை அச்சிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. கலை, இலக்கியம், சமூகம் சார்ந்த தீவிரமான உள்ளடகத்துடன் இத்தனை பரவலாக ஒரு வார இதழ் வெளியானமை யாழ்ப்பாணத்தின் பதிப்பு வரலாற்றில் அதுவே முதல் முறை எனலாம். பல புதிய எழுத்தாளர்கள் திசையில் அறிமுகமாயினர். பல்வேறு புதிய பார்வைகளும் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன. ஆயினும்திசையை நீண்ட காலம் தொடர்ந்து வெளியிட இயலாது போயிற்று.

1989ஆம் ஆண்டில் வாரம் தவறாமல் 51 திசை இதழ்கள் வெளியாகின. 1990 ஜனவரியில் இரண்டு இதழ்களே வெளியாகின. இந்திய இராணுவம் வெளியேறிக் கொண்டிருந்த அக்காலத்தில் புலிகள் துணை இராணுவக் குழுக்கள் மீது தாக்குதல்கள், அச்சண்டைகளில் இந்திய இராணுவத் தலையீடு என யாழ்ப்பாண நகரத்தை அண்டிய பகுதி போர்க்களமானமை திசையின் சில இதழ்கள் தடைப்பட்டமைக்கான காரணமாக இருக்கலாம். 1990ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் மே மாதம் வரையான நான்கு மாதங்கள் மீண்டும் வாரந் தவறாமல் 16 திசை இதழ்கள் வெளியாகின. 1990.05.25ஆம் திகதிக்குரிய அதன் 69ஆவது இதழுடன் திசை தனது ஊடகப் பயணத்தை முடித்துக் கொண்டது.

திசை நிறுத்தப்பட்ட காரணம் இதுவரை தெளிவாகப் பதிவு செய்யப்படவில்லை. இந்திய இராணுவ காலத்தில் வெளியாகத் தொடங்கிய பத்திரிகை என்ற வகையில் புலிகளுக்கு அதிருப்தி இருந்ததாகவும், ஈழநாதம் வெளிவரத் தொடங்கிய நிலையில் வேறு பத்திரிகைகள் வெளியாவதை அவர்கள் விரும்பவில்லை என்றும் சொல்லப்படுவதுண்டு. அதே வேளை திசையின் உள்ளடக்கம் புலிகளுக்கு எதிராக அமைந்ததாகவும் தெரியவில்லை. மூன்றாவது மனிதன் நேர்காணலில் மு.பொன்னம்பலம் “பல்வேறு காரணங்களால்” திசையைத் தொடர முடியவில்லை என்று பதிவு செய்துள்ளார்.

அக்கால நிலைமைகள் கறுப்பு வெள்ளையாக ஒரு காரணத்தைச் சொல்ல முடியாதவையாக இருக்கலாம். திசையுடன் தொடர்பான பலர் இப்போதும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள் என்ற வகையில் அவர்கள் திசையின் தொடக்கம், பயணம், முடிவு தொடர்பான தகவல்களை விரிவாக ஆவணப்படுத்த முன்வந்தால் மட்டுமே திசையின் அனுபவங்களிலிருந்து புதிய திசைகளை அடுத்துவரும் தலைமுறையினர் கண்டடையக் கூடியதாக இருக்கும்.

# வித்துவான் பதில்கள்



**1**

**வித்தூ... 20ஆவது திருத்தம் தமிழருக்கு ஆசீர்வாதமா? சாபமா?**


இ.விஜயகுமார், யாழ்ப்பாணம்.

தமிழருக்கு மட்டுமல்ல முழுநாட்டுக்குமே சாபக்கேடு. தமிழருக்குரிய உரிமையைக் குறைக்கிற ஒரே ஒரு வரம் மட்டும் போதும். எமக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனம் பிழைத்தால் போதும் என்றெல்லாம் கருதும் பெரும்பான்மையினத்தவர்கள் கண் கெட்ட பின்னர் சூரியநமஸ்காரத்துக்கு வருந்துவார்கள்.

**2**

**வித்துவானே, பழைய திரைப்படப் பாடல்கள் பெரும்பாலானவை மக்களின் சிந்தனையைத் தூண்டுபவையாக அமைந்தவை. இப்போதைய பாடல்களும் அப்படி உள்ளனவா?**

மோகன், வவுனியா.




ஏன் இல்லை. ஜெயம்ரவியின் திரைப்படம் ஒன்றில் 'பல்பு' வாங்கிட்டேன். - மச்சான். பல்பு வாங்கிட்டேன்" என்று ஒரு பாடல் வருகிறதல்லவா? அவர் குண்டு பல்ப் வாங்கினாரா? வொரண்டி பல்ப் வாங்கினாரா? என்ற சிந்தனையை இது எம்முள் தூண்டவில்லையா?

**3**

**டியர் வித்தப்பா, செல்லரம்மானின் திரைச்சேலை பற்றி சஞ்சீவியில் ஒரு கட்டுரை வந்தது. சுவாமிக்குக் கொடுத்த திரைச்சேலையில் தமது பெயரை எழுதுகிறார்கள் என்று கூறப்பட்டது. கோயிற் சுவர்களில் தமது காதலியின் பெயரை எழுதுகிறார்களே எதற்காக?**

அனோகா, கிளிநொச்சி.

பெயரை வாசித்துப் பார்த்துவிட்டாவது அந்தக் காதலியை தன்னுடன் கடவுள் சேர்த்து வைப்பார் என்ற நம்பிக்கை தான் காரணம்.

**4**

**வித்தூ கைகளைக் கழுவினால் மட்டும் கொரோனா பரவாது என நினைக்கிறீர்களா?**

எஸ்.சோபா, நாயன்மார்கட்டு

இல்லை, எல்லாவற்றையும் கழுவ வேண்டும்.



**5**

**வித்துவானே வேலியே பயிரை மேய்கிறது என்கிறார்களே அதன் விளக்கம் என்னவோ?**

இந்திரஜித், தண்ணீரூற்று, முல்லைத்தீவு.

பல பாடசாலைகளில் இப்போது நடக்கும் சமாச்சாரங்களை விளக்கும் பழமொழி இது.





sanjeevi@uthayan.com

நீங்களும் கேள்விகள் கேட்கலாம்...

எழுதி அனுப்புங்கள்

**வித்துவான் பதில்கள்**

உதயன் சஞ்சீவி

இல.361, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

0773165555

---

# மணிக்கதை

○ மௌனா





## வினா



மேடையில் ஞானி ஒருவர் தத்துவ
உபதேசம் செய்து கொண்டிருந்தார்.
அமைதியான மக்கள் கூட்டம்
எதிரே......
ஞானி சொன்னார்,
ஒருவேளை மாத்திரம் உண்பவன்
யோகி. இருவேளை உண்பவன்
போகி.... மூன்று வேளையும்
உண்பவன் ரோகி......
கூட்டத்தின் இடையே இருந்து எழுந்த
ஒட்டி உலர்ந்த தோற்றமுடைய
ஒருவன் கேட்டான்...
அப்படியானால் ஒரு வேளைகூட
சாப்பிட வழியில்லாதவன்
எப்படியானவன்?
நிமிர்ந்து பார்த்த ஞானி
மௌனியானார்.
கேள்வி கேட்ட பிச்சைக்காரன்
ஞானியாகத் தொடங்கினான்.

---

# பிஞ்சு தூரிகைகள்





**பிரதீபன் பிரியங்கன்,**
தரம்- 9
யா/வட்டு இந்துக் கல்லூரி.



**கி.யதுசன்**
யா/மகாஜனக்கல்லூரி
தரம்:8



**நி.ஹரிசாலன்,**
தரம்- 4
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
அங்கத்துவ இல: 40

# R2F:



(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

**நம்புபவர்-1**

"நான் இந்தத் திட்டம் தொடர்பாக புலம்பெயர்ந்து வசிக்கும் உறவினர் ஒருவரூடாகவே அறிந்துகொண்டேன். திட்டத்தில் நம்பிக்கை வந்ததால் இணைந்தேன். நான் இலங்கையில் எவரையும் இணைக்கவில்லை.புலம்பெயர் உறவினர்களையே இதில் இணைத்துள்ளேன்.திட்டம் பற்றி கூறி 'லீடராக' உள்ளவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி நம்பிக்கை ஏற்பட்ட பின்னரே அவர்களும் இணைந்த னர். நான் ஒரு லட்சம் ரூபா தான் முதலீடு செய்தேன். ஆனால் இரண்டு லட்சம் ரூபா பணம் இதுவரை எடுத்துள்ளேன்.

'பிட் கொயின்' கணக்கை இலங்கையில் மாற்றுவதால் வரி செலுத்த வேண்டும் என்பதால் புலம்பெயர் உறவு ஒருவரின் கணக்கில் மாற்றி அவரூடாக என்னுடைய கணக்குக்கு பணம் வந்துள்ளது . நான் இலங்கையில் எவரையும் இத்திட்டத்தில் இணைக்கவில்லை"
என்கிறார் அவர்.

**நம்புபவர்-2**

" யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே இயங்கிய பிரமிட் திட்டத்தில் செயற்பாட்டாளராக இருந்து, இப்போது R2F இல் முதலீடு செய்துள்ளேன். 'நெட்வேர்க் மார்கற்றிங்' தொடர்பில் படித்துள்ளேன். முன்னர் இயங்கிய நிறுவனம் தடைசெய்யப்பட்டதாகச் சொல்ல முடியாது. இப்போதும் யாழ். பலாலி வீதியில் அலுவலகம் உள்ளது. நான் அதிலிருந்து விலகி இப்போது R2F இல் முதலீடு செய்துள்ளேன். இலங்கையில் யாரையுமே நான் இணைக்கவில்லை.எனக்கு கீழ் 200 பேரளவில் உள்ளார்கள். அனைவரும் வெளிநாடுகளில் வசிப்பவர்கள்.

இலங்கையில் பிட்கொயின்களை மாற்ற முடியாது என்பது பிழை. மாற்ற முடியும். கொழும்பில் அதற்கான இடம் உள்ளது. அதற்கென உள்ள இணையத்தளம் ஊடாக மாற்றி யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கிகளில் இரண்டு தடவை பணம் எடுத்துள்ளேன்" என்று குறிப்பிடுகின்றார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இன்னொருவர்.

**இடையில் விலகினால் பணம் கிடையாது**

இத் திட்டத்தில் இணைந்து கொள்ளும் நபர் ஒருவர்,இடையில் விலகிக்கொள்ள நினைத்தாலும் கட்டிய பணத்தை மீளப் பெற்றுக்கொள்ள முடியாது. வேண்டுமானால் அவருடைய கணக்கை வேறு ஒருவருக்கு மாற்றிக் கொடுக்க முடியும். இவ்வாறான நிலையில் புலம்பெயர்ந்து வாழும் ஒருவரைத் தொடர்புகொண்ட யாழ். வாசி ஒருவர் " நான் இந்த திட்டத்தில் காசு போட்டுவிட்டேன் .. லீடர்கள் எல்லாம் வெளிநாட்டில தான் இருக்கினம். எனக்கு லாபமும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் அவையோட கதைத்து என்னுடைய காசை வேண்டித் தருவியா" என்ற வேண்டுகோளை முன்வைத்துள்ளார் . அதற்கு அந்த உறவினர் "கதம்... கதம்.." (முடிந்தது முடிந்ததுவே..)என்று மட்டும் கூறிவிட்டு தொலைபேசியை துண்டித்துள்ளார்.

தனது ஒரேயொரு வாழ்வாதாரமாக இருந்த ஓட்டோவை இந்தத் திட்டம் மீது ஏற்பட்ட ஆசையால் விற்ற ஒருவர், ஐந்து மடங்கு காசு வராவிட்டாலும் பரவாயில்லை, போட்ட காசு வந்தாலே போதும் என்ற நிலையில் இருக்கிறார்.

**போட்டது திரும்ப வருமா?**

இன்னொரு பெண், வெளிநாடொன்றில் இருக்கும் தனது கணவர் அனுப்பிய பணத்தில் சில லட்சங்களை இதில் முதலீடு செய்துள்ளார்.

"கணவருக்கு இது தெரியாது .. அவருக்கு இப்படியான திட்டங்களில் நம்பிக்கை இல்லை. லாபம் கிடைத்த பின்னர் சொல்லலாம் என்று பார்த்தேன். இப்போது பயமாக இருக்கிறது. அவையோட கதைத்து பணத்தை எடுக்கலாமா?" என இப்போது அங்கலாய்க்கிறார் அவர்.

**யாழ்.வர்த்தகர்களும் தப்பவில்லை**

தீர விசாரிக்காமலும், திட்டங்கள் தொடர்பில் பூரண அறிவு இல்லாமலும் ,நாட்டின் சட்ட திட்டங்களை அறிந்துகொள்ளாமலும் செயற்பட்டால் இவ்வாறான நிலை எற்படுவது தவிர்க்க முடியாததே. இப்போது இந்தத் திட்டங்கள் தொடர்பில் யாழ். நகர வர்த்தகர்களிடையே ஆசையூட்டப்பட்டு வருவதாகவும் பலர் முதலீடு செய்துவிட்டு "அணில் ஏறவிட்ட நாய் போல " ஏக்கத்துடன் காத்திருப்பதாகவும் தகவல்கள் காற்று வாக்கில் வந்து போகின்றன. "பேராசை பெரு நட்டம்" என்று சிறு வயதிலேயே கற்றிருந்தாலும் இன்னமும் ஏமாந்து கொண்டே இருக்கின்றோம். ஏமாளிகள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்கள் புதிய புதிய பெயரில், புதிய புதிய வடிவில் வந்துகொண்டே தான் இருப்பார்கள்.

○ மின்னல்

# திரடி அரங்கு





**மைலோ என்ன சாதி?**

மாடு வெட்டுவதற்கு தடை போட அரசு ஆலோசித்து வரும் நிலையில், அந்த யோசனைக்கு ஆதரவு தெரிவித்து பல அமைப்புகளும் கூட்டங்களை நடத்தியிருந்தன.

அப்படி ஒரு கூட்டம் சில வாரங்களுக்கு முன்னர் நல்லூர் ஆதீன மண்டபத்தில் நடந்தது.கூட்டத்துக்கு வந்தவர்கள் மாடு பற்றிக் கதைத்ததை விடவும், மஹிந்த பற்றிக் கதைத்ததே அதிகம். எல்லோரும் தவறாது தங்கள் பங்குக்கு மஹிந்த புராணம் பாடிவிட்டே ஓய்ந்தனர். இதன் பின்னரே கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மாடுகளைக் காப்பது பற்றியும், அவற்றை வெட்டாமலிருக்க என்னென்ன செய்யவேண்டும் என்பது பற்றியும் கலந்துரையாடத் தொடங்கினர். அந்தணர் ஒருவர் எழுந்து

" உலகத்திலே சாதி என்ற ஒன்றில்லை. ஆனால் இப்போது இரு சாதிகள் உள்ளன. மாடு போன்ற அப்பாவி ஜீவன்களை உண்பவர்களே கீழ்ஜாதியினர்.மற்றையோர் எல்லோரும் உயர்ந்த சாதியினரே" என புதிய சாதி முறை பற்றியும் நீட்டி முழக்கினார். எல்லோரும் கைதட்டி வரவேற்றனர். கூட்டம் முடிவுக்கட்டத்தை நெருங்கிய போது எல்லோருக்கும் குளிர்பானம் ரம்ளர்களில் வந்தது. அங்கிருந்த அந்தணர்களுக்கு மட்டும் அந்தக் குளிர்பானங்களுக்குப் பதிலாக மைலோ பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டன. அப்படியானால்; மைலோ பைக்கற் உயர்சாதியா?



**நல்லா வருவீங்கடா...**

எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்யாமல், எதைச் செய்யக்கூடாதோ அதைச் செய்வது எங்களின் வழக்கமாகி விட்டது. மிக நீண்டகாலமாகவே ஈழச் சினிமா பற்றிய பல முயற்சிகள் நடக்கின்ற போதும் எல்லாமே சாண் ஏற முழம் சறுக்கிய கதைகள்தான். சின்னச் சின்ன முன்னேற்றங்களைத் தவிர உருப்படியாக எதுவும் நடக்கவில்லை. ஒருகட்டத்தில் கிழமைக்கொரு குறும்படம் வெளியாகிய நிலையும் இருந்தது. ஆனால் மெல்ல அது தேய்ந்து இப்போது வருடத்துக்கு ஒரு குறும்படம் வருவதே அதிசயம் என்ற நிலை.அவற்றிலும் எமக்கான தனித்துவத்தோடு வரும் படங்களை விரல்விட்டு எண்ணி விடலாம். பெரும்பாலானவை தென்னிந்திய கானமயில் சினிமாக்களைக் கொப்பி பண்ண நினைக்கும் வான்கோழியாட்டங்களே. இந்த லட்சணத்தில் ஈழத்துச் சினிமாவில் இயக்குநர் எனச் சொல்லிக் கொள்ளும் ஒருவர்,குறும்பட நடிகை ஒருவரை பாலியல் ரீதியான உறவுக்கு அட்ஜெஸ்மெண்ட்' செய்யச் சொல்லிக் கேட்கும் ஒலிப்பதிவு ஒன்று அண்மைக்காலமாக உலவுகிறது. தென்னிந்திய சினிமாவின் நல்ல பண்புகளைக் கற்றுக்கொள்ளாமல் , இப்படி நடிகைகளைத் தவறாக் அணுகுவதை மட்டும் 'சிக்கென' பிடித்திருக்கிறார்கள். நல்லா வரும் ஈழத்துச் சினிமா!

○ மாயன்

**புதிர் 17**




"இப்படி மிகச் சாதாரணமான புதிரைக் கேட்டு மாட்டிக் கொண்டாயே மானிடா" என்று அந்தச் சிரிப்பினூடே சொன்னான் அசுரன்.

" சிரிப்பதை விடுத்து பதிலைச் சொல்லு பார்ப்போம்" என்று குரலிலே துணிவைக் காட்டினான் இளஞ்சந்திரன்.

" ஒவ்வொன்றாக இருக்கும் போது ஒரு தவளையும், இரண்டிரண்டாக இருக்கும் போது ஒரு பூவும் மிஞ்சினால், பூக்களை விட தவளைகள் கூடுதலாக இருக்க வேண்டும். அப்படியானால் என்ன விடை வரும்?" அசுரன் இப்போது மனக்கணக்குப் போடத் தொடங்கினான்.

" சரி நீ கணக்குப் போடும் வரை பொறுத்திருக்க முடியாது.விரைவாகப் பதிலைச் சொல்" இளஞ்சந்திரன் அவசரப்படுத்த, அசுரன் கணக்கை பிழையாகக் கணித்துவிட்டான்.

" நான்கு பூக்களும் மூன்று தவளைகளும்" என்று சொல்லிவிட்டான்.

இப்போது இளஞ்சந்திரன் சிரிக்கத் தொடங்கினான்.

" தவறிழைத்துவிட்டாயே அசுரா" என்றான்.

" என்ன தவறு?" என்று சிந்தித்த அசுரன், " ஓ, கொஞ்சம் அவசரப்பட்டுவிட்டேன்.. அதனாலென்ன? இப்போது சொல்கிறேன், நான்கு தவளைகளும் மூன்று பூக்களும் தான் சரியான விடை." என்றான் இறுமாப்போடு.

" அப்படியெல்லாம் சமாளிக்க முடியாது. சொன்னது சொன்னதுதான். ஒருமுறை மட்டுமே சந்தர்ப்பம். இனி நீ உன் உயர்ந்த உருவத்தை இழந்து எம்மைப் போல சாதாரண உருவத்தை அடைவாயாக" என்று உரத்த குரலில் சாபமிடுவதைப் போலச் சொன்னான் இளஞ்சந்திரன்.

என்னே அதிசயம்.

அடுத்தநொடி கண்ணைப் பறிக்கும் மின்னலொன்று பளிச்சிட்டது.பெரும் இடி முழங்கியது. கண்களை இறுக மூடியிருந்த இளஞ்சந்திரன், தன்னைப் பிடித்திருந்த அசுரனின் பிடி சடாரெனத் தளர்வதை உணர்வதற்கிடையில் கீழே தொப்பென விழுந்தான். என்ன நடக்கிறது என அவனால் ஊகிக்க முடியவில்லை. ஆனால் ஏதோ அசாதாரணமான நிகழ்வொன்று நடப்பதை மட்டும் உணர்ந்தான்.

ஆனால் என்ன நடக்கின்றது என்பதை கண்ணைத் திறந்து பார்த்தால் பார்வை போய்விடுமே. என்ன செய்வதென அவனுக்குப் புரியவில்லை.

காதுகளைக் கூர்மையாக்கினான்.

அசுரன் நடந்து போனமைக்கான எந்த ஒலிச்சுவடும் இல்லை. "அப்படியானால் இங்கே தான் அவன் இருக்கிறான். எப்படி இப்போது தப்பிப்பது?"

இளஞ்சந்திரனது மனது பலவாறாகச் சிந்தித்தது. அப்போது அவன் தோளில் ஒரு கரம் விழுந்தது. நிச்சயமாக அது அசுரனின் கை தான்.ஆனால்...

(புதிர்கள் தொடரும்)



# கீரிமலை சமாதிகள்

○ பொக்கிசன்

சமாதி மணி கேக்குது. சமாதி சைவம் மணியடிக்குது. நேரம் நாலு மணி. இந்தச் சைவம் சரியா நாலு மணிக்கு அலாரம் வைச்சிட்டு விடியப்பறம் நாலு மணிக்கு எழும்பி ஒவ்வொரு நாளும் மணியடிக்கிறது. சிவன் கோயிலிலை கூட ஆறு மணிக்குத்தான் மணி அடிக்கிறவை. சிவன் கோயில் பெரிய கோயில். சரித்திரப்பிரசித்தி பெற்ற கோயில். அப்பிடியிருந்தும் சிவன் கோயிலிலை ஆறு மணிக்குத்தான் மணி அடிக்கிறது. ஆனா இந்தச்சைவம் விடியப்புறம் நாலு மணிக்கு எழும்பி ஒவ்வொரு நாளும் மணியடிக்கும். எங்கடை கோயிலுக்கு முன்னாலை தான் கிடக்குது குழந்தைவேல் சுவாமி சமாதி. அதுக்கு பூசை பண்ணுறதுக்குத்தான் சைவத்தை நியமிச்சுக் கிடக்கு. உந்தச் சைவம் கொடிகாமத்திலை இருக்கிறதாம். சமாதிக்கு பூசை பண்ணுறதுக்காக சமாதியிலை கொண்டு வந்து இருத்திக்கிடக்கு .

சைவம் குடும்பி முடிஞ்சிருக்கிறது. சில நேரம் சைவம் எங்கையாவது போறதெண்டா என்னைப் பூசை பண்ணச் சொல்லிக் கேக்கும். நானும் ஓமெண்டு பூசை பண்ணுறனான். சைவம் "இது சமாதி இல்லை சிவன் கோயில்" எண்டு சொல்லுறது வழக்கம் . உண்மை தான் ஒரு கோயில் மாதிரித் தான் கிடக்குது சமாதி. பிள்ளையார், நந்தி, பலிபீடம் எல்லாம் கிடக்குது; கிணறும் வெட்டிக்கிடக்கு. அந்தக்கிணறு கூட கண்டகல்லிலை பொழிஞ்சு கட்டிக்கிடக்கு. சமாதியின்ரை வடக்குப்பக்கமா சைவம் இருக்கிறதுக்கு வீடும் கட்டிக்கிடக்கு. மண்ணாலை மெழுகின நிலம். முன்னுக்கு கிடுகுத் தட்டி. முன்னுக்கு முல்லைப்பந்தல். சைவம் பாவிக்கிறதுக்கு வீட்டோடை சேர்த்து தனிக்கிணறு வேறு. சைவத்தின்ரை சின்னம்மாவும் சமாதியிலை தான் இருக்கிறா. அந்த மனிசி உச்சிக்கொண்டை தான் போடுறது. கொண்டையை அவிட்டு விட்டா தலைமயிர் முழங்காலை முட்டும்.

வீட்டுக்கு வடக்காலை அருளம்பல சுவாமியின்ரை சமாதி கிடக்கு . அதிலை லிங்கம் இல்லை, பலிபீடம் மட்டும் தான். அதுக்கும் ஒவ்வொரு நாளும் பூசை பண்ணுறது. அருளம்பல சுவாமி பாரதியாற்றை குரு எண்டு என்னத்திலையோ வாசிச்சனான். குழந்தைவேல் சுவாமி அதை விடப் பெரிய ஆள் போலை கிடக்கு.

இதைவிட இன்னும் கன சமாதிகள் வளவுக்கை கிடக்கு. அதுகளுக்கு அந்தந்தக் குருபூசை தினத்துக்கு மட்டும் அவர்களின் உறவினர்கள் வந்து பூசை செய்து விட்டுப் போவினம். கிணத்தடியிலை வில்வமரம் நிக்குது .பஞ்சலிங்கம் ஒவ்வொரு நாளும் வந்து வில்வம்பழம் எடுத்துக்கொண்டு போய் சாப்பிடுறது. வில்வம்பழம் பச்சைக் கைச்சல். தேன் விட்டுத்தான் சாப்பிடுறது. சமாதிக்கு மேற்குப்பக்கத்திலை வன்னிமரமும் நிக்குது. நாங்கள் நவராத்திரிக்கு அதிலை தான் கொப்பு வெட்டுவம்.

இதை விட மலையடியிலை சடையம்மா சமாதியும் கிடக்கு. அதுக்கு செல்வராசாவின்ரை மச்சான்தான் பூசை பண்ணுறது. கல்வியங்காட்டு ஆக்கள் யாராவது அந்திரட்டிக்கு வந்தா, அங்கைதான் போய் செய்யிறவை. அதிலை ஒரு கிணறும் கிடக்கு. அந்தக்கிணறு சரியான தாழம்; மலைக்கு மேலை (கீரிமலை) கிடக்கிற படியா 32 அல்லது 34 அடி எண்டு பெடியள் கதைக்கிறவங்கள்.

இதுகளை விட சுடலைக்குள்ளை எங்கடை சொந்தக்கார ஆக்களின்ரை சமாதிகளும் கிடக்கு.

எங்கடை வீட்டுக்கு பக்கத்தில கோப்பாய் எம்.பி.வன்னியசிங்கத்தின்ரை சமாதி கிடக்கு . அதுக்கு உள்ளுக்கை ஒரு பலிபீடமும் வெளியிலை ஒரு பெரிய சூலமும் கிடக்கு. அதுக்கு பூசை பண்ணுறதுக்கு சின்னத்தம்பியை நியமிச்சுக் கிடக்கு. அவர் வந்து ஒவ்வொரு நாளும் பூசை பண்ணிப் போட்டு போறவர். கவுணாவத்தை வைரவர் கோயில் பூசகரும் அவர்தான். வன்னியசிங்கத்தின்ரை மனிசியும் சமாதியோடை கிடக்கிற வீட்டிலை தான் இருக்கிறா. ஒவ்வொரு நாளும் காலமையிலை சுவரோடை சாஞ்சு கொண்டு தலை கீழா நிக்கிறவா (சர்வாங்காசனத்திலை).

# யாழ். மாநகர சபையின் வரலாறு

பாகம் 18


○ ந.பரமேஸ்வரன்



(1906 - 1949)

உள்ளூராட்சி அமைச்சராக இருந்த பண்டாரநாயக்கா தலைமையிலான குழுவினர் 1939ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாத இறுதிவாரத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு மாநகர அந்தஸ்து வழங்குவது தொடர்பாக மாவட்ட நகர சபைத் தலைவர், உறுப்பினர்களுடன் கலந்துரையாடினர். அங்கு கருத்து வெளியிட்ட சுகாதார வைத்திய அதிகாரி V.நடராஜா கருத்துத் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணத்தான் இரண்டு விடயங்களுக்கு பயப்படுகிறான். ஒன்று வரிகள் அதிகரிக்கும் என்பது. மற்றையது சட்டரீதியான விடயங்கள்" என்றார். S.M. அபூபக்கர் கருத்துத் தெரிவிக்கையில், "அமைச்சர் ஏற்கனவே மக்களின் எதிர்ப்புப் பற்றிக் கூறியுள்ளார் .அத்துடன் மேலதிக வரிகள் சுமத்தப்பட்ட மாட்டாது எனவும் கூறி யுள்ளார். பின்னர் எதற்காக மாநகரசபையாக தரமுயர்த்த முயற்சிக்கிறீர்கள்.



யாழ்ப்பாணம் மாவட்ட நகரசபையாக இருந்தாலென்ன, மாநகரசபையாக இருந்தாலென்ன எப்படியாவது இருந்து விட்டுப் போகட்டுமே. கௌரவத்திற்காகவா, பெருமைக்காகவா, மாநகரசபையாக மாற்ற முயற்சிக்கிறீர்கள்? இங்கு பல மக்கள் ஒரு வேளை உணவுக்கே கஷ்டப்படுகின்றனர். எதற்காக விருப்பமில்லாத ஒரு பெண்ணைப் பலவந்தமாக ஒருவருக்கு திருமணம் செய்து வைக்க முயற்சிக்கிறீர்கள்?" என்றார்; அனைவரும் சிரித்தனர்.

இதற்குப்பதிலளித்த அமைச்சர்,

" எகொட உயன கிராமத்தினர் தனியான கிராமசபை உருவாகுவதை விரும்பவில்லை. மொறட்டுவை நகரசபையின் கீழ் நிர்வகிக்கப்படுவதையே விரும்பு கின்ற னர். ஒரு வருடத்திற்கு முன்னர் நான் அவர்களிடம் சொன்னேன், நீங்கள்தனியான கிராமசபை உருவாக்க விரும்பினால் என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள் என்றேன். இன்று வரையும் ஒரு கடிதம் கூட அவர்களிடமிருந்து வரவில்லை. யாழ்ப்பாணம் ஒரு சிங்கள நகரமாக இருந்தால் நான்எதுவித கூச்சமுமின்றி மாநகரசபையாக தரமுயர்த்தி விடுவேன். மாநகரசபையாக தரமுயர்த்துவது என்பது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விடயம். இப்போது அதை ஒத்தி வைப்பதா என்பதுதான் பிரச்சனை. மூன்று வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணம் மாநகரசபையாக தரம்யார்த்தப்படும் பட்சத்தில் நீங்கள் அதனை ஏற்றுக்கொள்வீர்களா?" என அபூபக்கரைப் பார்த்துக் கேட்டார். அபூபக்கர் பதிலளிக்கையில் "நிலைமை மாற்றமடையா விட்டால் எதிர்ப்பேன் "என்றார்.

உங்களுக்கு ஏதாவது திட்டங்கள் இருக்குமாயின் யுத்தத்தை காரணம் காட்டி ஒத்தி வைக்கலாமென அமைச்சர் தெரிவித்தார்.

இதற்குப்பதிலளித்த அபூபக்கர் "யுத்தம் ஒரு பிரச்சினையில்லை. வரி செலுத்துவோரின் வறுமை தான் பிரச்சினை" என்றார்.

அப்போது சமரக்கொடி "நீர் ஒரு நியமன அங்கத்தவரா?" என அபூபக்கரைப் பார்த்துக்கேட்டார். சமரக்கொடிக்குப்பதிலளித்த அபூபக்கர் "விரும்பியோ விரும்பாமலோ நான் இங்கு பிரசன்ன மாகியிருக்கிறேன். நான் வரி செலுத்துவோர் சங்க மத்தியகுழு உறுப்பினர். இந்தப் பிரதேச வளர்ச்சியில் அக்கறையுள்ள ஒருவன்" என்றார்.

அப்போது அமைச்சர் , பொன்னம்பலத்தைப் பார்த்து அபூபக்கரின் கருத்து பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்னவென்று கேட்டார். அமைச்சருக்கு பதிலளித்த பொன்னம்பலம் "அபூபக்கரின் கருத்துடன் நான் உடன்படுகிறேன். பெரும் பான்மையான வரி செலுத்துவோர் மாநகரசபையாக தரமுயர்த்துவதற்கு எதிர்ப்புத்தெரிவிக்கின்றனர். ஆனால் அவர் இந்த நகரத்தின் மீது அக்கறையுள்ள ஒருவர் எனக் கூறியுள்ளார். வரி செலுத்துவோரில் கணிசமானோர் மாநகரசபையாக தரமுயர்த்துவதை விரும்புகின்றனர் என்பது எனது அபிப்பிராயம். மாநகரசபையாக தரமுயர்த்தப்படும் விடயம் ஒத்திவைக்கப்படக்கூடாது" என்றார்.

உறுப்பினர் பதஞ்சலி "இந்த விடயம் தொடர்பாக, அமைச்சரே முடிவெடுக்க வேண்டும்" என்றார்.

அப்போது தலைவர் "அமைச்சர் இவ்வளவு நேரமும் பொறுமையுடன் அனைவரின் அபிப்பிராயங்களையும் கிரகித்ததற்கு நன்றி. இங்கே அமைச்சர் யாழ்ப்பாணம் ஒரு சிங்கள பிரதேசமாக இருந்தால் தான் எப்போதோ மாநகரசபையாக தரமுயர்த்தியிருப்பேன் என்றார். "ஏன்இந்தப்பாகுபாடு?" என்றார்.


தலைவரின் கேள்விக்குப்பதிலளித்த அமைச்சர் "பெரும்பான்மையினரின் அபிப்பிராயத்துக்கு மாறாக சிங்கள அமைச்சு மாநகரசபையைத் திணித்து விட்டது என்ற அபிப்பிராயம் வந்துவிடும்" என்றார்.

(தொடரும்)

சிறுகதை

# அப்பாவுக்கு அவமானம்

வீ.எஸ்.ரீ.



அவன் மகன் ஏழாம் ஆண்டில் கல்வி கற்கிறான். ஆனால் சிறுவனது பாடசாலை வரவு ஒழுங்கற்றிருந்தது. அதனால் அவன் மீது ஆசிரியர்களின் பார்வை திரும்பியது.

"உனக்கு என்ன நடந்தது? ஏன் நீ பாடசாலைக்கு ஒழுங்காக வருவதில்லை? ஏன் எப்போதும் ஏதாவது யோசித்தபடி இருக்கிறாய்? உண்மையில் உனக்கு என்ன பிரச்சினை? நீ படிப்பில் கெட்டிக்காரப் பையனல்லவோ?"

இப்படி அடிக்கடி ஆசிரியர்கள் கேட்டபோதிலும் அந்தச் சிறுவனின் பதில் எப்போதுமே,

" அப்படி எதுவும் இல்லை ரீச்சர்" என்பதாகவே இருந்தது.

"நீ எதையோ மறைக்கிறாய்? உன்னுடைய சோகத்துக்கு ஏதோ காரணம் இருக்கிறது. எதையும் மறைக்காமல் எங்களுக்குச் சொல்லு. உனக்கு உதவி செய்ய வேண்டியது எங்கள் கடமை தானே?"

ஆசிரியைகள் சிறுவனிடம் அனுதாபத்தோடு கேட்டனர். அதற்கு மேலும் அவர்களிடம் சிறுவனால் உண்மையை மறைக்க முடியவில்லை.

தனது குடும்பச் சூழல் குறித்த உண்மையை. ஆசிரியைகளிடம் சொல்லத் தொடங்கினான். அவனது அப்பா குடிக்கு அடிமையாகிவிட, வீட்டில் எப்போதும் சண்டை. அதனால் சிறுவனின் தாய், பெண் பிள்ளையோடு தன் சொந்த வீட்டுக்குப் போய்விட்டார். அதனால் சிறுவன் தந்தையோடும், பாட்டியோடும் வாழ வேண்டிய சூழல். தந்தையும் உழைப்பதைக் குடித்துச் சீரழித்துவிடுவார். போதாக்குறைக்கு வேறொரு விதவைப் பெண்ணோடு நெருக்கம், ஏற்பட்டு அங்கேயே வாழத் தொடங்கிவிட்டார். எப்போதாவது நிறைவெறியில் இவன் இருக்கும் வீட்டுக்கு வெறுங்கையோடு வந்துவிட்டுப் போவார். அவனுக்கு எல்லாமே இப்போது பாட்டி மட்டுமே.

அவனிடம் இருப்பது ஒரேயொரு பள்ளிச்சீருடை மாத்திரமே. தினமும் இரவு அதனைத் தோய்த்து காலையில் அதனையே அணிந்து பாடசாலை செல்வான். சிலசமயங்களில் காலையில் சீருடை காயாவிட்டால் அவனால் பள்ளிக்குச் செல்லமுடியாமல் போய்விடும். அதைவிட கையில் காசில்லாததால் அவனும் பாட்டியும் பலநாள்கள் வெறும் வயிற்றோடுதான் காலத்தைக் கழிக்கவேண்டியுமுள்ளது. அவன் சொல்லச் சொல்ல ஆசிரியர்களுக்கு அவன் மீது தனியான கனிவும், அக்கறையும் பிறந்தன. அதற்குப் பின்னர் ஆசிரியர்கள் சிறுவனுக்கு நாளாந்தம் உணவளித்து ஆதரிக்க ஆரம்பித்தனர். அன்பும், உணவும் ஆசிரியர்களிடம் கிடைக்க அவன் ஒழுங்காகப் பாடசாலைக்கு வரத் தொடங்கினான். ஆனால் இந்தச் செய்தி ஊரெல்லாம் பரவி, அவனது தந்தையின் காதுகளுக்கும் போய்விட்டது. அதற்குப் பின்னர் சில நாள்களாக சிறுவன் பாடசாலைக்குச் செல்லவில்லை. தனது மகனுக்கு ஆசிரியர்கள் உணவு வழங்கி ஆதரிப்பதைக் கேள்விப்பட்ட அவனது தந்தை கோபமுற்று அவனைக் கடுமையாகத் தாக்கியுள்ளார். அதனால் அச்சமடைந்த சிறுவன் வீட்டை விட்டு ஓடிச் சென்று எங்கோ ஒளிந்து கொண்டதாக ஆசிரியர்கள் பின்னர் அறிந்து கொண்டனர்.

அதன் பின்னர் ஆசிரியர்கள் சிறுவனுக்கு எவருமறியாமல் இரசியமான முறையில் ஆதரவளித்து அன்புகாட்டத் தொடங்கினர். ஒரு நாள் சிறுவன் பாடசாலைக்கு வந்தபோது அவனது ஒரு கை வீங்கியிருந்ததை வகுப்பாசிரியை அவதானித்தார்.

"உனது கை ஏன் வீங்கியிருக்கிறது?" ஆசிரியை அனுதாபத்தோடு சிறுவனைப் பார்த்துக் கேட்டார்.

"அப்பா அடித்துக் காயப்படுத்தினார் ரீச்சர்" என்றான் சிறுவன் தயக்கத்தோடு

"எவராவது சிறுவர்களுக்கு இப்படி முரட்டுத்தனமாக அடிப்பார்களா?" ஆசிரியையின் வார்த்தைகளில் ஆத்திரம் தொனித்தது. "கோபம் ஏற்பட்டால் அப்பா எப்போதும் இப்படித்தான் தாக்குவார்" சிறுவனது பதிலில் அப்பாவித்தனம் தொனித்தது.

**இது வெறுமனே கற்பனைக்கதையொன்றல்ல. தென்னிலங்கை, கரையோர மாவட்டமொன்றைச் சேர்ந்த நபரொருவரது மதுபானப் பாவனை பழக்கத்தால், வாழ்க்கைப் புயலில் சிக்கி சின்னாபின்னமாகி திக்குத் திக்காக பிரிந்து வாழ்க்கையைத் தொலைத்துவிட்டதொரு குடும்பத்தின் உண்மைக் கதையே. இதுபோல நிறையக் குடும்பங்களின் மகிழ்வை அழித்தபடியேதான் இன்னும் இருக்கிறது போதை.**

பாடசாலைக்குச் செல்லும் வழியில் நாட்டு வைத்தியரொருவரது வீடு இருந்தது. சிறுவனை அங்கு அனுப்பி வீக்கத்துக்கு மருந்து போடுவிக்க ஆசிரியர்கள் தீர்மானித்தனர்.

"என்னால் முடியாது ரீச்சர்... அங்கு போய் வீக்கத்துக்கு மருந்து போட்டுக் கொண்டால் அப்பா அடித்துக் காயப்படுத்திய கதை ஊரில் எல்லோருக்கும் தெரிந்துவிடும். அது அப்பாவுக்கு அவமானமில்லையா ரீச்சர்? "

குடும்ப கௌரவத்தைப் பெரிதாகக் கருதிய சிறுவனது உணர்வைக் கண்டு ஆசிரியை மௌனமானார். இதனைக் கேள்வியுள்ள மற்றைய ஆசிரியர்களும் மனம் நெகிழ்ந்தனர்.

"அப்படியானால் உன்னுடைய கைவீக்கத்துக்கு 'விக்ஸ்' தைலமாவது கொஞ்சம் போட்டு விடட்டுமா?"

பரிதாபத்துடன் சிறுவனை நோக்கி மற்றொரு ஆசிரியை கேட்டார்.

"சரி ரீச்சர், கொஞ்சம் தைலம் பூசி விடுங்கோ. வீக்கம் குறைந்துவிடும்."

தனது கைக்கு தைலம் தடவி விடும் ஆசிரியையின் முகத்தை தனது தாயின் முகத்தைப் பார்ப்பது போன்ற பரிவுணர்வுடன் சிறுவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அம்மா தன் சொந்த வீட்டுக்குச் சென்ற பிறகு ஒருபோதும் இங்கு வரவில்லையா மகனே"

ஒருநாள் ஆசிரியையொருவர் சிறுவனிடம் இப்படிக் கேட்டார்.

"இல்லை ரீச்சர்... அம்மா இனிமேல் ஒருபோதும் இந்த ஊருக்கு திரும்பி வரவேமாட்டார்"

சிறுவனது உறுதியான பதிலால் ஒரு கணம் திகைத்துப் போன ஆசிரியை சிறுவனது வாயை மேலும் கிண்டினார்.

"எவ்வாறு உன்னால் அதனை உறுதியாகக் கூற முடிகிறது?" ஒரு கணம் தயங்கிய சிறுவன் "ஏன் நான் அம்மாவையும் தங்கச்சியையும் பார்க்கப் போய் வருகிறேன் தானே?" என்றான் அப்பாவித்தனத்துடன்.

"என்னது? நீ போய் வருகிறாயா?" ஆசிரியைக்கு அது அதிர்ச்சி.

"அம்மாவும் தங்கச்சியும் ராஜாங்கணையில் அம்மம்மா வீட்டிலைதான் இருக்கினம். அவையள் இங்க திரும்பி வரப்போவதில்லை என்பதால்தான் நான் அங்க போய் அவர்களைப் பார்த்துப் பேசிவிட்டு வருகிறனான்"

சிறுவனது முகத்தில் திருப்தியின் ரேகைகள்.

"யாரோடு சேர்ந்து அவ்வளவு தூர இடத்துக்கு சென்று வருகிறாய்?"

"தனியாகத்தான் ரீச்சர்" சிறுவனது முகத்தில் தன்னம்பிக்கை துளிர்த்தது.

"ஐயோ கடவுளே, இவ்வளவு தூர இடத்துக்கு இந்தச் சிறுவனை தனியாக ஆர் அனுப்பி வைக்கினம்?"

ரீச்சரின் முகத்தில் கவலையின் ரேகைகள்.

'பஸ் செலவுக்கான காசை ஆரிடமிருந்தாவது ஆச்சி வாங்கித் தருவா. அம்மாவைப் பார்த்துப் பேசி வாடா பேரனே எண்டு சொல்லுவா. நான் பஸ்ஸில் போய் அம்மாவையும் தங்கச்சியையும் பார்த்து விட்டுத் திரும்பிடுவன்"

சிறுவனது துணிச்சலும், தன்னம்பிக்கையும் தாய் மீதும் சகோதரி மீதுமான அவனது பாசமும் கண்டு ரீச்சரது மனம் ஒருபுறம் மகிழ்ச்சியுற்றாலும் மறுபுறம் எவ்வளவு ஆனந்தமாக வாழ்ந்த அந்தக் குடும்பம் குடும்பத் தலைவனது குடிப்பழக்கத்தால் இப்படிச் சின்னாபின்ன மாகிப் போனதை நினைத்து கவலை கொள்ளத் தவறவில்லை. ■



○ சுழியன்

# அறிந்தும் அறியாமலும்

# முரளியின் '800' அரசியல் குண்டா?

உலக சாதனை சுழல்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரனின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் '800' படத்துக்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்பலைகள் கிளம்பியுள்ளன. குறிப்பாக, தமிழ் மக்களால் அதிகம் விரும்பப்படும் நடிகர்களில் ஒருவரான விஜய் சேதுபதி இந்தப்படத்தில் நடிப்பது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் தயாரிப்பு நிறுவனம் குழப்பிப்போயுள்ளது.

'800' படம் விளையாட்டு வீரரின் வாழ்க்கை சம்பந்தமானது, அதில் அரசியல் கிடையாது, ஈழத்தமிழர்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் காட்சிகள் கிடையாது என்றெல்லாம் குறிப்பிட்டு தயாரிப்பு நிறுவனம் விளக்க அறிக்கையும் வெளியிட்டுள்ளது. ஆனாலும் நெட்டிசன்கள் ஓயவில்லை. 'எதிரிக்குக்கூட வரலாறு உள்ளது, ஆனால் துரோகிக்கு இல்லை' என்ற கோணத்தில்கூட சரமாரியாக விமர்சனக் கணைகளைத் தொடுத்துவருகின்றனர். பிரபல இயக்குநர்கள்கூட இப்படத்தில் நடிக்கவேண்டாம் என விஜய்சேதுபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது ஒருபுறம் இருக்கட்டும், இலங்கை கிரிக்கெட் வீரர் ஒருவரின் வாழ்க்கை வரலாறு சர்வதேச மட்டத்தில் திரைப்படமாவது இதுவே முதல் சந்தர்ப்பமாகும். இதனால் தென்னிலங்கையில் பலரும் முரளிக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். சிங்கள இளைஞர்களும் சமூகவலைத்தளங்களில் அமோக ஆதரவை வெளியிட்டு வருகின்றனர். அத்துடன் படம் சிங்கள மொழியிலும் வெளியிடப்பட வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்துள்ளனர். சிங்கள ஊடகங்களும் முரளியை தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகின்றர்.




இப்படத்தில் அரசியல் இல்லை எனக் கூறப்பட்டாலும், தமிழகத்தில் வலுத்துள்ள எதிர்ப்பும், தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள ஆதரவும் நிச்சயம் ஓர் அரசியல் புயலை ஏற்படுத்தும் என எதிர்வுகூறப்படுகின்றது. தமிழகத்தில் சட்டசபை தேர்தல் சூடு பிடித்துள்ள இந்தச் சமயத்தில் முரளி விடயம் இன்னும் பற்றியெரியக் கூடும்.



# கோத்தாவின் 'கோயபெல்ஸ்கள்'!

ஒரு தனி மனிதனால் உலகையே அச்சுறுத்த முடியும், உலக சரித்திரத்தையே புரட்டிப்போட முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியவர்தான் இன்றளவிலும் சர்வாதிகாரி என விளிக்கப்படுகின்ற ஹிட்லர்.

வரலாற்றுப் பக்கங்களை இவ்வாறு இருள் சூழவைத்த ஹிட்லரின் கொள்கைப் பரப்பாளராக செயற்பட்டவர்தான் 'கோயபெல்ஸ்'. ஹிட்லரின் வலது கை, அந்தரங்கச் செயலாளர் என்றுகூட அவரை அடையாளப்படுத்தலாம்.

எந்தவொரு பொய்யையும் நயமாகச்சொல்லி, மக்களின் மனங்களை மாற்றி நம்பவைக்கும் வித்தை அறிந்தவர். அதாவது, ஒரு கருத்தியலை, மெல்லமெல்ல மக்களிடம் திணித்து அதை, பொதுக் கருத்தாக்கி அந்தக் கருத்தைச் சுற்றியே மக்களை உரையாடவைக்கும் பெரும் தந்திரக்காரர். இதனால் கோயபெல்ஸின் பெயர் இன்றளவிலும் அடிபடுகின்றது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்திலும் கோயபெல்ஸின் யுக்தியை கையாள்பவர்கள் அங்கம் வகிக்கின்றனர். தேர்தல் காலங்களில் சிங்கள, பௌத்த வாக்குகளை முழுமையாக வேட்டையாடுவதற்கு இவர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர். 13ஆவது திருத்தம், அதிகாரப்பகிர்வு என்ற வசனங்கள் எல்லாம் அச்சுறுத்தலானவை என்ற கருத்தை சிங்கள, பௌத்த மக்கள் மத்தியில் விதைத்துள்ளனர், அதிகாரங்களைப் பகிர்ந்தால் நாடு ஐக்கியப்படும் என்ற உண்மையை மறைத்து அது பிரிவினைக்கு வழிவகுக்கும் என்ற கருத்தைப் பரப்பிவருகின்றனர். அதுமட்டுமல்ல தமிழர்கள் உரிமையைக்கோரினால் அது ஈழத்துக்கு வழிவகுக்கும் என்றெல்லாம் பரப்புரைகளை முன்னெடுப்பதில் கோயபெல்ஸையே விஞ்சும் வித்துவான்கள் கோத்தா அரசில் பலர் இருக்கின்றனர்.

இப்படியானவர்கள் அரசமைப்பின் 20ஆவது திருத்த வரைவால் விழிபிதுங்கி நிற்கின்றனர். 20ஆவது திருத்த வரைவு தொடர்பில் மக்கள் மத்தியில் பொய்களைப் பரப்பமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மதத்தலைவர்களும் 20 ஐ எதிர்த்துள்ளதால் கோத்தாவின் கோயபெல்ஸ்களும் தற்போது மௌனவிரதம் இருக்கின்றனர்.

தாம் எதைச் செய்தாலும் அதற்கு மக்கள் மத்தியில் ஆதரவு திரட்டித் தருபவர்கள் திடீரெனப் பின்வாங்கியுள்ளதால் ராஜபக்சக்களும் குழப்பத்தில் இருக்கின்றனராம். எனவே, எதிர்ப்பார்த்ததுபோல் அல்லாமல் வெட்டு - திருத்தங்களுக்கு மத்தியிலேயே 20 ஐ நிறைவேற்றவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.






# சிவப்பு தொப்பி அரசியல்வாதி

'ஓவர் நைட்டில்' ஒபாமா ஆவதற்கு பலதடவைகள் முயற்சித்தும் இன்னும் பலனேதும் கிட்டாததால் கடுப்பில் இருக்கிறாராம் அந்த சிவப்புத் தொப்பி முஸ்லிம் அரசியல்வாதி. வேங்கை மகன் ஒத்த ஆளாக நின்று கட்சியை வழிநடத்தினாலும் வெளியுலகுக்கு அதைக் காட்டிக்கொள்வதே இல்லை. கட்சிக்கு மத்தியகுழு, நிறைவேற்றுக்குழு, இளைஞர் அணியென பல பிரிவுகள் இருப்பதாக அறிவித்து பில்டப் அரசியல்' நடத்திவரும் அவரின் மனநிலை ( அம்மா சத்தியமா நானும் அரசியல்வாதி தாங்கப்ளீஸ் பிலீவ் மீ.ஐ யாம் பாவம்) என்பதுபோல்தான் உள்ளதாம். அதுமட்டுமல்ல, எதிர்க்கட்சி அரசியல்வாதிகளின் கண்பட்டுவிடும் என்பதால், தமது கட்சி அங்கத்தவர்களின் விபரங்களை இன்னமும் 'மர்மப்பட்டியலாகவே' வைத்துள்ளாராம்.

தான் எப்படியாவது 'பேமஸாகி'விட வேண்டுமென்பதற்காக 'ரூம்' போட்டு யோசிக்கும் இவர், பரபரப்பாக எதையாவது பேசினால் அது ஊடகங்களில் தலைப்பு செய்தியாகிவிடுமென நினைத்து பலதடவைகள் சர்ச்சைக்குரிய கருத்துகளை அள்ளி வீசிவருகிறார். சீதை, அனுமான் ஆகியோரைக்கூட முஸ்லிமாக்கினார். தற்போது மொட்டுக் கட்சியுடன் சங்கமித்துள்ள அவர், மாடறுப்புத் தடை யோசனை வந்த கையோடு மொட்டுக் கட்சிக்கு சொம்பு தூக்குவதை கைவிட்டுவிட்டதாகவும் தகவல்.

# மௌனத்தின் மர்மம்

பொதுத்தேர்தலில் ஏற்பட்ட தோல்வியின் பின்னர் பொதுவெளியில் நடமாடுவதை குறைத்துக் கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பொது நிகழ்வுகளில் பங்கேற்பதையும் தவிர்த்துவருகின்றார்

21/4 தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பதற்கு மாத்திரமே வெளியில் வருகிறார். அவ்வாறு வரும் அவர் விசாரணைகளின் பின்னர் வெளியேறும்போது ஊடகங்களிடம் எவ்வித கருத்தையும் வெளியிடுவதில்லை




ஊடகவியலாளர்கள் பல கேள்விகளை -பல நாட்கள் தொடுத்திருந்தாலும் புன்னகையை மட்டுமே பதிலாக வழங்கிவிட்டு காரில் ஏறி ரணில் புறப்பட்டுவிடுவார். எதற்காக ரணில் மௌனம் காக்கின்றார், அவரின் அடுத்தக்கட்ட நகர்வு என்ன என்பதை அறிவதற்கு பலரும் வழிமீது விழிவைத்து காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் ஐக்கிய தேசியக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் அண்மையில் ரணிலை சந்திப்பதற்கு சென்றிருந்தனர்.

" சேர் தற்போது வெளியில் வருவது குறைவு, வீட்டுக் குள்ளேயே இருப்பது ஓர் விரக்தி நிலையை ஏற்படுத்தவில்லையா..?" என உறுப்பினர் ஒருவர் கேட்டுள்ளார்.

" தற்போது வீட்டில் இருப்பதுதானே பாதுகாப்பு." என சிரித்தபடியே கூறிய ரணில், "சிறப்பான புத்தகங்கள் உள்ளன, ஆங்கில மற்றும் ஹிந்தி படங்கள் உள்ளன. இவற்றுடன் நாட்கள் நகர்கின்றன"எனவும் கூறியுள்ளார்.

அதேவேளை, ரணில் விக்கிரமசிங்க புத்தகமொன்றை எழுதி வருகிறார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.



# யாழ்ப்பாணத் துணைவேந்தருக்கு அவசரமா ஒரு கடுதாசி!

ஐயா வணக்கம்,

நான் நல்ல சுகம். கம்பஸிலை நடந்த சண்டை, சச்சரவாலை உங்களுக்கும் உட் காய்ச்சல் எண்டு கேள்விப்பட்டனான். அதைப் பேப்பரிலையும் வாசிச்சனான். அதை அவை வடிவாப் போட்டிருந்தவை. அதுக்கை நீங்களும் மாட்டுப்பட்டனியள் எண்டும், கலகத்தை அடக்க நீங்களும் கைவைக்க வேண்டி வந்ததாயும் ஆட்கள் கதைச்சவை.

அதோடை, நீங்கள் ரீவியிலை சொன்னதையும் கேட்டனான். அதிலை நீங்கள் பிழை விட்டுட்டியள் எண்ட மாதிரி ஒருத்தர் சொன்னவர். அது சரியோ, பிழையோ எண்டது வேறை பிரச்சினை. இப்ப, கந்தசாமி ஐயா இருந்திருந்தால் நாயைச் சூக்காட்டின மாதிரி "அவையளை" கூப்பிட்டு விட்டிட்டு நிலைமையைச் சரிப்பண்ணியிருப்பர். ஆனால், நீங்கள் அப்பிடி ஒண்டும் செய்யேல்லை.உங்கடை பிள்ளை குட்டியளுக்கு எப்பிடி உரிமையோடை 'இரண்டைப் போட்டு' நிலைமையைச் சமாளிப்பியளோ, அப்பிடி , ஆக்களைத் தள்ளி விலக்குப் பிடிச்சு விட்டிட்டியளாம். ஆனால் முன்னம் சொன்ன அதே ஆள் சொன்னவர் உங்களுக்கு நாகரீகம் தெரியாது எண்டு.

அதுக்கு நான் சொன்னன் "தம்பி, இப்ப கம்பஸ் முன்னம் மாதிரி இல்லை. நாகரீகம் தெரிஞ்ச ஆட்கள் இருக்கிற இடம் மாதிரியும் எனக்குத் தெரியேல்லை. ஏனெண்டால் படிப்பிக்கிற பல வாத்திமாருக்கு நாகரீகம் எண்டால் என்னெண்டு தெரியாது.படிக்கிற பல பிள்ளையளுக்கும் தாங்கள் நாகரீகமாக இருக்க வேணும் எண்ட அக்கறையும் இல்லை. கம்பஸ்ஸை ஒரு நாகரீகம் இல்லாத இடம் எண்டு கண்டபடியாலைதான் கோர்ட்டிலை வழக்குள்ளவர் துணைவேந்தருக்குப் போட்டி போட்டவர். கம்பஸை ஒரு மரியாதையான இடம் எண்டு அவர் நினைச்சிருந்தால் துணைவேந்த ருக்குப் போட்டிபோடுறதைப் பற்றிக் கனவிலையும், நினைச்சிருக்க மாட்டார்.

புலியள் இருந்த காலத்திலை உப்பிடிப் பட்ட ஒருத்தர் போட்டி போட்டிருந்தால் அவரை "பங்கர் " வெட்ட விட்டிருப்பாங்கள். அடுத்தது கம்பஸ் ஒரு தரமான இடம் இல்லை எண்டதுக்கு, நல்ல உதாரணம் உங்கை இருக்கிற ஆசிரியர் சங்கம். அது ஒழுங்கா நடக்குதோ? அதுக்கை எத்தினை குத்து வெட்டுப்பாடு எண்டு உங்களுக்குத் தெரியுந்தானே? அப்ப வாத்திமாருக்குள்ளை ஐக்கியம் இல்லை எண்டது வடிவா விளங்குதெல்லே! அப்ப எப்பிடிப் பெடியளுக்கை ஐக்கியம் வரும்? லெக்சர்மாரும் ஒராளை ஒராள் மதிச்சாத்தால்தானே அவையிட்டைப் படிக்கிற பெடி பெட்டையளும் ஆளை ஆள் மதிப்பினம். அது மட்டுமில்லை, எத்தினை லெக்சர்மார் பெண் பிள்ளையளோடை ஒழுங்கீனமா நடந்திருக்கினம்? உந்த விசியம் பெடி பெட்டையளுக்கும் தெரியும். அப்ப அடிப்படையிலை இருந்து எல்லாத்தையும் திருத்தி எடுக்க வேணும். இப்ப கம்பஸ் ஒரு அரை குறையாப் பழுதான காரைப் போலதான் கிடக்குது. அப்பிடிப் பழுதான காரிலை சிலதைக் கழுவித் துடைச்சுப் போட்டுத் திருப்பிப் போடலாம். சிலதை ரிப்பியர் பாக்க வேணும். சிலதுகள் நல்லாப் பழுதாப் போன மாதிரி, ஒரு சதத்துக்கும் உதவாமல் இருக்கும். பழைய இரும்புக்கும் போடேலாது.

அப்ப அதைக் கழட்டி எறிஞ்சு போட்டு அதைப் புதுசாப் போடவேணும். அப்ப நான் முன்னம் சொன்ன மாதிரி எது பிழை? எது சரி? எண்டு உங்களுக்குத்தான் தெரியும்.

திருத்திறதைத் திருத்திப் போடுங்கோ. சரியாப் பழுதானதெண்டு கண்டதை உடனை மாத்துங்கோ. அதைச் செய்யத் தயவுசெய்து யோசியாதையுங்கோ. கம்பஸிலை பல விண்ணன்கள் இருக்கினம். விண்ணன்கள் எண்டு சொல்லேக்கைதான் ஒண்டு ஞாபகத்துக்கு வருகிது. உங்கை கெட்டிக்காரன் எண்டு கண்டால் அவையளை வளரவிடாமாட்டினமாமே? அதை இதைச் சொல்லி ஒண்டிலை அவையளை அமத்தி வைச்சிருப்பினமாம். இல்லாட்டிக் கரைச்சல் குடுத்து, வெருட்டி அவையளை வெளியாலை கலைச்சுப் போடுவினமாம்.

ஒண்டு மட்டும் சொல்லுறன், இப்ப உள்ள கம்பஸ் முன்னம் பரமேஸ்வராக் கல்லூரி எண்ட பேரிலை பள்ளிக்கூடமா இருக் கேக்கை இருந்த மரியாதை இப்ப கம்பஸுக்கு இல்லை. பரமேஸ்வராக் கல்லூரியை என்னத்துக்காகக் கட்டினவரோ, அந்த நோக்கம் இப்ப செத்துப்போச்சு. அதைக் கட்டித் தந்த சேர்.பொன். இராமநாதன் இண்டைக்கு இருந்திருந்தால் இப்ப நடக்கிற கண்றாவியளை எல்லாம் பாத்திட்டுக் "ஹார்ட் அற்றாக்" வந்தே செத்திருப்பார். ஆனால் இதிலை ஒண்டுதான் நெஞ்சுக்கை குத்துது. சண்டித்தனம் விட்டவையள் எண்டு, வகுப்புக்கு வராமல் தடுத்து வைச்சிருக்கிறதுக்கை சில நல்ல பெடியளும் மாட்டுப்பட்டிருக்கினமாம். உண்மையாச் சண்டித்தனம் விட்டவையள் முன்னமும் வெளியாலை நிண்டவையளாம். நீங்கள் பதவிக்கு வந்தாப்பிறகு, பாவம் எண்டு சொல்லி அவையளை உள்ளுக்கு எடுத்துவிட்டனீங்களாம்? இனிமேல் தயவுசெய்து அந்தப் பிழையை விட்டுவிடாதையுங்கோ. உதவாது எண்டு ஆரைக் கண்டாலும் தூக்கி வெளியிலை போடுங்கோ. கம்பஸை ரிப்பியர் செய்யிற உங்கடை பணி தொடர என்ரையும், தமிழ் மக்களின்ரையும் வாழ்த்துகள்.

தங்கள் மேல் அதி பட்சமுள்ள
அப்பாவி அன்னமுத்து.



# உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!

ஆர்.பிரகாஷ்

'தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில், ஜெகத்தினை அழித்திடுவோம்' என்று பாடிச் சென்றுள்ளார் புரட்சிக் கவிஞர் பாரதி. உணவில்லாமல் ஒருவன் உறங்குகின்றான் எனில் அதன் பின்னர் இந்த உலகம் இருந்தும் பயனில்லை என்பதுதான் இதன் அர்த்தம். பாரதியின் இந்தத் தொலைநோக்கு சிந்தனைதான் உலகின் ஆகச் சிறந்த மகுடத்தை தற்போது சூடியுள்ளது.

ஆம், பட்டினியை ஒழிப்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் உலக உணவுத் திட்டத்துக்குத்தான் இந்த வருடத்துக்கான அமைதிக்கான நோபல் பரிசில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பட்டினியை எதிர்த்துப் போராடியதற்காகவும், போர், உள்நாட்டுப் போர் நடக்கும் இடங்களில் அமைதியான சூழல் நிலவ மேற்கொண்ட பங்களிப்பு, போர், பிரச்சினைக்குரிய இடங்களில் பட்டினியை ஆயுதமாக பயன்படுத்துவதைத் தடுக்க முயற்சிகள் மேற்கொண்டதற்காகவும் இந்த அமைதிக்கான நோபல்பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக மக்களின் பசியைப் போக்குவதற்கு உலக உணவுத்திட்டம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் வார்த்தைகளுக்குள் அடக்கிவிட முடியாதவை. கடந்த 2019ஆம் ஆண்டில் மட்டும் உலக உணவுத் திட்டம் பட்டினியால் வாடிய 88 நாடுகளைச் சேர்ந்த 10 கோடி மக்களுக்கு உணவு வழங்கி பசியாற்றி, உணவுப் பாதுகாப்பை உறுதி செய்துள்ளது. கொரோனா வைரஸின் பாதிப்பால் உலகளவில் பசியால் வாடும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. குறிப்பாக யேமன், காங்கோ ஜனநாயகக் குடியரசு, நைஜீரியா, தெற்கு சூடான், புர்கினபாசோ ஆகிய நாடுகளில் பசியோடு உள்நாட்டுப் போர் வன்முறையும் சேர்ந்து கொண்டது. இந்தக் காலகட்டத்தில் கொரோனாவாலும் மக்கள் பாதிக்கப்பட்டதால், ஏராளமான மக்கள் பட்டினி நிலைக் குத் தள்ளப்பட்டனர்.



இந்த பெருந்தொற்று காலத்தில் உலக உணவுத் திட்டம் தன்னுடைய முயற்சிகளைத் தீவிரப்படுத்தி, பட்டினியை போக்க முயன்றது. மருத்துவரீதியான தடுப்பூசி எங்களிடம் இருக்கும் நாள் வரை, குழப்பத்துக்கு சிறந்த தடுப்புமருந்து உணவுதான் என்று உலக உணவுத்திட்டம் குறிப்பிட்டிருந்தது.

சராசரியாக ஒவ்வொரு ஆண்டும் 93 நாடுகளைச் சேர்ந்த 9.3 கோடி மக்களுக்கு உணவு வழங்கும் பணியை உலக உணவுத் திட்டம் செய்து வருகிறது. இந்த உலக உணவுத் திட்டத்தின் தலைமை அலுவலகம் ரோம் நகரிலும், அலுவலகங்கள் உலகளவில் 80 நாடுகளிலும் செயற்படுகின்றன.

இம்முறை உலக அமைதிக்கான நோபல் பரிசு, பருவநிலை மாற்றத்துக்காகப் பாடுபட்டுவரும் சுவீடன் நாட்டுச் சிறுமியான கிரெட்டா தன்பேர்க்குக்குத்தான் வழங்கப்படும் என்று பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவருக்கு இந்த அங்கீகாரம் கிடைக்கவில்லை. கிரெட்டாவின் போராட்டங்கள், வலியுறுத்தல்கள் எதிர்காலத்துக்கானவை. உலக உணவுத்திட்டத்தின் போராட்டம் நிகழ்காலத்துக்கானது. நிகழ்காலம் நிலைத்தால்தானே எதிர்காலம் இருக்கும். அந்த வகையில் இந்தத் தெரிவு சரியானதே.


சஞ்சீவி
17 ஒக்ரோபர் 2020



இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர்,கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


16

இந்தக் கட்டுரைத் தொடர் உயர்தரத்துக்குப் பின்னரான உயர்கல்வி தொடர்பில் சில அடிப்படையான விழிப்புணர்வு களை ஏற்படுத்தும் வகையில் வாராந்தம் வெளி வருகின்றது. எமது பிரதேச இளையவர்களைப் பொருத்தமான தடத்தில் வழிப்படுத்துவதற்கான சிந்தனைக் கிளறல்களைப் பல மட்டங்களிலும் ஏற்படுத்துவதே இந்தக் கட்டுரையாளரின் நோக்கமாகும்.



# உயர்தரத்துக்கு பின்னான உயர்கல்வி

## கவனத்துடன் அணுக வேண்டியது காலக் கடமை



கடந்த வாரம் இலங்கையின் அரச பல்கலைக்கழகமொன்றில் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான அடிப்படைத் தகைமை குறித்து சில விடயங்களை இக்கட்டுரை முன்னிறுத்தியிருந்தது. அதன் பிரகாரம் பல்கலைக்கழக அனுமதியொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான அடிப்படைத் தகைமையைப் பெற்றுக்கொள்வது ஒரு சராசரி மாணவனுக்கு அவ்வளவு கடினமான இலக்கு அல்ல என்பது தெளிவாகியிருக்கும். இருந்தும் பல்கலைக்கழக கற்றல் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வது என்பது ஒப்பீட்டளவில் தற்போதைய கணம்வரை சற்றுக் கடினமான இலக்காகவே இலங்கையில் உள்ளது. இதற்கான பிரதான காரணம், உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை பல மடங்கு குறைவாகவிருப்பதே. இதனால் மிகுந்த போட்டியின் பின்னரே ஒரு மாணவன் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. இந் நிலையில் பல்கலைக்கழக அனுமதிகள் எந்தக் கொள்கைகளின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன என்பது தொடர்பிலான தெளிவும் அவசியமாகின்றது. இவ் விடயம் தொடர்பாக இவ்வாரம் இக்கட்டுரை ஆராய்கின்றது.

**பல்கலைக்கழக அனுமதிக் கொள்கைகள்**

இலங்கையில் பிரதானமாக இரண்டு கொள்கைகளின் அல்லது தெரிவுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிகள் தற்போது வழங்கப்படுகின்றன.

1.தீவளாவிய திறமை அடிப்படை
National Merit Basis

2.மாவட்ட திறமை அடிப்படை
District Merit/ District Quota Basis

அனேகமான கலைப்பிரிவுக்கான கற்கைகளுக்கு மாணவர்கள் தீவளாவிய திறமை அடிப்படையிலேயே அனுமதிக்கப்படுகின்றார்கள். அழகியல் பாடத்துறை சார்ந்த கற்கைகளுக்கு வேறுபட்ட நியமங்களின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகின்றது.

வணிகப்பிரிவு, உயிரியல் பிரிவு, கணிதப்பிரிவு, தொழில்நுட்பப்பிரிவு கற்கைகளுக்கும் வெவ்வேறு பாடப்பிரிவு மாணவர்கள் விண்ணப்பிக்கக் கூடிய கற்கை நெறிகளுக்கும் தீவளாவிய திறமை மற்றும் மாவட்ட திறமை அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகின்றது. இதன்போது குறிப்பாக பின்வரும் நியதிகள் பின்பற்றப்படுகின்றன.

(1) குறித்த கற்கை நெறிக்கான மொத்த அனுமதியின் 40வீதமானது தீவளாவிய திறமை அடிப்படையிலும்,

(2)55வீதமானது மாவட்ட திறமை அடிப்படையிலும்,

(3)5 வீதமானது கல்வியில் பின்தங்கிய 16 மாவட்டங்களுக்கான அடிப்படையிலும் அனுமதிகள் வழங்கப்படுகின்றன. இங்கு 55வீதமான மாவட்ட திறமை அடிப்படையிலான அனுமதி மற்றும் 5வீதமான கல்வியில் பின்தங்கிய 16 மாவட்டங்களுக்கான அடிப்படையிலான அனுமதிகள் குறித்த மாவட்டத்தின் சனத்தொகை இலங்கையின் மொத்த சனத்தொகையில் கொண்டுள்ள விகிதாசாரத்தின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. இருந்தும் கல்வியில் சமவாய்ப்பு எனும் கொள்கைக்கு அமைய சில விதிவிலக்குகள் இதில் உண்டு. குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்டு பொதுமக்கள் உள்நாட்டுக்குள் அல்லது சர்வதேசத்துக்குள் இடம்பெயர்ந்த காரணத்தினால் தமது சனத்தொகைச் செறிவை இழந்துள்ள மாவட்டங்கள் பாதிக்கப்படாத வகையில் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இடப்பெயர்வுக்கு முன்னர் குறித்த கற்கைக்கு வழங்கப்பட்ட அனுமதிகளின் எண்ணிக்கையைவிட குறையாதவாறு பேணுகின்ற அனுமதிக்கொள்கையினாலேயே நாம் தற்போது ஓரளவுக்கு தானும் தப்பிப் பிழைத்துள் ளோம். மாறாக சனத்தொகை கணிப்பு மீளச் செய்யப்பட்டதன் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிகளும் கணிக்கப்படுமாகவிருந்தால் வடக்குக் கல்விப் புலம் பெரும் நெருக்கடியைச் சந்திக்க வேண்டியேற்படும். குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கும் சூழலில் பல்கலைக்கழக அனுமதிகளும் குறைக்கப்படக்கூடிய சட்டபூர்வமான பின்னணிகள் உண்டு. இருந்தும் அவ்வாறானதொரு நிலமை ஏற்படாத வண்ணம் விழிப்புடன் இருத்தல் அவசியமானதாகும். இதில் மன வேதனைப்பட வேண்டிய விடயமொன்றும் உண்டு. 1970ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியிலே அறிமுகப்படுத்தப்பட்ட, பொதுவாக தரப்படுத்தல் என அறியப்பட்ட மாவட்ட திறமை அடிப்படையிலான பல்கலைக்கழக தெரிவுகள் குறித்து நமது வடபுல கல்விச் சமூகம் மிகப்பெரும் எதிர்வினைகளை ஆற்றியிருந்தது. தீவளாவிய திறமை அடிப்படையில் அனுமதிகள் வழங்கப்பட்ட போது பல்கலைக்கழகங்களில் பெரும் சதவீதமான அனுமதிகளைத் தமிழ்ச் சமூகமே பெற்றுக்கொண்டது. மாறாக மாவட்ட சனத்தொகையை அடிப்படையாகக் கொண்ட மாவட்ட கோட்டா முறையின் அறிமுகத்தினால் தமிழ் மாணவர்கள் பலர் பல்கலைக்கழக அனுமதியைப் பெறும் வாய்ப்பை இழந்தார்கள். இவ்வாறு வாய்ப்பை இழந்த பலர் போராட்ட இயக்கங்களின் ஆரம்ப கால உறுப்பினர்களாக இணைந்து ஆயுதப் போராளிகளாக தோற்றம் பெற்ற பெருவரலாறும் இம் மண்ணில் நிகழ்ந்தது. ஆனால் இன்று நிலமை தலைகீழாக மாறிப்போய் இருக்கின்றது. கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ள 16 மாவட்டங்களுக்குள் வடக்கின் ஐந்து மாவட்டங்களும் கிழக்கின் மூன்று மாவட்டங்களும் இடம்பெற்றுள்ளன. இதனை வரம் என்பதா? சாபம் என்பதா? எனும் தயக்க நிலை கல்வியலாளர்கள் மத்தியில் உண்டு.

> **மாவட்ட கோட்டா முறையை இல்லாமல் செய்து மீளவும் தீவளாவிய திறமை அடிப்படை எனும் அனுமதிக் கொள்கைக்குள் செல்லுவதற்கான முஸ்தீபுகளும் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளன.**

அதேவேளை மாவட்ட கோட்டா முறையை இல்லாமல் செய்து மீளவும் தீவளாவிய திறமை அடிப்படை எனும் அனுமதிக் கொள்கைக்குள் செல்லுவதற்கான முஸ்தீபுகளும் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளன. இதற்கான முன்னாயத்தமாக இத்தகைய அனுமதியையொத்த தோற்றப்பாட்டைக்கொண்ட பல்கலைக்கழக கற்கைகளுக்கான வெட்டுப்புள்ளி (UNI codes system) எனும் முறைமை அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது. மாவட்ட வெட்டுப்புள்ளி எனும் முறை தற்போது இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் மீளவும் தேசிய திறமை அடிப்படையிலான அனுமதிகள் எனும் நிலமை உருவாகுமாகவிருந்தால் நமது சமூகம் அதற்கெதிராக போராட வேண்டிய நிலமைக்குத் தள்ளப்படும். இது தமிழ்க் கல்விப் புலத்தில் நிகழ்ந்த வேதனைக்குரிய தலைகீழ் மாற்றமாகும். இம் மாற்றம் தமிழ்ச் சமூகத்தின் புலமைத்துவப் பாரம்பரியம் மற்றும் கல்வி சார் மிடுக்கு என்பவற்றில் பெரும் தாக்கத்தைச் செலுத்தவல்லவை. இதில் இருந்து மீளவேண்டியது அல்லது சமூகத்தை மீட்டெடுக்க வேண்டியது ஒவ்வொரு வடக்கு கிழக்கு வாழ் தமிழ் குடிமகனினதும் பொறுப்பாகும்.

அத்துடன் போருக்குப் பின்னர் வடக்கு கிழக்குப் பிரதேசங்களின் இனப் பரம்பல் விகிதாசாரமும் நுட்பமாக மாற்றியமைக்கப்படுகின்றது. குறிப்பாக முஸ்லீம் மக்கள் மீள்குடியேற்றம் எனும் போர்வையில் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் மிகவும் வேகமாக இயற்கை நீதிக்குப் முரணான வகையில் பரவி வருகின்றார்கள். சிங்கள மக்களின் குடியேற்றங்களும் திட்டமிட்ட வகையில் இடம்பெற்ற வண்ணமுள்ளன. இவ்விரு இனத்தவரின் கருவளம் மற்றும் பிறப்பு வீதம் தமிழ்ச் சமூகத்துடன் ஒப்பிடும் போது உயர்வானதாகவே இந்தக் கணம் வரை உள்ளது. இந் நிலையில் வடக்கு கிழக்கு உயர்கல்வி வாய்ப்புக்களில் இன்னும் இரு தசாப்தங்களுக்குப் பின்னர் பெரும் நெருக்கடியைத் தமிழ்ச் சமூகம் சந்திக்க வேண்டிவரும். இந்த ஆபத்தை எம் தலைமுறை குறிப்பாக கல்விச் சமூகம் இன்னும் முழுமையாக விளங்கிக் கொள்ளவில்லையெனும் கவலை கட்டுரையாளரின் சிந்தனையோட் டத்தை ஒத்த கல்வியியலாளர்கள் மத்தியில் உண்டு.

எனவே உயர்கல்வி வாய்ப்புக்களின் முதன்மை வாய்ப்பாகவும், தனித்துவமான வாய்ப்பாகவுமுள்ள பல்கலைக்கழக வாய்ப்புக்களில் எமது சமூகம் பாதிக்கப்படாதிருப்பதற்கான பொறிமுறைகளை பல்வேறு மட்டங்களிலும் உருவாக்குவோம். இது தொடர்பான விழிப்பை பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துவோம். அரசியல் அதிகார மட்டங்களில் எமது கல்வி வாய்ப்புக்கள் அடிப்பட்டு போய்விடாது தற்காத்துக்கொள்வதற்கான காப்பரண்களை கட்டிக்கொள்வோம். கூட்டுச் சமூகப் பொறுப்பாக திரண்டு வடக்கின் பல்கலைக்கழக கல்விப் பாரம்பரியத்தைக் காப்பாற்றுவோம்.

(தொடரும்)

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

யார் யாரோ எங்கிருந்தோ சொல்வதையெல்லாம் கேட்டுக் கொண்டு கிளிப்பிள்ளை போல எமது மக்களுக்கு போதிக்கக் கூடாது. எமது மக்கள் பட்டு நொந்து போயிருக்கின்றார்கள். அவர்கள் சந்திக்காத குண்டு வீச்சுக்களா அல்லது சிறைவாசங்களா? சித்திரவதைகளா? ஆகவே எமது மக்கள் முன்பாக எவரும் வீரர்கள் போன்று தங்களைக் காண்பிக்க முயற்சிக்கக் கூடாது.


நான் பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைதானவர்களுக்கான பல வழக்குகளில் முன்னிலையாகி யிருக்கின்றேன். அவர்கள் சம்பந்தப்பட்ட மருத்துவ அறிக்கைகளையும் பார்வையிட்டிருக்கின்றேன். சம்பந்தப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு விசாரணையின் போது விளைவிக்கப்பட்ட கொடுமைகளை தெரிந்து கொண்ட நேரத்தில், மௌனமாக பெருமூச்சு விடுவதைத் தவிர அல்லது அவற்றை நினைக்கும் போது மௌனமாக வேதனைப்படுவதைத் தவிர அவர்களின் சட்டத்தரணி என்ற வகையில் என்னால் வேறு எதையும் செய்ய முடியாமல் இருக்கின்றது.

எமது மக்களின் விடுதலையை வென்றெடுப்பதில் விளம்பரங்கள் இல்லாமல் வெற்று வேட்டுக்கள் இல்லாமல் ஆழமாகச் சிந்தித்து அறிவுபூர்வமாகச் செயற்படுகின்ற அரசியல் செயற்றிட்டம் எங்களுக்குத் தேவைப்படுகின்றது.

மாவீரர் தினம் என்பதுகூட எங்களுடைய விடுதலையைப் பெறுவதற்கான அரசியல் போராட்டத்தில் சந்திக்கப் போகின்ற பல விடயங்களில் ஒன்றுதான். அதற்காக அதற்குரிய முக்கியத்துவத்தை நான் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் இதன் ஊடாக ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகின்றேன். எங்களின் முக்கியமான இலக்கு எது? எங்களுடைய மக்கள் 1956 ஆம் ஆண்டிலிருந்து அடிவாங்கி வந்திருக்கின்றார்கள். அன்று அடிபோடத் தொடங்கினார்கள். இதன் விளைவுதான் கிட்டத்தட்ட 27 ஆண்டுகளாக சில சில இடைவெளிகளோடு நீடித்த கொடிய போர். இந்தப் போரில் தமிழர்களும் அழிந்திருக்கின்றார்கள். சிங்களவரும் அழிந்திருக்கின்றார்கள். மனிதனாகச் சொல்வதானால் பெறுமதி மிக்க பல்லாயிரக்கணக்கான உயிர்கள் இந்தப் போரில் பலியிடப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் சிங்கள அரசியல்வாதிகள் மறந்துவிட்டார்கள். தமிழ் அரசியல்வாதிகள் இதனை மறந்து விடக் கூடாது என்பதுதான் எனது கவலை.

**கைதாவோர் எல்லோரும் குற்றவாளிகள் அல்லர்**

**கே: வடக்கில் வாள்வெட்டுக் குழுக்கள் உள்ளிட்ட சமூக விரோதக் கும்பல்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற சந்தேகத்தில் கைதாகுபவர்களை உங்களைப் போன்ற சட்டத்தரணிகள் சிலர் பிணை எடுப்பதற்கு துணை நிற்கின் றார்கள். அவர்கள் சார்பில் மன்றில் முன்னிலையாகின்றார்கள். இது தவறானதொரு முன்னுதாரணமாகிவிடாதா?**



ப: வாள்வெட்டுக்குழுக்களின் அடாவடி கடந்த 10 ஆண்டுகளிலே பல இடம்பெற்றுள்ளன. அத்தகைய வழக்குகளில் நான் முன்னிலையான வழக்குகள் விரல் விட்டு எண்ணலாம். பலருக்கு அது தெரியாது. சிலரை நான் திருப்பி அனுப்பியிருக்கின்றேன். ஆனால் இத்தகைய வழக்குகளிலே பல இளம் சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருக்கின்றார்கள். அவர்களை நீங்கள் குற்றம் சுமத்த முடியாது.

தனிப்பட்ட ஒரு காரணம் அல்லது கொள்கை ரீதியான காரணம் இருந்தாலொழிய குற்றவியல் சட்டத்தரணி தன்னை நாடி வரும் ஒருவரைத் துரத்தக் கூடாது. அங்கே சட்டத்துறைக்கு உரிய உயரிய தர்மம் குறுக்கிடுகின்றது. மறுப்பதற்கு உரிமை உண்டு.

கைது செய்யப்படும் அனைத்து நபர்களும் குற்றவாளிகள் அல்லர். எனக்குத் தெரிந்தளவில் வாள்வெட்டில் தொடர்புபட்டவர்களும் கொண்டு வரப்படுகின்றார்கள், ஓரத்திலே தூரத்திலே நின்றவர்களும் கொண்டுவரப்படுகின்றார்கள்.

திருட்டு, கொள்ளை வழக்கில் 15 வருடங்களுக்கு முன்னர்தான் நான் முன்னிலையானேன். அதுவும் சில வழக்குகளில்தான்.

இந்த வழக்குகளில் பொலிஸாரால் கொண்டு வரப்படுவர்கள் அந்த வழக்குகளுடன் தொடர்பில்லாதவர்கள் என்பது சட்டத்தரணிகள் வட்டாரத்தில் நன்கு அறியப்பட்ட உண்மை. யாராவது ஒரு நபர் ஏதாவது ஒரு சம்பவத்துடன் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தால் அதன் பின்னர் நிகழ்கின்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் கைதாகவில்லை என்றால், அந்தப் 'புண்ணியங்கள்' முழுக்க விளக்கமறியலில் ஏற்கனவே இருப்பவரின் மீதுதான் சுமத்தப்ப டும். இது வாடிக்கையானது.

இப்போது குற்றங்களை விஞ்ஞானபூர்வமாக விசாரணை செய்வது என்பது இலங்கையிலே அதுவும் வடக்கு கிழக்கிலே அருகிப்போய் விட்டது.

**பொலிஸில் தமிழர்கள் இணையவேண்டும்**

இப்போதும் பொலிஸ் துறையில் அர்ப்பணிப்புள்ள துணிவுள்ள பொலிஸ் அதிகாரிகள் இருக்கின்றார்கள். ஆனால் அவர்களால் எதுவும் செய்யமுடியவில்லை. இன்னொரு விடயத்தை இதில் குறிப்பிட வேண்டும்.

குற்றங்களை விசாரணைசெய்து குற்றவாளிகளை கைதுசெய்வதற்கு பொலிஸாருக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும். அவர்களுக்கு உரிய சூழ்நிலை உறுதிப்படுத்தப்படவேண்டும். அது இல்லையென்றால் எந்தப் பொலிஸ் அதிகாரி தனது கடமையைச் செய்வார். ஏனோதானோ என்றுதான் இங்கு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது ஒட்டுமொத்த சமூகத்துக்கும் பெரிய பிரச்சினையைக் கொண்டு வருகின்றது.

பொலிஸில் தமிழ் இளைஞர்கள் பெரியளவில் இணைந்து கொள்ளவேண்டும். இப்போதுள்ள நிலைமை காணாது.

பொலிஸ் நிலையத்துக்குச் செல்லும்போது மொழிப் பிரச்சினை ஏற்படுகின்றது. வேறு எந்த அரச அலுவலகங்களிலும் எதிர்கொள்ளாத மொழிப் பிரச்சி னையை பொலிஸ் நிலையத்துக்கு செல்லும்போது பொது மக்கள் எதிர்கொள்கின்றனர். எங்களுடைய ஆள்கள் பொலிஸ் படையில் போதுமான எண்ணிக்கையில் வேண்டும்.

2010ஆம் ஆண்டு நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில், பொலிஸுக்கு தமிழ் இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்ட போது அதற்கு விண்ணப்பிக்கவேண்டாம் என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அறிக்கை விடுத்திருந்தார். ஆனால் தனிப்பட்ட முறையில் பல இளைஞர்களை விரும்பினால் இணையுங்கள் என்று நான் சொன்னேன்.

**நிலவுக்கு ஏங்காமல்**
**மெழுவர்த்தியை ஏற்றுவோம்**

எங்களுடைய சமூகம் சீரழிந்து கொண்டிருக்கின்றது. அதைத் தடுத்து நிறுத்தவேண்டுமானால் வலுவான பொலிஸ் படை வேண்டும். அதனால்தான் மாகாணசபைகளுக்குரிய பொலிஸ் அதிகாரங்களை நாங்கள் வலியுறுத்தவேண்டியிருக்கின்றது. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை கடந்த 32 வருடங்களாக சிங்கள அதிகார வர்க்கம் மறுத்துக் கொண்டிருக்கின்றது. அந்த அதிகாரங்கள் எங்களுக்கு வேண்டும். மாகாணசபை மட்டத்தில் பொலிஸ் படை அமைக்கப்பட்டால், அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் கூட, சாத்தியமான அளவுக்கு குறைக்க முடியும். மாகாண நிர்வாகம் பொலிஸ் படையை நிர்வகிக்கும்.

தூரத்து நிலவை எதிர்பார்த்து இருட்டுக்குள் வாழ முடியாது. அருகிலுள்ள மெழுகுவர்த்தியையாவது கொளுத்தி வைப்பதற்கு எங்கள் அறிவை பிரயோகிக்கவேண்டும். அதே நேரத்தில் இலக்கை நாம் கைவிட முடியாது. இலக்கை நோக்கிய நீண்ட பயணத்தில் நாங்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கும் தீர்வைக் கண்டாகவேண்டும்.

எங்கள் மக்கள் மத்தியில் அரசியல்மயப்படுத்தல் இல்லாமல் போய்விட்டது. அதனை நாங்கள் செய்யவேண்டும். அதனை ஊடகங்களும் செய்கின்றன. மக்களை அறிவூட்டும் பணியை ஊடகங்கள் தொடர்ந்தும் காத்திரமாக முன்னெடுக்கவேண்டும்.

## அதிகமாய் ஒன்றுமில்லை அச்சப்பட வேண்டியதுமில்லை

மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களே!
உங்களுக்கொரு மகத்தான கனவுண்டு
இலங்கை மணித் திருநாட்டினை
பொன்னும் மணியுமாய் பொலியச் செய்யும் கனவது
அதற்காகத்தான் நீங்கள் மிலிட்டரிப் பச்சை ஆடையிலிருந்து
தூய வெண்ணாடைக்குச் சென்றீர்கள்
மிலிட்டரிப் பச்சையாடையில்
குருதிப் பிசுபிசிப்பிருப்பது உங்களுடைய கனவுக்கு
எப்போதும் இடைஞ்சல் என்பதை அறிவோம்
இருக்கட்டும்.

அந்த மிலிட்டரிப் பச்சையாடை தருகின்ற
நெருடலை அதைப் பற்றிய பேச்சும் தரக்கூடுமென்பதால்
அதைத் தவிர்கிறோம் மேன்மை தங்கியவரே!

இப்போது உங்களுடைய அந்த மகத்தான கனவுக்கு
20 வேண்டும் என்கிறீர்கள்
போரை வென்றதைப்போல இதையும் வெல்ல வேண்டும்
என்றுரைக்கிறீர்கள்.
20 இலும் வெற்றியடைந்தே தீருவேன் என்று நம்புகிறீர்கள்

20 இல்தான் உங்கள் கனவுக்கான எல்லாமே உண்டு
என்பதை நாமறிவோம்

பொருளதிகாரம், அருளதிகாரம், ஆட்சியதிகாரம்,
மீட்சியதிகாரம் என்றாயிரம் அதிகாரங்களும் அதிலே உண்டு
20 உங்களுக்கு ஒரு அற்புத விளக்குத்தான்.

நல்லது மேன்மை தங்கியவரே
தங்கள் கனவு மகத்தானதுதான்.

இதைப்போல எங்களுக்கும்
ஒரு கனவுண்டு மேன்மை தங்கியவரே
நாங்கள் கண்ட கனவு வெறும் சாணக்கும்பமாகி விட்டது என்று
நீங்கள் சொல்லக் கூடும்.

அதனாலென்ன,
எங்களுடைய கனவுக்குப் பதிலாக
ஆகக் குறைந்தது 13 ஐயாவது தாருங்கள்
நாங்கள் அதிகமாக ஒன்றையுமே கேட்கவில்லை
13 ஐ மட்டுமாவது தாருங்கள்
நீங்கள் கனவு காண்பதைப்போல
எங்களுக்கும் ஒரு கனவுண்டல்லவா!
நாங்களும் எங்களுடைய வீட்டில் ஒரு கோலத்தைப் போடுவதற்கும்
எங்களுடைய பூங்கன்றுகளுக்கு நீர் விடவும்
எங்களுடைய காட்டிலே நடந்துலவித் திரியவும்
நாங்கள் ஒரு மரநிழலிலே கூடிப் பறையவுமாக.

நாங்கள் அதிகமாக ஒன்றுமே கேட்கவில்லை
நீங்கள் எங்களை விடவும் மிக அதிகமாக விரும்புகிறீர்கள்
நாங்கள் கேட்பதே 13 தான்
நீங்கள் கேட்பதே 20
13 க்கும் 20 க்கும் இடையில்தான் எத்தனை இடைவெளி

மேன்மை தங்கியவரே!
எங்கள் கனவையும் புரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வசந்தராஜன்





# சீனா இருக்கப் பயமேன்

ந.பரமேஸ்வரன்

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்தபோது முள்ளிவாய்க்காலில் 40.000 தமிழர்கள் கொல்லப்பட்டனர் .(உத்தியோகபூர்வ தகவல்களின் படி) இதுவொரு இனப்படுகொலை (Genocide) என தமிழர் தரப்பு கூறி வருகிறது. அதிதீவிர தமிழ் தேசியவாதிகள் என்று சொல்லக்கூடிய வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் போன்றோர் போகுமிடமெல்லாம் 2009இல் இலங்கையில் நடைபெற்றது ஒரு இனப்படுகொலை தான் என உரத்துக் குரல் கொடுத்து வருகின்றனர் . ஜெனீவா மனித உரிமை கவுன்சிலின் மனித உரிமைகள் தொடர்பான வருடாந்த அமர்வுகளில் கலந்து கொள்ள வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும் இவர்கள் சந்தித்து இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை தான் என வலியுறுத்தி வருகின்றனர் (அப்படி இவர்கள் அளிக்கும் விளக்கத்தைத்தான், பல ஊடகங்கள் 'விளக்கமில்லாமல்' 'ஐ.நா.சபையில்



உரையாற்றினர்' என்று செய்தி வெளியிட்டமை வேறு விடயம்) . இவர்களிருவரையும் விட கஜேந்திரகுமார், வலிவடக்கு பிரதேச சபை உறுப்பினரான சஜீபன்,காணாமலாக்கப்பட்டோர் சங்க உறுப்பினர்கள் உட்பட இன்னும் பலர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமிருந்து சென்று இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை தான் என விளக்கமளிக்கத் தவறுவதில்லை.

"இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை தான்" என வடமாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றி ஐ.நா.சபைக்கு அனுப்ப வேண்டும் என்ற பிரேரணையை சிவாஜிலிங்கம் கொண்டு வந்தபோது, முதலமைச்சர் விக்னேஸ்வரன் அதற்கு ஆதரவு அளிக்கவில்லை. இதனால் மனமுடைந்த சிவாஜிலிங்கம் சபை நடுவே அமர்ந்து போராட்டம் செய்தார். இறுதியில் முதலமைச்சர் தானே முன் வந்து, இலங்கையில் நடைபெற்றது 'இனப்படுகொலை தான்' என தீர்மானம் கொண்டு வந்தார். இந்தத் தீர்மானம் ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டு ஐ.நா.மனித உரிமை ஆணையாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலையை விசாரிப்பதற்கு சர்வதேச விசாரணை தேவையெனவும் தமிழர் தரப்பு வலியுறுத்தி வருகிறது. இந்த நிலையில் கலப்பு நீதிமன்றப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை அரசும் இணை அனுசரணை வழங்கியிருந்தது. இந்தத் தீர்மானத்திலிருந்து விலகுவதாகஒருதலைப்பட்சமாகஇலங்கை அண்மையில் அறிவித்திருந்தது. இதே வேளை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, ஐ.நா.பொதுச்சபை கூட்டத் தொடரில் ஆற்றிய காணொலி உரையில் 'இறைமையுள்ள ஒரு நாட்டின் உள்நாட்டு விட யங்களில் ஐ .நா சபை தலையிடக்கூடாது' எனத் தெரிவித்துள்ளார்.


கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்த சீன உயர்மட்ட தூதுக்குழு " இலங்கை மீது எந்த ஒரு வெளிநாடும் அழுத்தங்களைப் பிரயோகிக்க சீனா அனுமதிக்க மாட்டாது. அப்படி ஏதும் வெளிநாட்டு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டால் அதிலிருந்து இலங்கையைச் சீனா பாதுக்காக்கும்" என உறுதி யளித்துள்ளது. ஐ.நா.மனித உரிமைகள் பேரவை போன்ற சர்வதேச மன்றங்களில் இலங்கையின் இறைமை, சுயாதீனம் என்பவற்றை பாதுகாப்பதற்கு சீனா தொடர்ந்து குரல் கொடுக் கும் என சீனத் தூதுக்குழுவின் தலைவர் யங் ஜியேஷி தெரிவித்துள்ளார்.

ஐ.நா.மனித உரிமை கவுன்சிலில் மட்டுமல்ல ஐ.நா.பொதுச்சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் (அப்படி நடப்பதற்கான சாத்தியம் மிகமிக குறைவு) தப்பித்தவறி கொண்டு வரப்பட்டாலும் சீனா தனது வீட்டோ அதிகாரத்தைப் பாவித்து அதனை இரத்துச்செய்யும் என்ற வாக்குறுதியை இலங்கைக்கு சீனா வழங்கியுள்ளது. ஆக மொத்தம் இப்போது 'சீனா இருக்கப் பயமேன்' என்ற துணிச்சல் இலங்கைக்கு வந்துவிட்டது.

தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளும் ஈழத்தமிழர்களும் இந்த யதார்த்தத்தை புரிந்து கொண்டு செயற்பட்டால் நல்லது.




# தங்கமடா தாகிர்!!




ஆர்.லயனல்

சென்னை அணியின் விளையாடும் பதினொருவர் அணியில், இம்ரான் தாகிருக்கு இடம் மறுக்கப்பட்டுள்ளது. எனினும் அவர் அதைப் பெரும் குறையாக எடுத்துக்கொள்ளாம்ல் மிக அற்புதமான வகையில் வெளியிட்டுள்ள கருத்து தற்போது பெரிதும் சிலாகிக்கப்பட்டு வருகின்றது.

வீரர்களுக்கு குளிர்பானம் சுமந்துசெல்லும் ஒளிப்படத்தை வெளியிட்டுள்ள தாகிர், 'நான் விளையாடியபோது நிறைய வீரர்கள் எனக்குக் குளிர்பானம் எடுத்து வருவார்கள். இப்போது தகுதியான வீரர்கள் களத்தில் ஆடும்போது நான் குளிர்பானம் சுமந்து செல்கிறேன். இது என் கடமையல்லவா? நான் விளையாடுகிறேனா இல்லையா என்பதைவிட என் அணி வெற்றி பெறுகிறது என்பதே முக்கியம். எனக்கு வாய்ப்புக் கிடைக்கும்போது சிறப்பாகச் செயற்படுவேன். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அணிதான் முக்கியம்' என்று அவர் தனது ருவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.பி.எல் விதியின்படி ஓர் அணியில் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் 4 வெளிநாட்டு வீரர்கள் மட்டுமே இருக்க முடியும். சென்னை அணியில் வற்சன், பிளாசிஸ், பிராவோ, சாம் கரன் ஆகிய வீரர்கள் அந்த நால்வராகவும் உள்ளனர். இவர்கள்தான் சென்னை அணிக்காக இந்திய வீரர்களை விடவும் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்துகின்றனர். இவர்களில் எவருக்குப் பதிலாக தாகிரை இணைப்பது என்பதுதான் தற்போது பெரும் கேள்வியாக உள்ளது. ரசிகர்கள் சிலர் பிராவோ நிறுத்தப்பட்டு தாகிர் விளையாட வேண்டும் என்று தெரிவித்துள்ளனர். பரிசீலிக்கக்கூடிய பரிந்துரை தான். இத்தனைக்கும் கடந்த வருடம் ஐ.பி.எல் தொடரில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தி 'ஒரேஞ்ச்' தொப்பியை ம்ரான் தாகிரே தன் வசமாக்கியிருந்தார்.

# ஜாம்பவானாகும் நெய்மர்



பிரேசில் அணிக்காக அதிக கோல்களைப் பதிவுசெய்தவர்களின் வரிசையில் ஜாம்பவானான ரொனால்டோவை பின்தள்ளியுள்ளார் நெய்மர். கால்பந்தாட்ட உலகின் மன்னனான பீலேவுக்கு அடுத்த இடத்தில் நெய்மர் உள்ளார்.

உலகக்கிண்ணத் தகுதிச்சுற்று ஆட்டத்தில் பெரு அணியை கடந்த புதனன்று எதிர்கொண்டது பிரேசில். இந்த ஆட்டத்தில் 4:2 என்ற கோல் கணக்கில் பிரேசில் வெற்றிபெற்றது. நெய்மர் 3 கோல்களைப் பதிவுசெய்தார். இந்தக் கோல்களையும் சேர்த்தால் இதுவரை பிரேசில் அணிக்காக நெய்மர் 6 கோல்களைப் பதிவுசெய்துள்ளார். இதன் மூலம் 62 கோல்களைப் பதிவுசெய்த ரொனால்டோ மூன்றாம் இடத்துக்குத் தள்ளப்பட்டார். பீலே 72 கோல்களைப் பதிவுசெய்துள்ளார்.

# அதே பாதையா?



இந்த ஐ.பி.எல் தொடரில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மோசமான பெறுபேற்றை சென்னை அணி வெளிப்படுத்துகின்றது என்று விமர்சிக்கப்படுகின்ற போதிலும், '2010ஆம் ஆண்டும் இதே நிலைதான் இருந்தது. ஆதலால் கிண்ணம் வென்றே தீருவோம் என்கின்றனர்' சென்னை அணியின் ரசிகர்கள். 2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல் தொடரில் முதல் 7 ஆட்டங்களில் இரண்டில் மட்டுமே சென்னை அணி வெற்றிபெற்றது. இந்த வருடமும் முதல் 7 ஆட்டங்களில் இரண்டில் மட்டுமே சென்னை வென்றுள்ளதாம். இதில் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் 2010ஆம் ஆண்டு தனது இறுதி 7 ஆட்டங்களில் (இரண்டாவது சுற்றில்) 5 ஆட்டங்களை தனது கோட்டையான சேப்பாக்கம் மைதானத்தில் சென்னை எதிர்கொண்டது. ஆனால் இந்த முறை தொடர் நடப்பதோ ஐக்கிய அரபு இராச்சியத்தில்தான். பார்க்கலாம் மீண்டும் நிகழுமா பழைய வெற்றிப் பயணம் என்று.